337

# பாலகல்யாணி



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

கலா நிலைய வெளியீடு
விருதுநகர்.

## இதே ஆசிரியர் எழுதியுள்ள நூல்கள்:

நாவல்கள்:—

1. இன்க் குரல்
1. ஜானகி
3. சரஸ்வதி
4. ராணி மங்கம்மாள்

நாடகங்கள்:—

1. கற்பு
2. தமிழன் பெருமை
3. இமயத்தில் நாம்
4. புத்த பகவான்
5. புதைந்த பூமி
6. போராடும் இந்தியா

# பாலகல்யாணி

(நாவல்)

575
A/337
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை தி.சு. சண்முகம் நூலகம்
173
தமிழியல்துறை

ஆசிரியர்
ரா. வெங்கடாசலம்.

விற்பனை உரிமை:
கன்னித் தமிழ் நிலையம், மதுரை.

முதல் பதிப்பு 1946.
உரிமை ஆசிரியருக்கே.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்,
தமிழியல்துறை

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 648
நன்கொடை எண்: 648

விலை ரூ. 3.12.0

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை.
Q. H. No. R-56-47—1000 Copies.

## சமர்ப்பணம்

இலக்கியத் துறையில் எனக்கு
ஊக்கமூட்டி வரும் என் நண்பர்
**சோழவந்தான் செல்லம் முதலியார்**
அவர்களுக்கு

# அறிமுகம்

பஞ்சபாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்தார்கள். 1929-ல் நான் எழுதிய இந்த நாவலுக்கும் அதே பெருமை கிடைத்தது! காரணம், பிரசுரகர்த்தர்களின் ஆதரவு இல்லாததுதான். கடைசியாக என் ஆவலைப் பூர்த்திசெய்ய என் நண்பர் ஸ்ரீ என். ராமரத்தினம் அவர்கள் (அப்போது "தினமணி" உதவி ஆசிரியர்) 1941-ல் "ராஷ்டிரவாணி" என்ற தன் சொந்தப் பத்திரிகையில் இதைத் தொடர்ச்சியாக வெளியிட்டார். அவருக்கு என் நன்றி.

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களை பிரதான நடிகையாக வைத்து இதை சினிமா படமாக எடுக்கவும் முயற்சிகள் நடந்தன. பின்னர் அது கைவிடப்பட்டது. அது ஒரு பெரிய கதை.

இப்போது இது புத்தகமாக வருகிறது. இதை இந்த உருவத்தில் கொண்டுவந்த கலா நிலயத்தாருக்கும், கன்னித் தமிழ் நிலயத்தாருக்கும் நான் மிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லாமலிருக்க முடியவில்லை. தங்கள் வேலையையும் சிரமத்தையும் பாராமல், இதை புத்தக வடிவமாகக் கொண்டுவர இயன்ற உதவிகளையெல்லாம் செய்த என் நண்பர்கள் ஸ்ரீ வி. எஸ். வெங்கடேசனுக்கும் (எழுத்தாளர்) ஸ்ரீ பி. கண்ணபிரானுக்கும் நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

மதுரை.
30-8-46

ரா. வெங்கடாசலம்

அல்லல
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப்பல்துறை.

# முன்னுரை

நாலைந்து வருஷங்களுக்கு முன்பு "ராஷ்டிர வாணி"யில் தொடர்ச்சியாக வெளிவந்த "பால கல்யாணி"யை புத்தக ரூபமாக வெளியிடுவதைக் கண்டு சந்தோஷமடைகிறேன். இதன் ஆசிரியர் ஸ்ரீ வெங்கடாசலம் உத்ஸாகம் நிறைந்த ஒரு இளைஞர். ஜனங்களுக்குத் தான் சொல்ல வேண்டியது ஏதோ இருக்கிறதென்று துடிப்பவன்தான் உண்மையிலேயே நல்ல எழுத்தாளனு யிருக்கமுடியும். ஆறு வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ வெங்கடாசலத்தை நான் சந்தித்தபோதே இந்தத் துடிப்பு அவரிடமிருந்தது.

ஸ்ரீ வெங்கடாசலம், பக்கத்தை நிரப்பித் தள்ளும் எழுத்தாளர் என்று நான் நினைக்கவில்லை. சில கருத்துக்களைப் பரவச்செய்வதே அவருடைய நோக்கமா யிருக்க வேண்டும். சரித்திர பூர்வமான இந்த நாவலே அதற்கு அத்தாட்சி.

ஸ்ரீ வெங்கடாசலம் தனது முயற்சியில் முழு வெற்றி பெறவேண்டுமென்று விரும்புகிறேன்.

சென்னை
3—8—46.

என். ராமரத்னம்,
"பாரத தேவி"

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
திருப்பரங்குன்றம்

# பாலகல்யாணி

## அத்தியாயம் 1

### "பேயாயுழலுஞ் சிறு மனமே!"

ராணி லக்ஷ்மி தேவிக்கு இரவு தூக்கம் கொள்ளவில்லை. இரவு பதினறு நாழிகையிருக்கும். மலரினும் மிருதுவான அந்த மஞ்சம் அவளுக்கு உறுத்திற்று. படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் ஏதேதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் குழந்தை பால கல்யாணி தூங்கிக்கொண்டிருந்தாள். பாங்கிமார்கள். படுக்கையைச் சுற்றித் தரையில் படுத்திருந்தார்கள். சர, விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு, மூலையில் ஒரே ஒரு விளக்கு மாத்திரம் மங்கலாக எரியவிடப்பட்டிருந்தது. பின்னிரவு நிலவின் ஒளி சாளரங்களினூடே மங்கலாய்ப் பிரகாசித்தது. சுவர் பக்கமாய்ப் பார்த்துக் கொண்டு ஒரே நிலையிலிருந்த அவள் கண்களுக்கு ரகுவீர சந்திரனின் உருவம் அங்கே தோன்றி இரு கரங்களையும் விரித்துக் கூப்பிடுவதுபோல் தோன்றியது.

"பிராணபதி, இதோ வந்துவிட்டேன்" என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே படுக்கையிலிருந்து ஒருகுதி குதித்து ஓடித் தாவிப் பிடித்தாள்.

சுவரில் நெற்றியும், மூக்கும் பலமாகத் தாக்கிச் சுய உணர்வுவந்து, சித்தப்பிரமை கொண்டவள்போல் மறுபடியும் படுக்கையில் வந்து சாய்ந்துவிட்டாள்.

"இனி இந்த அரண்மனையில் க்ஷண நேரமும் இருக்கக்கூடாது. குழந்தை பாவம் என்ன செய்யும்? கொஞ்ச

நாளில் மறந்துபோய்விடும். குடி ஜனங்களோ வற்புறுத்தி ராஜ்ய பாரத்தை என் தலையில் சுமத்திவிடுவார்கள் போலிருக்கிறது. என் பிராணபதி இறந்த துக்கக்கடலி லிருந்து வெளியேறவே கரைகாணுது தவிக்கும் நான் அந் தப் பொறுப்பையும் ஏற்று எப்படிச் சரிவர நடத்த முடி யும்? ஒருக்காலும் முடியாது. பால கல்யாணிக்கு வயது வரும்வரை மந்திரிமார்களே ராஜ்யத்தை ஆண்டு கொள் ளட்டும். அதைப்பற்றி நான் ஏன் கவலைகொள்ளவேண் டும்? காலமே அதை நிர்ணயிக்கட்டும். என் மனச் சாந்திக்கு சன்யாசம்தான் வழி. ஆமாம்; இப்போதே புறப்பட்டுவிட வேண்டியதுதான்!" என்று தனக்குள் தீர் மானித்தவளாய் உடனே படுக்கையறையை விட்டு வெளி யேறி விட்டாள். ஆனல் புத்திரபாசம் விடவில்லை. கடைசி முறையாகப் பார்த்துவிட்டுத் திரும்பினுள் என் றைக்கும் இமைகொட்டாது காவல்புரியும் காவலாளிகள் கூட அன்று நித்திரையிலாழ்ந்து போயிருந்தார்கள். சந் திரனும் மறைந்துவிட்டான். அரண்மனை வாயிற்கதவும் என்ன காரணத்தினுலோ பூட்டாமலிருந்தது. தன் எண் ணத்திற்குச் சாதகமாகவே எல்லாம் நிகழ்வதைக் கண்டு ஒருவிதத்தில் சந்தோஷம் கொண்ட ராணி வேறு எவரே னும் கண்டுகொள்வார்களோ என்ற பயத்தால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நகரவீதிகளை யெல்லாம் கடந்து சென்று, சாலையை அடைந்ததும் சற்று தைரியம் அடைந்து வேகமாய் நடந்தாள்.

எங்கு செல்கிருள்? தன் பிராணபதி சமாதிகொண் டிருக்கும் நந்தவனத்திற்கே முதலில் போய்க்கொண்டிருந் தாள். தன் கணவனை நினைந்ததும் அவள் நடை ஓட்ட மாக மாறியது. சாலையோரத்தில் ஓடும் நரிகளும், பழ மரங்களுக்குப் பறந்துசெல்லும் வௌவால் கூட்டங்களும் கூட அவள் கண்களில் படவில்லை. அவள் எண்ணமெல் லாம் ஒரே இடத்திலிருக்கும்போது இவைகளில் எப்ப டிச் செல்லும்?

மீவார் மன்னனோடு ஒரு காலத்தில் தன் கணவர் யுத்தம் செய்து வெற்றிமாலை சூடித் திரும்பி வந்துகொண்டிருந்தபோது, மருங்காபுரி நகர் மக்களனைவரும் சூழ அவள் ரதமேறிவந்து அவனை எதிர்கொண்டழைத்துச் சென்ற அந்தச் சாலையில், இன்று தன்னந்தனியே சுடுகாட்டை நோக்கி பேய்போலப் போய்க்கொண்டிருந்தாள். பழைய நினைவு அவள் மனதில் எழுந்ததும், அன்று தன் தந்தை யுத்தரங்கத்திலிருந்து வெற்றியோடு திரும்பியதைக்கண்ட குமாரி பாலகல்யாணி ரதத்திலிருந்துகொண்டே புஷ்பத்தை வாரி இறைத்த காட்சியை மனக்கண்முன் கண்டாள். அவ்வளவுதான். மகள் நினைவு வந்ததும் மனந்தளர்ந்தது. "கண்ணே பாலா" எனக் கதறித் திரும்பிப் பார்த்தாள்.

அதே சமயத்தில் அரண்மனையில் துயின்ற பாலகல்யாணியும் "அம்மா, அம்மா!" என்று கதறி எழுந்தாள். சுற்றிலுமிருந்த தாதியர்களும் எழுந்து ராணியைத் தேடினார்கள். "ஐயையோ" எனக் கைகளைப் பிசைந்துகொண்டு முதலில் விளக்குகளையெல்லாம் ஏற்றினார்கள். பின்னர் அமண்மனையின் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினார்கன். ஒருத்தி பால கல்யாணியை எடுத்துத் தேறுதல் செய்துகொண்டிருந்தாள். தாதிகள் அரண்மனையெங்கும் ஓடி ஓடித் தேடுவதைக் கண்ட மற்ற வேலையாட்களும் காவலாளர்களும், மற்றுமுள்ளவர்களும் ஒரே கலக்கம் கொண்டு என்ன செய்வதெனத் தெரியாமல் தாங்கள் நினைத்த இடமெல்லாம் ஓடிப்போய்ப் பார்த்தார்கள்; ஏமாற்றமடைந்தார்கள். குழந்தை "அம்மா! அம்மா எங்கே?" என ஓயாமல் கேட்டு அழுவதைக் கண்ட அவர்களும் மனமிளகி அழ ஆரம்பித்துவிட்டார்கள்.

சில காவலாளிகள் விஷயத்தை மந்திரிமார்களிடம் போய்த் தெரிவித்தார்கள். அமரநாத் என்னும் சேனைத்

தலைவன் முதன் முதலாகப் பதறி ஓடிவந்ததைக் கண்ட தோழிமார்கள் ஒதுங்கி வழிவிட்டு வணங்கி நின்றார்கள்.

"நம் தேவமாதா எங்கு சென்றார்கள்? குழந்தை பாலகல்யாணியும் இல்லையா?" என பதட்டத்துடன் கேட்டான். அதே சமயத்தில் குழந்தையை மேன் மாடத்திலிருந்து எடுத்துக்கொண்டு ஓடிவந்த தாதி தலைவிரி கோலமாய் அவன் முன்வந்து "நீங்களும் காணவில்லையா, என் தாயே!' என்றாள். அவனைக் கண்ட குழந்தை தாவி அவனிடம் ஓட அவன் எடுத்து அணைத்துக்கொண்டு "அழாதேம்மா அம்மாவை.........அம்மாவை" என்று ஆறுதல் கூறுமுகத்தான் ஏதோ சொல்ல முனைந்த அவனும் துக்கத்தால் நாக்குழறி, கண்களில் பெருகும் நீரைச் சட்டெனத் துடைத்துக்கொண்டு அவள் கன்னங்களைத் தடவிக்கொடுத்தான். குழந்தை அவனை மிக்க பரிதாபத்தோடு பார்த்து அவன் தாடையைப் பிடித்துக்கொண்டு "அமரா, அம்மா எங்கே, என்னம்மா" எனக் கேட்டு மேலும் அழுதாள். தன் சக்கரவர்த்தியின் பின் சந்ததியாகிய இளவரசி கேட்டது தனக்கு ஒரு கட்டளையெனவே கொண்டு சற்று நிதானித்தவனாய் "அம்மா, அழாதேம்மா, இன்னும் கொஞ்சநேரத்தில் நம் தேவமாதா வந்துவிடுவார்கள். ஆளனுப்பியிருக்கிறேன்" எனத் தேற்றினான்.

தோழிகள் கண்ணீர் வடித்து நிற்பதைக்கண்ட அவன் "அம்மையாரின் சயன அறையில் காவலித்த பணிப்பெண்கள் எங்கே?" என்று அதட்டினான். சில பெண்கள் மிக்க பயத்துடன் நடுநடுங்கி "சுவாமி......... ...நாங்கள் தான்" என்று முன்வந்து தலைகுனிந்து மரியாதையாக நின்றார்கள்.

"பணிப்பெண்களே! நிடத சாம்ராஜ்யத்தை இப்படி அல்லோலப் படுத்தவா அசடுகள்போல் கவலையின்றி

நித்திரை போனீர்கள்? நான்கு பேரில் ஒருவளாவது விழித்திருக்கக் கூடாதா? இதுதானு உங்கள் காவல்?" எனக் கோபமும் ஆத்திரமும், பொங்க அவர்களைக் கடிந்தான். அப்பெண்கள் தங்களுக்கு என்ன தண்டனை வருமோ என்று எண்ணி நீரினுள் அமுக்கப்பட்டு மூச்சுத் திணறித் தவிக்கும் வேதனையை ஒரு விநாடி அனுபவித்துப் பதில் ஏதும் சொல்லாமல் பதறி நின்றார்கள்.

அவர்களைக் கடிந்துகொள்வதில் பயனில்லை யென்று கண்டு அவன் கோட்டையின் மணிக்கூண்டுகளி லிருந்து காவல் புரிபவர்களை வரச்செய்து, கட்டளை பிறப்பித்தான். அடுத்த வினாடியே எட்டுத் திசையிலிருந்த கூண்டுகளிலிருந்தும் கொம்புகள் ஒலித்தன. அந்த மூன்றும் ஜாமத்தில் நல்ல ஆழ்ந்த நித்திரையிலிருந்த மருங்காபுரி மக்களனைவரும் எதிர்பாராத அந்தக் கொம்புகளின் ஒலி கேட்டு விழித்தெழுந்து விட்டனர். காரணம் இன்னதென்று அறிய முடியாமல் தெருக்களில் கூட்டம் கூட்டமாய் கூடிநின்று பீதியடைந்தவர்களாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் குதிரைகள் மீது தெருத்தெருவாய் சுற்றி வீரர்கள் "நம் தேவமாதா. மஹாராணியம்மையார் இரண்டு நாழிகைக்கு முன்னர் தான் அரண்மனையை விட்டு எங்கோ போய் விட்டார்கள். உடனே கண்டு பிடியுங்கள" என்று சொல்லிவிட்டு விரைந்தார்கள். இச் செய்தி நகர் முழுவதும் ஒரு நொடியில் பரவியதும் ஜனங்களெல்லாம் தங்கள் மனம்போன இடங்களில் ஓடித் தேடினார்கள்.

முதன் மந்திரி வீரநாத், ராஜா ரகுவீரசந்திரர் இருந்த காலத்தில் அவருக்கு வலக்கரமாய் விளங்கியவன். அரசியல் சம்பந்தமாய் ஒரு சிறு காரியத்தைக்கூட இவன் சம்மதமின்றி சக்கரவர்த்தி செய்யத் துணியார். முதன் மந்திரி என்ற ஸ்தானத்தில் அவனுக்கு ராஜசபையிலிருந்த மதிப்பு அதற்கு முன்னிருந்த எந்த மந்திரிக்கும் ஏற்பட்ட

தில்லை. சிறந்த தேசபக்தன். ராஜவிசுவாசி. நாட்டின் நன்மைக்காக எந்தத் திட்டம் வேண்டுமோ, அதை எத்தனை தடைகள் வந்து குறுக்கிட்டாலும் சாதுர்யமாய் சமாளித்துக்கொண்டே நிறைவேற்றி வைக்கும் ஆற்றல் படைத்தவன். அவன் செய்யும் சீர்திருத்தங்கள் முதலில் மக்களின் மனத்திற்கு விரோதமாய்த் தோன்றினும், நாளடைவில் அதன் பலன் அவர்களுக்கே சாதகமாயிருந்து வந்ததைக் கண்ட ஜனங்கள் அவனை வெகுவாக நேசித்தார்கள். கொலு மண்டபத்தில் தான் அரசனுக்குக் கீழ் அவன் மந்திரி, மற்ற வேளைகளில் அரசனுக்கு அவன் இணைபிரியாத தோழனாகவிருந்தான். அரசன் தன் மரணப் படுக்கையில் அவனிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டுச் சென்றபடியால்தான் இன்று இவ்வளது மனம் ஒடிந்து கிடந்தான். சக்கரவர்த்தி பிரிந்ததும் தன் கண்களில் ஒன்றை இழந்தவனபோலானான். அரசியும் ஒரே பிடிவாதமாக இருக்கக்கண்டு அவளை எவ்விதம் திருத்துவதென்று தெரியாமல் நித்திரை கொள்ளாமல் தவித்தவன், ஏதோ நினைத்தவனாய் அந்தச் சமயத்தில் தன் இல்லம் விட்டு அரசன் சமாதியை நோக்கி விரைந்தான்.

அந்த இருட்டில் சாலையின் வழியாக இரண்டு உருவங்கள் நடந்து சென்றன. ஒன்று ராணியார் லக்ஷ்மி தேவி; மற்றொன்று மந்திரி வீரநாத். ராணியார் முன்னும் மந்திரி பின்னும் சென்றனர். இருவருக்குமிடையே அரைமைல் வித்தியாசம். ஒருவரையொருவர் அறியாமல் செல்லுப் அவர்களுடைய மனம் மாத்திரம் ஒரே இடத்தை நாடிச்சென்றது.

சமாதியைத் தூரத்திலேயே கண்ட ராணியாரின் உள்ளத்தில் அமுங்கிக் கிடந்த ஆத்திரமெல்லாம் பீரிட்டுக்கொண்டு வெளியேறியது. கால்கள் பூமியில் பாவாத வண்ணம் அவ்வளவு வேகமாக ஓடினாள். சமாதியின்

மேல் அடித்து மோதிக்கதறினுள். என்னென்னவோ சொல்விக் கொள்ள வேண்டுமென்று எண்ணி ஓடி வந்த அவள் சமாதியைக் கண்டதும் அதையெல்லாம் மறந்து ஆவேச உணர்ச்சி கொண்டுவிட்டாள். மோதிய வேகத்தால் பலமாக நெற்றியில் தாக்கப்பட்டு அப்படியே பிரக்ஞையற்றுத் தலைவிரிகோலமாய் விழுந்து கிடந்தாள்.

வீரநாத் சாலையின் வழியைக் கடந்து இடுகாட்டின் எல்லைக்குள் நுழைந்த சமயம்தான் அரண்மனையிலிருந்து கொம்புகள் ஒலித்தன. அதைக்கேட்டு அவன் முதலில் திகிலடைந்துவிட்டான். கொம்பின் ஒலியிலேயே அர்த்தத்தை ஒருவாறு அறிந்த அவன் 'இந்த சாமத்தில் அரண்மனையில் அப்படி என்ன ஆபத்து நேர்ந்திருக்கும்? நான் வரும்போது அங்கு நிசப்தமாயிருந்ததே! ஒரு சமயம் ராணியார்தான் ஏதும் செய்துவிட்டார்களோ ...... இருக்காது, முன்பின் யோசியாமல் ஒரு காரியத்தைச் செய்யமாட்டார்கள். பின் ஏனிந்த அபாய அறிவிப்பு? கொம்புகள் இடைவிடாமல் ஒலிக்கின்றனவே! நகரமாந்தர்கள் கூட விழித்திருப்பார்கள் போலிருக்கிறதே! இறைச்சலும் அதிகமாகிக்கொண்டே வருகிறதே......... சரி, இருக்கட்டும். சமாதியைப் பார்த்துவிட்டு சீக்கிரம் திரும்பிப் போய் பார்க்கிறேன்!" என்று தனக்குள் எண்ணமிட்டவனுய் மறுபடியும் விரைந்து நடந்து சமாதியை யடைந்தான். கோட்டையின் மணிக்கூண்டுகளிலிருந்து மணியோசை காற்றில் மிதந்து வந்தது. அதை யடுத்து முரசுச் சத்தமும் வந்தது. அவனுடைய ஆச்சரியம் அளவு கடந்தது. மனதில் ஒருவகைப் பயம் கொண்டவனுய் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான். பின்பு மனதைச் சற்று திடப்படுத்திக்கொண்டு சமாதியை வலமாகச் சுற்றிவருகையில் காலில் ஏதோ ஒன்று குறுக்கிட்டதை உணர்ந்து குனிந்து பார்த்தான், மனித உருவம். வெண் ஆடையணிந்து தலைவிரி கோலமாய்க் கிடக்கக் கண்டான். உள்

ளத்தில் எழுந்த பயம் அவனை ஒரு குலுக்கு குலுக்கி விட்டது. எனினும் சிறந்த போர் வீரனுதலால் மிக்க மனோதிடத்துடன் அந்த உருவத்தை அந்த இருட்டில் குனிந்து கூர்ந்து கவனித்தான்.

"ஹா! தேவ மாதாவா?............ தேவி! தேவி! இதென்ன கோலம்? இங்கெப்படி வந்தீர்கள்?" எனக் கதறி அவளைத் தூக்கி யெடுக்க முனைந்தான். சடாரென அவள் உடலைத் தீண்ட அஞ்சிப் பின்வாங்கி நின்று அவளை அரண்மனைக்கு எப்படி எடுத்துச் செல்வதென்று யோசித்தான். ஏதோ நினைந்தவனுய் சாலையை நோக்கி ஓடிவந்தான்.

அச்சமயம் ராணியைத் தேடி அரண்மனையினின்றும் புறப்பட்ட நான்கு குதிரை வீரர்கள் அப்பக்கம் வேகமாய் வந்து கொண்டிருந்தனர். குதிரைகளின் சப்தம் கேட்ட அவன் மரத்தோரம் பதுங்கி நின்று கவனித்தான். சமீபித்ததும் அரண்மனை வீரர்களென்று கண்டு முன்னேக்கி ஓடிவந்து அவர்களை நிற்கும்படி கூவினுன். வீரநாத்தின் குரலைக்கேட்ட அவர்கள் திடுக்குற்று குதிரைகளினின்றும் இறங்கி அவனை வணங்கி நின்ருர்கள்.

"இந்த நேரத்தில் எங்கு செல்கிறீர்கள்?" என்று அதட்டினுன்.

"பிரபு, தேவமாதாவைக் காணவில்லை......"

"நம் அம்மையார் இங்கு தானிருக்கிருர்கள். உடனே போய் ரதத்தைப பூட்டி ஓட்டி வாருங்கள்" என்று ஆக்ஞாபித்தான்.

குதிரை வீரர்களுக்கு ஆனந்தம் குமிறிவிட்டது. தங்கள் குதிரைகளைத் தட்டிவிட்டு 'சிட்டாய்'ப் பறந்து, இந்த நற்செய்தியை அரண்மனை யெங்கும் பரப்பி அமைதியை உண்டுபண்ணி, ரதத்தையும் பூட்டிக்கொண்டு திரும்பினுர்

கள். அமரநாத் முதலிய முக்கிய ராணுவஸ்தர்கள் குதிரை மீதேறிப் பின்தொடர்ந்தனர்.

சமாதியருகில் இன்னும் ஸ்மரணையற்றுக் கிடந்த அரசியைத் தோழிமார்கள் மெதுவாய் எடுத்து ரதத்தில் கிடத்தி அரண்மனை வந்தடைந்தார்கள். தன் தாயை மீண்டும் கண்ட இளவரசி பாலகல்யாணி மிக்க குதூகல மடைந்து குதித்துக் குதித்து ஆடினாள். அரண்மனை முழுதும் ஒரே குதூகலம்தான். இவர்களையெல்லாம் கண்டு தானும் சந்தோஷப்படுபவன்போல் தன் செங்கிரணங்களைப் பரப்பி ஜகஜ்ஜோதிமயமாய்க் கிளம்பினான் கீழ்த் திசையில் கதிரோன்.

---

## அத்தியாயம் 2

### "நெஞ்சகத்தாவலை நீ யறியாயோ?"

அரசி திரும்பவும் அரண்மனை வந்து சேர்ந்ததற்கு அடையாளமாக, நான்காம் ஜாமத்தில் அபாய அறிவிப்பை நகரமெங்கும் பரப்பிய கொம்புகள், இப்போது பொழுது புலர்ந்ததும் ஆனந்த ஒலிபரப்பின. இதை செவியுற்ற நகர் மாந்தரனைவரும் விஷயம் இன்னதென்றறிய பலதிக்குகளிலிருந்தும் அரண்மனையின்முன் மைதானத்தில் பெருத்த கூட்டம் கூடிவிட்டது.

இதற்கு மத்தியில் பிரதம மந்திரி வீரநாத்தும், ராணி லக்ஷ்மீதேவியும் ஒரு தனியறையில் மிக்க ஆழ்ந்த சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் முகம் கவலைக் குறியைக்காட்டின.

"என் மனம் இன்னும் ஒரு சரியான நிலையை அடையவில்லை. என் பிராணபதியைப் பிரிந்து இருக்கும் இந்த மூன்று நாட்களும் மூன்று யுகங்களாக விருக்கின்றன எனக்கு. இச்சமயத்தில் ராஜ்யபாரத்தையும் ஏற்று

எப்படி சமாளிக்கமுடியும் என்றால்? குழந்தை பாலகல்யாணிக்கே முடிசூட்டி விடுங்கள்......" என்றாள்

வீரநாத் மிக்க பணிவாக, "தாங்கள் இவ்விதம் ஒரே பிடிவாதமாக இருப்பது சரியல்ல. நாட்டின் நலனைக் கருதியும், குடிஜனங்களின் விருப்பத்திற் கிணங்கியும், இப்போது ஒரு தடையும் சொல்லக்கூடாது. இன்று தான் நகர மாந்தர்களுக்கு உங்கள் தீர்மானத்தைச் சொல்லுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன். அவர்களும் அதோ மைதானத்தில் கூடியிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தங்கள் முடிவு இருக்குமானால், அதனால் என்ன விளையப்போகிறதோ அறியேன்" என்று மனங்கசிந்து சொன்னான்.

அவள் தன் பிடிவாதத்தில் ஒரு சிறிதும் குறையாதவளாய் "வீரநாத்! ஏனிப்படி நீங்களெல்லாம் என்னை வற்புறுத்துகிறீர்கள் என்று விளங்கவில்லை. எனக்குப்பதிலாக என்பெண் ஆளட்டுமே! அவளுக்கு தக்க பருவம் வரும் வரைமந்திரிமார்களாகிய நீங்களே அரசியலைக் கவனித்துக் கொள்ளக்கூடாதா? இதிலென்ன தடை உங்களுக்கு? எனக்கு இவ்வுலக வாழ்வே வேப்பாகிவிட்டது. ஏதோ என் குலதிலகமாகிய பாலகல்யாணிக்காகவே இந்த இடத்தில் இருக்கிறேன். நான் இந்த அரண்மனையில் இன்னும் சிறிதுகாலம் இருக்கவேண்டுமென்று நீங்களெல்லாம் விரும்பினால், இச்சமயத்தில் என்னைத் தொந்திரவு செய்யாமல் விட்டு நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். என்னை மேலும் பலவந்தப்படுத்தினால் நான் இவ்விடத்தை விட்டு எங்கேனும் செல்ல வேண்டித்தான் நேரிடும். என்ன சொல்லுகிறீர்கள்?"

வீரநாத் சற்று யோசித்தான். அவளை அதற்குமேல் வற்புறுத்தவும் பிரியப்படாமல் "சரி, உங்களிஷ்டம். ஆனால் நான் இதைப்பற்றி இப்போது ஒருமுடிவும் சொல்வதற்கில்லை. முதலில் என் சகாக்களையும், இரண்டாவ

தாகக்குடி ஜனங்களின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டுவந்து உங்களிடம் கூறுகிறேன். இதோ அரண் மனை முன் கூடியிருக்கும் அக் கூட்டத்திற்கு உங்களுடைய வரவைத் தெரிவிக்கிறேன்" என்று அறையைவிட்டு நீங்கிக் கூட்டத்தை நோக்கிவந்தான். அவன் வருகையைக கண்ட ஜனங்கள் அவன் சொல்வதைக் கேட்க வெகு ஆவலோடு அமைதியாக விருந்தார்கள்.

"மஹா ஜனங்களே! நம் சக்கரவர்த்தியின் பிரிவினல் ராணியாருக்கு ஏற்பட்டிருக்கும் மாருத துக்கம் அவர்களை எக்காரியம் செய்யவும் தூண்டி விட்டிருக்கிறது. 'மனச் சாந்தி' என்று அல்லும் பகலும் பகன்று கொண்டிருந்த அவர்கள், என்ன கருதியோ நேற்று ஜாமத்தில் அரண் மனையை நீத்து அரசரின் சமாதிக்குச் சென்றுவிட்டார் கள். அதனுல்தான் அரண்மனையும் அல்லோல கல் லோலப்பட்டது. ஏதோ தெய்வச் செயலால் அவர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தோம். இச்சமயத்தில் அவர்களைத் துன்புறுத்துவதில் பிரயோசனமில்லை......" என்று சொல்லி முடிக்கு முன்னரே ராணியே அங்கு வந்துவிட்டாள். அவளைக் கண்ட ஜனங்கள் அளவு கடந்த ஆனந்தம் கொண்டவர்களாய் ஆரவாரித்தார்கள். எல்லோரும் எழுந்து மரியாதை செய்தார்கள். அவர்களைக் கையமர்த்தி ஏதோ பேச முனைந்தாள். ஆனுல் அவள் குரல் கம்மியது; பேச்சு வரவில்லை. அவளுடைய துக்க நிலையைக் கண்டு கூட்டமுழுதும் பெரிதும் துக்கித்தது. ஓரே நிசப்தம் குடிகொண்டது.

தன்னையே சற்று திடப்படுத்திக்கொண்டு; "பெரி யோர்களே] அடியாளை மன்னியுங்கள். என் நாயகரின் பிரிவின் பின் என் மனதில் உண்டாயிருக்கும் வேதனையின் பயனுக பகவானின் பாதாரவிந்தத்தை அடைய எண்ணி வாழத் திர்மானித்துள்ளேன். என்னை நீங்கள் வற்புறுத் தும் காரணம் எனக்கு விளங்கவில்லை. நம் சக்கரவர்த்தி

யின் ஆட்சி சிறப்பாய் இருந்ததற்கு உங்களுடைய ஒத்துழைப்பும், மந்திரிமார்களின் திறமையும்தான் காரணம். ஆதலின், நான் இப்போது அரசாட்சியை ஏற்க மறுப்பினும் எனக்குப் பதிலாக வரும் எவரும் உங்களுடைய ஒத்துழைப்பையும், மந்திரிமார்களின் உதவியையும் கொண்டு முன்போலவே நாட்டைக் கவனிப்பார்கள், அதோ கேளுங்கள்! 'ஆம், ஆம்' என ஆலய மணியும் கூறுகிறது. ராமச்சந்திர பிரபு வனவாச காலத்தில் அவரது பாதுகையை வைத்துப் பரதன் ஆண்டு வரவில்லையா? அதுபோல நம் பாலகல்யாணிக்கு வயது வரும் வரை அந்த ஸ்தானத்தில் மந்திரிமார்களே யிருந்து அரசாட்சியைக் கவனிக்கலாமே. இதில் உங்களுக்கு என்ன ஆக்ஷேபணை? இந்த முடிவிலிருந்து வேறு வழிக்கு என் மனதைத் திருப்ப முடியாது" என்று மிக்க சாந்தமாகவும் உணர்ச்சி ததும்பும் முறையிலும் விளக்கி, இருகரங்களையும் குவித்து நமஸ்கரித்து விட்டு மேடையிலிருந்து சடாரென இறங்கிப் போய் விட்டாள். ஜனங்களுக்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை. ராணியாரின் சுருக்கமான பிரசங்கம் அவர்களிடையே ஏதோ ஒரு உணர்ச்சியை எழுப்பிச் சற்று நேரம் மௌனத்திலாழ்த்தி விட்டது. பிரதம மந்திரி வீரநாத்தும் இப்படி அவள் திடீரென்று தோன்றி ஜனங்கள் முன்பு தன் முடிவைத் தெரிவித்து விடுவாள் என்று எதிர்பார்க்கவில்லையாதலால் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். சிறிதுநேரம் சென்றதும் ஜனங்களிடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. ராணியின் பிரசங்கத்தைக் குறித்து அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். பிரதம மந்திரியும் தங்களைப் போலவே மௌனமாயிருப்பது கண்டு அவர்கள் ஆச்சரியம் இன்னும் அதிகமாகியது. கூட்டத்தினின்று எழுந்த கூச்சலைக் கேட்டுத் தெளிவடைந்து ஜனங்களை நோக்கிப் பேச முயன்ற வீரநாத்தின் நாக்குழறியது.

"மஹா ஜனங்களே, நம் தேவமாதாவின் எண்ணத்தை இப்போது நீங்களெல்லோரும் தெரிந்து கொண்டீர்கள். இனி நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்" என்றான்.

"நீங்களே சொல்லுங்கள், என்ன செய்ய வேண்டுமென்று" எனச் சில பெரியோர்கள் கூட்டத்தினின்று கூவினார்கள்.

"ராணியார் என்னிடம் ஏற்கனவே இதைப்பற்றிக் கூறியபோது, நானும் என்னால் இயன்றவரை எவ்வளவோ சமாதானங்களைக் கூறியும் அவர் இணங்காதபடியால் இன்னும் நான் அவரிடம் வாதாட விரும்பவில்லை. இனிமேல் உங்களுக்குள்ளேயே கலந்தாலோசித்து ஒரு முடிவிற்கு வருவதுதான் உத்தமம். உங்கள் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றி வைக்க நானும் பாடு படுகிறேன். அவ்வளவுதான்" எனக் கூறி முடித்துவிட்டு அவனும் போய்விட்டான்.

---

## அத்தியாயம் 3

### "நீயே துணை எனக்கு, நீயே குலதெய்வம்."

மனம்போன போக்கின்படி கூட்டம் கூட்டமாக கூடிக் கோலாகலமாய்ப் பாடியும், தத்தி நடந்தும், பறந்தும், அடக்கமின்றி அளவுகடந்த ஆனந்தத்தால் பழங்களைக் கொத்திக் கொத்தி உதிர்த்தும், ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கட்டிப் புரண்டு தரையில் பொத்துப் பொத்தென விழுந்தும், ஆரவாரிக்கும் பக்ஷிசாதிகள்; யானைகளை விரட்டும் சிங்கங்கள்; மானைப் பதறவடிக்கும் புலிகள்; அழகிய பனிநிற முயல்களை விழுங்க உயிரிழந்தனபோல் பாவனை செய்து கிடக்கும் மலைப்பாம்புகள். இன்னும் இதுபோன்ற பல மிருக சாதிகளும் வசிக்கும்படியான கண் விச்சுவரை

பரந்து மலிந்து கிடக்கும் நெருக்கமான முட்புதர்களும் வானத்திற்கு தூண்போல் விளங்கும் மரங்களும் நிறைந்த இருண்ட சொரூபியான மங்கையைத் தன் தோளில் சாத்தி, இடக்கரத்தால் அணைத்துக்கொண்டு நிற்கிறார் மகாசக்கரவர்த்தி ரகுவீர ராஜன். வேட்டையின் பொருட்டு வந்த அவர் தன் பரிவாரங்களை யெல்லாம் விட்டு வெகு தூரம் வந்து திசை தெரியாமல் தவித்து அந்த இடத்தில் நின்று கொண்டு தன் பரிவாரங்களுக்கு சப்தம் கொடுத்தார். தன் முன்னால் கிடக்கும் முட்களை யெல்லாம் வலது கையிலிருக்கும் கோலினால் ஒதுக்கி வழியைச் சுத்தம்செய்துகொண்டார். செம்பஞ்சுக் குழம்பு தீட்டிப் பட்டுப்போல் மிருதுவான தன் ராணியின் பாதங்கள் ஏற்கனவே கற்களில் நடந்து துன்பம் அனுபவிக்கா வண்ணம் அவளை இரு கரங்களாலும் வாரி யெடுத்து அடிமேல் அடி யெடுத்துவைத்து சிறிதுதூரம் நடந்து சென்று சிலுசிலுவென இரைச்சலிட்டு ஓடிவரும் சிற்றாற்றின் கரையில் மெதுவாய் இறக்கி விட்டார்.

"பிராணபதி, நாம் எவ்வழி செல்வது? இவ்விதம் வழி தெரியாமல் நாள் முழுதும் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தால் என்றைக்கு நாம் அரண்மனை ஏகி மனவமைதியடைவது? நாதா, எனக்கு மிக்க பயமாயிருக்கிறது? நாம் சீக்கிரம் இதைவிட்டு வெளியேறி விடவேண்டும். ஐயோ. இதென்ன சரசர வென்று சத்தம்கேட்கிறதே. இதோ நரி! நரி!!" என்று கதறி அக்கோமகனை இறுகக் கட்டிப்பிடித்து அவன் மார்பில் தன் முகத்தை மோதி மறைத்துக்கொண்டாள்.

அவரோ மெதுவாக அவள் தலையை நிமிர்த்தி ஆறுதல் கூறு முகத்தான் "கண்மணி! அஞ்சாதே. பரிவாரமிழந்ததனால் பயமென்ன? அகப்பட்டுக்கொண்டோம். தப்புவதற்கு வழி தேடுவோம். பதறாதே" என்றார்.

"வழி எங்கு தெரியப்போகிறது. ஓரே முள் காடாயிருக்கிறதே!"

"லக்ஷ்மி! முட்களாயிருந்தால் இங்கேயே இருந்து விடுவோமா? நன்ருய் நினைத்துப் பார். நமது நகரம் அடையும் வரை வழியில் எவ்வித இடுக்கண்வரினும்— முட்களின் கூறிய முனைகள் குத்தி வருத்தினும், பாம்புகளின் கொடிய பற்கள் விஷத்தைச் செலுத்தினுலும்— அதையெல்லாம் மனங்கலங்காது சகித்துத்தான் செல்ல வேண்டும். ஆண்டவன் அதற்கு வேண்டிய மனோதைரியத்தை நமக்களிப்பார்" என அரசர் கூறி அவளைத் தட்டிக்கொடுத்துத் திடப்படுத்தினர்.

அவளோ தூரத்திலிருந்து வரும் சிங்கத்தின் கர்ஜனையையும், புலியின் உறுமலையும், நரியின் ஊளையையும், கேட்டு முன்னிலும் அதிகமாகப் பீதியடைந்தவளாய் "நாதா, எனக்கோ பயத்தால் உடல் நடுக்கமெடுக்கிறது. தாங்களோ என் பொருட்டு மிக்க துன்பம் அனுபவிக்கிறீர்கள். இதையெல்லாம் பார்த்துச் சகிக்க முடியவில்லை என்ருல். ஒரு வார்த்தை சொல்லுங்கள். இந்நதியிலேயே விழுந்து உயிரை மாய்த்துக்கொள்கிறேன்.........நாதா என்ன சொல்கிறீர்கள்?"

"அட பைத்தியமே! இந்த ஜகத்தில் மிருகங்கள் கூட தங்களுக்குக் கஷ்டம் வந்த காலத்துத் தற்கொலை செய்து கொள்ள முனைவதில்லையே. உயர்தர பகுத்தறிவு படைத்த மனித வர்க்கத்திற்தானு இம்மாதிரி இழிவான எண்ணம் உதிக்க வேண்டும்! எத்தனை கோடி துன்பங்கள் வரினும் பொறுமையோடு சகித்து வெற்றி காண்பதல்லவா வீரம். அதை விடுத்து நீ இம்மாதிரி முடிவு கொண்டது என்னை வியப்படையச் செய்கிறது. என்ன மதிமயக்கம் உனக்கு......"

"அப்படியானுல் சுழல்காற்றில் அகப்பட்டு துரும்பு போல் தவிக்கும் அடியாளுக்குச் சாந்தி எங்கே? இக்கொடூரக் காட்சிகளைக் கண்டே சாகவேண்டுமா?........"

' லெக்ஷ்மி! இக்கானகத்தில் உனக்கு மிருகங்களின் கோர சப்தம்தானு கேட்க வேண்டும்? அதோ பார்: விர் விர்ரெனப் பறந்துபோகும் பக்ஷிக் கூட்டங்களை. பறக்கும் போதே பாடிக்கொண்டு போகும் அவைகளின் இன் னிசைக் கீதங்கள் உனக்குச் சாந்தியளிக்கவில்லையா. இப் பக்கம் பார், ஒரு புஷ்பமாலையை! எத்தனை வித விதமான வர்ணங்கள்! ஆண்டவன் சிருஷ்டி விநோதம் உன் கண்க ளுக்கு விருந்தளிக்க வில்லையா? அங்கிருந்து வீசும் காற்று எவ்வளவு சுகந்தமாயிருக்கிறதென முகர்ந்து பார்"

"நாதா இன்பத்தையே யுணர்ந்து ஆனந்த முற்ற என் இதயத்திற்கு துன்பத்தை உணரச்சக்தியில்லையே" அரசன் கலகலத்த ஒரு சிரிப்புச் சிரித்து "பேதாய்; இன்ப துன்பத்தை சமமாய் அனுபவிக்கச் சக்தியில்லாத உன் போன்றவர்களுக்குச் சாந்தி எங்கு தானிருக்கிறது? அதோ பார்........." என முற்றிலும் கூறிமுடிப்பதற்குள் பளிச் சென்று ஒரு பெரும் ஜோதி அவர்கள் முன்கிளம்பிற்று அதினின்று ஓர் சந்நியாசி தோன்றினர். நரைத்த நீண்ட தாடியும் படர்ந்த முகமும், காவியுடையும் கொண்ட அவர் சாந்த சொரூபியாக விளங்கினர். மெய்ம்மறந்த வளாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் ராணி.

"மாந்தரே எழுவீர். சாந்தி இதோ" எனப்பாடி சந் யாஸத்தின் உயர்வையும், இன்ப, துன்பம், இவையிரண்டும் பொன், இரும்பு விலங்குகளெனவும், அவைகளை உடைத் தெறிந்து வந்தால் சாந்தி கிட்டுமெனவும் கூறி முடித்தும் புறப்பட்டார்.

"கண்மணி பார்த்தாயா? சுவாமி போகிருரே!" எனக் கூறி........... "சுவாமி!" எனக் கூவினுன். சடாரெனத் திரும்பிப் பார்த்தார் சந்யாசி. திடீரென மறுபடியும் ஒரு ஜோதி கிளம்பிற்று. அதிலிருந்து வந்த ஒரு சக்தி அரசனை அமுக்க அவனும் அஜ்ஜோதிக்குள் கலந்தான். "ஹா நாதா" எனத்தாவிப் பிடிக்க ஓடினுள் ராணி. அரசனும

சந்யாசியும் ககனமார்க்கத்தில் சென்றனர். "நாதா.........
ஐயோ, நாதா" எனக் கதறினுள் அவள்.

கொழுநன் பிரிவாற்ருமையால் மனநிலை குலைந்திருந்த ராணியார் இரவெல்லாம் அவ்விதப் பயங்கரக் கனவு கண்டு கொண்டிருந்தாள். பயத்தால் உடலெல்லாம் நனைந்துபோய் உணர்வற்றுக் கிடந்தாள்.

ஆதித்தன் தன் கரங்களை ஜன்னல் வழியே மெதுவாய் நீட்டி அவளைத் தட்டி எழுப்பலும், அவளும் மெதுவாய்ப் புரண்டு எழுந்து, அப்படியே முழங்காற்படியிட்டு கதிரவனை வணங்கினுள். அவளுடைய மெல்லிய உதடுகள் அசைந்தன.

"பல்லாயிரம் கோடி உயிர்களை நித்திரையிலிருந்து எழுப்பும் ஜோதி நாயகா! மறுபடியும் துக்கத்தை அனுபவிக்கவா என்னை எழுப்பினுய், ஒரே தூக்கத்தில் என்னை ஆழ்த்திவிடக் கூடாதா?" எனக் கூறிக் கதிரவனையே கூர்ந்து கவனித்துக் கண்ணீர் பெருக்கினுள். சூரியனின் காந்தி பல்லாயிரம் மடங்காகப் பெருகி அவளுக்கு மயக்கத்தை யுண்டுபண்ணலும், அவள் அப்படியே தரையில் சாய்ந்தாள்.

பொழுதுபுலர்ந்து வெகு நேரமாகியும், ராணி அறையிலிருந்து சத்தமே வராமலிருக்கக்கண்ட, பாங்கிமார்கள் அரசியின் முந்தின நாளிரவு உத்திரவை மீறி உட்புக முடியாமல் கைகளைப் பிசைந்து கொண்டு வெளியே நின்றனர்.

சாளரத்தின் ஓரமாக உயர்ந்து வளர்ந்து நின்ற மரத்திலிருந்த அரண்மனைப் பஞ்சவர்ணக் கிளியொன்று சாளரத்தின் வழியாக ராணியின் அலங்கோல நிலையைக் கண்டுவிட்டது,' கீ! கீ! கீ!' எனக் கத்திப் பறந்து ஜன்னலின் ஓரத்தில் வந்தமர்ந்து ராணியின் நிலையைச் சரியாகக் கவனித்துவிட்டு. "ராஹ்ணி! ராஹ்ணி!!" எனக் கத்திக் கொண்டே அரண்மனை முழுதும் சுற்றிச் சுற்றிப் பறந்தது.

அரண்மனையில் வசிக்கும் எல்லாக் கிளிகளுள் அது ஒன்றுதான் மிக்கப் பழயதும், மிக்க அறிவுடையதும் என்று அனைவருக்கும் தெரியும். அது இப்படிச் சுற்றிச் சுற்றிக் கத்துகிறதைக் கண்ட அரண்மனைச் சேவகர்களும் அந்தப்புரத்திலுள்ள பாங்கிமார்களும் ஒன்றும் புரியாமல் ராணிக்கு ஏதோ விபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்று அஞ்சி உப்பரிகைக்கு விரைந்தோடினார்கள். அதற்குள் குழந்தை பாலகல்யாணி நித்திரை நீங்கியிருந்தபடியால் ஒரு பணிப்பெண் அவளைத் தோளில் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள். அரசியின் அந்தரங்க அறைக்கு வெளியே அரண்மனையாட்களின் கூட்டம் அதிகமாகி விட்டது. ஆனால் ஒருவருக்காவது கதவைத் தட்ட தைரியம் வரவில்லை. அரசியின் கடுமையான உத்தரவு அது எனினும் பொறுமையிழந்த சில காவலாளிகள் பக்கத்தில் நின்ற மரத்தின் மீதேறி சாரளத்தின் வழியாக அரசியின் மயக்கநிலை கண்டு கீழே இறங்கிவந்து கதவை இடித்தார்கள். சற்று மயக்கம் தெளிந்த அரசி அறைக்கு வெளியேயிருந்து வரும் தன் குழந்தை பாலகல்யாணியின் அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து ஓடிக் கதவைத் திறந்தாள். அவள் பதட்டத்தைக் கண்ட அனைவரும் பயத்தினால் பின்னடைந்தார்கள்; பாங்கியிடமிருந்து இறங்கி "அம்மா! அம்மா!!" என இரு கைகளையும் விரித்துக்கொண்டு ஓடி வந்த பாலகல்யாணியை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு "கண்மணி! எவ்வளவு நேரமடா காத்திருந்தாய், இன்றைக்கு? அம்மா, ரொம்ப நேரம் தூங்கிட்டேண்டா கண்ணு" என்று அவள் முகத்தில் முத்தமீந்து அப்படியே மறுபடியும் அறைக்குள் சென்று மஞ்சத்தின்மீதமர்ந்து பக்கத்தில் குழந்தையையும் அமர வைத்தாள். குழந்தையைக் கண்டதும் அவள் நெஞ்சு வேகம் குமுறிக்கொண்டு வந்தது.

ரகுவீர சந்திர ராஜனின் வாழ்க்கைப் பிரிவின்பின் லக்ஷ்மிதேவிக்கு உலக வாழ்வு நஞ்செனப் பட்டது. கண்ணிழந்தவள்போல் ஒரு பொருளிலும் அவள் நாட்டம் செல்லாமல் எந்த நேரத்திலும் தன் மனது சாந்தியடைய வழியையே சிந்தித்து உருகினாள். கொந்தளிக்கும் நடுக்கடலில் படகோட்டி மடிந்து விழ, அதிலிருக்கும் பிரயாணிகள் எல்லாரும் கரைசேர வகையறியாது தவிப்பதுபோல ராணி லக்ஷ்மிதேவியும் தேற்றுவாரின்றிக் கிடந்தாள். தன் ஒரே மகள் சிறுமி பாலகல்யாணியின் நிமித்தம் தன் கணவர் வேண்டிக்கொண்ட வேண்டுகோளை நிறைவேற்றவே அவள் அந்த அரண்மனையில் இதுகாறும் தங்கியிருந்தாள். மரணப் படுக்கையில் அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டால் அவருடைய ஆத்மா சாந்தியடையாதே என்று எண்ணியும், பாலகல்யாணி அவ்வளவு சிறு வயதில் திடீரென்று தாயையும் தந்தையையும் இழந்தால் அதே துக்கத்தில் அவளும் உயிர் துறப்பாள் என்று கருதியும், இவ்விரண்டு பாவத்திற்கும் உள்ளாவதைத் தவிர்ப்பதற்காகவே அவளுடைய உயிர் உடலில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

எனினும் இரும்பையும் உலையிலிட்டு பழுக்கக்காய்ச்சி அடித்து அடித்து தனக்கு வேண்டியபடியெல்லாம் உருவமாக மாற்றுகின்ற கருமானைப்போல் அவளும் நாளாக ஆக மனதைப் படிப்படியாகத் திருப்பிவிட்டாள், கணவனுக்குக் கொடுத்த வாக்குறுதியும், ஏழு ஆண்டுகளை நிறையப்பெற்ற தன் மகளையும் உதறிவிட்டு தன் கணவனை விண்ணிலேனும் சந்திக்கத் தீர்மானித்துவிட்டாள். இந்த எண்ணம் அவள் மனத்திலுதித்ததும் பக்கத்திலிருந்த குழந்தையை நோக்கினாள். கண்ணீர் மளமளவென்று அவளையுமறியாமல் கொட்டியது. குழந்தையறியாவண்ணம் கண்களைத் துடைத்துக்கொண்டு தன் பின்னால் நின்றுகொண்டிருக்கும் பாங்கிமார்களையும், வாசற்

கதவில் நிற்கும் காவலாளர்களையும் ஒரு பார்வை பார்த்தாள். பார்வையின் அர்த்தத்தை யூகித்த அவர்கள் அனைவரும் சந்தடியன்றி கீழே போய்விட்டார்கள். முக்கியமான இரு பாங்கிமார் மட்டும் அவளுடைய ஆணையை எதிர்நோக்கி நின்றார்கள். குழந்தையைத் தோழியர்களிடம் ஒப்படைத்து "நீராட்டி ஆகாரம் கொடுத்துக் கொண்டு வாருங்கள்" எனக்கூறி அவளும் அவர்கள் முன்னிறங்கி ஸ்நான மண்டபத்திற்குள் நுழைந்தாள்.

ராணி வழக்கத்திற்கு மாறாக அன்று மிக்க கவலைக் குறியோடிருப்பதைக் கண்ட பாங்கிமார்கள் அவள் ஸ்நானம் முடித்துக்கொண்டு வருவதற்குள் பூஜைக்கு வேண்டியவற்றைத் தயார் செய்தார்கள்.

அரண்மனையின் விசாலமான நந்தவனத்தின் மத்தியில் சந்தடி எதுமில்லாத இடத்தில் பளிங்கினால் எழுப்பப்பட்டிருந்த அந்தக் கோவிலில் குடியிருக்கும் கண்ணனைத் தான் அவளுடைய மூதாதையர்களெல்லாம் தொன்று தொட்டு வழிப்பட்டு வந்தார்கள். யுத்தகளத்தில் வெற்றி தோல்வி எந்தப் பக்கம் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாமலிருக்கும் நிலையில்கூட அவளுடைய முன்னோர்கள் அந்தக் கண்ணனிடம் வந்து முறையிட்டுவிட்டுச் சென்றால் உடனே வெற்றி கிடைத்து விடும் என்பது கர்ண பரம்பரை.

அந்தக் கண்ணனிடம் இன்று அவளும் மனம்விட்டுப் பேச தீர்மானித்துச் சென்றாள். தாதிகள் சிலர் பூஜைக்கு வேண்டிய பொருள்களைத் தட்டுகளில் ஏந்திப் பின் தொடர, தூய வெண்பட்டணிந்து மனமும் உடலும் நொந்து, மிக்க தளர்ந்த நடையுடன் ஆலயத்திற்குள் நுழைந்தாள். தாதிகள் எல்லோரும் வெளியே வந்து கதவையும் வெளிப்பக்கம் சாத்தித் தாளிட்டுக் காத்திருந்தார்கள்.

பளிங்குக் கற்களில் கட்டப்பட்ட விசாலமான மண்டபத்தில் மேற்குப் பாகத்தில், கிழக்கு நோக்கிய வண்ணமிருந்தது கண்ணன் சிலை. ஆயிரம் சந்திரர்களின் ஒளியையும் ஒருங்கே திரட்டிக் கடைந்தெடுக்கப் பட்டது போன்ற பிரகாசம் பொருந்திய அந்தப் பால்வண்ணச் சிலையின் முகத்தில் தவழும் புன்சிரிப்பு, கண்களினின்று வீசும் அருள் ஒளி, தங்கத்தால் ஆகிய குழல், மாணிக்கமும் மகரதமும் பதித்த கிரீடம், சலங்கையும் பாத சரமும் அணிந்த சிறு கால்கள், இவைகளெல்லாம் அந்தக் கண்ணனைக் காணும் எவரையும் தன் வசமிழுக்கும் காந்த சக்தியோடு திகழ்ந்தன. பெரிய சாளரங்களில் பதித்திருந்த வர்ணக் கண்ணாடிகளினூடே உட்புகுந்த சூரிய கிரணங்கள் பச்சை, சிவப்பு மஞ்சள், ஊதா, இப்படியாகப் பல நிறங்களை மண்டபம் முழுதும் வாரி யிறைத்திருந்தன. சிலைக்கு வலப்புறத்திலும் இடப் புறத்திலுமிருந்த சுவர்கள் முழுவதிலும் கண்ணனின் பால்ய லீலைகள் சித்திரிக்கப் பட்டிருந்தன. சாதாரணமாகவே தனிச்சோபையுடன் விளங்கும் அவ்வோவியங்கள் வர்ணக் கிரணங்கள் பட்டதும் இன்னும் அழகாகக் காட்சி தந்தன.

பிரதிதினமும் ஆலயம் வந்து செல்லும் ராணிக்கு, அக்காட்சிகளெல்லாம் பார்த்துப் பார்த்துப் பழக்கமாகியிருந்தபடியால், அவைகளின் மேலெல்லாம் கவனம் செல்லவில்லை. ஆலயத்தினுள் நுழைந்த அவள் நேராக விக்கிரகத்தினிடம் சென்றாள். பக்கத்துத் தட்டிலிருந்த பெரிய ரோஜாப்பூ மாலையை எடுத்து அதன் கழுத்தைச் சுற்றிப் போட்டாள். தன் முன் வந்து வணங்குபவர்களையெல்லாம் தன் வசப்படுத்தும் வசிய சக்திபெற்ற அக்கண்ணன் முன் மனம் நொந்து முறையிட வேண்டியே வந்த ராணி தன் மனதைப் பறிகொடுத்து அவன் முன்னிலையில் மண்டியிட்டுக் கரம் குவித்துக் கூறினாள் :—

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
சி. த. சண்முகம் நூலகம்.

"கண்ணா, என்னப்பா! நின் தயையை விரும்பித் தவம் கிடந்த பலன் இதுதானா? என் கடமையை உனக்குச் செய்யாமல் மறந்து ஒரு நாளுமிருந்ததில்லையே! யாருக்கும் நான் அறிந்து ஒரு தீங்கும் இழைத்ததில்லையே. பின் ஏன் என்னை இக்கதிக்கு ஆளாக்கினாய்? அடியவர்களை அளவிற்கு மீறி சோதிப்பது தான் கருணைக் கடலாகிய உன் பழக்கமோ? ஆனால் எனக்கு உன்னால் நேர்ந்திருக்கும் நஷ்டம் திரும்பவும் அடையப் பெறும் நஷ்டமல்லவே! கிருஷ்ணா என் பிராணபதியை மீண்டும் பெறமுடியுமா? என் உயிரைப் பிரித்து உடலை மாத்திரம் இங்கு கிடத்தி விட்டாயே? என் கதி இது தானா......" இவ்வாறாகப் புலம்பும் அவள் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்து நீரும் மாலை மாலையாகப் பெருகி வழிந்தது. அப்படியே தியானத்தில் ஆழ்ந்து கண்களை மூடி விட்டாள்.

பணிப்பெண்களால் நீராட்டப் பெற்றுப் புது ஆடைகளணிந்து, அலங்காரமாய் அவர்கள் மத்தியில் சிறுமி பாலகல்யாணி மாடிப் படிகளைத் தாண்டிக்குதித்து ஓடி வந்தாள். குதூகலப் பெருக்கால் தோழிகளையும் கவனிக்காமல் ஓடிவரும் அவள் பத்துப் படிகளுக்கொரு முறை நின்று அழகிய நந்தவனத்தைப் பார்த்து காற்றில் அசைந்தாடும் மலர்களெல்லாம் தன்னை 'வா வா' என்று தலையாட்டிக் கூப்பிடுவதாக உணர்ந்து தோழிகளைப் பார்த்துச் சிரிக்க, அவர்களில் இவளது மகிழ்ச்சியிலீடுபட்ட தோழி ஒருவள் இவளிடம் ஓடி "வாம்மா, நீ நடக்கவேண்டாம்" என வாரி எடுத்துக் கொண்டதும் சிறுமி, 'அம்மா எங்கே?" எனக் கேட்டாள்.

"அம்மா கோயிலுக்குப் போயிருக்காங்க. இப்ப வந்திடுவாங்க" என்றாள் தோழி.

"நீங்கள்ளாம் போகலியா?"

"இல்லேம்மா; அவர்கள் தியானம் பண்ணும்போது நாங்க ஒருத்தரும் பக்கத்திலே இருக்கக்கூடாது."

"ஏன், நான் கூட போகக் கூடாதா? என்னை விடு. நான் போய்ப்பார்க்கிறேன்" என்று கூறி தாதியின் இடுப்பிலிருந்து இறங்கி சற்று தூரத்தில் தெரிந்த ஆலயத்தை நோக்கி ஓடி, வாயிற்கதவு சாத்தியிருக்கக் கண்டு, தட தட வென்று தட்டினாள். "குமாரி. தட்டாதே, அம்மா கோவிச்சுக்குவார்கள். சாமி கும்பிடும்போது சத்தம் போடக்கூடாது" என்று மெதுவாய்க் கூறினாள் வாயிலில் காத்திருந்த ஒருத்தி.

சிறுமி அதையும் கேளாது "அம்மா! அம்மா!!" என முன்னிலும் பலமாகக் கதவைத் தட்டினாள். காலால் எட்டி உதைத்தாள். கிருஷ்ணன் முன்பு முறை கூறிக் கொண்டிருந்த ராணி தன் பெண்ணின் குரல் கேட்டுத் தியானம் கலையப் பெற்று கண்விழித்தாள், கண்ணீரையெல்லாம் துடைத்துக்கொண்டு, மறுபடியும் கண்ணனை ஒருமுறை வணங்கினாள் பிறகு வேகமாய் நடந்து வந்து கதவைத் திறந்து முகத்தில் புன்னகை வரவழைத்துக் கொண்டாள். "கல்யாணி, வாடா அம்மா ரொம்ப நேரமாகக் கூப்பிட்டாயா?" என இருகரத்தாலும் தன்முன் ஆவலாய் ஓடிவரும் குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு தோழிகளைப் பார்த்து "குழந்தைக்கு ஆகாரம் கொடுத்து விட்டீர்களா?" என்றாள்.

"மஹாராணி, இன்னுமில்லை. தாங்கள் வராமல் குமாரியும் சாப்பிட முடியாதென்று சொல்லி விட்டது" என்று சற்றுப் பயந்து கொண்டே சொன்னாள் ஒரு தோழி.

"என்ன. கல்யாணி! இன்னுமா சாப்பிடாமலிருக்கிறாய்? எவ்வளவோ நேரமாகி விட்டதே. சரி, புறப்படுங்கள்" என ராணி கூறலும் எல்லோரும் அவள் பின் தொடர்ந்தேகினர்.

---

## அத்தியாயம் 4

### "இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்"

முகில் மண்டலத்தையும் முட்டிக்கிழித்து நிற்கும் மலைத் தொடரினின்று ஊறிவரும் நீர் ஒருங்கு சேர்ந்து, பாறைகளின்மேல் பால்போல் வடிந்து சிதறும் நீர்த்திவலைகள் புதர் மண்டிக் கிடக்கும் செடிகொடிகளின் இலைகள் மேலெல்வாம் முத்துக்கள் போல் பரிணமித்தன. காற்றில் அசைந்தாடும்போது அம்முத்துக்கள் செடிகளினின்று பொலபொலவென உதிர்ந்தன. மலர்களினின்றும் வரும் மணம் நிறைந்த இளந்தென்றல் மக்களின் மனதைப் புளிகிக்கச் செய்தது. இத்தென்றலையாவது சுவாசித்து, தன் இதயத்தை வாள்போன்று அறுத்துக் கொண்டிருக்கும் துக்கத்தை சற்றே தணித்துக் கொள்ள எண்ணியவனாய் தடித்த புஜங்களும், விசாலமான தோளையும், விரிந்த மார்பையும் பெற்ற வீரன் வீரநாத் தன்னந் தனியாய், துணைவரோ, ஏவலாளோ, மெய்க்காப்பினரோ இன்றி, அரிமாவின் நடைக்கொப்ப தன் இரும்பு போன்ற பாதங்களை வீசி எடுத்தடி வைத்து நடந்து சென்றான்.

அவன் சென்ற சாலையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்து செறிந்து நின்ற மரங்களும், அவன் கவலையை உணர்ந்தவைகள் போல் அவன் மனதிற்கு நிம்மதியளிக்கத் தங்கள் பருத்த கிளைகளை ஆட்டி அலைத்துக் காற்றை வீசின. அவைகளினின்றும் உதிர்ந்த செம்மை, வெண்மை, மஞ்சள், நீலம் முதலிய பூக்கள் சாலையெங்கும் வர்ணக் கோல மிட்டது போல பரவி அவனுக்குப் புஷ்பப் பாதையை உண்டுபண்ணின. இயற்கை வளங்கள் அவன் உடலுக்கும், மனதிற்கும் சாந்தி யளித்துக் கொண்டிருக்க பலவகைப்பட்ட புள்ளினங்கள் மரங்களெங்கும் நிறைந்து 'கீச், கீச்'; 'கிக்-கிக்'; குக்கூ-கூ-குக்கூ' எனக் கத்திச் சப்தமிட்டு அவன் செவிக்கும் அமுதூட்டின.

காற்று வீசுந்தோறும் ஏற்படும் கிளைகளின் அசைவுகளால் பலவர்ணக் கிளிகளும், வெண்ணிறக் கொக்குகளும், கருங் குயில்களும், மணிப்புருக்களும், இடம் விட்டு இடம், மாறிப் பறந்து உட்காருவது அம் மரங்களிலுள்ள பூக்களை சிதறி ஓடுவதுபோல் தோன்றின. கூடுகளி லிருந்த இளங்குஞ்சுகள் 'வியா, வியா' வெனக்கத்திக் கதறின. 'கீச்' என்று ஒரு சப்தம், மறுகணம் குபீ ரென சிட்டுக் குருவிகளெல்லாம் கூட்டமாகப் பறந்து நிமி ஷத்தில் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் மறைந்து கொண்டிருந்தன.

மலைச் சரிவுகளில் கூட்டம் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளில் சில நல்ல புல் வெளிகளை நாடி தன் இனத்தவர்களையும் மறந்து தனியாய் வெகுதூரம் சென்று, அங்கிருந்தே உயர்ந்த பாறைகளின் மீதேறி நின்று தன் எஜமானர்களாகிய கோபாலச்சிறுவர்கள் எங் கிருக்கிறார்களென்று தலையைத் தூக்கி நாலா பக்கமும் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தன. கோபாலச் சிறுவர் களோ மரக்கிளைகளிலும், மரங்களிலிருந்து தொங்கும் உறுதியான கொடிகளினுலாக்கப்பட்ட ஊஞ்சல்களிலும், பாறைகளின்மேலும் அமர்ந்து தெம்மாங்கு பாடிக்கொண் டும், குழலூதிக் கொண்டும், கைத்தாளம் போட்டுக் கொண்டும் ஆனந்தத்தி லீடுபட்டு தங்கள் மாடுகளையும் மறந்திருந்தனர்.

அவர்களில் ஒருவன் ஏதோ நினைந்தவனுய் மரக்கிளை யிலிருந்து திடீரெனக் குதித்து, புதரினருகில் மறைத்து வைத்திருந்த ஒரு சிறு கூடையை எடுத்து வந்து, அதிலி ருந்த வறுத்த கடலையை இங்கு மங்கும் துள்ளி ஓடி எல் லோருக்கும் சிறிதுசிறிதாகப்பகிர்ந்துகொடுத்துக்கொண்டு வந்தான். தீனி கிடைத்ததும் அவர்களின் ஆரவாரம் முன்னிலும் அதிகரித்தது.

சில பசுக்கள் அவர்கள் ஏதோதின்பதைக் கண்டு அவர்களிடம் ஓடி வந்து வாய் திறந்து தலை அண்ணாந்து நிற்க, அவரவர்கள் தங்கள் தங்கள் மாடுகளின் வாயில் இரண்டு கடலைகளைப் போட்டனர். அவைகளுக்கு ஆனந்தம் மீறி வாலைத் தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்துவிட்டன. சிறுவர்களுக்கு இப்போது தான் மற்ற மாடுகளைப் பற்றி நினைவு வந்தது.

"ட்ரியோ! ட்ரியோ!!" வெனச் சிலர் கத்திக் கொண்டு ஓடினார்கள், நீர்ச் சுனைகளில் சில பசுக்கள் தங்கள் கன்றுகளுடன் நீரை உறிஞ்சிக் கொண்டிருக்க, இன்னும் சில கன்றைக் காணாத பசுக்கள் 'அம்மா-மா' எனக் கூவி யழைக்க தாய்க் குரல் கேட்ட கன்றுகள் நாலா பக்கங்களிலிருந்தும் துள்ளி ஓடிவந்து கொண்டிருந்தன. இடையர்கள் பாட்டும் இடை இடையே ஒலித்தன.

இவ்வளவு காக்ஷிகளையும் ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டுவரும் வீரநாத் தன் இதயபாரத்தைக் குறைதது அமைதிதேட முனைந்தான். மாற்றம் வேண்டி எத்தனை வகைகளில் முயன்றும் ஓங்கி ஓங்கி அறையப்பட்ட ரப்பர் பந்தின் உயர்ந்த எழும்பல்போல் அவன் கவலை மிகைப்பட்டது.

மனச் சோர்வு மிகுதியால் அவன் கால்களும் சோர்ந்து தள்ளாட்ட முற்றன. கண்களில் திரையாக விருந்த நீர் குபிரென வடிய ஆரம்பித்தது. வாய் முணு முணுப்புடன் தேம்பினான். கட்டியிருந்த கைகளைப் பிரித்து வலக்கரத்தால் நெற்றியில் ஓங்கி அறைந்தும் வாய்விட்டுக் கதறி, மேலும் நடக்க சக்தியற்று பக்கத்தில் வானையளாவிநின்ற ஓர் விருக்ஷத்தினடியில், அடைக்கலம் புகுந்து ஆறுதல் வேண்டுபவனைப்போல, போய்ச் சாய்ந்தான்.

கைகளை அகலவிரித்து ,மல்லாந்து படுத்திருந்த அவன் கண்கள் மரங்களின் இலை, பூ, காய்களையும், கிளைகளில்

தாவிப் பறக்கும் புள்ளினங்களையும், அதற்குமேல் பர்வத சிகரங்களை மோதிக்கொண்டு செல்லும் மேகக் கூட்டங்களையும் தான் கண்டன. அவன் தேடிய ஆறுதல் அங்குமில்லை.

பொங்கிவரும் வெள்ளம் தன் முன்நிற்கும் அணைக் கட்டையும் உடைத்தெறிவது போல் அவன் உள்ளத்தில் குமுறிய துக்கம் அவன் மௌனத்தைத் தகர்த்து வாய்விட்டுக் கதறச் செய்தது.

"ஏ தெய்வமே! இப்படியா சோதிக்க வேண்டும்? வீர நிடதம் மாளாத் துக்கத்தில் தள்ளப்பட்டு தவிக்கிறதே. இச்சாம்ராஜ்பத்தை ஆளச் சந்ததியுமா அற்றுப் போக வேண்டும்? இளவரசி பாலகல்யாணியோ இன்னும் எட்டாண்டு கூடப் பூர்த்தியாகாமலிருக்கிருள். அவளுக்குத் தக்கவயது வரும்வரையாவது எம் தேவமாதா, சக்ரவர்த்தினியாரை, ராஜ்யமேற்க எவ்வளவோ மன்றாடியும் கண்டிப்பாய் மறுக்கிருர்களே. சாந்தி மார்க்கம் தேடித்தவிக்கும் அவர்கள் அன்றே சக கமனம் செய்திருக்க வேண்டுமென்றும், அது தவறியதால் இப்போது சந்யாசமாவது தாங்கவேண்டுமென்றும் கூறுகிருர்களே! பிரபு, என் வீர நிடதம் நிலைதவறி இருக்கும் இந்நிலையில் ஒரு நல்ல வழிகாட்டாயா? தயாநிதி! நின் சோதனைக்கு நாங்கள் தானு அகப்பட்டோம்? ஏ, கருணுநிதி? வரம்பு மீறிய இக்கொடுமையோ நின் சோதனையின் அளவு? ஐயோ! எங்கள் அடக்கொணு உணர்ச்சிக்கு அணைபோட முடியாமல் தவிக்கும் இச்சமயத்திலா எம் இறைவன், மகாபூபதி, ரகுவீர சந்திரராஜன் ஆவி துறக்க வேண்டும்?" எனக் கண்ணீர் உதிர, உதடுகள் துடிக்க, உடல் பதைக்க விம்மியழுதவனுய்த் தலை சாய்த்து எதையோ கவனித்தான்.

செறிந்து நிற்கும் விருக்ஷங்களினூடே உயர்ந்த கோபுரங்கள், பெரும் கூடல்கள், அப்பால் வான

ளாவிய துவஜ கம்பத்தின்மேல் 'படபட' வென வீசிப் பறந்து கொண்டிருந்த நிடத சாம்ராஜ்ய சிங்கக் கொடி. அதைக் கண்டதும் அவன் கண்ணில் ஒரு ஒளி கிளம்ப, நெஞ்சத்திலிருந்த கவலையும் மாறி, உவகைமீறி ஆவேசம் கொண்டவனாய் "என் நிடத சாம்ராஜ்ய மகிமை யைப் பிரதிபலிக்கும் என் தாயின் மணிக்கொடியே, நிடத மக்களின் இடையறு ஊக்கத்தின் சின்னமாய் விளங்கும் உன் நிழலின் கீழ் எத்தனை தியாகங்கள்! என்னென்ன கஷ்டங்கள் அனுபவித்தோம்! அப்போதெல்லாம் எங் களுக்கு ஊக்கமளித்த நீ, இன்றும் எங்களுக்கு அந்த மனோதிடத்தைக் கொடுத்துக் காப்பாற்ற மாட்டாயா? எங்கள் தேசீய சிங்கக் கொடியே! நின் பூரிப்பு என் றென்றும் மென்மேலும் பெருகட்டும்......" என வீர மொழிகள் கூறிக்கொண்டு வந்த அவன் தேச பக்தி யென் னும் நெருப்பால் உடலெல்லாம் தகிக்கப்பட்டவனாய் துடி துடித்து அப்படியே தரையில் கைகளைப் பரப்பிய வண் ணம் சாய்ந்து விட்டான். அக்கினியால் தகிக்கப்பட்ட அவன் உடல் முழுதும் முத்து முத்தாய் வியர்வை துளித் தது. அவனுடைய வஜ்ரம்போன்ற கரங்கள் துவண்டு போய்க் கிடந்தன. மிருகேந்திரனையும் தன்னந்தனியாய் எதிர்த்துப் போராடிக்கொல்லக்கூடிய அவனுடைய உடல் வலிமை எங்கோ, மறைந்து விட்டது.

தன் பசுவைத் தேடிப் பல இடங்களிலும் சென்ற ஓர் இடைப்பையன் கடைசியாக சற்று தூரத்தில் வெள்ளி யென ஊகிக்கும் வெண்மை நிறங்காட்டிக் குதிக்கும் வெளிரும், ஆனந்தக் கூத்தாடும் கெண்டையும் கெளிரும், துள்ளிக் குதித்து, சலசல வென்னும் சப்தத்தோடு ஓடும் நீரோடையில் நீர் அருந்திக் கொண்டிருக்கக் கண்டு ஆனந் தமே லீட்டால் "சரசு! ஓ, சரசு! என்னை எங்கெல் லாம் அலைஞ்சிடச் செய்தேம்மா, சரசு" எனக்கத்திக் கொண்டே ஓடினான். அவன் சப்தம் கேட்ட பசுவும்

"ம்மா ம்மா" என எதிர் ஒலி கொடுத்து நீரோடையி னின்று அவனை நோக்கி எதிர் கொண்டுவர அவன் அதன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "சரசு, என்னை எங்கெல்லாம் அலையச்செய்தேம்மா. வா, போகலாம்" என அதன் கொம்பைப்பிடித்து நல்ல வழியில் கூட்டிவர அதுவும் அவனைப் பின் தொடர்ந்தே வந்து சாலையை யடைந்ததும் கொம்பையசைத்து அவன் பிடியினின்றும் விடுவித்துக் கொண்டது. அவனும் "வாம்மா, வா" என சந்தோஷத்தல் துள்ளிக் குதித்துப் பாடிக்கொண் டும், முன்னால் தாழ்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கிளை களைத் தாவிப் பிடித்து பூக்களைப் பறித்து அதன் முகத் தில் எறிந்து "சரசு, ஏ, சரசு" என்று திரும்பித்திரும்பிக் கூவிக்கொண்டே ஓடினான். அவன் ஆட்டத்திற்குத் தக்க பசுவும் தலையை ஆட்டியும், தாவிக் குதித்துப் பின்னோடி வந்தது.

கட்டுக் கடங்கா களிப்பில் தன்னையே மறந்து ஓடும் சிறுவன் தன்னைச்சுற்றி நிகழ்வதையும், தன் முன்னால் கிடக்கும் பொருளையும் கவனியாமல் சென்றபடியால், சாலையோரத்தில் ஸ்மரணையற்றுக் கிடக்கும் நிடதநாட் டின் வீரனும் அவன் திருஷ்டியில் விழவில்லை! ஆனந்தம் அளவுமீறி விட்டதல்லவா?

சாம்ராஜ்ய வீரன், கேவலம் ஓர் மாடு மேய்க்கும் சிறுவனின் கவனத்தைக்கூட ஆகர்ஷிக்கும் சக்தியின்றிக் கிடந்தான், எனினும் கருணையங்கடலாகிய தெய்வமுமா மறந்துவிடும்? அன்பிற்கு இருப்பிடம் தாய்மையல்லவா? அந்தத் தாய்மையைக் கொண்டே ஆண்டவன் இங்கும் ஒரு அற்புதத்தை விளைவித்தார்.

குதித்துக் கும்மாளம் போட்டு ஓடிவந்த பசு, சாலை யோரத்தில் கிடக்கும் வீரனைக்கண்டு திடுக்கிட்டு மெல்ல அவனை நெருங்கி குனிந்து பார்த்தது; மோப்பம் பிடித் தது. அவ்வளவுதான்! காற்குளம்புகள் வச்சிரத்தில்

ஒட்டவைத்தது போன்று அந்த இடத்திலேயே அசை வற்று நின்று பெருமூச்சு விட்டு அடித்தொண்டையி லிருந்து "ம்மா—மா!" வெனக் கத்தி முன்னால் ஓடும் பையனை நோக்கியது.

பசு பின்தங்கியதைக்கூட கவனியாமல் மெய்ம்மறந்து சுற்றிச் சுழன்று சிறுவன் ஓடினாலும், 'ம்மா—மா' வென் னும் அலறல் கேட்டதும் சட்டென்று திரும்பிக் கவனித் தான். பசு வெகு தூரத்திலேயே நின்றுவிட்டதைக் கண்டதும் கையிலிருந்த கோலையும் நழுவவிட்டு பசுவிற்கு ஏதோ அடிபட்டு விட்டதெனக் கருதி ஆச்சரியமும், பீதி யுமடைந்தவனாய் இரு கைகளையும் விரித்து "என்ன சரசு" என்று அதைக் கூர்ந்து கவனித்தான். அதன் பார்வை கீழ்நோக்கி இருக்கக்கண்டு, அதைத் தொடர்ந்தே நோக்கி ஒரு மனித உருவம் விழுந்து கிடப்பதைப்பார்த்து, "ஆ" என ஆச்சரியப்பட்டு மெதுவாய்க் குனிந்து கைக் கோலை எடுத்தான். அடிமேல் அடியாக, மிருதுவாக முழங்கால் துவள, உடம்பு குறுக, வலக்கரத்து ஆட்காட்டி விரலை பல்லால் கடித்தவனாய் நடந்தான். அருகில் வந்த தும் வீரநாத்தை அடையாளம் கண்டு கொண்டான்.

"பிரபு—மந்திரிப் பிரபு!" எனக் கூவி மண்டியிட்ட மர்ந்து கூர்ந்து கவனித்தான். சிறுவன் பதட்டத்தால் மேனி குலுங்கினான். மெய்யுணர்வையும் மீறியவனாய் சுவாசத்தைச் சோதிக்க முனைந்தன அவன் விரல்கள். மூச்சு இலேசாக ஊசலாடியது. நம்பிக்கை வந்துவிட்டது அவனுக்கு. இருளைக் கண்டு மூடிய பத்மம் ஒளியைக் கண்டு மலர்ந்தாற்போன்று அவன் முகமும் ஆசையோடு ஜ்வலிக்க ஆரம்பித்தது. சட்டெனத் துள்ளிக் குதித்தான். ஓர் உயர்ந்த பாறைமீதேறி நின்று நாலா பக்கமும் சுழன்று பார்த்து "ஓ, அண்ணே......டேய்—ய்—ய் சவம் போலக் கிடக்கிறார்டோ......" என்று தன் பலங்கொண்ட

மட்டும் கூவினான். அவ்வமயம் மலையடிவாரத்திலும், அதைச் சேர்ந்து பரந்து வியாபித்திருக்கும் கழனிகளிலும், தோப்புத் துரவுகளிலும், குடியானவர்கள் பலவகைப் பட்ட தொழில்களைச் செய்துகொண்டிருந்தனர்.

ஓடையிலிருந்த நீரை திலாவினாலிறைத்து தோட்டங் களுக்குப் பாய்ச்சும் குடியானவர்கள் தங்கள் களைப்பை மாற்றப்பாடும் பாட்டின் ஒலியும், ஏற்றக்காரர்கள் கிணற் றிலிருந்து நீரிழுக்கும்போது பாடும் ஒலியும் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. தண்ணீர் தேங்காமல் சரியாகப் பாயும் வண்ணம் வாய்க்காலை மண்வெட்டியால் செப்பனிட்டுக் கொண்டிருந்தனர் சிலர். பலவகைப்பட்ட இன்சுவைக் கனிகளைப் பறித்து கூடைகளை நிரப்பிச் சுமந்துகொண்டு வரப்புகளின்மேல் நடந்தும், ஓடியும் சென்ற பெண்கள், வேலை செய்த களைப்பினாலும், மரங்க ளில் கட்டிவிடப்பட்ட தொட்டில்களில் தூங்கும் தங்கள் குழந்தைகளைத் தூக்கி மார்போடணைத்து, நீரோடையருகி லுள்ள குளிர்ந்த நிழலில் வந்தமர்ந்து தங்கள் குழந்தைக ளுக்குப் பாலூட்டியும், ஏதோ வம்பு பேசிப் பேன் பார்த் துக்கொண்டுமிருந்தனர்.

சிறுவர்கள் சிலர் ஓடையில் நீந்தி ஒருவர்மேலொரு வர் நீரை வாரி வாரி இறைத்து விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். எருமை மாடுகள் மீதமர்ந்தும், படுத் ததுமாக சில பையன்கள் உல்லாசமாகத் தெம்மாங்கு பாடிவந்தனர்.

வயல்களை உழுதும், பரம்படித்துக் கொண்டுமிருந்த குடியானவர்கள் மாடுகளை "ஹை, ஹை!'; என்று அதட் டிச் சப்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

தங்கள் கணவன்மார்களுக்கு உணவு கொண்டுவந்த பெண்கள் அவர்களோடு உல்லாசமாய் உரையாடிக் கொண்டே அன்னம் பரிமாறினர்.

இவ்விதமாகப்பலரும் தங்கள் தங்கள் வேலையிலேயே கவனம் செலுத்தியிருக்கும் சமயத்தில் ஏக காலத்தில் அனைவரும் இடியோசையைப்போல் சிறுவனின் அலறல் கேட்டு "ஹா! இதென்ன புதுமையாயிருக்கிறது?" எனத் தங்களுக்குள் கூறிக்கொண்டு வேலைகளை யெல்லாம் அப்படியப்படியே நிறுத்திவிட்டு வேடன் வில்லுண்டைச் சப்தம் கேட்ட பக்ஷி ஜாதிகள் அனைத்தும் ஒரே திசை பறந்தோடுவதைப்போன்று ஆண், பெண், பெரியோர், சிறியோர் அனைவரும் சப்தம் வந்த திக்கு நோக்கி ஓடினர். ஓடையைக் கடக்க சற்று தூரத்தில் ஏற்படுத்தியிருக்கும் மரப்பாலத்தின் வழியாகச்செல்லும் அவகாசத்தைக்கூடப் பொருத சிலர் ஓடையில் குதித்து நீந்தியும், இன்னும் சிலர் மரக்கொப்புகளைத் தாவிப்பிடித்துக் குதித்தும் ஓடி பாறை மீது நின்று கத்திக்கொண்டிருக்கும் சிறுவனைச் சூழ்ந்து கொண்டார்கள். பதில்சொல்ல நாவெழாமல் சிறுவன் அவர்களையெல்லாம் தன் பின்னால் தொடர்ந்து வரும்படி ஜாடை செய்து முன் ஓடினான். ஆவல் மிகுதியால் சிலர் அவனையும் முந்திக்கொண்டு ஓடினார்கள்.

வீரநாத்தின் முகத்தில் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்க, பக்கத்தில் மண்டியிட்டுப் படுத்திருக்கும் பசு தன் தலையை ஆட்டி ஆட்டி ஈக்களை வெருட்டிக்கொண்டிருந்தது. பதறி வரும் கூட்டத்தையும் அதை நடத்திவரும் தன் எஜமானனையும் கண்ட பசு, சடக்கென எழுந்து "மா! மா!!" என்று கத்தி தன் மனோவேதனையை வெளியிட்டது. வீரநாத்தின் நிலையைக்கண்டு திகைத்து அசையாமல் நின்றுவிட்டனர் வந்தவர்கள். அவர்களில் வயோதிகர் ஒருவர் நிதானத்துடன் முன்வந்து வீரநாத்தின் தலைமாட்டில் மண்டியிட்டமர்ந்து அவனுடைய தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கவனித்து, மூச்சு வரக்கண்டு, "சரி, போய் சீக்கிரம் தண்ணீர் கொண்டுவாங்க யாராவது" எனக் கூறலும், மனமுவந்து ஓடினர் பலர்.

தண்ணீர் வந்ததும் வீரநாத்தின் முகம் நீரால் நனைக்கப்பட்டது. சிலர் அருகில் வந்து துணிகளால் வீசிறினர்.

கடைசியாக கருமேகங்களிடையே யிருந்து வெளியேறும் சந்திரன் போல அவன் முகத்திலும் உணர்வு ஜ்வலிக்க ஆரம்பித்தது.

---

## அத்தியாயம் 5

### "குற்ற நீரென்மேற் கொணர்ந்ததனை, யானறிவேன்"

வீரநாத்திற்கு தன் நினைவுவந்ததும் தன்னைச் சுற்றிக் கூடியிருந்தவர்களை யெல்லாம் ஒரு முறை பார்த்து, கை குவித்து, "இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை யெல்லாம் இங்கு ஆண்டவன் கூட்டிவைத்தது என் பாக்கியந்தான். உங்களுக்கெல்லாம் எத்தனை கஷ்டம்? என்னை மன்னியுங்கள்" எனக் கூறலும், கூட்டத்தில் வயது முதிர்ந்த மனிதன் சட்டெனக் கையமர்த்தி "ஹா, ஹா, என்ன சொன்னீர்கள்? மன்னிப்பா? மஹாராஜப் பிரபு ரகுவீர சந்திரரின் முதன் மந்திரியாகிய தங்களுக்கு, நாங்களா மன்னிப்புக் கொடுக்கவேண்டும்? இன்று அவரை இழந்து தவிக்கும் இந்நாட்டு மக்களாகிய எங்களுக்கு நீங்கள்தான் ராஜா! உங்களுக்கு நாங்களா மன்னிப்பளிக்க வேண்டும்? வேண்டாம். இனியொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள். தாங்கள் இந்த நேரத்தில் இங்கு வந்து இப்படித் தனியாய் கிடப்பதற்குக் காரணம் என்ன? நாங்கள் அறியலாமா?" எனப்பணிவோடு கேட்டான்.

"சகோதரர்களே! உங்களுக்குத் தெரியாததொன்றுமில்லை. இன்று நம் நாடு இருக்கும் நிலைமையை நன்குயறிவீர்கள். மஹாராஜாவை இழந்து தவிக்கும் இச்சமயத்தில் நம் மஹாராணியும் ஒரே பிடிவாதமாக, தனக்கு

மனச்சாந்திதான் வேண்டுமென்றும், ராஜிய பாரத்தை ஏற்கவே முடியாதென்றும் கூறுகிருர்கள். இளவரசி பாலகல்யாணியோ இன்னும் சிறுமியாயிருக்கிருள். அவ ளுக்குத் தக்க வயது வரும் வரையிலாவது ராஜ்யபாரத்தை ஏற்கும்படி மஹாராணியை வேண்டிப் பார்த்தேன், முடியவில்லை. என்மனம் மிகத் துன்புறுகிறது. வேற்று நாட்டரசர்கள் நம் நாட்டின் நிலையைக்கண்டு என்ன நினைக்கிருர்களோ? இப்படியே எத்தனை நாளைக்குத் தான் அரசனில்லாமலிருக்க முடியும்? பிரதம மந்திரி என்ற ஹோதாவில் நானும் என்னுல் இயன்றவரை நம் மஹாராணியிடம் எடுத்துக் கூறிவிட்டேன். இனிப் பிர ஜைகளாகிய நீங்கள் தான் அதற்குத் தக்கவழி தேட வேண்டும்! என்ன சொல்கிறீர்கள்......" என்று அவர் களைப் பார்த்து வினவினுன்.

"மகராஜ் நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்ப டிக் கேட்கச் சித்தமா யிருக்கிருேம். ஆம், நம் நாடு இந் நிலையில் இருந்தால் மற்ற அரசர்கள் கேவலமாய் நினைக் கக்கூடும். மஹாராணியாரை நாங்களே வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிருேம். இன்றே, இப்போதே அரண் மனைக்குப்போய்ப் பார்க்கிருேம்" என ஏகோபித்துச் சொன்னுர்கள் குடியானவர்கள்.

வீரநாத் அளவு கடந்த ஆனந்தத்தால் வீராவேசங் கொண்டவனுய் "என் வீர நிடதமே! உன்னை நாங்கள் கைவிடோம். இதோ நாங்கள் அன்னையார் எங்கள் வழிக்கு வரும்படி எல்லா முயற்சிகளையும் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டோம். அவர்கள் இதற்கும் ஒப்புக்கொள் ளாவிட்டால், எங்கள் உயிரை வேண்டுமானுலும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிருேம். அவர்களைச் சந்நியாசியாக விடோம். இது உறுதி, உன்மேல் ஆணை" எனக்கூறி அவர்களை யெல்லாம் பார்க்கும்போது அவன் கண்களில் அருள் பிரகாசித்தது.

"மஹாராணிக்கு ஜே! ஜே!" என்று ஆரவாரித்தார்கள். "கிளம்புங்கள் புறப்படுவோம் அரண்மனைக்கு" என அவர்களை யெல்லாம் நடத்திக்கொண்டு வந்தான் வீரநாத்.

மருங்காபுரியின் பெரிய தெருக்கள் வழியாக வீரநாத்தும், மற்ற கூடியானவர்களும் தம் தாய் நாட்டைப் புகழ்ந்து பாடிக்கொண்டு செல்லக் கண்ட நகரமாந்தரனை வரும் விஷயத்தைத் தெரிந்துகொண்டு தாங்களும் கூட்டத்தோடு கலந்து கொண்டார்கள். சுமார் நூறு பேர்களாகப் புறப்பட்ட கூட்டம் இப்போது அரண்மனை வாயிலடையும் தருணத்தில் நூற்றுக்கணக்காக மாறிவிட்டது. எல்லோரும் அரண்மனை வாயிலையடைந்ததும் வீரநாத் அவர்களை யெல்லாம் அங்கேயே நிறுத்திவிட்டு மஹாராணிக்கு அறிவிக்க உள்ளே விரைந்தான். ஜனங்களின் இரைச்சலைக்கேட்ட அரசி உப்பரிகையினின்றும் வாசற்பக்கம் பார்த்துக் கூட்டத்தைக் கண்டு திகிலடைந்துபோனாள்.

வீரநாத் வந்து விபரமாய்க்கூறியதும் தைரியமடைந்து "இதற்குத் தானா. இதோ நானே அவர்களிடம் போய்க் கூறுகிறேன்" எனச் சொல்லி மேலிருந்து கீழே விரைந்து வந்து ஜனங்களைப் பார்த்து "மஹா ஜனங்களே! இத்தருணத்தில் நானிருக்கும் துக்க நிலையை நீங்கள் அறிந்திருந்தும் என்னை வற்புறுத்தி ஒரு காரியத்தில் ஈடுபடச் செய்ய இவ்வளவு கூட்டமாய் வந்திருக்கும் உங்களைப் பார்த்து நான் மிகவும் வருந்துகிறேன். உங்களுக்கு என்ன சமாதானம் சொல்வதென்று தெரியவில்லை. உங்கள் இஷ்டத்தை என்னால் கூடிய அளவு திருப்தி செய்து வைக்கப் பாடுபடுகிறேன். நீங்கள் இப்போது திரும்பிப் போகலாம்" என்று வேண்டிக்கொண்டாள்.

ஜனங்கள் "முடியாது. இப்போதே நீங்கள் இந்த ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொள்ள வேண்டும்" எனக் கத்தினார்கள்.

"பிடிவாதம் செய்யாதீர்கள்; என் முடிவை நன்ருய் யோசித்து உங்கள் பிரதம மந்திரி. இதோ இந்த வீரநாத்திடம். சொல்லிவிடுகிறேன். அவர் மூலம் தெரிந்துகொள்ளுங்கள்" என்று மறுபடியும் வணங்கினுள்.

வீரநாத்தும் அரசி அச்சமயமிருந்த நிலையைக் கண்டு மேலும் வற்புறுத்த இஷ்டப்படாமல் ஜனங்களைப்பார்த்து "மஹாராணியார் விருப்பப்படியே இப்போது நீங்கள் போகலாம். இன்னும் இரண்டு தினங்களில் அவர்கள் முடிவை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன்" எனச் சமாதானம் கூறி அவர்களை யெல்லாம் அனுப்பி விட்டான். அவர்களும் அமைதியாகக் கலைந்து போய்விட்டார்கள்.

பின்னர் அவர்கள் எல்லாம் தனித்து ஒரு கூட்டம் கூடிப்பேசி, தங்கள் தீர்மானத்தை ராணிக்கு ஒரு மகஜர் மூலமாக அனுப்பினுர்கள்.

---

## அத்தியாயம் 6

### "கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலேயோ?"

லக்ஷ்மி தேவி தன் அறையில் முக வாட்டத்துடன் வீற்றிருந்தாள். அவள் கையில் நீண்ட ஓலைச்சுவடி இருந்தது. அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். ஒவ்வொரு முறை படித்து முடித்ததும் அவள் முகம் துக்கத்தை அதிகமாகவே எடுத்துக் காட்டியது. ஜன்னல் ஓரத்திலமர்ந்திருந்த அவள் ஓலையைக் கையில் வைத்துக் கொண்டே ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அவள் கண்ணிமைகளில் நீர் துளித்தது. உதடுகள் துடித்தன. கண்களிலிருந்து நீர் குபுகுபுவென வடிந்தது.

"தெய்வமே, இன்னும் என்னென்ன சோதனைகள் தான் செய்யப் போகிருய்? கேவலம் ஒரு பெண்ணுக்கு இப்படி மேன்மேலும் துன்பத்தைக் கொடுத்து வேடிக்கை

பார்ப்பதுதானு உன் கருணைக்கழகு? என் நாட்டு மக்க ளின் மனதை மாற்ற உனக்கு மனமிரங்கவில்லையா! இப் போது கடைசியாக இந்த மகஜரை அனுப்பி யிருக்கிருர் களே. இதற்கு நான் இணங்காவிட்டால் உயிர்போகும் வரை உண்ணுவிரதம் அனுஷ்டிப்பார்களாம்! என்ன மதி யீனம்! என்னுடைய மன நிலையை அவர்கள் அறியாமல் ஏனிப்படிப் பிடிவாதம் செய்கிருர்கள்? ஹே, பரந்தாமா! ஒருசமயம் நான் இந்த இடையூறுகளையெல்லாம் பொருட் படுத்தாமலும், உன்னை வந்து அடைவேனு என்று என் னைச் சோதிக்கிருயோ? இருக்கலாம். அப்படியானுல் இதோ இந்த ஓலையைக் கண்டு நான் பயப்படவில்லை. ஜனங்கள் உண்ணு விரதம் அனுஷ்டித்தாலும் சரி, உயிர் விட்டாலும் சரி, நான் கொண்ட முடிவுப்படியே சங்யாச மார்க்கத்தை ஏற்று உன் பாதார விந்தங்களை யடைகி றேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டவளாய் கையிலிருந்த ஓலையைக் கசக்கி விசிறி யெறிந்து ஜன்னலி லிருந்து சடாரெனக் குதித்து மாடியினின்றும் கீழே இறங்கி ஓடினுள். அவள் வந்த வேகத்தைக் கண்ட வேலை யாட்கள் சிலர் அவள் முன்வந்து கைகட்டி நின்ருர்கள். "டேய், உடனே போய் நம் வீரநாத்தை அழைத்து வா, சீக்கிரம்!" என்று கர்ஜித்தாள். வேலையாள் வேகமாய் ஓடினுன், மந்திரியினிருப்பிடத்திற்கு.

வீரநாத் மாடியின் முன்பகுதியில் கன்னத்தில் கை வைத்து, அடிக்கடி பெருமூச்சு விட்டவனுய் மிகச் சோர் வடைந்து அமர்ந்திருந்தான்.

மாளிகையின் உள்ளே அவன் மனைவி சம்யுக்தையும் அதே நிலையிலிருந்தாள். தன் கணவர் கடந்த 4 நாட்க ளாக இரவில் நித்திரையின்றியும், பகற் பொழுதில் சரி யான வேளைக்கு உணவருந்தாமலும் உடலைக் கவனியாது கவலையே உருவாய் வீற்றிருப்பதைக் கண்ட அவள், பெரி தும் மனமுடைந்தவளாய் அவனிடம் மெதுவாய் வந்தாள்.

தன் பக்கத்தில் வந்து நின்ற அவளைக் கூடக் கவனியாமல் சிலையைப்போல் வீற்றிருந்தான் மந்திரி; அவள் மெதுவாய் அவன் முன்வந்து முழங்கால் படியிட்டமர்ந்து, அவனிருகரங்களையும் பிடித்துக்கொண்டு "நாதா! இப்படியே எத்தனை நாளைக்குத்தான் நான் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்க முடியும்? உங்கள் உடம்புதான் என்னவாகும்? சுவற்றைக் கொண்டுதானே சித்திரம் வரையவேண்டும்! எழுந்திருங்கள், உள்ளே போகலாம். வாடைக் காற்று உடம்பின் இரத்தத்தை உறிஞ்சிவிடும்"......என்று தழுதழுத்த குரலோடு கூறினாள்.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்தும் கலைக்கப்பட்ட அவன் அவளை விறைக்க ஒரு பார்வை பார்த்தான். அந்தப் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்து கொண்ட அவள் சட்டென எழுந்து அவனை விட்டு விலகினாள். சற்றுநேரம் நிசப்தம். மறுபடியும் அவளுடைய "நாதா!" என்ற குரல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குபீரென ஆக்ரோஷம் கிளம்ப எழுந்த அவன் தன் முன் நிற்கும் சம்யுக்தையின் கரத்தைஎட்டி இறுகப் பிடித்து கண்களில் அக்னி ஜ்வாலை வீச உதடுகள் படபடக்கக் கூறினான்.—

"உம்.. நிடதபூமியில் ஜனித்தஒருவள், நாட்டின் பக்தி, வீரம், தைர்யம் இல்லாது கோழையாக கேவலம்உணவிற்கும், உற்சாகத்திற்கும் தன் கணவனைப் பற்றிக் கவலை கொள்வதென்றால் அதைவிடக் கேவலம் என்னவிருக்கிறது? போ, அப்பால்! என்முன் நில்லாதே!" என்றுஅவள் கையை உதறித் தள்ளிவிட்டு மேலும் கூறினான்:—

[illegible] க்கள் ஆயிரக்கணக்கில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறார்கள், அதில் எத்தனை உயிர்த் தியாகம் செய்யப்போகிறார்களோ? இதையெல்லாம் நீ அறியாமல் கேவலம் எனக்காக கவலை கொள்வது சரியா? வீரநாத்தின் பத்தினி நாட்டின் நலனைக் கருதாமல், தன் கணவனுக்காகவே மிகவும் வருந்துகிறாள் என யாரும் அறிந்து

கொள்ளப்போகிறார்கள்! அதைக்காட்டிலும் அவமானம் எனக்கு வேறென்னவேண்டும்...?"

இப்படியாக அவன் கடுகடுத்துப் பேசிக்கொண்டிருக்கும்போதே அரண்மனைச் சேவகன் வந்து லக்ஷ்மிதேவியின் ஆணையைத் தெரிவித்தான். வீரநாத்தும் அவன் பின்னோடு அரண்மனைக்கு விரைந்தான். வீரநாத்தின் வருகையையே வெகு ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த லக்ஷ்மிதேவி அவனுக்கு ஆசனமீந்து பேசத்தொடங்கினாள்:

"வீரநாத், பிரஜைகள் அனுப்பியுள்ள மகஜரைப் பார்த்தாயா? இதோ பார்" என்று ஓலையை அவனிடம்நீட்டினாள்.

ஏற்கனவே அதைப்பற்றி அறிந்திருந்த அவன் ராணி முன்னிலையில் படிப்பதாக பாவனை செய்து முடித்து "உம், அவர்கள் செய்தமுடிவு சரியானதுதான். ஆம், அவர்களுக்கு வேறுவழியில்லை. கடைசியில் உண்ணுவிரதத்தையும் ஆரம்பித்துவிட்டார்கள்!" என்றான்.

"என்ன, ஆரம்பித்துவிட்டார்களா?"

'ஆம், மஹாராணி, உங்களிடமிருந்து பதில் வராததினால்......'.

"உண்ணுவிரதம் எங்கேயிருக்கிறார்கள்?'

"நம் அரண்மனை நந்தவனத்திலேயேதான்; அதோ பாருங்கள்"

ராணியும், வீரநாத்தும் மாடிமீதிருந்தே ஜன்னல்வழியாக நந்தவனத்தை நோக்கினார்கள். ராணி அங்கு கண்ட காட்சி அவளை பிரமிக்கச்செய்தது. அந்தப் பெரிய நந்தவனத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டம் கூட்டமாக பசும்புற்றரையில் மர நிழலின் கீழ் அமைதியாக வீற்றிருந்தார்கள். பசியைச் சிறிதும் பொறுக்கமுடியாதசிலர் சோர்ந்து முகவாட்டமாய்க் காணப்பட்டார்கள். இன்னும் சிலர் படுத்திருந்தார்கள். ஆனால் அவர்களுடைய கண்களில் ஜ்வலித்த ஜோதி அவர்களின் உறுதி மனப்பான்மையை

ராணிக்கு எடுத்துகாட்டியது. "தங்களுடைய ஆட்சிவேண்டியே தவிக்கிறோம். எங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற சந்நிதானம் கிருபை கூறவேண்டும். அதுவரை தங்களின் குடிமக்களாகிய நாங்கள் உணவருந்தோம்; உயிர்விடவும் தயார்......" என விண்ணப்பத்தில் எழுதியிருந்தது அவள் ஞாபகத்தில் வந்தது. அவள் மனம் கலங்கியது. வீரநாத்தை ஏறிட்டுப்பார்த்தாள். வீரநாத்தும் அவள் குறிப்பை அறிந்து மௌனமாய் நின்றான். ராணிக்குத் தலை சுற்றியது. அப்படியே பக்கத்திலிருந்த ஆசனத்தில் கண்களை மூடிய வண்ணம் சாய்ந்துவிட்டாள். வீரநாத் அவளையே கூர்மையாகப் பார்த்து நின்றான். அவள்கண்களிலிருந்து வடிந்த நீரை துடைத்துக்கொண்டு "திக்கற்றவளாய் தவிக்கும் எனக்கு வழிகாட்ட ஒருவருமில்லையா? ஜோதி நாயகா......" என்றாள். அதே சமயம் "ஜோதியே வழி காட்டு" என உண்ணாவிரதிகள் அனைவரும் ஒருங்கே பாடும் மெல்லிய கீதம் அவள் செவிகளில் ஒலித்தது.

வீரநாத்குறுக்கிட்டு "தேவமாதா, உங்கள் குடிமக்கள் தான் இப்போது திக்கற்று தவிக்கிறார்கள். அவர்களைப் பரிதவிக்கவிடுத்து சந்யாசமார்க்கம் தேடிச்செல்வது நியாயமாகுமா, தாயே? தேசசேவைக்கும் சந்யாசத்திற்கும்பெரிய வேறுபாடு இல்லையே? தம் மக்களின் ஆனந்த உஜ்ஜீவனம் கண்டு சாந்தியுறும் தாய்மையினும் சந்யாசத்தின் சாந்தி மேன்மையோ? தாயே, நம் பாரத தேசத்தில் எத்தனையோ மகரிஷிகள் தேச கைங்கர்யத்திலீடுபட்டு நாட்டின் முற்போக்கைக் கவனிக்கவில்லையா? எத்தனையோ ஸ்மிருதிகளை நம்நாடு அடையும் பாக்கியம் பெற்றிருக்கிறதே! அத்தனையும் ஆக்கியது நம் நாடு ஈன்ற மகா தபசிகளன்றோ! மக்கள் மனதை நோகச்செய்துவிட்டு, தங்கள் மனதிற்கு மாத்திரம் சாந்தி நாடிச்சென்றால் அது கிட்டுமா? தாயே, ஏன் இன்னும் பிடிவாதம்? கருணை பரிபாலியுங்கள்" என உருக்கமாக வேண்டினான். அவன் வார்த்தைகள் ராணியின் ஹிருதயத்

தைத் தாக்கியதை அவள் முகத்தில் ஏற்பட்ட ஒரு மாறுதல் காட்டியது.

"தேச சேவை, மக்களின் மனோபீஷ்டம், இதற்காக நான் தேசப்பொறுப்பை ஏற்கவேண்டுமா? ஆண்டவா, அடியாள் கேவலம் அற்ப அபலை. என்னை வேண்டி மக்கள் இவ்வாறு உண்ணுவிரதமனுஷ்டிப்பது என்னவோ? நின் சந்நிதான தரிசனம், உன் பாதாரவிந்தம் நாடிவர விரும்பும் எனக்கு இத்தனை இடையூறுகளா? ஐயோ! இதற்கென் செய்வேன்" என்று மேலும் கண்ணீர் வடித்தாள். சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு வீரநாத்தை நோக்கி "சரி வீரநாத் நீ போ" என்று கூற, அவனும் அவளை வணங்கி விட்டு கீழே இறங்கிப்போய்விட்டான்.

ராணி இன்னும் அதே நிலையில்தானிருந்தாள். சில தாதியர்கள் பழத்தட்டுகளை ஏந்தியவண்ணம் அவள்முன் வந்து வைத்தார்கள். அதைக் கண்ட அவள் கோபங் கொண்டு "என்ன இது?" என்று சீறினாள்.

"தாயே ஆகாரமருந்தும் நேரம் ஆகிவிட்டதே" என்றார்கள் தாதியர்.

"ஆகாரம் உண்பதற்கு கனிவர்க்கமா கொண்டுவந்திருக்கிறீர்கள்? உடனே எடுத்து அப்பால் செல்லுங்கள். அதோ பாருங்கள் நந்தவனத்தில், என் தேசமக்கள் என்னை வேண்டி ஆகாரம் எடுக்காது விரதமனுஷ்டிக்கும்போது நான்மாத்திரம் உண்டு, உறங்கி, உற்சாகமாயிருப்பதா?" என ஆசனத்திலிருந்து எழுந்தாள். தாதியர் பயந்தவர்களாய் தட்டுகளை எடுத்துக்கொண்டு கீழே போய்விட்டார்கள். மீறி வரும் துக்கத்தை அடக்கமுடியாதவளாய் மறுபடியும் கட்டிலில் போய்ச் சாய்ந்தாள். புல்லாங்குழல்ஏந்தி புன்சிரிப்புடன் காட்சியளிக்கும் கண்ணனின் ஓவியம் அவள் கண்ணில் பட்டது. அப்படியே மெய்மறந்து கண்களை மூடினாள்.

---

## அத்தியாயம் 7

### "சங்கு கொண்டே வெற்றியூதுவோமே!"

உண்ணுவிரதத்தின் இரண்டாவது நாள் தொடங்கியது. அதிகாலையில் ஜனங்களெல்லாம் இறைவனைத் துதித்துப் பாடினார்கள். அப்பாட்டில்தான் எவ்வளவு உருக்கம், எத்தனை சோகம்! தங்கள் கோரிக்கைகளை எல்லாம் ஒருங்கே திரட்டியமைத்த அப்பாட்டு செவி மடுத்தவர்களின் உள்ளத்தையெல்லாம் உருக்குவதாயிருந்தது. பாட்டை முடித்து அனைவரும் அமைதியாய் அமர்ந்து தங்கள் இரண்டாவது நாள் உபவாசத்தை ஆரம்பித்தார்கள். இந்த விதத்தில் பயிற்சி பெறாத சிலர் மிகக் களைப்படைந்து உட்கார்ந்திருக்கவும் சக்தியின்றி புற்றரையில் சாய்ந்திருந்தார்கள். அவர்களின் நிலை பார்க்கப் பரிதாபமாயிருந்தது. முதல் நாளைக்காட்டிலும் இன்று விரதிகளின் கூட்டமும் அதிகமாயிருந்தது. பெண்களும் ஏராளமாய்க் கலந்திருந்தார்கள். சிறுமிகளும் சிறுவர்களும் ஆங்காங்கே காணப்பட்டார்கள். இவர்களை வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களின் கூட்டமும் அதிகமாகிக்கொண்டேயிருந்தது. ராணியைப் பற்றிய கதைகளும் வளர்ந்துகொண்டே போயின.

"ராணி காட்டிற்கு ஓடிவிட்டார்களே. இவர்கள் ஏன் வீணாகப் பட்டனி கிடக்கிறார்கள்?" என்றார்கள் சிலர்.

"இல்லை; ராணிக்கு ராஜ்யத்தை கவனிக்க இஷ்டமில்லையாம்; வீரநாத் கட்டாயப்படுத்துகிறாராம்" என்றனர் மற்றும் சிலர்.

"அதெல்லாமில்லை, மஹாராஜா இறந்துவிட்டபடியால் பெண்பால் அரசு செலுத்தக்கூடாதென்றும், தானே ராஜாவாகவேண்டுமென்றும் வீரநாத ராணியோடு சண்டைபோடுகிறாராம்; இதுதான் ரகஸ்யம்" என்றார்கள் இன்னும் சிலர்.

"இடையவே கிடையாது. இளவரசி பாலகல்யாணியை பக்கத்து நாட்டரசனுகிய வீரசிம்மனுக்கு மணம் முடித்து, அவனையே இந்நாட்டுக்கும் அரசனுக்க முயற்சி செய்துவரு கிருராம் ராணியார்" என்ருர்கள் பலர்.

இப்படியாக இவர்கள் கூடிப் பேசிக்கொண்டிருக்கையில் விரதிகளிடையே சலசலப்பு ஏற்பட்டது. எல்லோரும் என்னவென்று கவனித்தார்கள். மிக்க மயக்கமடைந்து சோர்ந்து படுத்திருந்த ஒருவர் காலையும் கையையும் உதறிக் கொண்டு கதறினர். அவரைச் சூழ்ந்து கூட்டம் கூடிவிட்டது. சிலர் விசிறினர்கள். தண்ணீர் முகத்தில் தெளிக்கப் பட்டது. என்னென்ன பரிகாரமோ செய்துபார்த்தார்கள். சிறிதுநேரத்தில் அவர் உயிர் உடலினின்றும் பிரிந்துவிட்டது! இந்தச் செய்தி தூரத்தில் வேடிக்கை பார்த்துநின்று கொண்டிருந்தவர்களிடையேயும் எப்படியோ எட்டிவிட்டது. கூச்சலும் கலவரமும் அதிகமாக ஆரம்பித்துவிட்டன. ராணியின்மேல் சிலருக்கு ஆத்திரம் மீறிக்கொண்டுவந்தது. இறந்தவனைப் பார்ப்பதற்காக அந்த இடத்திற் நுழைய முயன் ருர்கள். ஆனல் விரதிகளைச் சுற்றி நின்றிருந்த தொண்டர்கள் அவர்களைத் தடுத்துவிட்டார்கள்.

இறந்தவரின் உடலை ஒருபுறம் ஒதுக்காய் எடுத்து வைக்க ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. அதே சமயத்தில் ஒரு பெண்ணின் அலறல் அனைவரையும் திகைக்கச் செய்தது. சப்தம்வந்த பக்கம் எல்லோரும் நோக்கினர். தன் மடியில் 5 வயது சிறுவனைக் கிடத்திக்கொண்டு அவள் தன் முகத்தில் இருகையாலும் அறைந்துகொண்டு கதறினுள். எல்லோரும் அவளை நெருங்கிக் கவனித்தார்கள். தன் மைந்தனின் முகத்தோடு தன் முகத்தையும் வைத்துக் கதறும்அவளின் அலங்கோலமாய் கிடந்த கூந்தல் இரு முகங்களையும் மறைத்திருந்தபடியால் ஓடிவந்த பெண்களில் சிலர் அவள் தலையை நிமிர்த்தி குழந்தையை கவனித்தார்கள். சிறுவனும் பிணமாய்க் கிடந்தான். இப்படி சிறிது நேரத்திற்குள் இர

ண்டுபேர் பலியானது கண்ட அனைவரின் உள்ளமும் கொதித்தது. இதையறிந்த முதியவர்கள் சிலர் "நாம் எடுத்துக்கொண்ட காரியம் பூர்த்தியாகும்வரை எத்தனை பேர்கள் இறந்தாலும் அதை நாம் பொருட்படுத்தக்கூடாது' இந்த இரண்டு உயிர்கள் பிரிந்ததைக்கண்டே இப்படி ஆத்திரமடைந்தீர்களே! ராணியார் மனது மாறும்வரையில் எத்தனை ஆயிரம்பேர்கள் மாண்டாலும் சரி மனம் பதறக்கூடாது. அம் மனோதிடம் இல்லாதவர்களுக்கு இந்த இயக்கத்தில் இடமில்லை, இக்கூட்டத்தில் அப்படி யாரேனுமிருப்பின் இப்போதே வெளியேறிக்கொள்ளலாம்" என்று எச்சரிக்கை செய்தனர்.

அனைவரும் அமைதியாய் மறுபடியும் முன்போல் அமர்ந்தனர். ஆனால் சுற்றி நின்றவர்கள் குழப்பத்தை உண்டுபண்ணிக் கொண்டேதானிருந்தனர்.

மந்திரி வீரநாத் ஏற்கனவே கட்டளையிட்டிருந்தபடி உண்ணாவிரதிகளிடையே நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அப்போதைக்கப்போது அரண்மனைச் சேவகர்கள் அவனிடப் போய் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் வெகு கவனத்தோடு கேட்டு அதற்கு என்னபரிகாரம் தேடுவதென்று யோசித்துகொண்டிருக்கையில் ஒரு சேவகன் தலைதெறிக்க ஓடிவந்து அவன் முன்வணங்கி நின்று ஏதோ சொல்லமுயன்றான், அவன் ஓடிவந்தவேகத்தில் மேல் மூச்சு அதிகரித்து அவனைப் பேசவிடாமல் செய்தது. சற்று நிதானித்து 'பிரபு! பிரபு!... ரெண்டுபேர்...' அதற்கு மேல் அவன் நாவெழவில்லை. வீரநாத் திடுக்கிட்டு எழுந்து, 'என்னடா, இரண்டு பேர் என்ன?' என்றான் பதட்டமாய்.

"ரெண்டு பேர் செத்துப்போய்விட்டார்கள்!"

"எப்போது?"

"இப்பத்தான்; ஒரு பெரிய மனிதர்; ஒரு குழந்தை"

"ராணியம்மையாருக்குத் தெரியுமா?"

"இன்னந் தெரியாதுங்க"

"சரி, வா போகலாம்" என்று வீரநாத் வேகமாய் முன் நடக்க, பணியாள் பின்னால் ஓடிவந்தான்.

மந்திரி வந்த அவசரக்கோலத்தைக் கண்ட சேவகர்கள் எல்லோரும் விலகி நின்று வழிவிட்டார்கள். எதையும் கவனிக்காமல் அவன் நேரே ராணியார் தங்கியிருக்கும் மேன்மாடத்திற்கு விரைந்தான். அவள் தன் பக்கத்தில் பாலகல்யாணியை வைத்துக்கொண்டு ஏதோ கொஞ்சிக் கொண்டிருந்தாள். வீரநாத் எதிர்பாராதவிதமாய், முன்னெச்சரிக்கை ஏதுமின்றி திடீரென அங்கு தோன்றியது அவளுக்கு ஆச்சரியத்தையும் பீதியையும் உண்டாக்கவே அந்தக் குறிப்பால் அவனை நோக்கினாள்.

"தேவி, காரியம் மிஞ்சிவிட்டது!" என்றான்.

"என்ன! என்ன காரியம்?"

"உண்ணாவிரதிகளில் இருவர் மாண்டு விட்டார்களாம்!"

"இருவரா?"

"ஆம்! ஒரு பாலகன், ஒரு பெரியவர்"

"ஐயையோ! அப்புறம்......நான் இதற்கு என்ன செய்வது?"

"என்ன செய்வதா? எதற்காக அவர்கள் இறந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?"

ராணி மௌனமாய்த் தலை குனிந்தாள்.

"தேவி, இனியும் தாமதித்தால் என்னென்ன விபரீதங்கள் விளையப்போகிறதோ தெரியவில்லை, இந்த இரண்டு நாளைக்குள்ளாகவே அவர்களின் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது. அதிலும் இம் மரணச்செய்தி அவர்களிடையே ஒரு அடங்காத ஆத்திரத்தையும், மனோவலிமையையும் உண்டுபண்ணியிருக்கிறதாக அறிகிறேன்."

"வீரநாத், இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"தேவமாதா, தங்களின் தனிப்பட்ட அபிப்பிராயத்திற்கு மாறுதலாக தங்களை வற்புறுத்த அடியேனுக்குப் பிரியமில்லை. ஆனால் இப்போது என் நாடு தங்களை வேண்டுகிறது. அதற்கு உங்களை இணங்கும்படி செய்வது தேசபக்தி நிறைந்த இந்த நாட்டில் பிறந்த என் கடமை யன்றோ? தங்கள் மேல்கொண்டுள்ள அளவு கடந்த பக்திக்காகவும், தங்களின் நீதியாட்சியைக் கண்டு களிக்கவுமே அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் உயிரையும் லக்ஷியம் செய்யாமல் கிடக்கிறார்கள். இச் சந்தர்ப்பத்திலாவது அவர்களுடைய கோரிக்கையைத் தாங்கள் அன்புடன் நிறைவேற்றாவிட்டால் அவர்கள் பிரதிநிதியாக இருக்கும் நானும் அவர்களோடு சேர்ந்து என் உயிரைத் தியாகம் செய்யவேண்டியது தான். இது உறுதி......" எனத்தாரை தாரையாய் கண்ணீர் வடித்து, கைகட்டி, தலைகுனிந்து நின்றான்.

அவளும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் மௌனமாயிருந்தாள். இதையெல்லாம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த சிறுமி பாலகல்யாணி தன் அன்னையின் இருகரங்களையும் பிடித்துக்கொண்டு அவள் முகத்தை அண்ணாந்து பார்த்து "ஏம்மா நீங்க என்னம்மா செஞ்சீங்க, நம்ம ஜனங்கள்ளாம் சாப்பிடாமே இருக்காங்களே? சொல்ல மாட்டீங்களா?" என்றாள்.

தன் இதயத்தில் அம்புபாய்ந்ததுபோல உணர்ந்தாள் பாலகல்யாணியின் கேள்வியைக் கேட்ட ராணி. சிறுமியின் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாமல், ஆனால் அவளை அன்போடு தன் மார்போடணைத்துத் தலையை மெதுவாகத் தடவிக்கொடுத்து கண்களில் நீர் ததும்ப, வீரநாத்தை நோக்கி, "இடத சாம்ராஜ்ய வீரனே! கவலைப் படாதே. நீங்கள் அனைவரும் இப்படி என்மீது கரைகடந்த அன்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைத்துப்பார்க்காமல் போய்விட்டேன். உங்கள் அன்பென்னும் ஒளியால்

பாறை போன்ற என் மனோதிடத்தை உடைத்தெறிந்துவிட்டீர்கள். மஹா ஜனங்களின் தேவையையும், வீரத்திலகமாகிய உந்தனின் வேண்டுகோளையும் இன்னும் புறக்கணிப்பேனாகில் நான் பெரிய தேசத்துரோகியாவேன், உண்ணாவிரதமெனும் உன்னதக் கொள்கையால் என் மனதை மாற்றிவிட்டீர்கள். குழந்தை பாலகல்யாணிக்குத் தக்க பருவம் வரும் வரை உங்கள் பிரியப்படி நானே இந்த அரசியலைக் கவனிக்கிறேன்......'' என்று கூறி முடித்ததும், அதற்குமேல் அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதையும் கவனிக்காமல் சிறுவனைப்போல் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்து ''ஜே! தேவமாதாவுக்கு ஜே!! எங்களுக்கு உயிர் பிச்சை அளித்த மகாதேவிக்கு ஜே!'' எனச் சப்தமிட்டு அவளை வணங்கிவிட்டு மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கி ஓடினான். அவன் பின் ராணியும், பாலகல்யாணியும் சில தாதியர்களும் இறங்கினர்.

ஜனங்கள் தங்கள் முயற்சியில் பூரண வெற்றியடைந்துவிட்டார்கள் என்னும் சந்தோஷச் செய்தியை, தானே முதன்முதலாக அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் அது கேட்டு குதூகலமடைவதைக் கண்டு தானும் ஆனந்தமடைவதற்காக வீரநாத் அப்படி—ஓடிவந்தான். அவன் வேகமாய் வருவதைக் கண்ட ஜனங்களனைவரும் எழுந்து நின்று அவனுக்கு மரியாதை செய்தார்கள். அவர்கள் முன் வந்து நின்ற அவன் அவர்கள் தனக்குச் செய்யும் மரியாதையையும் பொருட்படுத்தாமல் கட்டுமீறிய களிப்பால் ''தேச மகா ஜனங்களே! எனது சகோதரர்களே! ஆண்டவன் அருள் கிடைத்தது நமக்கு. நமது அன்னை, நம் தேவமாதா சம்மதித்து விட்டார்கள். அதோ பாருங்கள், அவர்களும் வருகிறார்கள்'' என்று ராணியார் வருவதைச் சுட்டிக் காட்டினான். ஜனங்களெல்லோரும் அவன் காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அதற்குள் ராணியும் வீரநாத் அருகில் வந்து நின்றாள். இருளை ஒழிக்க வந்த

சூரியோதயத்தைக் கண்டவர்கள் போலான ஜனங்கள் ராணியை நேரில் கண்டதும் தங்களுக்கு அவள்மேலிருந்த ஆத்திரத்தை யெல்லாம் மறந்து தங்களையுமறியாமல் "மகாராணிக்கு ஜே! ஜே!!" என்று கோஷமிட்டார்கள். ராணியார் அவர்களைக் கையமர்த்தி சுற்றிலும் சுழன்று பார்க்கையில் அவள் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கியது. அவர்களின் தியாக உணர்ச்சியைக் கண்டு புளகாங்கிதமடைந்த அவள் கை குவித்து அவர்களை நோக்கிச் சொன்னுள் :—

"எனதன்பார்ந்த பெரியோர்களே, என்னை மன்னியுங்கள். சக்ரவர்த்தியின் பிரிவால் நான் மதி யிழந்தவளாகிவிட்டேன். இத்தனைபேர்களின் சஞ்சலத்யையும் ஏற்று நான் சாந்தியடைவது எப்படி? மஹாஜனங்களே, இப்பிரபஞ்சத்தில் ஆண்டவனின் அன்பிற்குப் பாத்திரமான இத்தனை ஆயிரம்பேர்களையும் விடுத்து அடியேன் மாத்திரம் சாந்தியடைய முனைவது சுயநலமென்பதை இப்போது தான் உணர்ந்தேன். தேசப் பணியே தெய்வப் பணியென்பதையும், அதன் உஜ்ஜீவனம் ஆத்மாவின் உஜ்ஜீவனமென்றும் இப்போதுதான் கண்டேன். உங்களை இத்தகைய மகா கஷ்டத்திற்கும் மனச்சஞ்சலத்திற்கும் ஆளாக்கிய என்னை மன்னியுங்கள். இனி உங்கள் ஆக்ஞைப் பிரபாரம் குழந்தை பாலகல்யாணி தக்க பருவம் அடையும்வரை அடியாளே அரசியலை கவனித்துவருகிறேன். உங்கள் சார்ப்பாக உங்களுக்காகப் பெரிதும் பாடுபட்டு என் மனதை முற்றிலும் மாற்றிய வீரர் வீரநாத் என் நல்ல அரசியலுக்கு வேண்டிய மார்க்கங்களையெல்லாம் காட்டி என்னை நடத்திச் செல்வாரென்று நம்புகிறேன்."

இதைச் செவியுற்ற அவர்கள் என்றுமில்லாத ஆனந்தமடைந்தவர்களாய் ஆரவாரித்தார்கள். ராணியார் தொடர்ந்து :—

"உங்களில் இந்த இரண்டு நாளைக்குள் இருவர் உயிர் துறந்ததாகக் கேள்விப்பட்டு வருந்துகிறேன். அக் குடும்பத் தாருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு ஒரு வழியும் எனக்குப் புலனாக வில்லை. இனி ஒருக்காலும் இவ்விதமான கொடூர காரியங் களுக்கு காரணஸ்தியாக இல்லாமல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறேன். உங்களிடம் மறுபடியும் மன்னிப் புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" எனக் கூறி முடித்ததும் ஜனங்கள் முன்னிலும் அதிகமாக ஆர்ப்பரித்தார்கள். ராணியாரும் பாலகல்யாணியும், மந்திரி முதலியவர்களும் கூட்டத்தினின்றும் அகன்றார்கள். கூட்டமும் கலைந்தது. அரண்மனையை விட்டு நீங்கிய அவர்கள் தெருவெங்கும் ஒரே குதூகலமாய்ச் சென்றனர். அவர்களது ஆனந்தம் அதோடு நின்றுவிட வில்லை.

பெண்களெல்லாம் வீடுகளைக் கழுவியும், மெழுகியும் கோலமிட்டும் அலங்கரித்தனர். ஆடவர்கள் தெருக்களைச் சுத்தம் செய்து ஆங்காங்கே மகர தோரணங்கள் கட்டினார் கள். அதற்குள் இருள் வந்து கவிந்துகொள்ளவே, வீடுக ளெல்லாம் உள்ளும், வெளியும் தீபங்களால் அலங்கரிக்கப் பட்டன. நகரம் முழுவதும், ஜகஜ்ஜோதியாய் காட்சி யளித்தது. அன்றுதான் உணவருந்தினர் உண்ணாவிரதி கள். அதன்பின்னர் அவர்கள் ஆங்காங்கே தெருக்களில் கூடி ராணியைப்பற்றி வாயாரப் புகழ்ந்து பேசிக்கொண் டிருந்தனர். இரண்டுநாளும் உண்ணாநோன்பிருந்த அவர் கள் இப்போது உண்ட மயக்கத்தால் வழக்கத்திற்கு மாறாக சற்று முன்னதாகவே நித்திரையிலாழ்ந்தார்கள். நகரத்திலும் சாந்தம் நிலவியது.

---

## அத்தியாயம் 8

### "சடு நினக்கோர் தெய்வமுமுண்டோ?"

லக்ஷ்மிதேவியின் அரசாட்சியில் ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அவளுடைய நல்லாட்சியை ஜனங்கள் மெச்சி விழா கொண்டாடினார்கள். ஆட்சி சீர்திருத்தச் சக்கரம் நாளுக்குநாள் வேகமாய்ச் சுழன்று முன்னேறிக்கொண்டே வந்தது. அவ்வாறு செல்லும் நாட்களில் ஒன்றை இங்கு கவனிப்போம்.

நடுநிசி. பூரணச்சந்திரன் வெகு உல்லாசமாக வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான். தாரகைப் பெண்கள் அவனைச் சுற்றி கும்மியடித்துக் கொம்மாளம் போட்டு வந்தார்கள். அவன் தன் கதிர்ப்பட்ட இளந் தளிர்களெல்லாம் பளபளவெனப் பரிணமித்தன. அதனால் தென்னந் தோகைகள் காற்றில் அசைந்தாடும்போது வாட்கள் சுழலுவதுபோல் தோன்றின.

அரண்மனையைச் சார்ந்த அடர்ந்த மாந்தோப்பினுள்ளிருந்து இரண்டு மனிதர்கள் நடந்துவந்தனர். காற்றில் மரக்கிளைகள் அசைந்தாடுவதால் ஏற்பட்ட இடைவெளியில் அவர்கள்மேல் சந்திரகிரணம் பட்டது. ஒருவன் வயது முதிர்ந்தவன். சுமார் 5 அடி உயரமுள்ளவன். கட்டுமஸ்தான தேகம். மற்றவன் வாலிபன்; முதல்வனின் மார்பளவு வளர்ந்திருந்தான். தோப்பைக் கடந்து அரண்மனையின் நான்காவது வாயிலையடைந்ததும் அவர்களில் மூத்தவன் தன்னிடமிருந்த சாவியை எடுத்து சந்தடியின்றி வாயிற்கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்று வெளிப் பக்கமே பூட்டையும் பூட்டிவிட்டு, இருவரும் நகரத்திற்குள் செல்லும் தெருவில் நடந்து சென்றார்கள். அவர்கள் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றதைக் கவனித்தால் அவர்கள் தங்களை

யாரும் கவனித்துவிடப் போகிறார்களோவென்ற பயத் துடனே சென்றதாகத் தெரிந்தது. தெருவில் படுத்துக் கொண்டிருந்த நாய்களில் சில அவர்களின் நடையைக் கண்டு சந்தேகித்து குரைத்துக்கொண்டே பின் தொடர்ந்தன. சோம்பேறி நாய்கள் சில படுத்தபடியே உறுமின. அவர்களைத் தொடர்ந்து குரைத்துக்கொண்டே சென்ற நாய்களும் தங்கள் தெருக்கோடியை அவர்கள் கடந்து வேறு தெருவிற்குள் நுழைந்துவிட்டதைக்கண்டு மறுபடியும் வந்து சுருண்டு படுத்துக்கொண்டன.

சுமார் நான்கு வீதிகளைக் கடந்து சென்ற அவர்கள் ஒரு வீட்டின் திண்ணையில் ஒருவன் அலங்கோலமாய்ப் படுத்திருக்கக் கண்டு அவனருகில் சென்று பார்த்தனர். நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தானவன். மெதுவாக அவன் உடம்பைத் தட்டினார்கள். அவன் எழுந்திருக்கவில்லை. அவனுக்குத் தூக்கமில்லை, மயக்கம். தன் அறிவிழந்து கிடந்தான். இருவரும் சுற்றிப் பார்த்தனர். தெரு நிசப்த மாயிருந்தது. அம்மனிதன் படுத்திருந்த வீட்டின் ஜன்னல் வழியாக விளக்கு வெளிச்சம் தெரிந்தது. திண்ணை மேலேறி உட்பக்கம் நோக்கினதும் அங்கு அவர்கள் கண்டது அவர்களைப் பிரமிக்கச் செய்தது.

ஓர் இளம் மங்கை நோயுடன் படுத்தபடுக்கையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு இரண்டு வயதுப் பையன் அதெல்லாம் ஒன்றும் அறி யாதவனாய் நல்ல நித்திரையிலிருந்தான். பெண்ணின் "ஐயையோ, அப்பா, தெய்வமே!" என்னும் அனத்தல் குரல் இவ்விருவர்களின் மனதையும் அப்படியே உருக்கி விட்டது. வீட்டின் கதவை மெதுவாகத் தள்ளிப் பார்த் தார்கள். கதவு தாளிடாமல் சாத்தப்பட்டிருந்தமையால் திறந்துகொண்டது. இருவரும் உள்ளே பிரவேசித்து சாத்திவிட்டு பெண்ணின் அருகில் சென்றார்கள். அந்நடு நிசியில் திடீரெனத் தன்முன் இரு அந்நிய ஆடவர்கள்

வந்து நிற்பதைக் கண்ட பெண் திடுக்கிட்டு எழுந்திருக்கவும் சக்தியற்றவளாய் "ஹா......, யாரய்யா நீங்க" எனப் பயத்தோடு கேட்டாள். அவர்களில் மூத்தவன் அவள் பக்கத்தில் சென்று கையமர்த்தி "பயப்படாதேம்மா. உன் உடம்புக்கு என்ன?" என்றான். அவனுடைய அன்பு கனிந்த வார்த்தையையும், அருள் நிறைந்த முகத்தையும் கண்ட அவள் சற்று தைரியமடைந்தவளாய் "தாகமாகயிருக்கு, கொஞ்சந் தண்ணீர் கொடுங்கய்யா. நாவு வரட்டுது" என்றாள். இளையவன் தண்ணீர் இருக்குமிடத்தைத் தேட அங்கு எரிந்துகொண்டிருந்த விளக்கை எடுக்கப் போனான். அதற்குள் மூத்தவன் அவனைத் தடுத்து "தம்பி, அம்மாளின் உடம்பைத் தொட்டுப் பார்த்தாயா? காய்ச்சல் நெருப்பாயிருக்குது. தண்ணீர் கொடுக்கக் கூடாது. வெந்நீர் தான் கொடுக்கணும்" என்றான்.

"ஐயா, உங்களுக்குப் புண்ணியம். என் நெஞ்சை யடைக்கிறது. இப்பத் தண்ணியில்லாவிட்டால் உயிர் போய்விடும்" என்றதைக் கேட்ட மூத்தவன், "சரி, கொஞ்சமா கொண்டுவந்து கொடு" என்றான். இளையவனும் விரைவில் கொண்டுவந்து அவள் வாயில் சிறிது சிறிதாக ஊற்றினான். சற்று களைப்பு நீங்கியவள்போல் காணப்பட்டாள் அவள். மூத்தவன் இளையவனைநோக்கி "நான் தண்ணீர் சுடவைக்கிறேன், நீ அதற்குள் பக்கத்துத் தெருவில் போய் அங்கிருக்கும் வைத்தியரை அழைத்துவா. ஓடு சீக்கிரம்" என்று துரிதப்படுத்தினான்.

இளையவனும் தலையசைத்து வீட்டைவிட்டு வெளியே ஓடிவந்து வாசற்படியில் நின்றுகொண்டு எப்பக்கம்போவதென யோசித்து, பின்னர் அடுத்த தெருப்பக்கம் ஓடினான். அங்கே திண்ணையிலே படுத்திருந்த ஒருவரை எழுப்பி "ஐயா, இங்கே வைத்தியர் வீடு இருக்கிறதாமே, உங்களுக்குத் தெரியுமோ?" என்று வினவினான். தூக்க மயக்

கத்தில் அவன் "இன்னும் பத்து வீடு தாண்டிப்போ" என்று சொல்லிவிட்டுப் படுத்துக்கொண்டான். சிறுவன் 10 வீடு எண்ணிக்கொண்டே சென்று பத்தாவது வீட்டை யடைந்து கதவைத் தட்டினன். "யாரது" என்று உள்ளிருந்து குரல் வந்தது.

"வைத்தியரய்யா வீடு இது தானு?" என்றுன்.

"ஆமா, இதுதான். என்ன சமாசாரம்?"

"கொஞ்சம் அவரை வரச் சொல்லுங்களேன், எங்கம்மாளுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு உடம்பு."

"போ, போ. இந்நேரத்தில் எப்படி வரமுடியும்? காலையில் வர்ரேன்னு போய்ச் சொல்லு."

"ஐயா, தயவு செய்யணும். விடியக்காலம் வரையிலும் உயிர் இருக்குமோ, என்னமோ" என்று மிக்க இரக்கமாய்ச் சொன்னுன்.

"ஐயோ பாவம். என்னமாய் இருக்கோ. சற்று போய்த்தான் பார்த்துவிட்டு வந்திடுங்களேன். சிறு பையன் சத்தம் மாதிரி கேக்குதே" என்று வீட்டினுள்ளிருந்து ஒரு பெண் சொல்லுவது கேட்டது. அது வைத்தியர் மனேவியின் குரல். மறு நிமிடம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த வைத்தியர் "உங்க வீடு எங்கே இருக்குது?" என்று சற்று கோபமாய்க் கேட்டார்.

"இதோ பக்கத்துத் தெருவுதான்" என்றுன் பையன் மறுபடியும் வீட்டினுள் சென்று மருந்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்த வைத்தியர் "சரி போகலாம் நட" என்று பையன் பின் நடந்தார்.

இவர்கள் வருவதற்குள் அங்கே வீட்டில், மூத்தவன் அடுப்புப் பற்றவைத்து வெந்நீர் தயார் செய்து பெண்ணுக்குக் கொடுத்து, விசிறியால் அவளுக்கு விசிறிக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் சிறுவனும் "அண்ணு வைத்தியரும் வந்து விட்டார்" என ஓடிவந்தான்.

மூத்தவன் மரியாதையாக வைத்தியரை வணங்கி "ஐயா, வாங்க" என உபசரித்து, அமர்வதற்கு ஆசனத்தைக் காட்டினன். வைத்தியர் அவர்களிவரையும் பார்த்து "நீங்கள் யார்? புதிதாக இருக்கிறதே. நான் நேற்று இங்கு வந்தபோது உங்களைப் பார்க்கவில்லையே?" என்ருர்.

"நேற்று வந்தீர்களா? மருந்து கொடுத்தீர்களா?" என்ருன் மூத்தவன் ஆச்சர்யத்தோடு.

"ஆமா, இந்தம்மாள் கணவன் எங்கே?" என்ருர் வைத்தியர்.

"அதென்னமோ எங்களுக்குத் தெரியாது. நாங்க பக்கத்து கிராமம். தற்செயலாக இப்படிப் போனேம். சப்தம் கேட்டு உள்ளே வந்தோம். ஒரு துணையுமில்லாமல் இந்தம்மாள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்........"

வைத்தியர் பெண்ணின் அருகில் சென்று "ஏம்மா உன் கணவர் எங்கேம்மா?" என்ருர்.

அவள் மெதுவாய்க் கண்ணைத் திறந்து மெல்லிய குரலில் "தெரியலியே! ஒரு சமயம் திண்ணையில்........." என்று பேச முடியாமல் கண்களை மூடினுள். மூன்று பேரும் விளக்கை எடுத்துக்கொண்டு திண்ணைக்கு வந்து பார்த்தார்கள். வைத்தியர் படுத்திருந்த மனிதனை அடையாளம் தெரிந்துகொண்டு, "இதோ இவர்தான்" என்ருர். அம்மனிதன் இன்னும் மயக்கமாகவே கிடந்தான். அவனை மூவரும் கைத்தாங்கலாக உள்ளே தூக்கிச் சென்று வைத்தியர் உதவியால் மயக்கந் தெளியவைத்தனர். தன்னைச் சுற்றி மூவர் நிற்பதைக் கண்ட அவன் பெரிய திகைப்படைந்தவனுகி "ஐயா நான் உங்க வீட்டிற்குத்தான் புறப்பட்டேன். வாசற்படி இறங்குமுன்பே தலை சுற்றியது. அப்படியே திண்ணையில் சாய்ந்தேன்.

அதற்கப்புறம் என்ன நடந்தது? இவர்கள் யார்?" என்ருன்.

"இவர்கள் யாரோ பக்கத்துக் கிராமத்தார்களாம். உன் மனைவி சத்தம் போட்டதைக் கேட்டு என்னைத் தேடிவந்தார்கள்" என்ருர் வைத்தியர். அம்மனிதன் அவ்விருவரையும் கைகுவித்து வணங்கினுன். மூத்தவன் "எங்களைப்பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உன் மனைவியை முதலில் கவனி" என்ருன்.

"ஐயா நான் என்ன செய்யட்டும். இந்த வைத்தியர் நேற்றே வந்தார். பணம் அதிகமாய்க் கேட்டார். நானே ஏழை, எங்கிருந்து கொடுக்கமுடியும்? அவள் விதிப்படியாகட்டும், வைத்தியர் மனம் இரங்கவில்லை." என்று வருந்தினுன்,

"இதற்குத்தான, இப்படி வருந்துகிருய். வைத்தியரே, உங்களுக்கு எவ்வளவய்யா வேண்டும்?" என்ருன் மூத்தவன்.

"இருபது ரூபாய்"

"முற்றிலும் குணமாக்கிவிடுவீரா?"

"இது முடியாது. இப்போதைக்கு மாத்திரம் 20 ரூபாய் வேண்டும். பூராவும் சொஸ்தமாக்க 50 ரூபாய் வேண்டும். இது ரொம்ப நாள்பட்ட வியாதி........"

"சரி, சரி. இந்தாரும் 50 ரூபாய். உடனே மருந்தைக் கொடுத்து, சீக்கிரம் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்துவிடவேண்டும்" என்று கூறி அலக்ஷியமாய் தன் பையிலிருந்து 50 ரூபாய் எண்ணி வைத்தியர் முன் வைத்தான். வைத்தியரும் முகத்தில் புன்னகையரும்ப, பணத்தை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு மருந்துப் பெட்டியைத் திறந்து ஏதோ மருந்துகளை ஒன்று சேர்த்துக் குழப்பினுர்.

அதற்குள் நான்காம் ஜாமமாகி சேவல் கூவும் சப்தம் கேட்டது. மூத்தவன் சடாரென எழுந்து வீட்டிற்குடைய

வனை நோக்கி "ஐயா, எங்களுக்கு நேரமாகிறது. நாங்கள் இன்னும் பத்து மைல் நடந்து செல்லவேண்டும். எங்களுக்கு விடை கொடுங்கள்" என்ருன். வீட்டிற்குடையவன் ஆச்சரியமடைந்தவனுய் "என்ன, இந்த நேரத்திலா? கடவுளைப்போல் வந்து எங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த நீங்கள் இந்த இரவையாவது ஏழை வீட்டில் கழித்துவிட்டு அதிகாலையில் செல்லலாமே. உங்கள் கருணைக்கு நான் அவ்வளவாவது செய்யாவிட்டால்........" என்ருன்.

"ஐயா, தாங்கள் அதைப்பற்றிக் கவலை கொள்ளவே வேண்டாம். உங்கள் மனைவியைக் கவனித்துப் பாருங்கள். நாங்கள் மற்ருெரு சமயம் வந்து பார்க்கிருேம் இந்தாரும், இந்த ரூபாயையும் வைத்துக்கொள்ளும்" என்று மேலும் ஐம்பது ரூபாயைக் கொடுத்தான். வீட்டிற்குடையவன் பணத்தை வாங்கிக்கொண்டு, அவர்களிருவர் முன்பும் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வணங்கினுன். மூத்தவன் அவனைத் தூக்கிவிட்டு, "சரி, நாங்கள் போய்வருகிருேம்" என்று கூறிவிட்டுப் படுக்கையருகில் சென்று பெண்ணை நோக்கினுர்கள். அவள் மயங்கிக் கிடந்தபடியால் அவளைத் தொந்தரவு செய்ய மனமில்லாமல் வீட்டைவிட்டு வெளியேறினர் இருவரும்.

முன் சென்ற தெருக்கள் வழியே திரும்பி வரும் அவர்கள் தங்களுக்குள்ளே ஏதோ மெதுவாய்ப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சென்ருர்கள். அரண்மனையின் பின்பக்க வாசலை யடைந்ததும் மூத்தவன் தன்னிடமிருந்த சாவியால் தான் பூட்டிய பூட்டைத்திறந்து உட்சென்று மறுபடியும் பூட்டிவிட்டு அந்த இருண்ட மாந்தோப்பிற்குள் இருவரும் நுழைந்தனர்.

அரண்மனையின் மேன் மாடத்தில் ஒரு தனி அறைக்குள் நுழைந்த அவர்கள் கதவைத் தாளிட்டுவிட்டு உடைகளைக் களைந்தார்கள். தலைப்பாகையை எடுத்ததுமே

அவர்கள் பெண்களாகக் காட்சியளித்தனர். ஆம், பெண்கள்தான்; ராணி லக்ஷ்மிதேவியும், இளவரசி பாலகல்யாணியும் தான்!

இவ்விதம் தன் நகரில் அடிக்கடி மாறுவேடத்தில் சென்று ஜனங்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்திக்கும் ராணியின் ஆட்சியில் குடிகளுக்கு என்னகுறை வரப்போகிறது? அவர்கள் ஏன் விழாக்கொண்டாடமாட்டார்கள்?

---

## அத்தியாயம் 9

### 'மூட மகனே, கேடுவரலறியாய்!"

நிடத சாம்ராஜ்யத்தின் கீழ் எத்தனையோ சிறிய நாடுகளிருந்தன. அதில் மீவார் தேசமும் ஒன்று. ரவிவர்மன் அதற்கு மன்னனாகவிருந்தான். இவன் மற்ற சிற்றரசர்களைக் காட்டிலும் சற்று அதிகமான படைபலம் பெற்றிருந்தபடியால், நிடத சாம்ராஜ்யத்தையே கவிழ்த்து விட ஆசைகொண்டு, சக்கரவர்த்தி ரகுவீர சந்திரராஜன் ஆட்சி செலுத்தும் காலத்திலேயே மும்முறை படையெடுத்து, தோற்கடிக்கப்பட்டான். சக்கரவர்த்தியின் தயாள குணத்தினால் அம்மூன்று முறையும் மன்னிக்கப்பட்டு இழந்த சிம்மாசனத்தை மீண்டும் பெற்றான்.

இப்போது சக்கரவர்த்தி காலம்சென்றுவிட்டபடியாலும், அவரது தர்மபத்தினி லக்ஷ்மிதேவி ஆட்சி புரிவதாலும் 'கேவலம் ஸ்திரீ தானே, வெகு சுலபமாக நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளலாம்' என்று கருதினான். அடுத்த நாளே தன் விருப்பத்தைத் தன் மந்திரிமார்களுக்குத் தெரிவிக்க தனக்குள் முடிவு செய்துகொண்டான்.

மீவார் அரண்மனையின் கொலுமண்டபத்தில் மந்திரிகளும், மற்றவர்களும் குழுமி அரசன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். கட்டியக்காரன் அரசன்

வரவைத் தெரிவித்துக்கொண்டே முன்வர, சற்று தூரத்தில் அரசனும் ஆடம்பரமாக வந்துகொண்டிருந்தான். அதைக் கண்ட மண்டபத்திலிருந்தவர்களனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். அவன் சிம்மாதனமேறியமர்ந்ததும் கொலுவைச்சுற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டு அமரும்படி சைகை செய்தான். அவன் முகத்தில் என்றுமில்லாத கவலைக்குறிகளும், கோபமும் பிரதிபலித்தன. கண்கள் சிவந்திருந்தன. சபையோர்கள் காரணம் விளங்காமல், ஒருவரையொருவர் சந்தேகப் பார்வையுடன் பார்த்துக்கொண்டனர். அரசன் பிரதம மந்திரியைக் குறுகுறுவென்று பார்த்தான். அவன் குறிப்பையறிந்த மந்திரியும் எழுந்து நின்று வணங்கினுன்.

"மந்திரி! இன்னும் நாம் காலம் கடத்தக்கூடாது. இதுதான் தக்க தருணம். ரகுவீரசிம்மன் காலம் சென்று ஐந்தாண்டுகளாகிவிட்டன. இந்த நாட்களில் நம் படைபலம் எவ்வளவோ பெருகியிருக்கிறது. இவ்வளவு பலத்தை வைத்துக்கொண்டு கேவலம் ஒரு பெண்—பேதைப் பெண்—அவளுக்குக் கப்பம் கட்டிக்கொண்டு அவளுக்கு அடிமையாக வாழ்வதா? ஒன்றும் யோசனை செய்ய வேண்டாம். உடனே யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச்செய்து தயாராகுங்கள். இதுதான் கடைசி முறை. இதில் வெற்றிபெற்றுல் நம் புகழும், நம் நாடும் இப்பூவுலகில் கௌரவத்துடன் நிலவட்டும். இன்றேல் யுத்தகளத்திலேயே அனைவரும் மடிவோம். அடிமையாக வாழ்வதைவிட யுத்தத்திற்குப் பலியாகி அமரத்துவம் எய்துவது சிறந்ததல்லவா?........." என்றுன் அரசன்.

மந்திரி பதில் ஒன்றும் சொல்லவில்லை. சபையோர் அனைவரும் வெகு கவனத்துடன் அரசனின் ஆக்ரோஷமிகுந்த வார்த்தைகளைக் கேட்டு பிரமித்து மந்திரி என்ன மறுமொழி கொடுக்கப்போகிறுர் என்று எதிர்பார்த்திருந்தனர். சபையிலேயே வயதும் அனுபவமும் முதிர்ந்த ஓர்

மந்திரி மிக்க தைரியத்துடன் எழுந்து அரசனை வணங்கி "மகராஜ்" என்றான். பிரதம மந்திரியிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருந்த அரசன் எதிர்பாராத இடத்திலிருந்து பதில் கிளம்பக்கேட்டு சடாரென அப்பக்கம் திரும்பினான். அவன் கண்கள் இன்னும் கோபக் குறியையே காட்டின. ஆனால் முதிய மந்திரி அதைக் கண்டு மனந் தளராமல் "மகராஜ்! அடியேனின் தாழ்ந்த விண்ணப்பம், இது வரை மும்முறை அக்கிடத நாட்டுடன் யுத்தம் செய்ததில் நாமடைந்த தோல்வியையும், அதனால் ஏற்பட்ட பொருள் விரயத்தையும், உயிர் நஷ்டத்தையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நம் குடிகளுக்கு அதனால் ஏற்பட்ட மனச்சோர்வு இன்னும் மாறவில்லை. அதற்குள்ளாக இன்னும் ஒரு யுத்தமா?......" என்று அவன் கூறிக்கொண்டு வருகையிலேயே அரசன் வெளிப்படையாக ஆத்திரமூட்டப் பட்டவனாகி "நிறுத்தும்!" எனக் கர்ஜித்தான்.

சபையில் சிலர் பயத்தால் குலுங்கிவிட்டனர். அவன் அதே த்வனியில் "என்ன பகன்றீர்? உம்......தன் சொந்த உடலில் இன்றோ பிறகோவென ஊசலாடித் திரியும் அற்ப உயிரை மலையாக மதித்து, அதற்காக நாட்டையும் அடிமைப்படுத்தி, மானம் விற்றுப் பிழைக்கும் கோழைகள், மகாத் துரோகிகள். ஓரிருவர் இருப்பதனால்தான் இது வரை எனக்கு இத்தகைய தோல்விகள் ஏற்பட்டதென்று இப்போது அறிகிறேன். உங்களுக்கெல்லாம் வயதுதான் முதிர்ந்திருக்கிறதே யொழிய அறிவு முதிர்ந்திருக்கவில்லை. உங்களிடம் யோசனை கேட்பதும் பிசகு! எங்கே அந்த வாலிப சிங்கம்—சேனாதிபதி தேவிபாலன்?" என்று அவனிருக்கும் பக்கம் திரும்பிப்பார்த்தான். தேவிபாலன் எழுந்து வணங்கினான்.

நல்ல கட்டுமஸ்தான தேகம். அதற்கேற்ற உயரம், விசாலமான மார்பு. திரண்டு உருண்ட புஜங்கள். புன்னகை தவழும் முகம், அருள் ஒளி ததும்பும் விழிகள்.

அகன்ற நெற்றி. ஆனல் வயதோ 25 தான், இவ்வளவு இளமையிலேயே அவன் அந்த உயர்ந்த பதவி வகித்திருப்பது அவனுடைய திறமையை எடுத்துக்காட்டியது. எத்தகைய பேரிடியையும் துச்சமென மதிக்கும் கலங்கா நெஞ்சம் படைத்த அவன் அரசன் முன் கம்பீரமாய், ஆனல் மரியாதையாய் வணங்கி நின்ருன். அவனைக் கண்டதும் அரசனுக்கு ஒரு உற்சாகம் பிறந்தது.

"தேவிபாலா. இந்த முதியவர்கள் எதற்கும் லாயக்கற்றவர்கள். புற்றிலிருந்து வெளியே தலை நீட்டியதுமே பக்ஷிகளின் இரைப் பைக்குள் சென்று மடியும் ஈசல்களுக்கு எந்த உயிரைக் கொடுத்தானே பிரமன் அதே உயிரைத்தான் நமக்கும் கொடுத்திருக்கிருன். இந்த அற்ப உயிரை ஏன் இவர்கள் இவ்வளவு பத்திரமாய்ப் பாதுகாக்கிருர்களோ தெரியவில்லை. இன்னும் நிடத நாட்டிற்குக் கப்பம் கட்டி வருவது உன் போன்ற வீரர்களின் மனதில் தைக்கவில்லையா ? நான் சொல்லியா தெரிய வேண்டும்? இனி நாம் கப்பம் கட்ட வேண்டியதில்லை. நிடதம் நமக்குக் கப்பம் அனுப்பவேண்டும். நம் புலிக்கொடியின் நிழலில் அது வாழ வேண்டும். வீட்டிற்கொருவரைப் பிடி. யுத்த தளவாடங்களை உடனே பெருக்கு, சண்டைக்கு தயாரென்று சடுதியில் அந்நிடத நாட்டரசிக்குத் தெரிவித்துவிடு. சேனைகளை நடத்திக்கொண்டு கிளம்பு மறுநாளே. அவளைக் குதிரைகளின் காலில் பிணைத்து இழுத்து வா. இதுதான் என் இறுதியான கட்டளை. இதில் ஒரு சொல்லையும் மாற்றமுடியாது .....' என படபடவென வார்த்தைகளை உதிர்த்து சடாரென எழுந்து கொலு மண்டபத்தை விட்டுச் சென்றுவிட்டான்.

மந்திரிகளும் மற்றவர்களும் அரசன் பிடிவாத குணத்தைக்கண்டு கலங்கினர். ஆனல் தேவிபாலனே "அரசன் கட்டளையை மீற எனக்குத் தைரியமில்லை. அதனல் என்ன நேரிட்டாலும் சரி" என்று அவர்களிடம் கூறிவிட்டுச் சென்ருன், கொலுவும் கலைந்தது.

## அத்தியாயம் 10

### "பகைவனுக்கருள்வாய்—நன்னெஞ்சே!"

நிடத நாட்டின் அரண்மனைக் கொலுமண்டபம் அன்று ஒரே குதுகலமாயிருந்தது.

ராணி லக்ஷ்மிதேவி பட்டத்திற்கு வந்து மூவிரண்டாண்டுகள் கடந்துவிட்டன. ஏழாம் ஆண்டுத் துவக்கம். இளவரசி பாலகல்யாணிக்கு அப்போது 13 வயது முடிந்தது. மங்கைப் பருவத்தைக் கடந்து மடந்தைப் பருவத்தின் எல்லைக்குள் நுழையும் சமயம்: அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களின் தன்மை இன்னதென்பதை அறியும் தருணம்.

தனக்குப் பின் நாட்டின் பொறுப்பை ஏற்று நடத்தும் தன் குமாரிக்கு அரசகாரியங்களில் பரிச்சயம் உண்டாகச் செய்யவேண்டுமென்று கருதிய ராணி, பாலகல்யாணியையும் கொலு மண்டபத்திற்கு அழைத்து வந்திருந்தாள். அவளைக் கண்டதும்தான் கொலுமண்டபத்தில் குதூகலம் தாண்டவமாடியது. பாலகல்யாணி குழந்தையாயிருந்தபோது தற்சமயம் சபையில் குழுமியிருக்கும் எல்லோர் தோளிலும் ஒரு முறையாவது 'குதிரைச் சவாரி' செய்யாமல் இருந்ததில்லை. அந்த அரண்மனையிலும் அரசாங்கத்தில் சம்பந்தப்பட்டவர்களிலும் ஒருவராவது அந்நாளில் அவளை எடுத்துக் கொஞ்சாமலிருந்ததில்லை. சிறு குழந்தையாயிருக்கும்போதே மற்றவர்களைத் தன்னிடத்தே இழுக்கும் சக்தி பெற்ற அழகு வாய்ந்திருந்தாள். வயது ஏற, ஏற அவள் அழகும் வளர்ந்துகொண்டே வந்தது. நிடத நாட்டிலேயே அவள் போன்ற அழகி ஒருவருமில்லை யென்று பிரஜைகளனைவரும் பேசிக்கொண்டனர். ஆனால் அன்று கொலு மண்டபம் குதூகலமாய்க் காணப்பட்டதற்கு அவள் அழகு ஒரு காரணமில்லை. தாங்கள் தூக்கிக் கொஞ்சிய சிறுமி, இன்று சிம்மாதனத்தருகில் தன்

அன்னையோடு வந்தமர்ந்து விட்டாள்; இன்னும் சில வருடங்களில் தங்களுக்கே ராணியாகவும் மாறிவிடப்போகிருள் என்றதை நினைத்துப் பார்த்த மந்திரிகளும், மற்றவர்களும் மனமகிழ்ச்சி யடைந்தனர். பாலகல்யாணி கொலு மண்டபத்திற்கு வரப்போகிருள் என்று தெரிந்தோ என்னமோ, அன்று ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. வெண்சாமரம் வீசும் பணிப்பெண்கள் முதல் பிரதம மந்திரி வீரநாத் வரை, எல்லோரும் ஒரே உற்சாகமாய்க் காணப்பட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக லக்ஷ்மி தேவி, தன் புத்திரியின் விஜயத்தினுல் மற்றவர்கள் அடையும் மன மகிழ்ச்சியைக் கண்டு பெருமகிழ்ச்சி எய்தியிருந்தாள்.

இந்த அபரிமிதமான மகிழ்ச்சியைக் குலைக்க அதோ ஒருவன் வந்துவிட்டான். வேறு யாருமில்லை. மீவார் நாட்டினின்றும் வந்த தூதன் தான். தூதன் வந்து காத்திருக்கிருன் என்று வாயிற்காப்போன் தெரிவித்ததும் ராணியார் அவனை உடனே உள்ளே வரச்செய்து தக்கமரியாதை செய்து ஆசனமீந்தாள். சற்று நேரத்திற்குமுன் குதூகலத்தால் கலகலத்த கொலு மண்டபத்தில் தூதன் வருகைகண்டு ஆச்சரியமும், திகைப்பும் கொண்டு நிசப்தமாயிருந்தது. ராணியும் தூதனையே நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் குறிப்பை யறிந்த தூதன் எழுந்து மரியாதை வணக்கம் செய்து "அம்மணீ! மீவார் மஹாராஜாவிடமிருந்து நான் வருகிறேன். இதுநாளும் கப்பம் கட்டிவந்தது போல் இனியும் எங்கள் மன்னரிடமிருந்து கப்பம் தாங்கள் எதிர்பார்க்க முடியாது. அன்றியும் உங்களின் கீழ் அடிமையாக இருந்து வாழ இனி ஒருநாளும் சம்மதியோம். எங்கள் சுதந்திரத்தை எங்களுக்கு மனமுவந்து தாங்கள் அளிக்காவிட்டால் போரிட்டேனும் அதைப் பெறச் சித்தமாயிருக்கிறேம். இது எம் மன்னனின் கட்டளை" என்று தைரியமாய்க் கூறிநின்ருன்.

ராணி இதைக் கேட்டு முதலில் ஆச்சரியமடைந்தாள். எனினும் வெளிக்கு அதைக் காட்டாமல் முகத்தில் புன்னகை வரவழைத்துக்கொண்டு "அவ்வளவுதானா சொல்லியனுப்பினார் உம் மஹாராஜா?" என்றாள்.

"ஆம், அம்மணி! உங்களின் பதிலையும் உடனே தெரிந்து வரச் சொன்னார்" என்றான்.

"என்னுடைய பதிலா?......" என்று சற்று யோசனை செய்பவள்போல் காணப்பட்டாள் ராணி. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த வீரநாத்தின் நெஞ்சு படபடத்தது. ராணியின் பதில் வெளிப்படும் வரையில் அவன் நாவு கட்டுண்டிருக்க முடியவில்லை. "கப்பம் கட்டமாட்டானா உம் வேந்தன்? சுதந்திரமா கேட்கிறான்? உம்...... மூன்று முறை புறமுதுகு காட்டி ஓடும்படி விரட்டியடித்து எமது சக்கரவர்த்தியின் கருணையால் மன்னிப்பைப் பெற்ற அந்தப் பேடிக்கு இன்னுமா புத்திவரவில்லை? சரி, வரட்டும் யுத்தத்திற்கு; இனி அவனுக்கு அபயம் அளிக்க எங்கள் சக்கரவர்த்தி இல்லை. அவனைக் கசக்கிப் பிழிந்து எறிந்து, அவன் ஆக்ஷி பரம்பரையின் ஆணிவேரையும் கிள்ளி எறிந்துவிடத் தயாராயிருக்கிறார் எங்கள் தேவி என்று போய்ச் சொல். இதுதான் ராணியாரின் பதில்......" என்று இன்னும் ஏதோ கூறமுயன்றவனைக் கையமர்த்தி சாந்தமடையச் செய்த ராணி தூதனை நோக்கி "தூத, உம் மன்னருக்கு இன்னும் ஒரு ஏழு நாட்களில் பதில் அனுப்புவோம் என்று தெரிவித்து விடு. ஆனால் அவருக்கு இந்த ஒரு விஷயத்தை மாத்திரம் எச்சரிக்கை செய். ஒன்றல்ல, இரண்டல்ல. மூன்றுமுறை படை எடுத்துவந்து, கணக்கற்ற உயிரையும், பொருளையும் இழந்து திரும்பிய அவர்—தன் குடிகளுக்குத் தகப்பனாக விளங்கவேண்டிய அவர்—இவ்விதம் உயிர்க்கொலையாகிய நாச வேலையில் நான்காம் முறையாகத் தலையிடுவது தனக்கே நாசத்தைத் தேடிக்கொள்வதாகும் என்று சொல்

"நிடதம் போருக்கு அஞ்சாது. ஆனால் அதை நான் வெறுக்கிறேன். தூதா? நீயே யோசித்துப்பார். கடந்த மூன்று யுத்தங்களிலும் ஈடுபட்ட போர்வீரர்களில் எத்தனை ஆயிரம் பேர்கள் மடிந்தார்கள்? எத்தனை பேர்கள் அங்கமிழந்து இன்னும் உன் கண்ணெதிரே என் நாட்டிலிருக்கிறார்கள்? எத்தனை பெண்கள் தங்கள் கணவர்களை இழந்து கவனிப்பாரின்றிக் கஷ்டப்படுகின்றனர்? எத்தனை குடும்பங்கள் தலைவனை யிழந்து தரித்திரமடைந்து, தவிக்கின்றன? இவைகளை யெல்லாம் அறிந்திருந்தும் உம் மன்னருக்கு இன்னும் போரில் நம்பிக்கை இருக்கிறதென்றால் அது எனக்கு ஆச்சரியத்தைத் தான் தருகிறது. நீ தூதன். உன்னிடம் நான் இதற்கு மேல் கூறுவதும் முறையாகாது. உன்னால் இயன்றவரை உம் மன்னருக்கு என் மனப்போக்கை எடுத்துக்கூறு. இன்னும் ஏழு நாட்கள் அவகாசமிருக்கிறது. தீர ஆலோசனை செய்து பார்க்கட்டும். யுத்தமே மேலானது என்று அவர் கருதினால் நிடதமும் பின் வாங்காது என்று கண்டிப்பாய் அறிவித்துவிடு" என்றாள் ராணி.

"அப்படியே, அம்மணி. நான் சென்று வருகிறேன்."

"ஏன் வந்தவுடன் திரும்புகிறாய்? இன்னுமிரண்டு நாள் இங்கேயே தங்கியிருந்து இளைப்பாறிவிட்டுச் செல்லலாமே" என்று அன்பு கனிந்த வார்த்தைகளால் கூறினாள் ராணி. ஆனால் தூதன் தான் உடனே செல்லவேண்டுமென்றும், இல்லையேல் அரசனின் கொடிய கோபத்திற்காளாக வேண்டுமென்றும் தெரிவித்து, ராணியை நமஸ்கரித்துவிட்டுப் புறப்பட்டான்.

தூதன் சென்றதும் ராணி, வீரநாத்தை நோக்கினாள். அவனுக்கு இன்னும் கோபம் ஆறியதாகத் தெரியவில்லை. ராணியின் பதில் அவன் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. எல்லோரும் அவனையே பார்த்தனர். ஆவேசம் கொண்டவன்போல எழுந்த அவன், "தாயே! தூதனிடம் என்ன

சொல்லியனுப்பினீர்கள்! மக்கள் மடிந்தொழிகின்றனரே என்று கருதி அதற்காக நம் தேசபக்தியை இழந்துவிட வேண்டுமா? தொன்றுதொட்டு சுதந்திரமாய் சாம்ராஜ்யாதிகாரம் செலுத்திவரும் நம்மை, கேவலம் ஒரு சிற்றரசன் வலுச்சண்டைக்கு இழுக்கும்போது அவனை எதிர்த்து நிர்மூலமாக்குவதைத் தவிர்த்து அவனுக்கு உபதேசமா செய்வது? அவன் என்ன நினைப்பான். சண்டைக்குத் தேவியார் பயந்துவிட்டீர்கள் என்றல்லவோ கருதுவான்! தாயே, என் வார்த்தையைச் சற்று அங்கீகரிக்க வேண்டும். உயிர்ச் சேதத்தையும் பொருள் நஷ்டத்தையும் கருதாமல் இப்போது ஒரு ஆக்ஞையிடுங்கள். படை திரளட்டும்; பார்க்கலாம் அவனைப் போர் முகத்தில்" எனக் கூறி முடித்தான்.

ராணி அவன் ஆவேசத்தையும் நாட்டின்மேல் கொண்டுள்ள அளவு கடந்த பக்தியையும் கண்டு மனதிற்குள் மகிழ்ச்சியடைந்தவளாய் "நாம் அநீதியைக் கடைப்பிடிக்க முடியாது. பொறுமையுடனிருந்து அவன் பதிலை எதிர்பார்ப்போம். இன்னும் ஏழு நாட்கள் தானே. மந்திரிகளாகிய நீங்கள் எனக்கும் அது வரைக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள். அவன் அதற்குள் இணங்கி வராவிட்டால் அப்புறம் படை திரட்டுவதுதானா தாமதமாகிவிடும்? குமாரி பால கல்யாணி முதன் முதலாக கொலுமண்டபத்திற்கு வந்திருக்கும் இன்றுதானா யுத்தச் செய்தியும் வரவேண்டும்? இது எதற்கு அறிகுறியோ அறியேன்" என்று சற்று வருத்தத்தோடு சபையைக் கலைத்து எழுந்து போனாள். ஆனந்தத்தோடு நுழைந்த பால கல்யாணியும் யுத்தச் செய்தி கேட்டு முகவாட்டத்துடன் தன் அன்னையைப் பின் தொடர்ந்து சென்றாள். அமைச்சர்களும் மற்றவர்களும் மௌனமாய்க் கலைந்து சென்றனர்.

வீரநாத் மாத்திரம் தனக்குள் யோசித்த வண்ணம் சென்றான்.

"அஞ்சா நெஞ்சம் வாய்ந்த சந்திர வம்சத்திலுதித்த மஹாராணி, கேவலம் அழிந்துபடும் சரீரத்திற்காகவும், நிலைத்திராத செல்வத்திற்காகவும், நிடத நாட்டின் கௌரவத்தைக்கூட இழந்து விடுவார்கள் போலிருக்கிறது! இதுவும் நாட்டின் துர்அதிர்ஷ்டம்தானா? இன்னும் இந்நாட்டைப் பிடித்த சனியன் ஒழியவில்லையோ? படை எடுத்து வரும் அந்தக் கொடியனைக் குதிகாலின் கீழிட்டு மிதித்துத் துவம்சம் செய்வதை விடுத்து யோசனை செய்வதாம் எழு நாளைக்கு? இதற்கென்ன யோசனை செய்யவேண்டியதிருக்கிறது? தன்னைக் கொல்லவரும் சர்ப்பத்தைக் கொல்ல யோசனை செய்வாருண்டோ?......ஆம், மஹாராணி. என் தேவமாதா. அவர் வார்த்தைக்கு நான் மரியாதையளிக்க வேண்டாமா? அவர் இஷ்டம்போல் செய்யட்டும்."

## அத்தியாயம் 11

### "எந்த நாட்டிலுமிந்த அநீதிகள் ஏற்குமோ?"

ராணியும் பால கல்யாணியும் தனித்து வீற்றிருந்தனர். அறைக்குள் தாதியர்கள்கூடக் காணப்படவில்லை. ராணி சொல்வதையெல்லாம் மிக்க கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள் பாலகல்யாணி.

"பாலா, மனித சமூகத்தினிடையே நியாயத்தை நிலைநிறுத்த ஏற்பட்டிருக்கும் ஒரு ராஜரீகம், அந்தச் சமூகம் ரணகளத்தில் பிணக்குவியலாக்கப்படுவதைக் கண்டு சகித்திருக்க முடியுமா? மனித சமூகத்திற்கு விரோதமான கொடிய பாவங்களிலெல்லாம் இந்த யுத்தம் ஒன்றுதான் கொடியது. ஆதலின் நாம் அதை உடனே நிறுத்தி சாந்தி ராஜ்யம் நிலவவேண்டிய முயற்சிகளை ஊக்கமாகச் செய்ய முனைவோம். அன்பின் ஜோதியான ஆண்டவன் உடனிருந்து வழிகாட்டிச் செல்வார். நான் உன்னிடம் முன்கூறிய

படி நானே மீவாருக்குத் தனியாகச் சென்று அந்நாட்டில் இந்த யுத்தத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து வருகிறேன். இது மிக்க ரகஸியமா யிருக்கட்டும்'' என்று முடித்தாள். பாலகல்யாணியும் அதை ஆமோதிப்பதிற் கடையாளமாகத் தலையை அசைத்தாள்.

நடுநிசி; நான்கு வெண்புரவிகள் பூட்டிய ரதம் ஒன்று மலையின்மேல் வளைந்து வளைந்து செல்லும் சாலையில் வெகு வேகமாய்ச் சென்றது. சாலைக்கு இருமருங்கிலும் சல சல வென இரைச்சலிட்டு ஓடும் சிறு ஓடைகள் அந்த நிலவில் தகதகவென மின்னின. ரதம் மேட்டிலும் பள்ளத்திலும் ஏறி இறங்கும் சப்தத்தால் கிலிபடைந்த மான்களும், நரிகளும், முயல்களும் இங்குமங்கும் சிதறி ஓடின. ஓரிடத்தில் ஒரு நரி குதிரையின் கால்களுக்கிடையே புகுந்து சென்றதில் குதிரைகள் மிரண்டு துள்ளிக் குதித்தன. வண்டிக்குள்ளிருந்த ராணி பெரிதும் குலுக்கப்பட்டு வெளியே எட்டிப் பார்த்து "சங்கா! என்னடா அது'' என்றாள். சாரதியும் கடிவாளத்தைச் சுண்டி இழுத்து வண்டியை நிறுத்தி கீழே குதித்தோடிவந்து "அம்மணி! ஏதோ நரிக்குட்டி குதிரையின் காலில் மாட்டிக்கொண்டது போலிருக்கு. குதிரை மிரண்டுவிட்டது. வேறொன்றுமில்லை'' என்று சற்று பயத்தோடு சொன்னான். "பரவாயில்லை. இங்கேயே சற்று நேரம் வண்டி நிற்கட்டும்'' என்றாள் ராணி. அவன் கதவைத் திறக்க, அவள் இறங்கி மலைச்சாரலின் ஓரத்தில் நின்றுகொண்டு தன் நாடு இருக்கும் திசையை நோக்கினாள். கிடுகிடு பாதாளமாகவிருந்த அந்தப் பள்ளத்தாக்கின் இடைவெளியினூடே அவள் பார்வை சென்றது. அந்த நிலவொளியில் கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே வெளுப்பாகத் தெரிந்ததேயொழிய தன் அரண்மனையின் உயர்ந்த கோபுரங்களின் சிகரங்களைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. பக்கத்தில் நின்ற சாரதியை நோக்கி "சங்கா

இப்போது எவ்வளவு தூரம் வந்திருப்போம்'' என்ருள் அவள்.

"அம்பணி, 10 காத வழி வந்திருப்போம்."

"இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது?''

"மஹாராணி. இன்னும் 10 காத வழி இருக்கிறது."

"போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்?''

"நிலா மறைவதற்குள் போய்விடலாம், வழியில் தங்காமல் சென்ருல்''

"அப்படியானுல் புறப்படு. சற்று துரிதமாகவே செலுத்து ரதத்தை'' என்று கூறி ரதத்திற்குள் ஏறியமர்ந்தாள். ரதம் முன்னிலும் வேகமாகப் பறந்தது. ஜன்னலின் வழியாகக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் சென்று கொண்டிருக்கும் ராணிக்கு ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு வித புஷ்பங்கள் புஷ்பித்திருந்த மரங்களிலிருந்து அவள் என்றும் நுகர்ந்திராத விதவிதமான மணங்களையெல்லாம் காற்று அள்ளிக்கொண்டுவந்து அளித்தது. அவள் ஆனந்தத்திலாழ்ந்து நித்திரை செய்த வண்ணம் சென்ருள்.

ரதம் மலைச்சாரலை விட்டிறங்கி சிறு சிறு குன்றுகளையெல்லாம் கடந்து சென்றுகொண்டிருந்தது. சம தரையையடைய இன்னும் சிறிது தூரம் தானிருந்தது. வேகமாய் வந்த ரதம் முன்னுல் வழியை மறித்து ஒரு பெரிய மூங்கில் குறுக்கே கட்டப்பட்டிருக்கக் கண்டு நிறுத்தப்பட்டது. குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்ட ஒருவன் பக்கத்துக் குடிசையிலிருந்து வேகமாய் ஓடி வந்தான். அவன் கையில் நீண்ட ஈட்டி இருந்தது. அவன் அணிந்திருந்த ஆடையிலிருந்தே அவன் ஒரு போர்வீரனென்று தெரிந்தது. மேகத்தினுள் மறைந்திருந்த மங்கிய நில வொளியில் அவன் முகம் சாரதிக்குச் சரியாகத் தெரியவில்லை. ஓடிவந்த ஆள் உயர்ந்த நான்கு குதிரைகளையும் அழகான ரதத்தையும்

கண்டு சற்றுப் பின்னடைந்து சாரதியை உற்று நோக்கினான். சடீரென விலகிய மேகத்திரையினின்றும் பாய்ந்த வெண்ணிலாக் கதிரில் சாரதியின் முகம் நன்றாய்த் தெரிந்தது. தான் முன் எப்போதும் பார்த்திராத மனிதனாயிருக்கக் கண்ட அக்காவலன் "ரதம் எங்கே போகிறது?" என்று அதிகாரத்தோடு கேட்டான். இச்சப்தம் கேட்ட ராணி நித்திரை கலையப் பெற்றவளாய் திடீரென எழுந்து தான் அணிந்திருந்த ஆண் உடைகளைச் சரி செய்துகொண்டு ஜன்னல் வழியாக வெளியே நோக்கினாள். காவலாளியும் ரதத்திலிருந்து ஒருவர் எட்டிப் பார்ப்பதைக் கவனித்து "யாரது உள்ளே? இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்?" என முன்னிலும் பலத்த குரலில் கேட்டான்.

சாரதி, "மீவாருக்குச் செல்கிறோம்" என்றான்.

"மீவாருக்கா. ஓகோ! ஊருக்குப் புது ஆசாமிகளா? மீவாருக்குள் நுழைய வேண்டுமானால் அரசன் உத்திரவு வேண்டாமா? உங்களிஷ்டம்போல் போய்விட முடியுமா? அதுவும் இந்த ஜாமத்தில்!"

"ஏதோ, தெரியாமல் வந்துவிட்டோம், தயவு செய்து......" என்றான் சாரதி.

"தயவாவது, செய்வதாவது? என்னை எதுக்காக இங்கே காவல் வைத்திருக்கிறார்கள்? அதெல்லாம் ஒன்றும் நடக்காது. குதிரைகளை அவிழ்த்து மரத்தில் கட்டிவிட்டு விடியும் மட்டும் இந்த இடத்திலேயே இருங்கள்."

"என்ன, விடியும் வரையிலா?"

"ஆமா. விடிந்தவுடன் மீவாரிலிருந்து எனக்குப் பதிலாக இந்த இடத்திற்குப் புது ஆள் ஒருவன் வருவான். அப்புறம் நான் உங்களை அரசர் முன்பு கூட்டிப் போகிறேன்" என்றான்.

அதற்குள் ராணி வெளியே இறங்கி வந்து அவனை நோக்கி "இந்தாப்பா, எங்களை நிறுத்தாதே. ஒரு அவசர

காரியமாய்ப் போகவேண்டும். இதோ இதை வைத்துக் கொள்" என்று கூறி தன் பையிலிருந்து இரண்டு பொற் காசுகளை எடுத்து அவனிடம் கொடுத்தாள். கை நீட்டி வாங்கியதும் அவன் நடுங்கினன். சுற்றிலும் பார்த்து ஒருவரும் இல்லாதது கண்டு சட்டென்று தன் பையில் போட்டுக்கொண்டு "பிரபு, என்னைக் காட்டிக் கொடுத்திடாதிங்க. உங்களை யாராவது வழிமறித்துக்கேட்டால் 'காவல்காரன் நல்ல தூக்கத்திலிருந்தான். தெரியாமல் வந்துவிட்டோம்' என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் என் தலை போய்விடும்" என்று ராணியார் கால்களில் வீழ்ந்து கேட்டுக்கொண்டான். ராணியும் அவன் சொன்னபடியே சொல்வதாகக் கூறி அவன் பயத்தைப் போக்கிவிட்டு ரதத்தில் ஏறப்போனுள். ஏதோ நினைத்தவளாய் காவலாளை நோக்கி "ஊர் இன்னும், எவ்வளவு தூரமிருக்கிறது?" என்றுள்.

"அதோ, தெரிகிறது பாருங்கள்" என்று சற்று தூரத்தில் மலையடிவாரத்தில் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினன். அக்குன்றின் மீதிருந்தே கீழ்நோக்கினுள் ராணி. நகரத்தின் நாற்புறக் கோட்டை வாயில்களின் கோபுரங்களும் தெளிவாகத் தெரிந்தன. அதன்மேல் எரிந்துகொண்டிருந்த விளக்குகள் நிலவொளியில் மினுக்கு மினுக்கென்று மங்கலாய்க் காணப்பட்டன. அவள் மனதில் ஏதோ மகிழ்ச்சி ஏற்பட்டது. குபீரெனக் குதித்தோடி ரதத்தில் ஏறி "ரங்கா, தட்டிவிடு" என்றுள். அதற்குள் காவற்காரனும் வழியை மறைத்துக் கட்டியிருந்த மூங்கிலை அப்புறப்படுத்தியிருந்தான். குதிரைகள் ஒரு விநாடியில் ஓடி மறைந்தன.

மீவார்கோட்டைக்கு அரை மைல் தூரத்தில் ஓர் பெரிய ஆறு ஓடுகிறது. அதன் கரையிலேயே ரதத்தைநிறுத்தச்செய்த ராணி ஆற்றிலிறங்கிப் பல் துலக்கிச் சுத்தம் செய்துகொண்டு விடியும் நேரத்தை எதிர்பார்த்திருந்

தாள். கோட்டைக்குள்ளிருந்து சேவல்கள் கூவும் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து 'பம் பம்' என வாத்தியம் ஒலித்தது. அதையடுத்து ஆலய மணி 'டணர், டணர்' எனச் சப்தித்தது. டமாரமும் 'தடதட'வென அதிர்ந்தது. ஆற்றங்கரை மரங்களில் சஞ்சரித்த புள்ளினங்கள் படபடவென இறக்கையை யடித்துப் பறந்து சென்றன. அதோ கீழ்திசையில் சூரியனும் கிளம்பிவிட்டான். ஆற்றில் படர்ந்திருந்த தாமரைகள் 'ஜில்'லெலன விரிந்தன. அல்லிகள் குவிந்தன.

ஆண் வேடத்திலிருந்த ராணியார் தன் தலைப்பாகையெல்லாம் சரி செய்துகொண்டு சாரதியை நோக்கி "சங்கா சாயந்திரம் வரையும் இங்கு காத்திரு. இருட்டியதும் வந்து விடுகிறேன். குதிரைகளைக் கவனித்துக்கொள். யாரிடத்திலும் ஏதேனும் உளறிவிடாதே" என எச்சரிக்கை செய்து விட்டு நகரத்திற்குள் செல்லும் பாதை வழியாக வேகமாய் நடந்து சென்றாள்.

நகரத்திற்குள் புகுந்ததும் ஒரு சாதாரணக் குடியானவன் போல் மெதுவாக நடந்து சென்றாள்: அவள் பார்வை நாலா பக்கமும் சென்றது. திடீரென்று எங்கிருந்தோ 'டம, டம'வென யுத்த முரசு அதிர்ந்தது. அதைத் தொடர்ந்து கொம்புகள் ஒலித்தன. தெருவில் நடந்து சென்ற மாந்தர்களெல்லாம் திகைப்புற்று சற்று நின்று முரசின் அர்த்தத்தை யூகித்து அது வந்த திக்கை நோக்கி விரைந்து சென்றார்கள். ராணியும் அவர்களோடு சேர்ந்துகொண்டாள். அவர்களெல்லாம் நான்கு பெரிய வீதிகள் ஒன்றாய்ச் சேருமிடத்தில் வந்து நின்றார்கள். அந்த இடத்தில் ஓர் பெரிய யானைமீது ஒருவன் நின்று சுற்றிலும் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு ஓலை இருந்தது, ஜனங்களெல்லாம் வந்து கூடியதும் டமாரமும், கொம்புகளும் தங்கள் வேலையை நிறுத்தின. மக்களெல்லாம் யானைமீதிருந்தவ

னையே அண்ணாந்து பார்த்து என்ன சொல்லப்போகின்ருனோவென்று ஆவலாய் நின்றனர். அவன் ஓலைச் சுருளைப் பிரித்து வாசித்தான் :—

“புலிக்கொடி நின்று கம்பீரமாய் ஆட்சி புரியும் இம் மீவார் நாடு இனியும் பிரிதோர் நாட்டிற்கு அடிமையாக விருந்து வருவது இப்பூமியில் பிறந்த ஒவ்வொரு ஆண் மகவுக்கும் மானபங்கமானதல்லவா? ஆகையால் நம் நாட்டின் மரியாதையையும், அதன் மானத்தையும் காக்க நிடத நாட்டிற்குப் படை எடுத்துச் சென்று அதை வென்று புலிக்கொடியை அங்கும் நிலைநிறுத்த விரும்புகிருேம். அதன் பொருட்டு சேனை பலத்திற்கு இந்நகரிலுள்ள குடும்பத்தார் ஒவ்வொருவரும் ஒரு ஆண் மகனை அனுப்பி உதவவேண்டும். தவறினல் கடும் தண்டனைக்கு ஆளாவீர்கள் என்பதையறியவும்” என்று முடித்த அவன் ‘மகா ஜனங்களே, இவ்விதம் நம் மகாராஜா ஆக்ஞை பிறப்பித்திருக்கிறபடியால் அதற்கு உடனே ஆயத்தம் செய்வீர்களாக” என மேலும் எச்சரிக்கை செய்தான். முரசு அதிர்ந்தது; யானையும் நகர்ந்தது. இப்படியே நகர் முழுவதும் ஆங்காங்கே நின்று பறை சாற்றிச் சென்ருன் அவன். நகரெங்கும் இதே பேச்சாக விருந்தது. ஜனங்கள் கூடிக் கூடிப் பேசினுர்கள். ராணி அக்கூட்டம் அடுத்துக் கவனித்தாள். “உம், ஜனங்களின் நிலையையும் அவர்களுடைய வெறுப்பையும் உணர்ந்தும் நினைத்த சமயமெல்லாம் யுத்தத்திற்குத் தயாராகச் சொல்கிருரே, நம் ராஜா. இதென்ன கஷ்ட காலம்?” என்ருர்கள்.

அக்கூட்டத்தை விட்டு நீங்கிய ராணி ஆற்றங் கரையை யடுத்துச் சென்ருள். வழியெங்கும் அவள் பார்த்த மாந்தர்களின் முகமெல்லாம் மிக்க கவலைக் குறியைக் காண்பித்தன. ஆற்றின் படித்துறையின்மேல் நின்று பெண்களை ஜாடையாகக் கவனித்தாள் ராணி

தண்ணீர் மொள்ளும்போதே பெண்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

"மனோ நிம்மதியுடன் வாழ விடாது தடுக்கும் முறையா அரசியல் நீதி?"

"குடிகளுக்காக அரசன் என்பார்கள். ஆனால் இன்றோ அரசனுக்காக குடிகளாயிருக்கிறோம் நாம். அவன் மனோபீஷ்டம் நிறைவேற இத்தகைய யுத்தங்கள் இன்னும் ஓயவில்லையே!"

"அதோ பாடிப் பறக்கும் பக்ஷிகளின் சுயேச்சை வாழ்வுகூட நமக்கில்லையே".

இவ்விதம் அவர்களெல்லாம் பேசிக்கொண்டே தண்ணீர்க் குடங்களை இடுப்பில் எடுத்துக்கொண்டு திரும்பும்போது கரையில் நிற்கும் ராணியை ஒருத்தி பார்த்துவிட்டாள். படிக்கட்டின்மீது ஏறிவரும் அவள் மற்றவர்கள் பக்கம் திரும்பி மெல்லிய குரலில் "அதோ அங்கு நிற்கிறானே, அந்த மனிதன் அரசனின் ஒற்றனோ, என்னமோ, பேசாமல் போய்விடுவோம்" என்று பயத்தோடு எச்சரித்தாள். மற்றவர்களும் ஆமோதித்தவர்களாய் பேச்சை நிறுத்திவிட்டு மேலே வந்தார்கள். ராணியார் இதைக் கேட்டு அவர்கள் ஏறிவரும் வழிக்குச் சமீபம் வந்து நின்று "தாய்மார்களே நமஸ்காரம்" என்றான்.

ஏற்கனவே பீதியடைந்திருந்த அவர்கள் அவன் நெருங்கி வந்து நின்றதைக் கண்டு கலவரமடைந்தனர். எனினும் அவர்களில் சற்றுத் தைரியமாயிருந்த ஒருத்தி "யாரய்யா நீ?" என்றாள்.

"நான் அயலூர். க்ஷேத்திர தரிசனத்திற்காக வந்தேன்".

"அயலூரா? எந்த ஊரய்யா?"

"அயோத்தியம்மா. இவ்வூர் மன்னன் தரிசனம் கண்டு மகிழ்ந்து போக உத்தேசம். அப்பாக்கியம் அடியேனுக்குக் கிட்டுமா?"

2-வது பெண் :—"அப்படியா? ரொம்ப சரி. அரசர் இப்போது பிடத நாட்டின் மேல் கச்சை கட்டிக்கொண்டு சேனை சேகரிக்கிருர். தாங்களும் அவர் தரிசனம் நாடினுல் அதே உத்தியோகம் உங்களுக்குக் கிடைக்கலாம்"

ராணி—"என்ன, சண்டை செய்யவா?"

3-வது பெண் :—"ஆமாம் சண்டை செய்யத்தான்."

ராணி "நீங்கள் சொல்வது வேடிக்கையாகயிருக்கிறதே. உங்கள் மன்னர் எதற்காக பிற நாட்டுடன் யுத்தத்திற்குப் போகவேண்டும்? அதோ பாருங்கள். உங்கள் நாட்டைச் சுற்றி அரணுக அமைந்திருக்கும் மலைத் தொடர்களை. எவ்வளவு அழகான காட்சி. வானத்தைத் தொட்டுவிடும்போல் வளர்ந்திருக்கும் அம்மலைச் சிகரங்களால் தடுக்கப்பட்ட மேகங்கள் வருஷிக்கும் மழையால், வருஷம் முழுதும் வற்ருது பெருக்கடித்தோடிவரும் ஜீவ நவ நதிகள் உங்கள் நாட்டைச்சுற்றி எங்கும் ஓடுகின்றனவே; அவைகளின் நீர்ப்பாசனத்தினுல் கழனிகளில் எப்போதும் பயிர்கள் கம்பீரமாய் நிமிர்ந்து நின்று அளவற்ற தானிய மணிகளை அள்ளிக் குவிக்கிறதாகத் தெரிகிறதே. இவ்வளவு இயற்கை வளம் பொருந்திய ஒரு நாட்டை இறைவன் உங்களுக்கு அளித்திருக்கும்போது இதைக்கொண்டே திருப்தியடையாமல் உங்கள் மன்னர் ஏன் போர் தொடுக்கவேண்டும்? யுத்தம் பைசாசத் தொழிலாயிற்றே? யுத்தக் கொடுமையை நீங்கள் அடிக்கடி அனுபவித்திருக்கிறீர்கள். அதைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதல்லை. தாய்மார்களே, உங்களுக்கு மிக்க வந்தனம். நல்ல வேளையாக முன் கூட்டியே உங்கள் மன்னரின் மனப்போக்கை எனக்குத் தெரிவித்துவிட்

டீர்கள். அடியேன் சந்யாச மார்க்கத்தை நாடி ஆண்டவன் பாதாரவிந்தையைப் பணிந்து கொண்டிருந்தாலே போதும், உங்கள் மன்னர் தரிசனம் எனக்கு இனி வேண்டியதே இல்லை. அவரைப் பார்க்காமலே திரும்பிவிடுகிறேன், ஆனால் ஒன்றுமட்டும் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

"பெண்களாகிய நீங்களனைவரும் அன்பின் அவதாரம். தாய்மைப் பற்றுக்குமேல் இப்பூவுலகில் ஒப்பிடுவதற்கு உயர்ந்தபொருள் வேறொன்றில்லை. யுத்தத்திற்கு ஆயத்தமாகும் இச்சமயத்தில் 'யுத்தம் வேண்டாம்' என எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி செய்து, தீவிர தைர்யத்துடன் அதை நிறுத்தப் பாருங்கள். உங்களை, கேவலம் பெண் என்று உதாசீனம் செய்யும் ஆடவர்களுக்கு உங்கள் வலிமையை இச்சமயத்தில் காட்டுங்கள். நீங்கள் வெற்றியடைவது திண்ணம்........" என்றாள்.

1-வது பெண்.—"பெரியோரே! தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஆனால் சண்டை வேண்டாம் எனப் புத்தி புகட்டும் சந்யாசிகள் பலரைக்கூட இம்சித்து கட்டாயப்படுத்தி சண்டையில் ஈடுபடச் செய்யும் எங்கள் மன்னனின் மடமையை என்னவென்று கூறுவோம்?"

ராணி:—"சந்யாசிகளைக் கூடவா அப்படிச் செய்கிறார் உங்கள் மன்னர்?"

1-வது பெண்; "அரண்மனையை அடுத்துத் தாங்களே சென்று பார்த்தால் அதையும் தெரிந்து கொள்ளலாம்"

"சரி, அப்படியே செய்கிறேன். சாதுக்களிடமும் இதைப்பற்றிச் சொல்லுகிறேன், உங்களால் கூடிய மட்டும் நீங்களும் யுத்தத்தை நிறுத்த முயற்சியுங்கள். நான் சென்று வருகிறேன்." எனக்கூறிய ராணி அங்கிருந்து நேரே அரண்மனை நோக்கி வந்தாள். அப்போது தான் அரண்மனைக்குள்ளிருந்து சாதுக்கள் கூட்டம் வெளிவந்து

கொண்டிருந்தது. காவியுடையும் சடைமுடியும் தாங்கிய அவர்கள் ஒவ்வொருவர் கண்களும் கோபாக்னியைச் சிந்தின. அவர்களில் ஒருவர் பேசிக்கொண்டுவந்தார், "உம்......பைத்தியக்காரன். நாட்டின் தேவை யுத்தம் தானும். நாமும் அதில் ஈடுபடவேண்டுமாம். இல்லாவிட்டால் வாளுக்கு இறையாக வேண்டுமாம். இக்கொடுங் கோலனின் கையால் மாளுவதைக் காட்டிலும் வீரஙிடதத்தின் அம்பை மார்பில் ஏற்று மடிந்தாலே மோக்ஷமடையலாம்."

ராணி இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்து நின்ருள்.

அதே சமயத்தில் அரண்மனைக் குள்ளிருந்து கூட்டம் கூட்டமாய் வாலிபர்களெல்லாம் வெளியே வந்து கொண்டிருந்தனர்; அரசனின் ஆக்ஞைப்படி தங்கள் பெயர்களையெல்லாம் யுத்தத்திற்காகப் பதிவு செய்து திரும்பிவந்த கூட்டம் அது; ராணி அவர்களையும் பின் தொடர்ந்து சென்ருள். அவர்கள் இரகசியமாக "நாம் என்ன செய்யமுடியும்? அரசன் சொற்படி கேட்காவிட்டால் அவன் விதிக்கும் கொடிய தண்டனைக்கு ஆளாக வேண்டியதுதானே? அதைக்காட்டிலும் யுத்தகளத்திலே சென்று வீரமாகப் போர் புரிந்து மடிவதேமேல். போர்த் திமிர்பிடித்து அலையும் அவனுக்கு யார் புத்தி சொல்லமுடியும்? அவன் செய்வது நாட்டின் நாசத்திற்கே யன்றி நலனுக்கல்ல; எப்படியாலுல்தான் நமக்கென்ன." என்று பேசிகொண்டனர்.

ராணி இவ்விதம் பல திறப்பட்டவர்களின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டபின் அந்நாட்டின் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் இந்த யுத்தத்தைப்பற்றி என்ன பேசிக கொள்கிருர்களென அறிய ஆவல் கொண்டாள். அதற்குள் மாலை நேரமும் சமீபித்துவிட்டது. தான் சாரதியிடம் சொல்லிவிட்டு வந்ததை நினைத்து

உடனே விரைந்தாள். அங்கு அவனைக்கண்டு "சங்கா இன்றிரவும் இந்நகரத்தில் தங்கவேண்டியிருக்கிறது; ஆதலின் நான் சென்று வருகிறேன். அதிகாலையில் புறப்பட்டுவிடலாம்" எனக்கூறி சற்று அங்கேயே இளைப்பாறி, சிரம பரிகாரம் செய்துகொண்டு, இருட்டுவந்து கவிந்ததும் நகருக்குள் பிரவேசித்தாள்.

நிலவு பால்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தெருவில் ஒரு புறத்தில் நீண்டு விழுந்திருந்த நிழலில் மறைந்து மறைந்து சென்றுள் ராணி. ஒரு வீட்டின் திறந்த ஜன்னலிலிருந்து விளக்கின் ஒளி தெரிந்தது, அந்த அகால நேரத்தில் விளக்கு எரிவதைக்கண்ட அவள் ஜன்னலையணுகி மெதுவாய்த் தலையை நீட்டிப்பார்த்தாள். அவள் உள்ளே கண்ட காட்சி அவளைப் பிரமிக்கச் செய்தது. கணவன் தன் மனைவியைத் தழுவிக்கொண்டு அவள் கண்ணீரைத் துடைத்து ஏதோ ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தான். அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கேட்டாள்.

கணவன் :—"கண்மணி! சென்ற யுத்தத்தில் நம் குடும்பத்தில் என் தகப்பனைப் பறிகொடுத்தோம். அந்தத்துக்கம் இன்னும் மனதைவிட் டகலாமலிருக்கும போதே, மற்றொரு யுத்தமும் ஆரம்பமாகப்போகிறது, அதற்கு நான் பலியாக வேண்டுமென்று அரசன் ஆக்ஞை பிறந்திருக்கிறது. நான் என்ன செய்ய முடியும்? அவன் ஆணையை மீறினால் பலிபீடத்திற்கு உடனே இரையாக வேண்டியது தான் என்பதை நீ அறிவாய். அப்படி பேடித்தனமாய் மடிவதைக்காட்டிலும் யுத்த அரங்கத்திலேயே சென்று வீரமாய் மடிவது சிலாக்கியமல்லவா?"

மனைவி "நாதா! நீங்களே அவ்விதம் தீர்மானித்தால் பின் என் கதி என்னவாகிறது? முதலில் அதோ தொட்டிலில் தூங்கும் குழந்தையின் கதி—" என

துக்கத்தால் நெஞ்சடைக்க அதற்கு மேல் நாவெழாமல் நிறுத்திவிட்டாள்.

ராணியின் உள்ளம் இதைக்கண்டு கலங்கிவிட்டது. அவள் மெதுவாகக் கதவைத் தட்டினுள். தம்பதிகள் திடுக்கிட்டவர்களாய் சத்தத்தை உற்றுக் கவனித்தார்கள். "ஐயா, யார் உள்ளே? சற்று கதவைத்திறவுங்கள்" என்ற சத்தம் வெளியிலிருந்து கேட்டது. அரசனின் ஒற்றனே என்று நினைத்துப் பயந்து விட்டார்கள் அவர்களிருவரும். கணவன் மிக்க பீதியுடனே போய்க் கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்தராணி அவர்கள் முகக் குறிப்பால் அவர்களடைந்திருக்கும் கலவரத்தைக்கண்டு "பயப்படாதீர்கள். நான் ராஜாங்க ஒற்றனல்ல. வேற்றூர்வாசி. க்ஷேத்திர தரிசனத்திற்காக தேச யாத்திரை செய்துவருகிறேன். இவ்வழியாக வரும்போது தற்செயலாக ஜன்னல்வழியாக நீங்களிருவரும் கண்ணீர் வடித்துக் கவலைப்படுவதைக் கண்டேன். இன்று பகல் முழுதும் இந்நகரத்தில் சுற்றினேன். எந்த தேச சரித்திரத்திலும் கேட்டறியாத செய்திகள் இங்கு நிகழ்கின்றன. யுத்தத்தை வெறுக்கிறது நாடு முழுவதும். அரசனே அதை யறியாமல் தன் மனம்போன போக்கின்படியெல்லாம் முனைந்து ராஜ நீதியைக்குலைக்கிறுன். உங்களைப் போன்றே ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இன்று இந்நகரில் கதறுகின்றனர். ஒருவராவது அரசனின் போக்கை விரும்புவதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க, பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு மாருக, அவர்களின் உடல், பொருள், ஆவியைத் தியாகம் செய்யக் கட்டாயப்படுத்தும் அந்த அரசனை எதிர்த்து ஒரு கிளர்ச்சி செய்ய முற்படுவதே சரியான வழியாகும். நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து அப்படியே செய்யுங்கள். இக்கிளர்ச்சிக்கு விடதநாட்டு மஹாராணியின் ஆதரவு உங்களுக்குக் கட்டாயம் கிட்டும் என நான் நம்புகிறேன்" என்த் தேறுதல் கூறினுள்.

ராணியின் வார்த்தைகளை வெகு கவனமாகக் கேட்ட தம்பதிகளில் கணவன் "ஐயா! நாட்டின் தேவைக்காக எத்தனை தியாகங்கள் வேண்டுமானாலும் செய்யத் தயார். ஆனால் ஆக்க வேலையின்றி இந்த அழிக்கும் வேலையில் ஈடுபட மக்கள் மனம் எவ்வாறு பொறுக்கும்?" என்றான்.

"நானும் அதைத்தான் சொல்லுகிறேன். அரசனின் நீதியற்ற போக்கைத் தடைப்படுத்துவதற்கு குடிமக்கள் எத்தகைய தியாகங்களையும் தீவிரமாய்ச் செய்யவேண்டும். நானும் நிடத நாட்டிற்குக் கூடிய சீக்கிரம் செல்ல நேரிடும். அப்போது மஹாராணி லக்ஷ்மி தேவியைக் கண்டு உங்கள் நாட்டின் நிலைமையை அவருக்கு எடுத்துக்கூறுகிறேன். அவரும் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து இந்த யுத்தத்தை நிறுத்த வழிதேடுவார். சரி, எனக்கு நேரமாகிறது; நான் சென்று வருகிறேன்." என விடைபெற்றுக்கொண்டு ராணி புறப்பட யத்தனித்தாள்.

அவளைத் தடுத்து அத்தம்பதிகள் "பெரியாரே! நீங்கள் மிக்க களைப்புற்றுக் காணப்படுகிறீர்களே. சற்று தாமதியுங்கள். கட்டமுது கட்டித் தருகிறோம். நாளைக்குப் பயணத்தில் வழியில் உபயோகித்துக் கொள்ளுங்கள், நாங்கள் ஏழைகள். இதுதான் எங்கள் சக்திக்குத் தகுந்தது. தயவு செய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்" என அன்புகனியக் கூறி அவள் கையில் ஒரு கட்டமுது முடிச்சைக் கொடுத்தனர். ராணியும் அவர்களின் அன்பிற்குப் பெரிதும் மனமகிழ்ந்து நன்றி தெரிவித்துவிட்டு அவ் வீட்டை விட்டுக் கிளம்பினாள்.

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

## அத்தியாயம் 12

### "உணவு செல்லவில்லை, ஸகியே.!"

இளவரசி பாலகல்யாணி அரண்மனை நந்தவனத்தில் லதாக்கிரஹத்திலோரம், தனக்கு அந்தரங்கப் பிரியமான தோழி விஜையுடன் மிக்க கவலைக் குறிதோன்ற வீற்றிருந்தாள். விஜையும் அவளுடைய மனக் கஷ்டத்தையறிந்து எதுவும் பேசுவதற்கு அஞ்சி தலைகுனிந்த வண்ணம் அவள் சமீபத்தில் தரையில் ஒடுக்கமாய் உட்கார்ந்திருந்தாள். இளவரசி பெருமூச்சு விட்டவளாய் "விஜை! ஏண்டி இன்னும் அம்மாளைக் காணவில்லை. நேற்று மாலையே திரும்பிவருவதாகச் சொன்னார்களே. இரண்டு நாளாகிவிட்டதே. அவர்களுக்கு வழியில் என்ன கஷ்டம் நேர்ந்ததோ? அல்லது மீவாருக்குள் செல்லும்போது தான் ஒற்றர்களால் ஏதேனும் துன்பம் சம்பவித்திருக்குமோ? ஒன்றும் தெரியவில்லையே? இங்கிருந்து சில வீரர்களை அனுப்பலாமென்றாலும் இரகசியம் வெளிப் பட்டுவிடுமென்று பயமாயிருக்கிறது. என்னடி செய்யலாம்? ஒரு வழியும் எனக்குத் தெரியவில்லையே? இரவெல்லாம் எனக்கு உறக்கமே இல்லையடி. என் மனம் படும் வேதனையை இவ்வளவென்று சொல்ல முடியவில்லை—" என்று கண் கலங்கக் கூறினாள்.

"குமாரி வருத்தப்படாதே. இன்று சாயந்திரம் வரை பார்ப்போம். மஹாராணி வராவிட்டால் பிரதம மந்திரியிடம் விஷயத்தைக் கூறி அதற்கு வேண்டிய வழிகளைச் செய்யச் சொல்லுவோம். இதற்காக நீ ஏன் சாப்பாடு கூட இல்லாமல் இப்படி வாடிப்போயிருக்கிறாய். வாம்மா, வந்து ஏதாகிலும் கொஞ்சமாவது சாப்பிடு. மஹாராணி வந்தால் என்னைத்தானே கோபிப்பார்கள். எழுந்திரம்மா," என்று கெஞ்சிக் கூப்பிட்டாள்.

"விஜை, எனக்குச் சாப்பாடு இப்போது எப்படியடி செல்லும்? அந்தி மயங்க இன்னும் ஐந்து நாழிகைதான் இருக்கிறது. அதுவரையிலும் பார்த்துவிட்டுப் பின்பு வந்து சாப்பிடுகிறேன்."

"கு—மா—ரி".

"என்னைத் தொந்திரவு செய்யாதேடி, போ" எனக் கடுகடுத்தாள். அதற்கு மேலே தோழி அவளை எதும் கேட்கத் துணியாமல் அவள் அருகிலேயே மௌனமாயிருந்தாள்.

பாலகல்யாணியின் மனம் தன் அன்னையைப்பற்றியே சிந்தித்தவண்ணம் ஏக்கமுற்றிருந்தது. அவளுக்கு ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகம் போலத் தோன்றியது. அந்தி மயங்கும் சமயம் நெருங்க அவள் கவலையும் அதிகரித்தே வந்தது. இப்போது இருட்டியும்விட்டது. தோழி, நேரமாகிவிட்டதெனக் குறிப்பால் அவளுக்கு உணர்த்த பாலகல்யாணியும் எழுந்து அரண்மனையை நோக்கித் தளர்ந்த உள்ளத்துடன் தள்ளாடி நடந்து சென்றாள்.

*　　　*　　　*

கட்டமுதை ஏற்றுக்கொண்டு விடைபெற்றுப் பிரிந்த ராணி நேரே ஆற்றங்கரைக்கு வர, அவளின் வரவையே எதிர்பார்த்துக் கண் இமை கொட்டாது விழித்திருந்த சாரதி அவளைக் கண்டதும் குதிரைகளை ரதத்தில் பூட்டினான்.

"சங்கா, பொழுது புலர இன்னும் 6 நாழிகைதானிருக்கிறது. அதற்குள் நாம் வெகுதூரம் சென்று விடவேண்டும். இல்லையேல் யாரேனும் ஒற்றர்கள் தொடர்ந்து வரக் கூடும். குதிரைகளைச் சற்று வேகமாக விரட்டு" என்று கட்டளையிட்டு சடாரென ரதத்தில் ஏறியமர்ந்தாள். ரதமும் வேகமாக ஓடியது.

மலையடிவாரத்தின் வழியெல்லாம் கடந்து, மலைமீது நெளிந்து நெளிந்து செல்லும் மரங்கள் மலிந்த சாலையினூடே ரதம் சுமார் 3 நாழிகைப் பொழுது சென்றதும் முந்தின நாளிரவு காவற்காரனால் தடுக்கப்பட்ட இடத்தை வந்தடைந்து மேற் செல்ல முடியாமல் நின்றது. தூரத்திலிருந்த குடிசையினின்று காவலாளியும் ஓடோடி வந்தான். அவன் பழய ஆளாகவே இருக்கக்கண்ட சாரதி, ரதத்தை விட்டிறங்கி வந்து அவனிடம் ரகசியமாக "இது நேற்றுவந்த ரதம்தானப்பா, சும்மா விடு" என்றான். ராணியும் வெளியே எட்டிப் பார்த்து அவர்கள் பேசுவதைக் கவனித்தாள். காவலாள் ராணியிடம் ஓடிவந்து "பிரபு, உங்கள் ரதத்திற்கு வழிவிட நான் ஒன்றும் ஆட்சேபனை சொல்ல வில்லை. ஆனால் ஒரு முக்கியமான சங்கதி யிருக்கிறது. கொஞ்ச நேரத்திற்கு முந்தி தான் எங்களரசன் ஆக்ஞையைப் பெற்ற பத்து ஒற்றர்கள் இவ்வழியாக நிடத நாட்டிற்குச் சென்றனர்—" என்றான்.

"பத்து ஒற்றர்களா? நிடத நாட்டிற்கா? எதற்காக?" என்று சற்று பதட்டமாகவே, கேட்டாள் ராணி.

"அது எதற்கோ தெரியவில்லை. ஆகையால் உங்கள் ரதமும் நிடத நாடு போவதாயிருந்தால் இங்கே கொஞ்சம் நின்று பின்னால் சென்றால் நல்லது. இல்லா விட்டால் அவர்கள் உங்களைப் பிடித்து மீவாருக்கே கொண்டு வந்து விடுவார்கள். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

ராணி அது கேட்டு சற்று யோசித்தாள். என்ன பதில் சொல்லுவதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. 'நம் நாட்டிற்கு எதற்கு ஒற்றர்கள் செல்ல வேண்டும். காரியம் வெகு துரிதமாக நடக்கிறது போலிருக்கிறதே!' என்று தனக்குள் சிந்தித்தவளாய் காவலாளியை நோக்கி "அவர்கள் கண்ணில் படாமல் செல்ல இதைத் தவிர வேறு மார்க்கம் ஏதேனும் உண்டா?" என்றாள்.

"இருக்கிறது. ஆனால் அது சுத்துப் பாதை. அதிகமாக ஒரு காதவழி போகவேண்டும். அப்படிச் சுத்திப் போனாலும் கடைசியில் இரண்டு வழியும் ஒரே இடத்தில் சந்தித்துத்தான் போகவேண்டும்"

"பரவாயில்லை. அதற்குள் அவர்கள் எங்களை முந்திவிடுவார்கள். அவர்கள் கண்ணில் நாங்கள் படமாட்டோம். எங்களுக்கு அந்த மார்க்கததைக் காட்டு" என்றாள் ராணி.

குறுக்கே இருந்த மூங்கிலை எடுத்துவிட்டு ரதத்தோடு கூடவே சென்று சிறிது தூரத்தில் பிரிந்து செல்லும் ஒரு மார்க்கத்தைக் காட்டினான் காவலாளி. ராணி அவனிடம் இரண்டு பொற் காசுகளைக் கொடுக்க அவன் ஆனந்தம் கொண்டவனாய் அவளைப் பண்புடன் வணங்கி விடை பெற்றுக்கொண்டான்.

ரதம் 6 காத தூரம் சென்றதும் ஓர் ஆற்றங்கரையை யடைந்தது. ஆற்றில் பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தைக் கண்டு அதில் மனம் பறிகொடுத்த ராணி சாரதியை நிறுத்தும்படி செய்து ஆற்றின் கரையில் நின்று பிரவாகத்தில் அடித்தேகப்பட்டுச் செல்லும் அழகிய புஷ்பங்களையும், மரஞ் செடி கொடிகளையும் கண்டு தனக்குள்ளே சிறு குழந்தைபோல வியந்துகொண்டிருந்தாள். கதிரவனின் உக்கிரகிரணங்கள்கூட அந்தச் சமயத்தில் அவளுக்கு உரைக்கவில்லை. இயற்கைக் காட்சிகளைக் கண்டு மெய்மறந்து பரவசமெய்தி நின்ற அவள், தூரத்தில் எந்த மரத்திலிருந்தோ கூவும் குயிலின் இனிய ஓசை கேட்டு தன் நினைவு வரப்பெற்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டதை யறிந்ததும் பசியை யுணர்ந்தாள். உடனே மீவாரில் அத்தம்பதிகள் கொடுத்த கட்டமுது ஞாபகம் வர, சாரதியைக் கூவி அதை எடுத்துவரும்படி செய்து சாரதிக்கும் பகிர்ந்து

கொடுத்து அவ்வாற்றங்கரையிலேயே அமர்ந்துண்டாள், ராஜபோகத்தில் உண்ணும் உணவிற்கும் அதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருந்தாலும், அவர்களின் அன்பை நினைந்து உண்ணும் அவளுக்கு அது அமிர்தமாகவே தோன்றியது. உண்டு சற்று களைப்புத்தீர அங்கோர் மரத்தடியில் துயின்ருள். அதற்குள் சாரதி ரதத்தைத் தயார் செய்தான். துயில் நீத்த பின்னர் உடையைச் சரி செய்து கொண்டு மறுபடியும் ரதத்தில் ஏறி யமர்ந்தாள்.

ரதம் சுமார் இரண்டு காத தூரம் வந்ததும சற்று தொலைவில் ஏதோ தூசி கிளம்புவதைக் கண்டு விட்டான் சாரதி. சடாரென நிறுத்தி உற்றுக் கவனித்தான். ராணியும் அதைக் கண்டு சற்று கலக்கத்துடன் ரதத்தினுள்ளிருந்தபடியே கவனித்தாள். தூசி, போகப்போக மறைந்து கொண்டே போவதைக் கண்ட அவள், காவற்காரன் சொன்ன மீவார் ஒற்றர்களின் குதிரைகள் செல்வதால் ஏற்படும் தூசிதான் அதுவென யூகித்தறிந்தாள். அக் கூட்டம் மலைப்பாதையின் ஒரு திருப்பத்தில் திரும்பிய போது ராணியின் கண்களுக்கு குதிரைகள் மிகத் தெளிவாகத் தெரிந்தன. "சங்கா, சந்தேகமே இல்லை. இவர்கள் அந்தக் காவற்காரன் நமக்குத் தெரிவித்த ஒற்றர்கள் தான். சரி. இனித்தாமதிக்கக் கூடாது. மாலை வேளையும் நெருங்கி வருகிறது. தூசியின் மறைவில் அவர்கள் பின்னாலேயே ரதத்தை நிதானமாகச் செலுத்திச் செல். அவர்கள் நம்மைக் கண்டு கொள்ள முடியாது. எப்படியும் அவர்கள் நம் நகருக்குள் பிரவேசிக்கும் முன் நாம் சென்று அவர்களைத் தடுக்க வேண்டும். இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது?" என்று கேட்டாள்.

"இன்னும் 8 காதம் தான் மஹா ராணி."

"சரி; இரவு 6 நாழிகைப் பொழுதுக் கெல்லாம் அரண்மனையை அடைந்து விடலாம், புறப்படு" என்ருள்.

ரதம் ஒற்றர்களைத் தொடர்ந்தே ஓடியது. அது மலைப்பாதையை விட்டிறங்கி சமதரைக்கு வந்த சமயம் கதிரவனும் மறைந்து விட்டான். ஆகாயத்தில் ஜ்வலிக்கும் நக்ஷத்திரங்களின் வெளிச்சத்தைக் கொண்டே சென்றது. தூரத்தில் கிடத நாட்டின் அரண்மனைத் தீபங்களும், விண்மீன்களைப் போல் பிரகாசித்ததைக் கண்ட ராணிக்கு உடனே தன் புதல்வி பால கல்யாணியின் ஞாபகம் வந்தது. தன்னையுமறியாமல் அவள் கண்களில் நீர் துளிர்த்தது. 'நேற்றே திரும்பி விடுவதாகச் சொன்னேனே, அவள் என்ன பாடு படுகிறாளோ. ஒரு சமயம் என்னைக் காணாத துக்கத்தில் நான் மீவார் சென்றிருப்பதாக வீரநாத்திடம் கூறி விட்டாளோ? இல்லை, அவள் அப்படிக் கூறமாட்டாள். கண்டிப்பாய் எச்சரித்திருக்கிறேனல்லவா—' இவ்விதமாக தனக்குள் பலபல எண்ணிக் கொண்டே வருகையில் ரதமும் சட்டென கோட்டையின் இரகசிய வாயிலிற் புகுந்தது. ரதத்தின் வரவையே எதிர் நோக்கியிருந்த காவலாள் ரதம் வந்ததும் கதவைச் சாத்தி விட்டான். உள்ளே சென்ற ரதம் பல வாசல்களையும் கடந்து அரண்மனையின் பின்பக்க நந்தவனத்தில் போய் நிற்க, ராணி அங்கிருந்து இறங்கி அந்தப் புரத்திற்கு விரைந்தாள்.

பால கல்யாணி தன் அன்னையின் வரவிற்காக ஆவலோடும், கவலையோடும் உப்பரிகையிலிருந்து நந்தவனத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் மழைக்காலத்தே பெருக் கெடுத்துத் தளும்பும் குளத்தின் நீரைப் போல கண்ணீர் ததும்பி நின்று அவள் பார்வையைக் கூட மறைத்திருந்தபடியால், ராணி நந்தவனத்தை கடந்து அந்தப்புர வாயிலையடையும் வரை அவளைக் கவனிக்க வில்லை. கண்ணீரைத் துடைக்க முயன்ற பாலா தற்செயலாக கீழே குனிந்து பார்க்க விளக்கு வெளிச்சத்தில் ஆண் உடையில் தன் அன்னையைக் கண்டு விட்டாள்.

துள்ளிக் குதித்து உப்பரிகையின் படிக்கட்டில் ஓடி வந்தாள். அதற்குள் ராணியும் மேலே வர, இருவரும் படியிலேயே சந்தித்து விட்டனர். "அம்மா" என்று கட்டித் தழுவினாள் இளவரசி. "குமாரி!" என்று ஆனந்தத்தால் அவளை அப்படியே இருகரத்தாலும் தூக்கி விட்டாள் ராணி. பின் இருவரும் மேலே சென்றார்கள். ராணி தன் உடைகளைக் களைந்து வேறு ஆடைகள் அணிந்தாள்.

---

## அத்தியாயம் 13

### "அறம் வளர்ந்திடுக! மறமடிவுறுக!"

இரவு வேளை. அரண்மனை சந்தடி அடங்கியிருந்தது. ராணி தனது அறையிலமர்ந்து ஏதோ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி தலையை நிமிர்த்தி வாயிலைப் பார்த்துக் கொண்டு யாருடைய வருகையையோ எதிர் நோக்கியிருந்தாள். அப்போது ஒரு பணிப்பெண் ஓடி வந்து "இதோ வருகிறாரம்மா" என்றாள். அவளைத் தொடர்ந்தே வீரநாத் உள்ளே நுழைந்து ராணியை வணங்கி ஆசனத்திலமர்ந்தான். இருவரும் சற்று நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தனர்.

வீரநாத் ஆரம்பித்தான். "தாயே! தாங்கள் கூறிய தவணை நாளாகிய ஒரு வாரமும் முடிந்து விட்டது. மீவாரிலிருந்து ஒரு செய்தியும் வரவில்லையே. இனி என்ன யோசனை செய்யப் போகிறீர்கள்? மீவாரிலிருந்து பணிவான பதிலை நாம் எதிர்பார்க்க முடியாது போலிருக்கிறது. ஏனெனில் அங்கிருந்து ஒற்றர்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட பத்துப்பேர் குதிரைமீது வந்ததாகத் தெரிந்து அவர்களைப்

பிடித்துக் கைது செய்ய ஏற்பாடு செய்தேன். ஆதலின் ஒரு வார்த்தை தாங்கள் தெரிவித்தால் போதும். படை திரட்டி விடுகிறேன். அவனைப் போர்முனையிலேயே சந்தித்துக் கொள்ளலாம் தாயே! தேவமாதாவாகிய தங்களின் ஆக்ஞை எனது உயிரினும் உயரியது. அதன் மகோன்னதத்தை உத்தேசித்தே நம் தேசமாதா கூவியழைத்த அறை கூவலை இன்று வரை பொறுக்க முடிந்தது. இன்றேல் இவ்விநாடியே அடியேனிடம் அநுமதி தந்ததாகத் தாங்கள் திருவாய் மலர்ந்தருளுங்கள், இன்றேல் துடித்துக் கொண்டிருக்கும் என் இரத்தத்திற்கு அமைதி கிடையாது. தாயே!—படைப் பலம் பெருக்க உத்தரவு—'' என இறைஞ்சினான்.

அவனின் உள்ளக் கிடக்கையை, தேசபக்தியை அறிந்த அவள் அவனை எவ்விதம் சாந்தப் படுத்துவதெனச் சற்று யோசித்தாள் .வாயிலிருந்து என்ன வார்த்தை வருமோ வென்று அவளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் வீரநாத்.

"வீரநாத்! நம் தேசம் நம் உயிரினும் உயரியதுதான். நம் சொந்த நாடென நாம் பெருமைப்படக் கூறிக்கொள்ளும் இந்நாட்டிற்கு எத்தனை தியாகங்கள் வேண்டுமானாலும் செய்யத் தயாராகவிருக்கிறோம். ஆனால் இப்பரந்த பரதகண்டம் முழுவதுமே நம் மாதாவல்லவா? நம்மிடம் அதில் ஒரு அங்கம்தானே? இந்த ஒரு தனித்த அங்கத்தைக் கௌரவிப்பதற்காக இதுபோன்ற மற்றொரு அங்கத்தைச் சிதைப்பது எவ்வளவு கொடூரமான காரியம் என்று எண்ணிப் பார்த்தாயா? அதனால் மாதாவின் உடல் முழுவதுமே வேதனைக்குள்ளாகும் என்பதை மறந்து விட்டனையோ? தனித்த ஓர் நாட்டின் வீரன் என்பதைக் காட்டிலும் ஜெகன்மாதாவின் சர்வதேச புத்ரன் எனப் பெயர் வாங்கிப் பெருமை யடைவதே சிலாக்கியம். ஆதலின் அன்பைத் தகர்த்து அனலிலிடும் இக்கொடும்

பைசாச காரியத்தைக் கண்டு நம் அன்னை கண்ணீர் கலங்காவண்ணம் காக்க, நாம் ஒருங்கு கூடி முனையவேண்டும். அதற்காக எத்தகைய தியாகங்கள் வேண்டுமாலும் செய்ய முன்வருவோம்" எனச் சாந்தமாகப் பதிலளித்தாள்.

அதைக் கேட்ட வீரநாத் ஆக்ரோஷம் மிகுந்தவனாய் "என்ன சொல்கிறீர்கள்? படை யெடுத்து வருபவனிடம் நம் உபதேசம் எப்படி ஏறும்?" என்றான்.

"வீரநாத், இதைப்பற்றி நான் எவ்வளவோ யோசித்துத்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். யுத்தம் செய்து இருதரப்பிலும் வீணான நாசத்தை விளைவிப்பதைக் காட்டிலும், எதிரியோடு ஒரு உடன்படிக்கை செய்தேனும் அதை நிறுத்தி விடுவதே மேல். அவர்கள் நம்மிடம் அடிமையாக இருப்பதிலிருந்து அவர்களை விடுவித்துவிடலாம். அவர்களின் பிறப்புரிமையை நாம் பறித்திருப்பதே மகா பாபமென உணர்கிறேன். அவ்விதம் உடன்படிக்கை செய்துகொள்வதால் நாம் பயந்து பின்வாங்கியவர்களாகி விடமாட்டோம். இதற்கு முன் அரசாண்டு வந்த எத்தனையோ பேர் இந்த அடிமைத்தனத்தைப் பற்றி எவ்வளவோ கூறிப் போயிருக்கிறார்கள். இப்போது அவர்களின் வார்த்தைகளை யெல்லாம் நாம் நிறைவேற்றுவோம். இனி உலகம் முழுதும் ஒரே நாடாகவும் சாந்திராஜ்யமாகவும் வாழ்வோம்—"

"தாயே கொழுந்து விட்டெறியும் தேச பக்திக் கனலை அவித்து, நாட்டின் கௌரவத்தையும், நம் மூதாதையரின் பெருமையையும் சிதறவடிக்கவா நாம் பிறந்தோம்? தயவு செய்து அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். இதுவரை கப்பங்கட்டி வந்தவன், மும்முறை முதுகு காட்டி ஓடியவன், அந்தப் பதர் 'படையெடுத்து வருகிறேன்' என்று சொல்லும்போது அவன் முன் இந்தச் சமாதானமெல்லாம் சொன்னால் அவன் என்ன நினைத்துக்கொள்

வான்? முதலில் நம் நாட்டு மக்களே நம் அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எந்தச் சமயத்திலும் நம் நாட்டினர் யுத்தம் செய்யத் தயாராயிருக்கின்றனர். அவர்களின் திட சித்தத்தைப் பற்றிக் கவலை கொள்ளவே வேண்டாம், மஹாராணி—''

''வீரநாத்! மஹா ஜனங்களின் தேசபக்தியையும், அவர்களுக்குத் தலைவன், பிரதிநிதியாக விளங்கும் உன்னுடைய பராக்கிரமத்தையும் நான் அறியாதவளா? மும்முறை தோற்று ஓடிய ஒரு அறிவிலி. நான்காம் முறையும் வந்தால் அவனோடு மீண்டும் ஒரு பயனற்ற யுத்தம் புரியவேண்டுமா? அதற்காக ஆயிரக்கணக்கான விலை மதிக்க வொண்ணாத மாணிக்கங்களைப் பலி யிடவேண்டுமா? சை! ஒருக்காலும் நான் அதற்கு உடன்படேன்.''

''தாயே! குடிமக்களின் நன்மைக்காகத்தானே ராஜ்யம், ராஜன், ராஜ்யபரிபாலனம் எல்லாம். அப்படியிருக்க, அவர்களின் இஷ்டத்திற்கு மாறாகச் செல்லலாமா?''

''குடிமக்கள சண்டையையா விரும்புகிறார்கள்?...... இது என்ன ஆச்சர்யமாயிருக்கிறதே. அப்படியானால் நாளைக்கே நாட்டு மக்களனைவரையும் நம் மைதானத்தில் கூடச் செய். நானே நேரில் அவர்கள் அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுகிறேன்.''

அவள் கோபத்தோடு எழுந்து உள்ளே போக யத்தனித்தாள். வீரநாத்தும் அதையறிந்து வணக்கமாய் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினான்.

# அத்தியாயம் 14

## "ஏது நேரினு மிடர்பட மாட்டோம்"

அரண்மனைக்குள்ளிருந்து வழக்கம்போல் பாரா மாற்றும் ஜவான்கள், நடுநிசியில் ஓசைப்படுத்தும் மெல்லிய கொம்பின் சப்தம் கேட்டு திடுக்குற்று, தூக்கிவாரிப் போட்டவளாய் எழுந்தாள் சம்யுக்தை. தன் உடைகளைச் சரிசெய்து கொண்டும், அவிழ்ந்து கிடந்த அளகபாரத்தை அள்ளிச் செருகிக் கொண்டும் அவசர அவசரமாய்த் தன் கணவரின் சயன அறையில் சென்று சாளரத்தின் கதவைத் திறந்தாள். குபு குபுவென வாடைக்காற்று உள்ளே பிரவேசித்தது. அதோடு மங்கிய நிலவின் ஒளி கதிரும் உள்ளே பாய்ந்தது. அந்த ஒளியில் மஞ்சத்தைக் கவனித்தாள். அது காலியாகக் கிடந்தது.

"என்ன? ராத்திரிபோனவர் இன்னும் வரக் காணோமே? மனவமைதி கொஞ்சம்கூட இல்லாமல் தவியாய்த் தவிக்கிறாரே; இதற்கென்ன செய்வது?" என்று தனக்குள் கூறிக்கொண்டே சாளரத்தின் வழியாகக் கீழே நோக்கினாள். தோட்டத்தின் மத்தியில் ஒரு உருவம் இங்குமங்கும் மெதுவாய் நடமாடிக் கொண்டிருந்தது. உற்றுக் கவனித்தாள். நடையிலிருந்தே அது தன் பதியின் சாயலென்று நிச்சயித்து விட்டாள். அவ்வளவுதான். தட தடவென்று மாடிப் படிக்கட்டுகளைக் கடந்து வேகமாய் ஓடிவந்தாள். நந்தவனத்தினுள் பிரவேசித்த அவள் மரத்திற்கு மரம் மறைந்து வந்தாள். இங்குமங்கும் நடமாடிக் கொண்டிருக்கும் வீரநாத் தனக்குள்ளேயே, வாய்விட்டு ஏதோ சொல்லிக் கொள்வது அவள் காதில் விழுந்தது.

"உம்; எவ்வளவுதானிருந்தாலும் கேவலம், அபலைப் பெண்தானே. மானத்தை இழக்க முனையும் பேதமை! ஆம். அது மாதர்க்கணிகலன்தானே! எத்தனை தடவை

மன்றுடியும்கூட, யுத்தத்தின் சேதாரம், அழிவு, இவை களைப் பற்றித்தான் பேசுகிறரேயன்றி, தேசாபிமானம் என்பதைச் சிறிதேனும் சிந்திக்கவில்லையே."

சம்யுக்தைக்கு விஷயம் விளங்கிவிட்டது, ராணியாரைப் பற்றித்தான் அவன் ஆத்திரப்படுகிறனென்று. சுற்றிலும் ஒரு பார்வை சுழன்று பார்த்துவிட்டு, ஒருவருமில்லாதிருக்கக் கண்டு "நாதா" எனக் கூவினள். சடாரெனத் திரும்பிப் பார்த்தான் வீரநாத். அதற்குள் அவளும் ஓடிவந்து, அவன் வலக்கரத்தைத் தன்னிரு கரங்களாலும் பிடித்துக்கொண்டு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவளால் ஏதும் பேச நாவெழவில்லை. இன்னும் ஆத்திரம் அடங்காமல் வீரநாத் ஆக்ரோஷம் மிகுந்தவனாக அவளை நோக்கினன். சம்யுக்தையின் உதடுகள் மெதுவாய் அசைந்தன. அவன் தோளைப் பிடித்துக்கொண்டு, "நாதா! இவ்விதம் சதா, ஓயாத துக்கத்திலாழ்ந்து தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டிருந்தால் உடம்பு என்ன கதியாகும்? வேண்டாம். கவலையை அறவே ஒழியுங்கள்—" எனச் சற்று பயத்துடனேயே கூறினள்.

அதைக் கேட்ட வீரநாத் அசட்டுச் சிரிப்புச் சிரித்து தன் தோளமீதிருந்த அவள் கரத்தைக் கீழே எடுத்துவிட்டு "சம்யுக்தா! நாட்டின் மானமே பறிபோகும் தருணத்திலிருக்கும்போது உடல் நலத்தைப் பற்றிக் கவலை கொள்ளும் உன் புத்தி விந்தையாகத்தானிருக்கிறது! பேதாய், இன்று நம் நிடதநாட்டில் எட்டா உயரத்தில் பறந்துகொண்டிருக்கும் சிங்கக் கொடி தாங்கிய துவஜஸ்தம்பத்தையே அடியோடு சாய்க்க முனைகிறன் மீவார் மன்னன். அவனையும், அவன் படையையும் சின்னபின்னப் படுத்தாது நாமே வலிய ஒரு உடன்படிக்கை செய்ய வேண்டுமெனக் கூறுகிறர் நம் மஹாராணி. அவர் மனது இவ்விதம் கோழையாக மாறிவிட்டதை நினைக்க நினைக்க

தேசபக்தியுள்ள என்போன்றோர்க்கு எவ்விதம் நித்திரை வரும்? அவ்விஷயம் ஒரு முடிவிற்கு வரும் வரை என்னிடம் ஒன்றும் பேசாதே. இவ்வாடைக் காற்றினால் உன் மேனி நடுங்குகிறது பார், போ. போய்விடு" என்றான்.

அவ்வமயம் அந் நந்தவனத்தின் ஓர் மூலையிலிருந்து ஓர் தீவட்டியைத் தாங்கி ஒருவன் வீரநாத்தின் மாளிகையை நோக்கி வந்தான். அதைக் கூர்ந்து கவனித்த வீரநாத் தீவட்டி ஒளியின் பின் இருவர் வருவதைக் கண்டான். சம்யுக்தையை மாளிகைக்குள் போய்விடும்படி சைகை செய்துவிட்டு வருபவர்களையே பார்த்து நின்றான். அவர்கள் சமீபத்தில் நெருங்கி வந்ததும் அவர்களை இன்னாரெனத் தெரிந்து கொண்டு "அமரநாத்!......ஓ அது யார் கோபிநாத்!......என்ன விஷயம்? ஏனிப்படி இருவரும் இந் நள்ளிரவில் கிளம்பி வந்தீர்கள்?" என்றான். வந்த இருவரும் பதில் சொல்லாமல் அவனை முதலில் வணங்கி மரியாதையாய் நின்றார்கள். தீவட்டி வெளிச்சத்தில் அவர்கள் முகத்திலிருந்த ஒரு ஆவேச உணர்ச்சியைக் கண்ட வீரநாத், "நம் மஹா ராணியின் விஷயமாகத்தானே பேச வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"ஆம், அவர்கள் முடிவைப் பற்றித்தான். அன்பிற்குப் பாத்திரமான நம்மை ஈன்ற தேசமாதாவின் மானம் குலைய நாம் பார்த்திருக்கலாமா —?" என்றார்கள் அவர்கள்.

"தோழர்களே, ஒருக்காலும் முடியாது. எத்தனையோ அருமையிலும் அருமையான, நாம் என்றென்றும் பூஜிக்கத் தகுந்தவள் நிடதமாதா. அவளின் அந்தஸ்துக் குறைவிற்கு காலம் கிட்டிவருவதைக் கண்டு நாம் இனியும் வாளாவிருப்பது அழகல்ல. மஹாராணியார் தன் கடமையை இன்னும் உணராமல் பேசுகிறார்கள்.

நாளைக்கு ஒரு பொதுக் கூட்டத்திலும் தன் முடிவைத் தெரிவிக்கப் போகிறார்களாம்."

அமர்நாத் "ஆம், சண்டை செய்யாமல் சமதானமாய்ப் போய்விடுவோம் என்று பொதுமக்களுக்கும் போதித்து, அவர்களையும் தன்னைப்போல் கோழைகளாக்க விருப்பம் போலிருக்கிறது" என்றான்.

"நன்றாய்ச் சொன்னாய் அமர்நாத், பேஷ்! ஆகையால் நாம் இனியும் மந்தமாயிருக்கலாகாது. ராணியாரின் மேல் நமக்கு எவ்வளவு அன்பு இருந்தபோதிலும், நாமும் நம் கடமையினின்று எள்ளளவும் பிசகக்கூடாது. ராணியாருக்கு நம்மீது எவ்வளவு பகைமை உண்டானபோதிலும் மீவாரை முறியடிக்க என்னென்ன மார்க்கங்களுண்டோ அத்தனையும் செய்தே தீரவேண்டும்."

கோபிநாத் "ஆம். அதுதான் சரியான யோசனை. அதைச் சொல்லத்தான் நாங்களும் வந்தோம். இப்போது, நாளைக்கு நடக்கப்போகும் பிரசங்கத்திலும் நாம் செய்ய வேண்டிய கிளர்ச்சியைச் செய்தே தீரவேண்டும்" என்றான்.

"வாருங்கள் மாளிகைக்குள் போய்ப் பேசலாம். இங்கு நின்று பேசுவதை யாரும் பார்த்து விட்டால் நாம் நாளைக்குச் செய்யவேண்டிய காரியங்கள் நிறைவேறாமல் போனாலும் போய்விடும்" என்று கூறி அவர்களிருவரையும் தன்னுடன் மாளிகைக்குள் அழைத்தேகினான் வீரநாத்.

மூவரும் கலந்து ஆலோசனை செய்து ஒரு முடிவிற்கு வந்தார்கள். அதன்படி அவர்கள் ஒரு திட்டம் வகுத்து அவைகளை எந்த விதத்திலும் நிறைவேற்றியே தீரவேண்டுமென்றும், அதனால் என்ன கஷ்டங்கள் வந்தாலும் சளைக்கக்கூடாதென்றும் உறுதி செய்துகொண்டார்கள். அவர்

கள் திட்டத்தின் முதற்பாகம் அடுத்ததினம் நடக்கவிருந்த ராணியின் பிரசங்கத்தில் ஒரு குழப்பத்தையுண்டுபண்ணி அதைக் கலைத்து, நடைபெருமல் செய்யவேண்டியது தான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தையும் வெகு துரிதமாகச் செய்து முடிக்க ஒப்புக்கொண்டு வீரநாத்தி டம் விடைபெற்றுக்கொண்டு இருவரும் பிரிந்தனர்.

---

## அத்தியாயம் 15

### "ஐயகோ விதை யாதெனச் சொல்வோம்?"

மீவார் அரண்மனையிலிருந்து கோட்டையின் வடக்கு வாயிலில் ஒரு குறிப்பிட்ட தெருவின் இருமருங்கிலும் ஜனங்கள் குழுமி நின்றனர். சூரியன் உதித்து இரண்டே நாழிகைதானிருக்கும். அவ்வளவு சீக்கிரத்தில் அவர்க ளுக்கு அந்தச் செய்தி எப்படி எட்டியதோ தெரியவில்லை.

அரண்மனைக்குள்ளிருந்து பெரிய வாயிலின் வழியாக யானைகளும், ஒட்டகங்களும், குதிரைகளும் வரிசை வரிசை யாக வந்தன. இவைகளை யெல்லாம் நடத்திச் செல்லும் தலைவனைப் போல் கம்பீரமாக ஆடி அசைந்து முன்சென்ற பெரிய யானையின் முதுகில் 'டமடம' வென யுத்தபேரிகை முழங்கிக்கொண்டு சென்றது. எல்லாவற்றிற்கும் கடை சியாக மீவார் மன்னன் ரவிவர்மனும், அவன் சேனைத்தலை வன் தேவி பாலனும் இரு அழகிய புரவிகளின்மேல் ஆரோக ணித்து வந்தார்கள். தெருவில் நின்ற கூட்டமும் அவர்க ளைத் தொடர்ந்தது. எல்லோரும் வடக்கு வாயிலையடைந் ததும் யுத்த பேரிகை நிறுத்தப்பட்டது. எங்கும் நிசப்தம் நிலவியது. தேவி பாலனும், அரசனும் குதிரையைவிட்டு இறங்கி நின்றனர். அரசன், தேவிபாலனைப்பார்த்து "தேவிபாலா! ராணியிடம் நிச்சயமாய்த் தெரிவித்துவிடு; சிடதம் நம் மீவாருக்கு அடிபணியவேண்டும். அன்றேல்

யுத்தம்தான். அங்கே அதிக நாள் தாமதிக்காதே. உடனே திரும்பிவிடு" என்றான். அவன் கூறி முடித்ததும் மங்களவாத்தியம் ஒலித்தது.

தேவிபாலன் அரசனை வணங்கிவிட்டு குதிரைமீதேறி நிடதம் நோக்கிப் புறப்பட்டான். குதிரை காற்றிலும் கடிய வேகத்தோடுபறந்து சென்றதுபோலிருந்தது. அவன் கண்ணுக்கு மறையும் மட்டும் நின்று பார்த்திருந்த ஜனங்கள் அவன் எப்பேர்ப்பட்ட செய்தியைக் கொண்டுவருவானோ என்ற கவலையுட.னும் பீதியுடனும் திரும்பினர். அரசனோ, நிடதராணிக்கே அறை கூவலனுப்பியதை நினைந்து இறுமாப்புடன் திரும்பினான்.

---

## அத்தியாயம் 16

### "எங்கள் வேள்விக்கூடமீதில் ஏறுதே தீ! தீ!"

நிடத நாட்டின் தலைநகராகிய மருங்காபுரியில் ஒரே குதூகலமாயிருந்தது. பிற்பகல் இரண்டு நாழிகைக்கு மேலிருந்து நகரமாந்தரனைவரும் கூட்டங் கூட்டமாக அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

அரண்மனையின் அந்தரங்க அறையில் ராணி லக்ஷ்மிதேவியும், இளவரசி பாலகல்யாணியும் ஆண்வேடந் தரித்துக்கொண்டு எங்கோ புறப்படத் தயாரானார்கள். தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டே "கல்யாணி, நம் குடிஜனங்களின் அபிப்பிராயத்தைச் சரியாகக் கவனித்துக்கொண்டு, கட்டாயம் நீரோடையருகில் என்னை வந்து பார். பிரசங்கம் ஆரம்பிக்க ஒரு நாழிகைப் பொழுதிற்கு முன் வந்தால் போதும்" என்றாள் ராணி. "சரி அம்மா" என்று தலை அசைத்தாள் பாலா.

பிரசங்கம் ஆரம்பமாக வெகுநேரமிருந்த போதிலும், ஜனங்கள் ராணியின் பேச்சைக் கேட்க மிக்க ஆவல்

கொண்டவர்களாய், கூட்டத்தின் முன்இடம் தேடிக் கொள்ள வந்து குவிந்துகொண்டிருந்தனர். கூட்டம்கூட்டமாய் வரும் அவர்கள் வழியில் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு வருபவைகளை எல்லாம் மாறு வேடத்தில் அங்கு புகுந்த ராணியும், இளவரசியும் தனித்தனியாகக் கவனித்துப் பின் தொடர்ந்தார்கள்.

"நம் ராணி திர்க்கதரிசி போன்றவர். அவர் சொல்வதே நமது வேதவாக்கியம்" என்றார் ஒருவர்.

"குடிகளுக்குத் தந்தை தாய் போன்றவர்கள் ஒரு தேசத்து அரசனும் அரசியும். நம் ராணியும் அப்படித் தான் இப்போது நம்மைக் கவனிக்கிறார். குழந்தைகளின் அருமை பெற்றவர்களுக்குத்தானே தெரியும். குடிகளின் குறைகளை நம் மாதா, நாம் சொல்லாமலே அறிந்து, அதற்கு வேண்டிய பரிகாரங்களையும் செய்துவருகிறார்" என்றார் ஒருவர் தன் நண்பர்களிடம்.

"நம் மஹாராணியின் ஆட்சியில் நமக்குக் குறைகள் என்பதே இதுவரை கிடையாது. ஆனால் இந்த வரப் போகும் யுத்தத்தை எப்படி அவர் சமாளிக்கப்போகிறாரோ. அதுதான் தெரியவில்லை. எத்தனை தடவையோ நாம் அந்த மீவாரோடு யுத்தம் புரிந்து அவர்களைத் துரத்தியடித்தோம். அப்படியிருந்தும் அதற்கு இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லையே" என்றார் அந்நண்பர்கள் கூட்டத்தில் ஒருவர்.

"நம் தேவமாதா இந்த யுத்தத்தை எப்படியும் ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமலேயே தடுத்துவிடுவார். அதைப்பற்றித்தான் இன்று பேசப்போகிறாராம்" என விஷயம் தெரிந்த ஒருவர் அவர்களுக்கெல்லாம் சமாதானம் கூறினார்.

இவ்விதம் கூட்டத்தில் பலரும் ஒரே முகமாகத் தன்னைப் பற்றிப் புகழ்வதைத் தன் காது குளிரக் கேட்டுக்

கொண்டே சென்றாள் ராணி. இளவரசியும் தன் அன்னையைப் பற்றி நகரமாந்தர்கள் கொண்டுள்ள நன்னம்பிக்கையைக் கிரஹித்துச் சென்றுகொண்டிருந்தாள்.

ஆனால் மந்திரி வீரநாத்தும் அவன் சகாக்களும் இதைக் கண்டு பெரிதும் பொறாமையும், கலக்கமும் அடைந்தவர்களாய் காணப்பட்டார்கள்.

"அமரநாத்! நகர ஜனங்கள் முழுமையுமல்லவா திரண்டு வருகிறார்கள்? இவ்வளவு பேரும் ராணியின் பேச்சைக் கேட்டு கோழைகளாக மாறிவிட்டால், நாம் நினைத்த காரியம் முடியாமலே போய்விடுமே. பின் நம் நாட்டின் கதி என்னவாகும்? மீவாருக்கு அடிமைகளாக வாழ்வதா?" என்று ஆவேசமாகக் கூறினான் வீரநாத் தன் தோழனைப்பார்த்து.

"வீரநாத்! மனம் தளரவேண்டாம். நகர மாந்தரிடையே ஒரு குழப்பத்தையும், ராணிமேல் அவநம்பிக்கையையும் உண்டுபண்ண ஏற்கனவே நம் ஆட்கள் நகருக்குள் சென்றுவிட்டனர். இன்னும் ராணி வர நேரமிருக்கிறது. கூட்டமோ இப்போதே அதிகமாகிவிட்டது. ராணியார் வருமுன்பே நாம் பிரசங்க மேடையை ஆக்ரமித்துக் கொண்டு, ஜனங்களின் மனதை நம் வசமாகத் திருப்பிவிடலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று யுக்தி கூறினான் அமரநாத். வீரநாத்தும் சற்று யோசித்து, "ஆம்; அதுதான் சரியான வழி" என்று நம்பிக்கைவந்தவனாகத் தலையசைத்து எங்கோ விரைந்தான். இவர்கள் பேசியவற்றையெல்லாம் மாறு வேடத்திலிருந்த பாலகல்யாணி கேட்டுக் கொண்டு சட்டென அந்த இடத்தைவிட்டு மறைந்தாள்.

வீரநாத்தின் ஆட்கள் கூட்டத்தின் மத்தியிலும், நகருக்குள்ளும் பரவியிருந்தனர். கூட்டத்திற்குள்ளிருந்தவர்கள் ராணிக்கு எதிராகப் பிரசாரம் செய்யக் கிளம்பினர்.

"ராணியார், என்ன இருந்தாலும் பெண்தானே. தன் நாட்டின் மேல் படையெடுத்துவரும் ஒரு சிற்றரசனுக்குப் பயந்துகொண்டு அவனோடு சமாதானமாகப் போக வேண்டுமென்கிறார்களே! அதுதானா வீரப்பெண்மணிக் கழகு?"

"ராணிக்கு என்னய்யா தெரியும்? இத்தனை ஒழுங்காக இவ்வளவு நாள் வரை ராஜரீகம் செய்ததெல்லாம் அந்த வீரர் வீரநாத் மந்திரிதான். அவர் இல்லாமலிருந்தால் மஹாராஜா இறந்த மறுநாளே இப்போது வருகிற யுத்தம் வந்திருக்குமே!"

"ராணியார் என்ன, மந்திரிமார்கள் கையில் ஒரு பொம்மைதானே. அவர்கள் ஆட்டிவைக்கிறபடி ஆட வேண்டியவர்தானே! இப்போது தான் என்னமோ மந்திரிமார்கள் பேச்சுக்கு மறுப்புக் கூறுகிறாராம். இது எதற்கு அறிகுறியோ? நாட்டிற்கு நாசகாலம் தானோ, என்னமோ?"

"மஹாராஜா இறந்தவுடனேயே சந்யாசினியாகப் போவதாகச் சொன்னார்களே. அப்படிப் போயிருந்தாலும் வீரநாத் இவ்வளவு காலத்திற்குள் பாலகல்யாணியைக் கொண்டே, ஒரு வீரபீடத்தை ஸ்தாபித்திருப்பார். அவர் ஆற்றல் யாருக்கு வரும்?"

இப்படியாக அவர்கள் ஜனங்களிடையே சாமர்த்தியமாக ஒரு பொய் வதந்தியைக் கிளப்பிக்கொண்டிருந்த போதிலும், அவர்கள் பேச்சைக்கேட்டவர்கள் ஒரு சிலர் தான்.

நகருக்குள் பிரவேசித்த வீரநாத்தின் ஆட்களில் ஒருவன், ஓர் வியாபாரி தன் கடையை மூடிக் கொண்டிருக்கக் கண்டு "ஓய் கடைக்காரரே. ஏனய்யா இவ்வளவு சீக்கிரம் கடையை அடைக்கிறீர்? இனி மேல் நடக்கப்

போகும் வியாபாரத்தில் வரும் லாபத்தையடைய உமக்கு விருப்பமில்லையோ ?" என்றான்.

கடைக்காரன் அவனை ஏறிட்டுப் பார்த்து நகைத்து "நீ எந்த ஊரய்யா ? இந்த ஊருக்குப் புதுசுபோலிருக்கு. போய்ப் பாரய்யா அரண்மனை முன்னாலே. அங்கே ஊரே திரண்டு போய்விட்டது. நான் இங்கே கடையைத் திறந்து வைத்துக்கொண்டு ஈக்களை ஓட்டுவதா ? வாருமய்யா, நீரும் என்னோடே " என்றான்.

" அரண்மனையிலே என்னய்யா விசேஷம் ?"

" அப்படிச் சொல். தெரிந்திருந்தால் என்னைக் கேட்டிருக்க மாட்டாய். இன்றைக்கு எங்கள் மஹாராணியார் பேசப்போகிறார்கள். அதைக் கேட்பதற்குத்தான் இவ்வளவு கூட்டம், அவர்கள் பேச்சைக் கேட்பவர்கள் பாக்ய சாலிகளய்யா ! வாரும், போகலாம் '' என்று அவனையும் தன்னோடு வரும்படி அழைத்தான். அவனோ கடுகடுத்த முகத்துடன் கடைக்காரனைவிட்டு நழுவினான்.

கடைக்காரன் அவனைப் பார்த்து " அடே, பைத்தியக் காரா, ராணியாரின் பெருமையறியாத முட்டாளே !" என்று தனக்குள் திட்டிக்கொண்டு அரண்மனை நோக்கி நடந்தான்.

---

## அத்தியாயம் 17

### " ஆடைகுலைவுற்று நிற்கிறாள் !"

மருங்காபுரியைச் சுற்றிலும் அரண்போல அமைந்திருப்பது அழகிய குன்றுகளடர்ந்த பிரதேசம். இப்பிரதேசத்தில் தான் ஓர் இடத்தில் முன்னாடி தங்களுக்குள் பேசிக்கொண்டபடி லக்ஷ்மிதேவியும் பாலகல்யாணியும் சந்தித்தனர்.

அதே பிரதேசத்தில், ஆனால் அவ்விருவர் கண்ணில் படாத சற்று தூரத்தில், ஓர் யௌவன புருடன் தன் வெண்புரவியிலிருந்து இறங்கி பக்கத்தில் ஓடும் நீரோடைக்குச் சென்று குதிரைக்குத் தண்ணீர் காட்டி, தானும் முகம் கழுவி, நீர் பருகி, குதிரையை மரத்தடியில் கட்டிவிட்டு, பச்சைக்கம்பளம் விரித்தாற்போற் படர்ந்திருந்த பசும் புற்றரையில் ஆயாசம் தீர அமர்ந்தான். சிலு சிலுவென்றடித்த குளிர்ந்த காற்று அவன் நீண்ட பிரயாணம் செய்து வந்த களைப்பிற்கு ஓர் ஔஷதம் போலிருந்தது. அவ்வாலிபன் தான் மீவாரிலிருந்து அரசன் ஆசிபெற்று யுத்தச்செய்தியை ராணிக்கு அறிவிக்க வந்த தேவிபாலன்.

புற்றரையிலமர்ந்த அவன் தன் ஆயாசத்தை ஒருவாறு தீர்த்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தான். இயற்கைக் காட்சிகளை இருப்பிடமாகக் கொண்டு விளங்கிய அந்நிடத்தைக் கண்டு அவன் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சி மேலிட்டது. இவ்வளவு வனப்பு வாய்ந்த நாடு தன் அரசன் வசப்பட்டால், அவன் பாக்யவான்தான் என்றெண்ணினான். வெகு தூரத்தில் அரண்மனையின் மணிக்கூண்டுகளும், அதன்மேல் துவஜகம்பத்தில் பறக்கும் கொடியும் அவன் திருஷ்டியில் பட்டன. அவன் மனதில் ஏதேதோ எண்ணற்ற எண்ணங்கள் எழுந்தெழுந்து அமிழ்ந்ததை அவன் முகம் தெளிவாய்க் காட்டியது. பிறநாட்டின் சேனைத்தலைவனாகிய அவன் இவ்வாறு தனக்குள் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கும்போது, தன் சொந்த நாட்டைப்பற்றி ராணியும், இளவரசியும் பேசியதைக் கவனிப்போம்.

"அம்மா, குடிமக்களனைவரும் தங்கள் மேல் அளவற்ற வாஞ்சைகொண்டிருக்கிறார்கள். நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ, அதன்படி செய்யத் தயங்கவே மாட்டார்கள். ஆனால் நம் மந்திரிமார்களில்தான் சிலர் மனம்

வேறுபட்டவர்களாயிருக்கிருர்கள்'' என்று கவலையோடு கூறினுள் பாலகல்யாணி.

"கல்யாணி! மந்திரிகளைப் பற்றிக் கவலையில்லை. பொது ஜனங்களின் விருப்பம் ஒன்றே போதும். அவர்களைக்கொண்டு நாம் சமாதானத்தை நிலைநாட்டி விடலாம்—" என்று ராணி கூறிக்கொண்டே வரும்போது சற்று தூரத்தில் தன் கவனத்தைச் செலுத்தினுள் பாலா. அதைக்கண்ட ராணி "என்ன பார்க்கிருய் பாலா?" என்று கேட்டாள்.

"அதோ பாருங்கள், அந்தக் குடிசைக்குப் பக்கத்தில். மரத்தில் ஒரு தொட்டில் கட்டியிருக்கிறதே; அதற்குள் கிடக்கும் யார் குழந்தையோ அழுகிறது போலிருக்கிறது. பாவம், நான் போய் எடுக்கட்டுமா?" எனக் கூறி, தாயின் பதிலுக்குக்கூடத் தாமதியாமல் மான்குட்டிபோலத் தாவி ஓடி அக்குழந்தையை வாரி எடுத்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே ஒன்றும் தோன்ருமல் சற்றுநேரம் நின்ற ராணி பின்னர் தானும் அந்த இடத்திற்கு விரைந்தாள்.

குழந்தையின் அழுகுரல் கேட்ட தேவிபாலனும் தன் சிந்தனையிலிருந்து கலைக்கப்பட்டவனுய், சத்தம் வந்த திக்கை நோக்கினுன். இரண்டு ஆடவர்கள் தொட்டிலின் அருகில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு தன் முழுகவனத்தையும் அவர்கள்மேல் செலுத்திக் கவனித்தான்.

பாலகல்யானி அழும் குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுத்து உற்றுநோக்கி அதன் அழகைக் கண்டு ஆனந்தமடைந்து, மாறு முத்தமீந்து, கொஞ்சி அதன் அழுகையை நிறுத்த முயன்ருள். குழந்தையோ அழுகையை நிறுத்தாமல் மேலும் மேலும் வீறிடுவதைக்கண்ட அவள் தன்னையுமறியாமல், தான் தாங்கியிருக்கும் வேடத்தையும் மறந்து, பெண்மையின் உணர்ச்சி மேலீட்டால் ஒரு பாட்டுப் பாடி அதனைத் தேற்றினுள். அழு

கையும் சற்று தணிந்தது. அவள் செய்யுப் செய்கையை யெல்லாம் தூரத்திலிருந்தே கவனித்த தேவிபாலன், ஆச்சரியம் கொண்டவனாய், "என்ன இது. உடையைப் பார்த்தால் யௌவன வாலிபன்போலிருக்கிறது, ஆனால் செய்கையோ பெண்ணை ஒத்திருக்கிறதே! குரல்கூட அப்படித் தானிருக்கிறது. அதோ அப்புன்னகையில் கூட பெண்மை தான் பிரதிபலிக்கிறது, என்ன விநோதமிது?" என்று எண்ணியவனாய் எழுந்து மெதுவாய் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

அப்பிரதேசம் குன்றுகள் மலிந்து நெருங்கிய காட்டுப் பிரதேசமாகையால் திடிரென்று எங்கிருந்தோ, யாராலோ துரத்தப்பட்ட ஓர் புலி அம்பார்க்கமாக அலறிக்கொண்டு ஓடிவந்தது. அலறல் கேட்ட பாலா, சடாரெனத் திரும்பிப் பார்த்து "ஆ! அம்மா!" எனப் பதறி குழந்தையை அணைத்துக்கொண்டு ஓடினாள். ராணியும் புலி வரும் வேகத்தைக்கண்டு சுற்றும் முற்றும் பார்த்து குடிசை யிருக்கக்கண்டு குபீரென அதற்குள் நுழைந்து பார்த்தாள். அதிர்ஷ்டவசமாக அங்கே மலைநாட்டார்கள தங்கள் தற்காப்பிற்காக வைத்திருக்கும் ஈட்டி போன்ற வேல்கம்பு ஒன்றைக் கண்டாள், சட்டென அதைக் கைப்பற்றி வெளியே வந்த அவள் தன் குமாரி ஓடிக்கொண்டிருக்கும் திக்கிலேயே புலியும் ஓடுவதைப் பார்த்துவிட்டாள். அவ்வளவுதான். கணத்தில் காளிரூபமாக மாறி, காற்றினும் கடிதாக ஓடி, அக்கொடிய மிருகத்தை ஒரே குத்தாகக் குத்திச் சாய்த்து விட்டாள்! ஒரு பெருத்த உறுமல் உறுமிக்கொண்டு அதுவும் உயிர்நீத்தது. புலியின்மேல் காலை ஊன்றி அதன் உடலில் பாய்ந்த வேலை உருவி, ஒரு பெருமூச்சு விட்டுத்திரும்பினாள். குழந்தையைத் தூக்கி ஓடிய வேகத்தில் கல்யாணியின் ஆடை குலைவுற்கு தலைப்பாகை நழுவி வீழ்ந்து விடவே உடனே பளிச்சென்று பெண் உருவம் வெளியாகிவிட்டது. தன் குமாரி இருக்கும் நிலையை

மற்றவர்கள் கண்டுவிட்டால் என்ன செய்வது என்று பதைபதைத்து ராணி ஓடி அவளிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டு ஆடையை ஒழுங்கு செய்துகொள்ளச் சொன்னுள். அவளும் அவ்வாறே சரிப்படுத்திக்கொண்டு தன் தாய் புலியைக் குத்திய அந்த வேலே எடுத்துப் பார்த்து ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தாள்.

அவர்களே நோக்கி வந்துகொண்டிருந்த தேவிபாலன் இதையெல்லாம் கண்டு ஆச்சரியமும், திகைப்பும், சந்தேகமும், கொண்டவனுய், புலியைக் குறிதவருமல் ஒரே குத்தாகக் குத்திச் சாய்த்த மனிதனின் அஞ்சா நெஞ்சத்தை வியந்து அப்படியே அசைவற்று நின்றுவிட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக யௌவனப்பெண் ஆண் உடையில் நின்றிருக்கும் மர்மம்தான் அவனுக்கு விளங்கவே இல்லே. அவளின் அங்கக் கட்டும், முகசௌந்தர்யமும் அவன் மனதை ஒரே நொடியில் அவள் வசம் லயிக்கச் செய்து விட்டது. தன்னேயுமறியாமல் உள்ளத்தில் மீறி எழுந்த ஒரு உணர்ச்சி வேகத்தை அடக்க முடியாமல் அவன் திணறியதை அவனின் விம்மி விம்மி அமிழ்ந்த மார்பு காட்டியது.

ஆனல் இவர்களின் இம்மனே நிலேயைக் குலேக்க அதோ மற்ருெரு புலி வந்துவிட்டது. தான் துரத்திவந்த பெண் புலியைத் தேடிக்கொண்டு வந்த அக்கடுவன் முன்னதின் கோர அபய உறுமலேக் கேட்டு கண்களில் கனல் பறக்க அம்மார்க்கமாக ஓடிவந்தது. மூன்று பேரும் பார்த்துவிட்டார்கள். தேவிபாலன் தன் உடைவாளே உருவிக்கொண்டு ஓடோடியும் வந்து அதன்மேல் பாய்ந்து ஓங்கிக் குத்திஞன். வாள் சரியாகப் பதியாததால் புலி அவன் பிடியிலிருந்து மீறி அவன் மீதே பாய்ந்தது. ஏற்கனவே நீண்ட பிரயாணத்தால் மிக்க களேப்படைந்திருந்த அவன் புலியின் பலமான தாக்குதலால் அப்படியே தடாலெனத் தரையில் சாய்ந்து மூர்ச்சையாஞன். இதைக்

கண்ட பாலா, மேலும் புலி அவனைத் தாக்குவதற்கு முன் விரைந்தோடிவந்து தன் கையிலிருந்த வேல் கம்பால் தன் பலம் கொண்டமட்டும் குத்தினாள். அந்த வேகத்தில் வேலின் நுனி புலியின் உடலை ஊடுருவிப் பாய்ந்து மறு பக்கம் வந்துவிட்டது. குடல் சரிந்து புலி கால்களைப் பரப்பிக்கொண்டு மல்லாந்தது.

தன் கையில் ஏந்தியிருந்த குழந்தையை தரையில் கிடத்திவிட்டு மூர்ச்சையாய் வீழ்ந்து கிடக்கும் வாலிப னிடம் ஓடிக்கூர்ந்து கவனித்தாள் ராணி. மூச்சு இலேசாக வந்துகொண்டிருந்தது. அவன் தலையைத் தன் மடிமீது எடுத்து வைத்துக்கொண்டு பாலகல்யாணிக்கு சமிக்ஞை செய்தாள். அவள் ஓடோடியும் சென்று அருகிலிருந்த நீரோ டையில் தன் உடையின் முனையை நனைத்துக்கொண்டு வந்து அவன் முகத்தை அலம்பிவிட்டாள். துணியால் விசிறி னாள். சிறிது உணர்வு வரப்பெற்ற அவன் சற்று புரண்டு படுத்தான். பெண்கள் இருவர் முகங்களும் பயம் நீங்கப் பெற்றுமலர்ந்தது. ராணி, பாலாவிடம் மெல்லிய குரலில் "கல்யாணி இனிபயமில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் மூர்ச்சை தெளிந்துவிடும். இவ்விளைஞன் யாரெனத் தெரிய வில்லை. உடையைக் கவனித்தால் அந்நிய நாட்டுப் போர் வீரன்போல் தெரிகிறது. சரி, யாராயிருந்தால்தானென்ன, நீ இங்கேயே இருந்து மூர்ச்சை தெளிந்ததும் நம் அரண் மனைக்கு அழைத்துவா. எனக்கு நேரமாகிறது. ஜனங்கள் காத்திருப்பார்கள்" எனக்கூறி அவன் தலையைத் தன் மடியினின்றும் எடுத்துப் புற்றரையில் மெதுவாய் வைத்து விட்டு எழுந்தாள். மறுபடியும் தன் குமாரியை நோக்கி "பாலா, ஜாக்கிரதை; இளைஞன் அந்நிய நாட்டான். உஷாராய் நடந்து கொள்" என்று எச்சரித்துவிட்டுச் சென்றாள்.

பால கல்யாணியின் மடியில் குழந்தை படுத்தி ருந்தது. தேவி பாலன் பிரக்ஞை வராமல் கிடந் தான். அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாலா

எவ்வளவு வசீகர முகம்; அகன்ற நெற்றி; கூரிய மூக்கு: அரும்பு போன்ற மீசை; செவ்விய உதடுகள்; தடித்த புஜங்கள்: விரிந்த மார்பு; இடையில் அகன்ற கச்சை; அதில் பவழங்கள் பதிக்கப் பெற்ற உடைவாளின் உறையும் மறுபுறம் வைரக் கற்கள் பொறித்த பிடியை யுடைய நீண்ட வாளும் தொங்கின. புலியின் நகங்கள் உடம்பின் பல பாகங்களில் கீறியிருந்த படியால் அங்கிருந்து கசிந்த இரத்தம் உடையில் பல இடங்களில் சிதறிக் காணப்பட்டது.

சற்று நேரத்திற் கெல்லாம் பிரக்ஞை வரப் பெற்ற அவன் எழுந்து தன்னருகில் பாலா, குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். சுற்றிலும் பார்த்தான். இரு புலிகள் உதிரம் தோய்ந்த உடலோடு கிடந்தன. மறுபடியும் அவள் பக்கம் திரும்பினுன். இதுவரை அவனையே குறு குறுவென்று கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவள் இப்போது அவன் தன்னைக் கூர்ந்து நோக்கியதும் உள்ளத்தில் எழுந்த ஒருவித நாணத்தால். தலை கவிழ்ந்து கொண்டாள். அதே சமயம் அவர்கள் தலைக்குமேல் மரக்கிளையிலமர்ந்திருந்த இரு புருக்கள் ஒன்றை யொன்று தழுவி, மையலால் மயங்கி, ஒருவித இன்பக் கூவல் கூவின. சடாரென இருவரும் அண்ணாந்து பார்த்துப் புன்னகை கொண்டு தலை குனியும்போது ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையில் தான் எவ்வளவு அர்த்தம்! அவர்கள் மனதில் தான் எத்தனை எண்ணங்கள்? இருவரும் உணர்ச்சி மேலீட்டால் ஊமையாகலானுர்கள். இவர்கள் மௌனத்தைக் கண்ட குழந்தைக் தப் பொறுமை கொள்ளவில்லை போலும்! திடீரென அழ ஆரம்பித்து விட்டது. அதைத் தன்

மார் பகத்தே அழுத்திக் கெண்டு அழுகையை மாற்ற வேண்டி "ரே ரே-" என்று ஆரம்பித்த அவள் சட்டென தான் யார்முன் அமர்ந்திருக்கிறோ மென்பதை நினைந்து நிறுத்தி விட்டாள். இது வரை பேசாம லிருந்த தேவிபாலனுக்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவள் கையிலிருந்த குழந்தையையும் அவள் அதைப் பேணுவதையும் கண்ட அவன் ஒரு சமயம் அவள் மணமுடிக்கப் பெற்றவளோ. முதல் புலியைக் கொன்றவன் தான் அவள் கணவனோ என்று நினைத்தான். கேட்டே தெரிந்து கொள்ள லாம் என்று துணிந்து அவளிடம் பேச ஆரம்பித்தான். உதடுகள் அசைந்தனவே யன்றி வார்த்தைகள் வெளிப் பட வில்லை. அவனின் மனோ நிலை யறிந்த அவள் தானே முதலில் ஆரம்பித்து விட்டாள். "தாங்கள் இன்னாரென நான் அறியலாமோ?" என்றாள்.

அவளது கண்களிலிருந்து ஜ்வலிக்கும் ஒருவிதப் பிர காசத்திலேயே மயங்கிய அவன், இப்போது அவளின் இனிமையான குரலோசையை கேட்டுப் புளகாங்கித மடைந்தவனாய் சற்று நிதானித்து"நான் அயலூரான்... உம். அது கிடக்கட்டும். நான் தாங்களை இரண்டு கேள்வி கள்..." என்று தயங்கினான்.

" தயக்கம் வேண்டாம். தாராளமாய்க் கேட்கலாம்" என்றாள்.

" இந்தக் குழந்தை தங்களுடையதுதானா?".

எதிர்பாராத இக்கேள்வியால் அவள் நாணமடைந்தா ளெனினும் சட்டென "இது என் குழந்தையல்ல. நான் கன்னிப்பெண்" என்று பதிலளித்தாள்.

இதைக் கேட்ட அவன் உடல் சிலிர்த்தது. தேகம் குலுங்கியது. தான் ஒரு பெரிய அதிர்ஷ்டசாலி யென்றே இறுமார்ந்தான்.

"அப்படியானால் இது யாருடைய குழந்தை?"

"இங்கே வேலை செய்யும் தோட்டக்காரனுடையதா யிருக்கலாம்."

"தாங்கள் ஏன் தங்கள் சௌந்தர்யத்தை இப்படி ஆண் வேடத்தால் மறைத்திருக்கிறீர்கள்?"

இக்கேள்வியால் அவள் பீதியடைந்தாள். எனினும் வேறு வழியின்றி சாமர்த்தியமாக "அதைப்பற்றிப் பின்னால் தெரிந்துகொள்ளலாம்" எனப் பதில் கூறி விட்டாள்.

"தங்களிஷ்டம். உங்களோடு இன்னொருவரிருந் தாரே. அவர் எங்கே?"

"மீவார் மன்னன் புத்தி தீக்ஷண்யமின்றி இந்நாட் டின்மேல் படையெடுத்து வர முனைகிருனும்—"

தன் அரசனைப்பற்றி தன் எதிரிலேயே ஒரு பெண் இவ் வாறு கேவலமாக கூறக்கேட்ட அவன் உள்ளம் துடித் தது. ஆனால் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் அவ ளிடமிருந்து விஷயத்தைக் கிரஹிக்க எண்ணியவனாய் "என்ன, மீவார் மன்னனு?" என்று ஆச்சரியம் கொண்ட வன்போல் அவளை நோக்கினான்.

"ஆம்; அந்தப் பதர்தான். அது சம்பந்தமாக இந் நாட்டு மஹாராணியார் இன்றுதான் குடிஜனங்களுக்கு ஏதோ பிரசங்கம் செய்கிறாராம். அதைக் கேட்பதற்காக என் தந்தை அவர்தான்—என்னுடனிருந்தவர்—போயிருக் கிறார்."

"ராணியாரா பிரசங்கம் செய்கிறார்; அப்படியானால் நாமும் போகலாமா?"

"தங்களால் நடக்க முடியுமா?"

"முடியும். இப்போது ஆயாசமெல்லாம் தீர்ந்து விட்டது. முடியாத இடங்களில் குதிரைதானிருக்கிறதே.

போகலாம்" என்று சொல்ல, இருவரும் எழுந்தார்கள். தேவிபாலன் குதிரைக்குச் சேணமிட்டுக் கொண்டிருந்தான். இளவரசி குழந்தையைக் கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

அப்போது குழந்தையைத் தொட்டிலில் போட்டு விட்டு, வழக்கம்போல் பக்கத்திலிருக்கும் மலைக்குச் சென்று காய்கனிகள் பறித்துத் திரும்பிக்கொண்டிருந்த ஓர் ஸ்திரீயும், கணவனும் தங்கள் குழந்தை ஞாபகம் வரப்பெற்றதும் வேகமாகக் குடிசையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். சற்று தூரத்தில் ஒரு மேட்டுப்பாங்கான பிரதேசத்தில் நின்று அவர்கள் குடிசைப் பக்கம் திரும்பிய போது இரண்டு புலிகள் புற்றரையில் படுத்திருப்பது போல் தெரிந்தது. அவ்வளவுதான்; அப்படியே, "மோசம் போனேம்" என்று கதறிக்கொண்டு தலைதெறிக்க ஓடி வந்தான் கணவன். "ஐயையோ!" என அவளும் அவனைப் பின்தொடர்ந்து ஓடிவந்தாள். புலிகளின் அருகே வந்ததும் அவைகள் வேலினால் குத்தப்பட்டு இரத்தம் தோய்ந்து மாண்டு கிடப்பதைக் கண்டு பெருமூச்சு விட்டவர்களாய், சுற்றிலும் பார்த்தார்கள். குடிசைக் கருகில், மரத்து நிழலில், இரு மனிதர்கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு அங்கே ஓடினார்கள். அவர்கள் ஓடிவருவதைப் பார்த்த தேவி பாலனும், பாலகல்யாணியும், "பயப்படவேண்டாம். உங்கள் குழந்தை இதோ இருக்கிறது' என்று எதிர்நோக்கி ஓடி அவர்களிடம் குழந்தையை நீட்டினார்கள். வந்த வேகத்திலும், குழந்தையை உயிரோடு கண்ட சந்தோஷத்திலும், ஆவேசம் கொண்டவளாய், அதைக் குபீரென பாலாவிடமிருந்து ஏந்தி, மாறி மாறி முத்தமீந்து மார்போடு அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீரை அபரிதமாகச் சிந்தினாள். அவளிடமிருந்து அதை வாங்கி மாறி மாறிப் பார்த்து முத்தமீந்து மகிழ்ந்தான். தன் பெற்றோர்களைக் கண்ட அச்சிசுவும், கலகல

வென்று சிரித்து, அவர்கள் ஆனந்தத்தை அதிகப்படுத்தியது. குழந்தையைக் காப்பாற்றிய அவர்கள் பாதத்திலேயே அதைப் போட்டு சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து கைகூப்பி நின்றனர் பெற்றோர்கள்.

கணவன் :—"பிரபுக்களே! பத்து வருஷமாக ஒரு குழந்தை இல்லையென்று பல சாமியையும் கும்பிட்டுப் பிறந்த பிள்ளை இது. புலிவாயிலிருந்து தப்பிக்கச்செய்த நீங்கள்தான் எங்கள் கண்ணான தெய்வம். உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?—"

"ஸ்வாமி! கண்ணை இழந்தவனுக்கு கண்கொடுத்த கடவுள் போல நிற்கிறீர்களே. உங்களுக்கு இந்தக் கனிகள்தான் எங்கள் காணிக்கை" என்று மனைவி சொல்லி தன் மடியிலிருந்த நல்ல கனிவர்க்கங்களைப் பொறுக்கி, இருவருக்கும் கொடுத்தாள். அன்போடு கொடுத்த அவைகளை ஆவலோடு ஏற்ற அவர்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டனர்.

தேவிபாலன் :—"அம்மா, நாங்கள் தெய்வமுமல்ல, தேவர்களுமல்ல. ஏதோ தற்செயலாக இப்பக்கம் வர நேர்ந்தது. தெய்வசங்கல்பத்தால் உன் குழந்தை பிழைத்தது. அந்தக் கருணாகரக் கடவுளை நோக்கிக் கும்பிடு: அவரின் திருவிளையாடல்கள்தான் இவைகள்."

பால :—"அம்மா, எங்களுக்கு நேரமாகிறது. நாங்கள் நகருக்குள் போகவேண்டும். உங்களிடமிருந்து எங்களுக்கு ஒரு உதவியும் வேண்டாம். எங்களைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ கொடுத்த இந்தக் கனிகளே எங்களுக்கு ஆனந்தமளிக்கிறது. நாங்கள் போய்வருகிறோம். விடைகொடுத்தனுப்பு."

பெற்றோர்கள் மறுபடியும் அவர்கள் காலில் வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். தேவிபாலனும், பாலகல்யாணியும் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

---

## அத்தியாயம் 18

### "நாயென வாழ்வோன் நமரிலிங்குளனோ?"

சமுத்திரமே பொங்கி எழுந்து வந்ததுபோல் மருங்காபுரி நகர்மாந்தரனைவரும் பிரசங்க மேடைக்கு முன்னமர்ந்திருந்தனர். ராணியின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த அவர்கள் குறிப்பிட்ட நேரம் நெருங்க நெருங்க அமைதியை இழந்தவர்களாகக் காணப்பட்டனர். கூட்டத்தின் மத்தியில் ஆங்காங்கே சிறு சிறு குழப்பங்களும், அதற்கு அவர்களுக்குள்ளே சமாதானமும், சௌகரியமாய் அமர்வதற்கு இடங்கிடைக்காமல் அங்குமிங்கும் அலைபவர்களும் இப்படியாக ஒரே இரைச்சலாக இருந்தது. வாழை மரங்களாலும், மகர தோரணங்களாலும், புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய அழகிய மேடைமீது ராணியாரும், பாலகல்யாணியும் அமர்வதற்கென இரண்டு பெரிய ஆசனங்களிருந்தன. மேடையின் ஒரு பக்கத்தில் பிரதம மந்திரி வீரநாத், சேனைத் தலைவன் அமரநாத், கோபிநாத் — இன்னும் அவர்களின் சகாக்கள் முதலியவர்கள் வீற்றிருந்தனர். ஜனங்களின் இரைச்சல் அதிகமாக ஆக வீரநாத்தைச் சுற்றியிருந்தவர்கள் " என்ன, இன்னும் ராணியைக் காணோமே?" என்றார்கள்.

"ஏதேனும் அரண்மனையில் அவசரமிருக்கலாம். வந்துவிடுவார்கள். இன்னும் சற்று நேரம் பொறுத்துப் பார்ப்போம்" என்றான் வீரநாத்.

'இதுதான் தக்க தருணம். நம் காரியத்தை முடித்துக்கொள்ளலாம்' என்பதற்கு அடையாளமாக அமர

நாத் வீரநாத்திற்குக் கண் ஜாடை செய்தான். உடனே வீரநாத்தும் எழுந்து இரைச்சலிடும் ஜனங்களை அமர்த்து வதற்காக மேடைமீது தோன்றினான். பிரதம மந்திரி யைக் கண்டதும் ராணியின் வருகையை அவன் அறிவிக் கப்போகிறான் என்றெண்ணி, ஜனங்கள் மிக்க அமைதியா யிருந்தனர். கிடைத்தற்கரிய அச்சமயத்தை வீணாக்கிக் கொள்ளாமல், அவன் அவர்களையெல்லாம் கையமர்த்தி, வணங்கி, பேச ஆரம்பித்தான்.

"நிடத ராஜ்யத்தின் வீரப் புத்திரர்களே! சுதந்தி ரப் பிரியர்களே! நமது தேவமாதா சக்ரவர்த்தினியம் மையார் ஏதோ தேசோத்தாரணத்தைப் பற்றி பல அறி வாளிகளுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கலாம். ஆகையால் தாமதமாகிற தெனக் கருதுகிறேன். அவர்கள் வரும் வரை, நேரத்தை வீணே கழிக்காமல், நமது வீர சுதந்திரம் இன்னும் வெற்றிகோஷங்கொண்டு நிலவ நாம் செய்யவேண்டியது என்னவென்பதை உங்களுக்கு ஓரி ரண்டு வார்த்தைகளில் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து செவிசாய்ப்பீர்களா?" என்றான் பீடிகையாக.

"பேசுங்கள்! பேசுங்கள்" என அவ்வளவு பேரும் ஒரேமுகமாய் ஆமோதித்தனர். அவன் மறுபடியும் ஆரம் பித்தான்.

"தோழர்களே! சகோதரர்களே! சகோதரிகளே! தங்கள் முன் பேச நிற்கும் நான் நிடத சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவன் என நினைக்கும் போதே என்னுள்ளே ஓர் அடங்கா சக்தி பிறக்கிறது. எந்த நாட்டிற்கும் ஒரு எல் லைக் கோடு உண்டு. ஆனால் நம் நாட்டிற்கோ எல்லையைக் குறிப்பதே ஒரு சிரமம். நாற்றிசையிலும் பரந்துகிடக் கும் இப் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்த நம் மூதாதையர் களின் மனோவலிமையை சற்று சிந்தித்துப் பாருங்கள்! அவ்விதம் நம் மூதாதையர்கள் மற்றவர்களுக்குக் கீழ்ப் படியாத, வணங்காமுடி மன்னர்களாக வாழ்ந்து ஆட்சி புரிந்து வந்த இந் நாட்டிற்கு இப்போது ஒரு துன்பம்

நேரிடுமானால் அதைத் தவிர்க்க நாம் நம் உயிரையும் தியாகம் செய்யத் தயங்கலாமா? நம் சுதந்திரதேவியின் சின்னமாக விளங்கும் சிங்கக்கொடியை இன்னும் கம்பீரமாகப் பறக்கச் செய்ய எவ்வகைத் தியாகமென்றாலும் செய்யப் பின்னடையக்கூடாது. மனைவி, மக்கள், உற்றார், உறவினர், உடல், பொருள், எல்லாவற்றையும் நம் அன்னையின் பலிபீடத்தில் சமர்ப்பித்து அவளின் நாமம் என்றென்றும், எல்லோராலும் வாழ்த்தப்படவேண்டு மென்பதே நமது முக்கிய நோக்கம். நிடதமா தேவியாகிய அவளுக்கு எவன் ஒருவன், பிறநாட்டானோ, அல்லது நம் உடன் பிறந்த சகோதரனோ, தீங்குவிளைக்க முன்வந்தாலும், அவனைச் சிரச்சேதம் செய்து அச்சிரத்தை அவளுக்குப் பாத காணிக்கையாக்கவேண்டும். சகோதரர்களே, பெரியோர்களே! இவ்விஷயத்தில் உங்கள் அபிப்ராயம் என்ன?...''
என பிரசங்கத்தைப் பாதியில் நிறுத்தி ஜனங்களின் மனதைக் கிளறினான். அவர்களும் அவன் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளில் மயங்கி, "வெற்றி, வெற்றி! சுதந்திரமே முதன்மை! எதற்கும் தயார்!'' என ஆரவாரித்தனர்.

வீர:—"உங்கள் உறுதியைக் கண்டு மிக்க சந்தோஷமடைகிறேன். அப்படியானால் இதோ, இப்போது உங்களனைவரின் தேச பக்தியை சோதிக்கத் தயாராயிருக்கும் செய்தி யொன்றைச் சொல்லப் போகிறேன்.''

ஜனங்:—"சொல்லுங்கள்! சொல்லுங்கள்!''

வீர:—"நீண்ட காலமாக, நம் தேவியின் கொடிக்குத் தலைவணங்கிப் பணிந்து கிடந்த மீவார் மன்னன் ரவிவர்மன், இப்போது மமதை கொண்டு, நம்மை ஜயித்துத் தன் புலிக்கொடியை நாட்ட வருகிறானாம். நம் சுதந்திரதாகத்தை அறவே ஒழிக்க முயற்சி செய்கிறானாம். இது கேட்டு இன்னும் நீங்கள் வாளா விருக்கலாமா? நீங்கள் என்ன, கோழைகளா? உங்கள் இரத்தம் துடிக்க வில்லையா?

உங்களில் ஒருவர்கூட தன் தேசப் பெருமை சீர்குலையக் காணச் சகிக்கமாட்டீர்கள் என்பதை நானறிவேன். மீவார் மன்னனை வீழ்த்த நீங்கள் இன்று முதலே கங்கணம் கட்டுங்கள்! படைப் பலம் பெருக ஒவ்வொரு வரும் படையில் மனமுவந்து சேருங்கள்! ஒரே உறுதியாக நின்று போராடினால் அவனை வீழ்த்துவது ஒரு பெரிய காரியமல்ல. என்ன சொல்லுகிறீர்கள்?" என்று மறுபடியும் அவர்கள் ஆத்திரத்தைக் கிளப்பினான்.

ஜனங்:—"மீவார் தேசம் வீழ்க! ரவிவர்மன் அழிக!!" என்று அளவுகடந்து ஆர்ப்பரித்தனர்.

வீர:—"இந்த உறுதியினின்று பிரளமாட்டீர்களே!"

ஜனங்:—"இல்லை. ஒருக்காலும் இல்லை."

"உங்கள் உறுதியைக் கண்டு என் மனம் பூரிக்கிறது. வீரவர்மன் இனி வீழ்ந்தான் என்றே எண்ணுங்கள். அவனை வீழ்த்துவதற்குக்கூட ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அதை இச் சமயத்தில் அறிவிக்க விரும்புகிறேன். ஆனால்—"

ஜனங்:—"சொல்லுங்கள்."

"சொல்லுவதற்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் அதைக் கேட்கும் நீங்கள் தேசத்தின்மேல் கொண்டுள்ள அபாரவாஞ்சையால் ஏதும் விபரீதமானவற்றைச் செய்து விடுவீர்களோவென்று பயப்படுகிறேன். இப்போது அதைச் சொல்லவும் என் நாவெழவில்லை" என்று வீரநாத் அவர்களின் ஆவலைத் தூண்டிவிட்டான்.

ஜனங்களோ "கட்டாயம் சொல்லத்தான் வேண்டும்" என்று கத்தினார்கள்.

வீர:—"நான் சொல்லப்போகும் விஷயம் உங்கள் அன்பிற்குப் பாத்திரமான ஒருவரைப் பற்றியது. எனினும் தேசபக்தர்களாகிய நீங்கள் சற்றுமுன் வாக்களித்தபடி உங்கள் தேசத்தின் பொருட்டு அந்த அன்பிற்கு பாத்திர

மானவரையும் எதிர்க்க வேண்டியவர்களாவீர்களே! நான் எப்படிச் சொல்ல முடியும்?—"

ஜன:—"தயவு செய்து சொல்லுங்கள்."

வீரநாத் தயங்கியவன் போல் பாவனை செய்து "சப்தத்தை நிறுத்துங்கள். உங்கள் இஷ்டம் அதுவானால், என்னை ஈன்ற இந்நாட்டின் நலத்தைக் கோரிச் சொல்லிவிடுகிறேன். மீவார் தேசத்தரசன் படையெடுத்து வரப் போவதாக தூதனை யனுப்பிவிட்டான். இன்றைக்கோ நாளைக்கோ, எந்த நிமிஷத்திலோ, அவன் படைகள் நம் நகரைச் சூழ்ந்து கொள்ளப்போவது நிச்சயம். இச்சமயத்தில் அவனை எதிர்த்து வெற்றிமாலை சூடி நம் நாட்டின் கௌரவத்தை நிலைநாட்ட, படை பலத்தைப் பெருக்க வேண்டாமா? இதிலென்ன ஜீவஹிம்சை யிருக்கிறது? நமது தேசமே நமது ஊண், உயிர், பொருள் எல்லாமாக இருக்கும்போது அதற்கு வரும் ஆபத்தைக் காக்காமல், பொருள் நஷ்டமும் உயிர் நஷ்டமும் ஆகிறதே யென்று யோசிக்கலாமா? உடலில் கொப்புளம் ஏற்பட்டால் அப்பாகத்தை மாத்திரம் அறுத்துவிடுதல்தானே நலம். அன்றி, உடலையே கத்தியால் நறுக்கிப் பாழ்பண்ணுவதா? கூரையில் நெருப்புப் பற்றினால் மறுபாகத்தை உருவிக் கூரையை அப்புறப் படுத்தல்தானே நலம். அன்றி, வீட்டையே நாசம் பண்ணுவதா? நம் வேதமாகிய பகவத்கீதை 'முடிவுகளைச் சிந்தனை செய்யாதே. ஆனால் உன் கடமைகளைச் செய்யத் தவறாதே. அப்பொழுதுதான் நீ கர்ம வீரன்' எனப் போதிக்கிறது. அப்படி யிருக்க ஜீவஹிம்சையைப்பற்றி நினைக்கலாமா?" என்றான்.

ஜனங்.—"கூடவே கூடாது!"

வீர:—"உங்கள் மனமெல்லாம் இப்படி இருக்கிறது. ஆனால் நம் மாதா மஹாராணியின் அபிப்பிராயமோ முற்றிலும் மாறாகவிருக்கிறது. யுத்தத்தினால் அளவு கடந்த சேதம் ஏற்படுமாம். அதற்காக மீவார்

மன்னன் ஒருவன் யுத்தத்திற்கு வருகிறானெனக் கேட்டவுடனேயே அவன்போன்ற மற்ற சிற்றரசர்களுடனும் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். சகோதரர்களே! நம் ராணியார் இதற்கு என்னென்னமோசமாதானங்கள் சொல்லுகிறார்கள். அதை உங்கள் முன்சொல்லக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது. சமுத்திரம்போல் திரண்டுவந்த எத்தனையோ சிற்றரசர்களைப் புறங்காட்டி ஓடச் செய்த அழிவில்லாத சந்திர குலவம்சத்திலுதித்த நம் சக்கரவர்த்தி ரகுவீரசந்திர ராஜா நிர்மாணித்த அசைக்கமுடியாத கோட்டைகளையெல்லாம் இப்போது அவரது பத்தினியாகிய நம் மஹாராணியே தன் கோழைத்தனத்தால் இழந்துவிடுவார் போலிருக்கிறது. என்றைக்கிருந்தாலும் அழிந்து மண்ணோடு மண்ணாகும் இந்த ஜடலத்தையும், ஒழிந்துபோகும் செல்வத்தையுமே ஒரு பெரிதாக மதிப்பிடுகிறார் நம் ராணியார். பெற்றெடுத்த தாய்நாட்டின் வெற்றியை அவர்கள் சரியாய் உணரவில்லை போலும்! இதோ இங்கு பறக்கும் இவ்வீரக் கொடியை, நம் மாதாவின் சின்னத்தை, மற்றொருவன் தாழ்த்தக் கண்டு நாம் சகித்திருக்கலாமா? அவனுக்கு அடிமையாக வாழ்வதையா நீங்கள் விரும்புகிறீர்கள்? அடிமையாக வாழ்வதைக் காட்டிலும், அவனுடன் அமர் செய்து அவனை அழிக்க முடியாவிட்டாலும், அப்படுகளத்தில் நெஞ்சில் அம்பை ஏற்று வீரமக்களாக மடிவதே மேல்! இதை விரும்பாத எந்த சகோதரனாவது இக்கூட்டத்தில் இருந்தால், அவன் ஒரு பேடிதான்; தேசத்துரோகிதான். மகா ஜனங்களே! என்ன சொல்லுகிறீர்கள்?........"

ஜனங்.—(உணர்ச்சியின் உச்சியைத் தாண்டியவர்களாய், இரத்தக் கொதிப்பில்) "மந்திரியவர்களே! நாட்டுப் பற்றற்ற துரோகிகள் நாங்களல்ல!........" என ஒரே முகமாய் இரைந்தனர்.

"சகோதரர்களே! இப்படியாக நம் தேவமாதா நம்மைக் கோழைகளாக்கத் தூண்டுவதைக் கண்ட நானும் என் சகாக்களும் அவருக்கு வேண்டியவற்றை எடுத்துக் கூறியும், அவர் ஓரே பிடிவாதமாக மீவார் மன்னனோடு சமாதானமே செய்துகொள்ளப் போவதாக முடிவு செய்திருக்கிறார். அதைப்பற்றித்தான் இன்று உங்களிடம் பேசப்போகிறார். அவர் வந்து கேட்டால் நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?"

ஜனங்:—"எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்போம்"

"மஹாஜனங்களே! இப்படி நாமெல்லோரும் நம் தேவமாதாவாகிய அவரை எதிர்த்து நிற்கவேண்டிய அவசியம் நேர்ந்திருப்பதைக் கண்டு நான் மிக்க வருத்தமடைகிறேனென்றாலும், நமக்கு நம் தேசமே உயிர்: அதுவே நம் கௌரவம். அதற்கு இழிவுபடுத்துகிறவர் யாராயிருந்தாலும் அவரை எதிர்த்து நின்று நம் தேசபக்தியைக் காட்டவேண்டியதே நம் கடமை! அதைச் செய்தே திருவோம். என்ன சொல்லுகிறீர்கள்?........"

"வீழ்க ராணியார்! வீழ்க ராணியார்!! வாழ்க வீரநாத்!!!........" என எல்லோரும் ஏகக் குரலாக ராணிக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

---

## அத்தியாயம் 19

### "பெருங் கொலைவழியாம், போர் வழி யிகழ்ந்தாய்"

நீரோடையை விட்டு நீங்கிய தேவிபாலனும், பாலகல்யாணியும் நகருக்குள் பிரவேசித்து அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஜனத்திரளின் காட்சி அவர்களுக்குத் தெரிந்தது. பாலகல்யாணி அடிக்கடி அப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான கூட்டங்களைப் பார்த்துப் பழக்கப்பட்டிருந்தபடியால் அவள் அதைக் கண்டு ஆச்சரி

யப்படவில்லை. தேவிபாலனோ அளவிலா ஆச்சரியமடைந்தான். அவர்கள் கூட்டத்தை நெருங்கியதும் குதிரையை ஒரு மரத்தடியில் கட்டினர். அந்தச் சமயத்தில்தான் ஜனங்களனைவரும் "வீழ்க ராணியார்! வாழ்க வீரநாத்!" எனக் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர். இதைக் கேட்ட பாலகல்யாணி இடியோசை கேட்ட நாகம்போல் திடுகிட்டு, "என்ன இது, வீழ்க ராணியாராமே! வாருங்கள் சீக்கிரம் போய்க் கவனிப்போம்" என தேவிபாலனிடம் கூறிவிட்டு அவன் வருகையைக்கூடக் கவனிக்காமல் பிரசங்க மேடையை நோக்கி ஓடினாள். அங்கு ஜனங்களிடையே விசாரித்து அதற்குக் காரணமும் தெரிந்துகொண்டாள்.

தன் மகளைத் தனியே விட்டுப் பிரிந்த மஹாராணியார் அரண்மனைக்கு விரைந்து வந்து ஆண் உடைகளைக் களைந்துவிட்டு வழக்கமாக உடுத்தும் தூய வெண் துகிலுடுத்தி தன் குலதெய்வமாகிய கண்ணனைக் கைதொழுது, தனக்காக மாந்தரனைவரும் எதிர்நோக்கியிருப்பார்களே யென்ற கவலை அவளைப் பெரிதும் வாட்ட அவசர அவசரமாக மேன்மாடியிலிருந்து இறங்கிவந்துகொண்டிருந்தாள். அப்படி இறங்கிவந்து கொண்டிருக்கும்போதுதான் 'வீழ்க ராணியார்! வாழ்க வீரநாத்!' என்னும் பெருத்த கோஷம் அவள் செவிக்கும் எட்டியது. அப்படியே சற்று நேரம் நின்று உற்றுக்கேட்டாள். அவளுக்கு எதிரான கோஷம் மேன்மேலும் ஒலித்துக்கொண்டேயிருந்தது. திடு திடுவென்று சாளரத்தின் பக்கம் திரும்பி ஓடிவந்து அரண்மனை முன் கூடியிருந்த கடல் போன்ற கூட்டத்தையும், மேடைமீது நிற்கும் வீரநாத்தையும் பார்த்தாள். விஷயம் விளங்கிவிட்டது. வீரநாத் தன் எண்ணப்படி காரியத்தைச் சாதித்துக் கொண்டான் என்று தெரிந்து கொண்டாள். 'இனியும் தாமதித்தால் காரியம் மிஞ்சிவிடும்' எனத் தனக்குள் கூறிக்கொண்டு மாடிப்படிகளில் இறங்கி ஓடிவந்தாள். அவள் செல்லும் வேகத்தைக்

கண்ட சில பணிப்பெண்கள் அவளைப் பின் தொடர்ந்தேகினர். எதையும் லக்ஷியம் செய்யாமல் தனக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த வழியினூடாக நேரே பிரசங்க மேடையை நோக்கிச் சென்று மேடைமீது ஏறி நின்று நாற்புறமும் ஜனங்களை நோக்கினாள். திடீரென அவ்விதம் அக்குழப்பத்தினிடையே ராணியார் தோன்றியதைக் கண்ட ஜனத்திரள் முன்னிலும் அதிகமாக, தங்கள் தொண்டை கிழிந்துபோகும்படி, அவ்வளவு பலமாக, "வீழ்க ராணியார்! வாழ்க வீரநாத்!" எனக் கத்தினர். ராணி ஜனங்களைக் கரம் கூப்பி வணங்கினாள்; கையமர்த்தினாள். ஒன்றிற்கும் அடங்கவில்லை ஆரவாரம். இதைக் கண்டு அவளருகில் நின்ற வீரநாத்தும், அவன் சகாக்களும், அளவற்ற ஆனந்தம் கொண்டனர். தாங்கள் நினைத்த படியே காரியத்தைச் சாதித்து, திறம்பட நடித்துக் கொண்டதற்காக தங்களுக்குள்ளேயே பெருமைப்பட்டுக்கொண்டனர். ஆனால் ராணியாரோ இதையெல்லாம் கண்டு கலவரமும், கலக்கமும் அடையாமல், கம்பீரமாகவே நின்று, ஜனங்களை அடக்குவதிலேயே முயன்றுகொண்டிருந்தாள். ஜனங்களும் ராணியை லக்ஷியம் செய்யவில்லை.

இவ்வளவு அலங்கோலத்தையும் உள்ளம் பதைபதைக்கப் பார்த்துக்கொண்டிருந்த (ஆண் உடையிலிருந்த) பாலகல்யாணிக்குத் திடீரென ஓர் யுக்தி தோன்றியது. தன் ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, கூட்டத்தை விலக்கிக்கொண்டு மேடையின் சமீபம் நெருங்கி வீரநாத்தை சைகை செய்து அழைத்து வணங்கிக் கூறினாள்:

"மஹாராஜ்! குடிஜனங்களாகிய நாங்கள் உங்களின் அரிய பிரசங்கத்தால் நம் நாட்டின் நலத்தைக் கருதி எவ்விதத் தியாகத்தையும் செய்யத் தீர்மானித்துவிட்டோம். எங்கள் உறுதியை இந்த ராணியார் வந்துதானா மாற்றிவிட முடியும்? இவரைப்போல் எத்தனை ஆயிரம் பேர்கள்

வந்தாலும், நாங்கள் உங்களுக்குச் செய்துகொடுத்துள்ள வாக்குறுதியை ஒருக்காலும் மறந்துவிட மாட்டோம். அந்த மீவார் மன்னன் மண்ணைக் கவ்வும்படி செய்தே தீருவோம். அதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். அதை இப்போதே—நாங்கள் ராணிமுன் காட்டும் இந்த எதிர்ப்பிலேயே—தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆனால் இன்று நாங்கள் இங்கு கூடிய கூட்டம் ராணியாரின் பிரசங்கத்தைக் கேட்பதற்காகத்தானே? அவர் மனதும் சாந்தியடைய வேண்டுமல்லவா? எல்லாவற்றிற்கும் மேலாக, ராணி என்ற ஹோதாவில் அவரை நாம் பெருமைப்படுத்துவது நாட்டிற்கே ஒரு பெருமையல்லவா? ஆகையால் அவரும் ஏதோ ஓரிரண்டு வார்த்தைகள் பேசிச் செல்லட்டுமே! இனி அவர்கள் பேசி எங்கள் மனதை மாற்றவே முடியாது. தயவுசெய்து ஜனங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள். உங்கள் ஒரு வார்த்தையால் இத்தனை ஆயிரம் மக்களும் அமைதியடைந்துவிடுவார்கள். பிரபுவே! சற்று தயவுசெய்யுங்கள். ராணியாருக்கு நேரும் அவமானம் நாட்டையும் பாதிக்குமல்லவா?......"

பாலகல்யாணியின் இந்த உருக்கமான பேச்சு வீரநாத்தைச் சற்று ஆழ்ந்து யோசிக்கச் செய்தது. அவள் கூறுவதும் நியாயமெனப்பட்டது. "இளைஞனே, நீ சொல்வதும் நியாயம்தான். இதோ ஜனங்களை அமைதியாக இருக்கச் செய்கிறேன். ராணியாரும் இரண்டு வார்த்தைகள் பேசிச் செல்லட்டும்" எனக்கூறிவிட்டு ஜனங்களைப் பார்த்து நாலாபுறமும் கையமர்த்தினான். "வீரநாத் பேசப்போகிறார்! சப்தம் போடாதீர்கள்" என்று கூட்டத்திற்குள்ளேயே ஜனங்கள் ஒருவரை யொருவர் எச்சரித்து அமைதியை உண்டுபண்ணினார்கள். எங்கும் நிசப்தம் நிலவியது, புயலடித்து ஓய்ந்தாற்போல. வீரநாத், கம்பீரமாக முன்வந்து தொண்டையைக் கனைத்துக்கொண்டு "மஹாஜனங்களே, நம் தேவமாதாவின் கொள்கை நமக்குப்

பிடிக்காவிட்டாலும், மஹாராணியாரல்லவா! அவரை நாம் கௌரவிக்க வேண்டியது தேசபக்தர்களாகிய நமது கடமையாகும். அவரை கௌரவிப்பது நம் நாட்டிற்கு ஒரு அந்தஸ்தளிப்பதற்கு அறிகுறியாகுமன்றோ? அவரும் நீண்ட பிரசங்கம் செய்யாமல் ஓரிரண்டு வார்த்தையில் முடித்துக் கொள்வார் என நம்புகிறேன். ஆதலின் அவர் பேசி முடியும்வரை இதுகாறுமிருந்ததுபோல அமைதியாக இருக்குமாறு மிக்கத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனக் கூறிமுடித்தான். ஜனங்களும் கரகோஷம் செய்து அதை ஆதரித்தனர்.

சடாரென ராணியார் மேடை முன் வந்து நின்றாள். தலைகுனிந்து வணங்கிவிட்டு புன்னகை ததும்ப நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். மேடையின் கீழ் பக்கத்தில் கவலையோடு நின்ற பாலகல்யாணியையும் கடைக்கண்ணால் கவனித்துக்கொண்டாள்! அனைவரும் அவள் வாயையே ஆவலுடன் கவனித்தனர். அவளுடைய சாந்த சொரூபம் அவர்களை ஆகர்ஷித்துவிட்டது; புன்னகை அவர்களை மயக்கிவிட்டது; பணிவு அவர்களையும் பணியச் செய்தது. லக்ஷ்மிதேவி ஆரம்பித்தாள்:—

"எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, பெரியோர்களே, வணக்கம்! சில எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் குறிப்பிட்ட நேரத்தில் வரத் தவறிவிட்டதற்காக மன்னிக்க வேண்டுகிறேன்.

''தற்சமயம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் யுத்த நெருக்கடியைக் குறித்து இந்த நாட்டில் ஜனித்த நமது கடமையென்ன? இந்நெருக்கடியில் மனித சமூகத்திற்கும் தெய்வத்திற்குமுள்ள அன்பை அறுத்தெறியாவண்ணம் காக்கும் வகையென்ன? இவைகளைப்பற்றி உங்களிடம் சொல்லவே இக்கூட்டத்தை கூட்டச்செய்தேன். என்னுடைய அபிப்பிராயத்தை தயவு செய்து இறுதிவரை அமைதியுடனிருந்து கேட்டு முடிவில் உங்களனைவரின் யோசனை

யையும் எனக்குக் கூறும்படி விண்ணப்பித்துக்கொள்கிறேன்."

இவ்விதம் தாழ்மையாகவும், பணிவாகவும், அடக்கமாகவும், அன்பு ததும்பப் பேசிய ராணியின் பேச்சைக் கேட்டமாத்திரத்திலேயே ஜனங்கள் ஏதோ ஒரு சக்தியால் தூண்டப்பட்டு அதற்குமேல் அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கவனமாய்க் கேட்கும்படி ஆவலை யுண்டுபண்ணிவிட்டது. ராணி தொடர்ந்தாள் உற்சாகமாக :—

"பெரியோர்களே! தொன்று தொட்டுப் பெருமை வாய்ந்த இந் நிடதநாட்டில் பிறந்தமைக்காக பெருமை கொள்ளும் நாம், இதன் கௌரவத்தைக் காக்கவும், பகைவனைப் பதைபதைத்து ஓடச்செய்யவும் ஆயுதம் தாங்கிப் போரிடமுனைந்தோம். தேசமாதாவென கொண்டாடும் அவளது கண்ணீர் துடைக்கவே அவள் கூவியழைத்த குரலுக்குத் 'தயார்' எனக் கூறி ஆயுதம் ஏந்தி யுத்த களம் சென்றோம், அவ்விதம் இரத்தக்கொதிப்பால் தூண்டப்பட்டு தியாக அக்கினியில் திடும்பிரவேசம் செய்து எவ்வளவோ அரிய பெரிய தியாகங்களையெல்லாம் செய்தும் கூட நம் மாதாவின் கண்ணீரைத்துடைத்து விட்டோமாவென்பதை ஊன்றிக் கவனியுங்கள்.

"யுத்தங்களின் கெடுதல்களையும், அதனால் சமூகமும், தேசமும் சின்னாபின்னப்பட்டு ஒழிந்து நாசமடைவதையும் குறித்து நான் உங்களுக்கு அதிகமாகக் கூறவேண்டியதில்லை. ஏனெனில் கடந்த யுத்தங்களில் உதிரவெள்ளத்தில் மூழ்கி உயிர் நீத்தவர்களையும், அங்கங்கள் சிதையுண்டு அலறித் துடித்து மாண்டவர்களையும், இங்கு கூடியுள்ள அனைவரும் கண்கூடாகக் கண்டிருக்கிறீர்கள். கணவனைப் பிரிந்த கட்டழகிகள், இளம் விதவைகளாகி ஆறுதலின்றி தவித்து அதே மனோவியாதியால் பெற்ற பிள்ளைகளையும் தவிக்கவிட்டு தற்கொலை புரிந்துகொண்டதை நாம்

மறக்கமுடியாதுதான். பெற்ற மகன்களைப் படுகளத்தில் பறிகொடுத்து, அல்லும்பகலும் அவர்களையே நினைந்து நினைந்து உருகி எலும்புக்கூடுகளாகி எமன் வாய்ப்பட்ட தாய்மார் எத்தனை பேர்கள்! மனைவியாதி மீறி பைத்தியம் பிடித்தலைகிறவர்கள் எத்தனையோ பேர்! எல்லாவற்றிற்கும் மேலாக சமூகத்தினர் அனைவரும் பாபகிருத்யமெனக் கருதும் மகா சாபத்திடான கொடுமைகளும் இந்த யுத்தங்களில் சம்பவிக்கின்றனவென்பதை இப்போது நான் சொல்லத்தான் வேண்டும். நம்முடன் இம் மகா கௌரவம் வாய்ந்த தேசத்தில் பிறந்த எத்தனையோ மாதுசிரோன்மணிகளாகிய நம் சகோதரிகள், தங்கள் கணவர்களைப் பறிகொடுத்து இயற்கையின் சேஷ்டையால் புலன்களையடக்கியாள முடியாமல் விபசாரிகளாக மாறிவிட்டனர்! இவ்விதம் அவர்கள் தங்கள் கற்பைச் சிதறடித்துக் கொண்டதோடல்லாமல் அவர்களின் சந்ததி நாளடைவில் பெருக்குற்றுவந்தபடியால் நாட்டில் பரிதாபகரமான நோயும் பரவ ஆரம்பித்துவிட்டது. இதற்கு அரசாங்கம் தன்னாலியன்ற பொருளை வாரி இறைத்தும் அது ஒழிந்தபாடில்லை. எனதன்பார்ந்த ஜனங்களே, இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் என்னவென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். யுத்தம் என்னும் அக் கொடிய பைசாசம் தான். நாட்டிலெங்கும் பாபச்செயல்களை வளர்க்கும் ஒரு யுத்தத்தைக்கொண்டா நம் மாதாவை சாந்தப்படுத்த வேண்டும்? அதை அவள் ஏற்பாளா?

"இக்கூட்டத்திலிருக்கும் தாய்மார்களில் யாராவது ஒருவர், தன் கண்முன் சொந்த மகன் அங்கமிழந்து ஆவி துடித்து மடிவதையும், தன் மருகி அதே கவலையால் பைத்தியமாகி எச்சில் இலை பொறுக்குவதையும், தன் மகள் விபசாரியாகப் போவதையும் கண்டு சகித்திருப்பாரா? ஒருக்காலுமில்லை. அதுபோல்தானே நம் தேச மாதாவும்! ஒரு மகனுக்கே நம் தாய்மார்கள் மனம் துடிதுடிக்கிறார்க

ளென்றால், நம்மனைவர்க்கும் அன்னையாக விளங்கும் தேசமாதா, தன்னைப் பகைவனிடமிருந்து விடுவிப்பதற்காக தன்மக்கள் ஆயிரக்கணக்கிலும் லக்ஷக்கணக்கிலும் மடிவதைக் கண்டு மனம் சகிப்பாளா? பகைவனைக் கண்டு பதைக்கும் அவள் மனதைப் பன்மடங்கு துக்கத்திற்கு ஆளாக்கி விடுகிறோம் என்பதை நாம் மறந்தேபோகிறோம். எண்ணிப் பார்ப்பதில்லை. இதனால் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டவர்களாகிறோம். கற்றிருந்தும் கசடர்களிலும் கடையர்களாகிறோம் கண்ணிருந்தும் குருடர்களாகிறோம்!

"மாதாவின் கண்ணீரையும், அதைத் துடைக்கவேண்டியது இங்கு ஜனித்த ஒவ்வொருவர் கடமையென்பதும், அதற்காக ஆயுதம் தாங்கி அமர்புரிய வேண்டுமென்பதும், எல்லாம் வெறும் கனவு; கற்பனை. யுத்தத்திற்கு ஆள் சேர்த்து, படைப்பலத்தைப் பெருக்க அரசர்களும், தலைவர்களும் மக்கள் உணர்ச்சியைத் தூண்டும் வண்ணம் பேசும் திறமையான பேச்செல்லாம் முடிவில் அவர்களை ரணக்குழியில் கொண்டுபோய்த் தள்ளிவிடுவதற்காகத்தான். சமூக நாசத்திற்கு இது ஒரு சூழ்ச்சி போலும்!

"படைப் பலத்தைக் கொண்டு இரு பெரிய நாடுகள் யுத்தத்திலிறங்குகிறதே! முடிவில் அவைகள் காணும் பயன் தானென்ன? ஒன்று வெற்றி; அல்லது தோல்வி. எவர் பக்கம் தர்மம்; எவர் பக்கம் அதர்மம்; யார் நீதிக்காக அல்லல்பட்டது என்ற உண்மை வெளிப்படுகிறதா? சற்று சிந்தியுங்கள். சர்வமும் ஒரே நாசகோலம்தான். நீரோடையின் கீழ்ப்பாகத்தில் தாகம் தீர்த்துக்கொண்டிருந்த இளம் ஆட்டுக் குட்டியிடம், மேல் பாகத்தில் நின்றிருந்த ஓநாய் வம்பு பேசி வலுச்சண்டைக்கிழுத்து, அதன்மேல் பாய்ந்து கொன்று தின்றதே, அந்த ஆட்டுக்குட்டியின்பால் நியாயம் நிலைத்ததா? ஓநாயின் பக்கம் அக்ரமம் ஓங்கியதா? ஆகையால்

மிருக பலத்தினுல் நடக்கும் ஒரு போராட்டத்தில் நியாய அநியாயத்தைக் காணமுடியாது. ஆனுல் ஒன்றை மட்டும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். எவன் பலவான், எவன் பலஹீனன்; எவனிடம் சேனைபலம் அதிகம், எவனிடம் குறைவு; இது தான்! இதைத் தெரிந்துகொள்ளுவதற்குத்தானு இவ்வளவு நாசம்? இவ்வளவு நஷ்டம்? இவ்வளவு விபயம்? இதுதானு தர்மம்? இதுதானு மாதாவின் கண்ணீரைத் துடைக்க நாம் செய்யும் பரிகாரம்?

"அவ்விதம் தன் மிருக பலத்தைத் தெரிந்துகொண்ட பின்பும் அந்த 'வெற்றி' யடைந்த நாடு தன் யுத்தத்தை நிறுத்திவிடுகிறதா? அமைதியாக வாழ முயல்கிறதா? மேலும் மேலும் நாடு பிடிப்பதிலேயேதானே நாட்டமாயிருக்கிறது. 'தோல்வி' யடைந்த நாடாவது தன் தோல்வியை நினைந்து அத்துடன் போரை நிறுத்துகிறதா? அதுவுமில்லை. பழிக்குப் பழி வாங்க படைப் பலத்தை முன்னினும் அதிகமாக்கிக் கொண்டு எதிரியைத் தாக்க தக்க தருணத்தை எதிர்நோக்கியே யிருக்கிறது. இதோ நம்மிடமும் மூன்றுமுறை தோற்றோடிய மீவார் மன்னன் மறுமுறையும் படையெடுத்து வரப்போவதாகச் செய்தி யனுப்பியுள்ளான். கடந்த யுத்தங்களில் அவனடைந்த கஷ்டமும் நஷ்டமும் அவனைத் தடுத்துவிட்டதா? இப்படியாக அதற்கு ஒரு முடிவே யில்லாமல் அக்கொலைப் பைசாசத்திற்கு சமூகமும், நாடும், நாகரிகமும் இரையாகிக் கொண்டே தானிருக்கின்றன.

'தவிர, பஞ்சமா பாதகங்களில் கொலை ஒன்றல்லவா? அதைத் தடுக்க எவ்வளவோ கடின கண்காணிப்பும், தண்டனையும், அரசாங்கத்திலேற்படுத்தியிருக்கிறோமே! ஆனுல் அதே அரசாங்கம் ஒன்றல்ல, இரண்டல்ல எத்தனை நூருயிரம் உடல்களில் அம்பைச் செலுத்தி தலைவேறு முண்டம் வேருக்கி, அவைகளையெல்லாம் குழியில் புதைத்தும், ஆற்றில் எறிந்தும் சுட்டுப் பொசுக்கியும்

நிர்மூலமாக்குகிறதே! அது கொடுமை அல்லவா? இக் கொடுமைக்கு ஆண்டவனிடமிருந்தாவது மன்னிப்புப் பெற நம்மாலாகுமா? யோசித்துப் பாருங்கள்! ஆகையால் மஹாஜனங்களே! ஒருவர் தன்பேச்சு வன்மையால் 'பூர்வீக பரம்பரை வழக்கம்', 'மாதாவின் துயரம்' என்னும காரணங்களைக் காட்டி நம் பகுத்தறிவைச் சிதறடிக்க முனையும் போது, நாம் ஆழ்ந்து யோசித்தே அவருக்கு விடை பகர வேண்டுமேயல்லாது, கட்டுக்கடங்கா உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒரு முடிவிற்கு வந்துவிடக் கூடாது!

"இன்னும் ஒரு முக்கிய விஷயம். நாம் ஜனித்த இந்நிடதத்தை ஓர் மாதாவெனப் போற்றுகிறோம். அவளுடைய மக்களெனப் பெருமை கொள்கிறோம். அதோ, மீவாரையும் பாருங்கள். அங்குள்ள ஜனங்களும் தங்கள் நாட்டை அவ்வாறேதான் கருதுகின்றனர். இவ்வாறே இப் பூவுலகின் கண்ணுள்ள ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தங்கள் நாட்டின் மீதுள்ள பற்றுதலில் நம்மைக் காட்டிலும் தாழ்ந்தவர்களல்லவே! ஆனால் அவர்களெல்லாம் சற்று ஆழ்ந்து யோசித்தார்களானால் 'இப் பரந்த பூமியான அகில லோகமும் ஒரே மாதாதான். அவளே ஜகத் அன்னை. ஆங்காங்கே பல பெயரிட்டு அழைக்கப்படும் நாடுகளெல்லாம் அவளுடைய அங்கங்கள்' என்பதை உணர்வார்கள். மனித சமூகத்திற்கே ஒரே ஒரு மாதா தானே இருக்க முடியும். அப்படியிருக்க மீவார் மக்களுக்கு ஒரு மாதா, நிடத மக்களுக்கு ஒரு மாதா என்று எப்படியாகும்? நம் விசாலமான ஞானக் கண்களைத் திறந்து அவளின் அங்கங்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால அப்போது அப் பூமாதேவியே நமக்கெல்லாம் பொதுவான மாதாவென்பதும், நாமும் மீவார் மக்களும் அவளின் ஒரே புதல்வர்கள் தான் என்பதும் தெளிவாகும். அப்படியிருக்கும்போது மீவாருக்கு மாத்திரம்வரும் நஷ்டத்தை எண்ணி நம்மை ஈன்றெடுத்த அன்னையின் அங்கங்களில்

ஒன்றை ஊனப் படுத்துவதா? நிடதத்தைக் காக்க மீவ ரோடு நாம் போர் புரிய முற்படுவது ஓர் கண்ணைக் காக்க மற்ருெரு கண்ணைத் தோண்டி யெடுப்பதையே ஒக்கும்!

"ஆகையால், பெரியோர்களே, நாம் இது வரையும் குறுகிய மனப் பான்மையோடு கடைப்பிடித்த செயல்களை யெல்லாம் அறவே ஒழித்து இயற்கை யன்னை நர்த்தன மிடும் பூங்காவில் மலர்ந்திருக்கும் ரோஜாக்களிலிருந்து தேனைப் பருகிக் களித்து வாழும் வண்டினங்களைப் போல, ஞானமென்னும் வற்ருச் சுனையிலிருந்து ஊறிவரும் அறி வென்னும் நீரை யருந்தி, இனிய கமழ் வீசும் மலர்கள் மலிந்த நந்தவனங்களிலிருந்து வரும் தென்றலைச் சுவா சித்து கவலையின்றி என்றென்றைக்கும் சாந்தமாக வாழ் வோமாக. அப்போதுதான் நம் ஜகத் அன்னையின் கண் ணீரைத் துடைத்தவர்களாவோம்.

"பெரியோர்களே! நம்மை எதிர்க்க வரும் மீவார் மன் னனும் அவன் குடிகளும் நம் உடன் பிறந்த சகோதரர் கள் என்பதை மனதில்கொண்டு, அவர்களின் நியாய மான உரிமையைப் பகிர்ந்து கொடுத்துச் சாந்தியாய் வாழ் வோமாக! யுத்தம் என்னும் பைசாசத்தை இதோடு இப் பூ மண்டலத்திலிருந்தே விரட்டி யடித்து அதற்கு சமாதி கட்டி முடிப்போம். அதனுல் உலகம் நம்மைப் பெருமைப் படுத்தும்!

"இக் கொள்கைகளை யெல்லாம் ஆதரிக்கிறீர்களா?" என்று நிறுத்தினுள்.

"ஆதரிக்கிருேம்! ஆதரிக்கிருேம்!!" ஒன்று பளிச் செனப் பதிலளித்தது கூட்டம்,

"அப்படியானுல், இதற்கு எதிர்த்துப் பேசுகிறவர் கள், இது நியாயமல்லவென்று சொல்லுகிறவர்கள், எவ ரேனும் உலகத்தில் இனித் தோன்றினுல் அவர்களையெல் லாம் லக்ஷியம் செய்யாமல், நம் தர்மத்தை நிலைநாட்ட

பாடுபடுவோமாக!—ஜெகத் மாதாகி!—ஜே" எனக் கூறி ஜனங்களை வணங்கி முடித்தாள்.

இது வரையிலும் திறந்தவாய் திறந்தபடி அவளது பிரசங்க மாரியைக் கேட்ட ஜனங்களனைவரும் அவள்பால் கொண்ட அன்பின் பெருக்காலும், அவள் பிரசங்கத்தில் தங்களையே பறி கொடுத்தவர்களாயுமிருந்து கடைசியாக தங்கள் சம்மதத்தை நீண்ட கரகோஷம் மூலமாகவும், "மஹாராணிக்கு ஜே! ஜெகத் மாதாகி!!— ஜே" என்னும் வானையெட்டிய கோஷங்களாலும் காட்டினர்.

வீரநாத்தும் அவன் சகாக்களும் இந்த எதிர்பாராத விபரீதத்தையும், ஜனங்களின் அடக்க வொண்ணாத ஆர்ப்பரிப்பையும் கண்டு, அதற்கு எதிராக ஏதேனும் எழுந்து பேசினால் தங்கள் உயிருக்கே ஆபத்து விளையுமென்று எண்ணி மௌனமாயிருந்து விட்டார்கள்.

பாலகல்யாணி தன் அன்னையார் அவ்வளவு ஆபத்தான சந்தர்ப்பத்தில் சாமர்த்தியமாகவும், தைரியமாகவும் நடந்து கொண்டதை எண்ணி யெண்ணி வியந்தாள். யுத்தச் செய்தி கொணர்ந்த தேவி பாலன் அப்பிரசங்கத்தைச் செவி மடுத்த அதேயிடத்தில் தன் மனதையே முற்றிலும் மாற்றிக் கொண்டான்.

ஜனங்கள் இன்னும் கலையாமல் அசைவற்று அமர்ந்திருப்பதைக் கண்ட மஹாராணி மறுபடியும் எழுந்து "பெரியார்களே! உலக மக்கள் யாவரும் ஒரே தாயின் புத்திரர்கள் என்னும் உண்மை தெளிந்து சாந்தி ராஜ்யம் இச்சகம் முழுதும் ஸ்தாபிக்கும் பாக்கியத்தை இதோ இங்கு கூடியிருக்கும் நம்மனைவருக்கும் கொடுக்குமாறு அன்னையை நோக்கி வணங்குவோமாக" எனக் கூறி கை கூப்பினாள். ஜனங்களனைவரும் எழுந்து, அமைதியாக நின்று வணங்கினர். கூட்டம் முடிந்ததற்கு அடையாளமாக முரசு ஒலித்தது. ராணியார் மேடை மீது காணப்படவில்லை. கூட்டமும் கலைந்தது.

## அத்தியாயம் 20

## "ஐயமுண்டு பயமில்லை மனமே!"

தன் அன்னையின் பிரசங்கத்திலேயே தன் முழு மனதையும் செலுத்தியிருந்த பாலகல்யாணி கூட்டம் முடிந்த பின்னர்தான் தேவி பாலனைச் சந்தித்தாள். இருவரும் முன்பு குதிரை கட்டின இடத்திற்குச் சென்று பேசினார்கள்.

தேவி:—இன்று நான் மஹாராணியை பார்க்க வேண்டுமென்றுதான் வந்தேன். ஆனால் அந்திப் பொழுதாகிவிட்டது. இன்றிரவை இங்கேயே எங்கேனும் கழித்துவிட்டு நாளைக் காலையில்தான் அவர்களைப் பார்க்க வேண்டும். உங்களிருப்பிடம் எங்கே?

பால:—நீங்கள் ராணியைப் பார்க்கவேண்டுமா? ஏன்?

தேவி:—நான் யாரென்று இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லையா? உங்கள் ராணியார் இவ்வளவு நேரம் எந்த மன்னனைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தாரோ அம் மன்னனிடமிருந்தே வருகிறேன்.

பாவ:—'மீ...வா...ர்....."

தேவி:—ஆம், மீவார் மன்னனிட மிருந்துதான். நான் அம்மன்னனின் சேனாதிபதி!

பாலா இதைக் கேட்டதும் உள்ளுக்குள் எழுந்த ஒருவித பயத்தாலும், பகையரசனின் சேனாதிபதியிடம் தான் காதல் கொண்டிருந்ததையும் நினைத்து நடுக்கமுற்றாள். தான் இன்னாரென்று தெரிந்தால் அவன் என்ன நினைப்பானோ என்று யோசித்து வெட்கினாள். அவள் தயங்குவதைப் பார்த்த அவன் ஒரு சமயம் தன்னைப் பார்த்து அவள் சந்தேகம் கொண்டு விட்டாளெனக் கருதி "ஏன் யோசனை செய்கிறீர்கள்? நான் மீவாரிலிருந்துதான் வருகிறேன். இதோ பாருங்கள் என் மன்னனின் முத்திரை.

அவர் உங்கள் ராணியாரிடம் யுத்தச்செய்தியை அறிவித்துவிட்டு வரும்படியே என்னை யனுப்பியிருக்கிறார்" என்று தேவிபாலன் கூறினான்.

"அப்படியானால் யுத்தம் நடந்தேதான் தீருமோ?"

"இல்லை, உங்கள் ராணியாரின் உபந்யாசம் என்னை முற்றிலும் மாற்றிவிட்டது. இவ்விஷயத்தை எங்கள் மன்னனிடம் கூறி அநேகமாய் யுத்தத்தை நிறுத்த முயற்சி செய்வேன்."

"ராணியாரை இப்போதே போய்ப் பார்த்தாலென்ன?"

"இந்த நேரத்தில் பகை யரசனின் தூதர்களை அரண்மனைக்குள் அநுமதிக்க மாட்டார்களே. அது வழக்கத்திற்கு முரண்பட்டதாகும்—"

"நான் அழைத்துச் செல்கிறேன், வாருங்கள்"

"நீங்களா? உங்களால் எப்படி முடியும்"

"நான் அரண்மனையின் அந்தப்புரத்தில் வேலை பார்க்கும் பணிப்பெண்களில் ஒருத்தி. ஆகையால் காவற்காரர்களை யெல்லாம் எனக்கு நன்கு தெரியும்"

"பணிப்பெண்களில் ஒருத்தியா? அப்படியானால் ஏனிந்த உடை மாற்றம்?"

"அதைப்பற்றிப் பின்பு தெரிவிக்கிறேன். வாருங்கள், போகலாம்" எனக் கூறி அவனை அழைத்துக்கொண்டு அரண்மனை நோக்கி நடந்தாள், பாலகல்யாணி. அரண்மனையின் பின்பக்கமுள்ள இரகசிய மார்க்கமாக அவனை உள்ளே நடத்திச்சென்ற அவள், மஹாராணியார் தங்கியிருக்கும் மேன்மாடத்தின் கீழுள்ள ஒரு மண்டபத்தில் இருக்கச்செய்து "நான்போய் உங்கள் வரவை ராணியாரிடம் தெரிவிக்கிறேன்" என்று மேலே ஓடினாள்.

கூட்டத்தில் பிரசங்க மேடையின் சமீபத்தில் வந்து நின்று தன்னைப் பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றிய தன் புதல்வியின் புத்திக் கூர்மையை நினைத்து நினைத்து

புளகாங்கித மெய்தியிருந்த ராணி கூட்டம் கலைந்து வெகு நேரமாகியும் மகள் வராமலிருக்கக் கண்டு அவள் வரவை எதிர் பார்த்து ஏங்கியிருந்தாள். அச்சமயம் கதவு மடா ரெனத் திறந்தது. பாலகல்யாணி விரைந்தோடி அன்னை யிடம் வந்தாள்.

"பாலா, ஏன் இவ்வளவு நேரம்?"

"அம்மா, ஒரு நல்ல விஷயம் கொண்டுவந்திருக்கி றேன்."

"என்ன அது?"

"புலியைக் கொன்ற இடத்தில் சந்தேகித்தோமே அந்த மனிதர் யார் தெரியுமா?"

"அவரைத்தான் இங்கு உன்னோடு அழைத்துவரச் சொன்னேனே?"

"அதோ கீழே வந்திருக்கிறார். அவர் மீவார்தேசத்தி லிருந்து வந்திருக்கிறாராம்."

"மீவாரிலிருந்தா?"

"ஆம். மீவார் மன்னரின் சேனாதிபதியாம். உங்களி டம் தூது வந்திருக்கிறாராம்,"

"மீவாரின் சேனாதிபதி! தூதோலை கொண்டுவந்திருக் கிறானா? உம். என்ன காரியம் செய்தாய்? பகையரசனிட மிருந்து வந்த தூதுவன் என்று தெரிந்தும் இந்த நேரத் தில் அவனை நீ இங்கே அழைத்துவரலாமா?"

"அம்மா, அவரை நான் அந்தக் காட்டில் இன்னா ரென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அங்கேயே என் மனதை அவரிடம் பறிகொடுத்து விட்டேன்!"

"மனதைப் பறிகொடுத்துவிட்டாயா? என்ன பிதற்று கிறாய்? அப்படியானால் உன்னை இன்னாரென அவனுக்குத் தெரிவித்து விட்டாயா?"

"இல்லையம்மா, ஆனால் என் ஆண் வேடம் அவருக்கு எப்படியோ வெளியாகிவிட்டது. நான் அரண்மனைப்

பணிப்பெண்களில் ஒருத்தி என்றுதான் சொல்லியிருக்கிறேன்."

"சரி, நீ போய் உடைகளை மாற்றிக் கொள். நான் அவனை இங்கே வரவழைத்து விசாரிக்கிறேன்."

ராணியின் கட்டளையைத் தாங்கி ஓடிய வேலையாள் ஒருவன் தேவிபாலனை அழைத்துக் கொண்டுவந்து ராணி முன் விட்டுச் சென்றான். அவளை வணங்கிய தேவிபாலனுக்கு அவள் அமரும்படி ஓர் ஆசனத்தைக் காட்டினாள். அவன் வந்த நேரம் சூரியனும் அஸ்தமித்துவிட்டபடியால் அரண்மனை யெங்கும் விளக்கேற்றப்பட்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தன. ராணியார் தங்கியிருந்த மேன்மாட மண்டபத்தின் அலங்காரத்தைக் கண்டு தனக்குள் வியந்து கொண்டிருந்தான் தேவிபாலன். பிரசங்க மேடையில் அவள் செய்த உபந்யாசத்திற்கேற்ப அந்த ஹாலில் சித்திரிக்கப்பட்டிருந்த ஓவியங்கள், அவள் தன் பேச்சில் மாத்திரமன்றி நடைமுறையிலும் அப்படியே செய்து காட்டுபவள் என்பதை அவனுக்கு உணர்த்தியது. தான் வந்த காரியத்தைக்கூட அவளிடம் சொல்ல நாணியிருந்த அவனைக் கண்டு ராணியாரே பேச ஆரம்பித்தார்.

"தாங்கள் இன்னாரென்பதை இங்கு அழைத்துவந்த பணிப்பெண் மூலம் தெரிந்துகொண்டேன். தங்கள் அரசரிடமிருந்து என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறீர்கள்?"

"இதோ, இவ்வோலைச் சுருளில் எல்லாம் இருக்கிறது" என்று ஒரு ஓலையை எடுத்தான் தேவிபாலன். பக்கத்தில் நின்றிருந்த பணிப்பெண் ஒருத்தி அதை ராணியிடம் வாங்கிக் கொடுத்தாள்.

ராணியார் அதைப் பிரித்துப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு, "உம், உங்கள் அரசர் எங்களை யுத்தத்திற்கு அழைக்கிறார். எங்களுடைய பதிலும் உடனே வேண்டுமாம். சற்று நேரத்திற்கு முன் தாங்கள் இந்நகருக்குள்

நுழைந்திருந்தால் இங்கு கூடியிருந்த பிரம்மாண்டமான கூட்டத்தையும், அதில் நான் இந்த யுத்த விஷயமாக அவர்களுக்கு எடுத்துக் கூறிய ரீதியையும் அதற்கு அவர்களின் ஆமோதிப்பையும் நேரிலேயே தாங்கள் பார்த்திருப்பீர்கள்" என்றாள்.

"அதைக் கேட்கும் பாக்கியம் நானும் பெற்றேன்"

"கேட்டீர்களா? மிக்க சந்தோஷம். அப்படியானால் சேனாதிபதியாகிய உங்கள் அபிப்பிராயமென்ன?"

"மஹாராணி! நான் சொல்வதை உண்மையென்று நம்புவீர்களா? பகையரசனிடமிருந்து வந்திருப்பதால் ஏதோ கபடமாகப்பேசுகிறேனென்று நினைத்துவிடதீர்கள். நான் என் மன்னரின் கட்டளையை ஏற்று உங்களை யுத்தத்திற்கு அழைக்கத்தான் வந்தேன். ஆனால் தங்கள் உபதேசத்தைக் கேட்ட நானும் சமாதானப் பைத்தியம் பிடித்தவனாகி விட்டேன். இதுவரை அன்பில்லாக் கல்லினும் கடிய நெஞ்சம் பெற்று எத்தனையோ எண்ணற்ற உயிர்களைப் பழிவாங்கிய மகா ஞானசூனியனாகிய அடியேன் தங்களின் கிருபாகடாட்சத்தினால் குருட்டுப் போக்குகளைக் களைந்து உண்மையறியும் பாக்கியம் பெற்றேன். ஆதலின் நாளைக் காலையே என் நாடு சென்று தங்களின் கொள்கையையே என் நாட்டாருக்கு எடுத்துக் கூறி யுத்தத்தை நிறுத்தக் கிளர்ச்சி செய்வதென முடிவு செய்து விட்டேன். இதனால் எனக்கு என் அரசரின் கொடிய தண்டனை கிடைப்பினும் அஞ்சேன்"

"சேனாதிபதி! இப்போதுதான் என் உள்ளம் குளிர்ந்தது. அதைத்தான் நானும் எதிர்பார்த்தேன். தாங்கள் நாளைக்கே புறப்படவேண்டாம். என் மந்திரிகளிடமும் இதைப்பற்றி ஆலோசிக்க ஒரு சபை கூடும் அதையும் தாங்கள் பார்த்துவிட்டுப் போகலாம். தாங்களும் வெகு தூரத்திலிருந்து வந்திருப்பதால் இரண்டு நாள் தங்கி இளைப்பாறிச் செல்வதுதான் உத்தமம்".

எனக் கூறி ராணி அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் ஏற்பாடு செய்யும்படி பணியாட்களுக்குக் கட்டளையிட்டாள். தேவி பாலன் அவள் விருப்பப்படியே தங்கினான் அரண்மனையில்.

---

## அத்தியாயம் 21

### "காதலினைப் போற்றுங் கவிஞரெலாங் காண்மினோ!"

தேவிபாலன் சயனத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட அறை மிக்க அலங்காரத்துடன் காணப்பட்டது. அறையெங்கும் சரவிளக்குகள் ஜகஜ்ஜோதி மயமாய் பிரகாசித்துக் கொண்டிருந்தன. சந்தன மரத்தாலாகிய கட்டிலின் மேல் பக்ஷிகளின் மெல்லிய இறகுகள் திணிக்கப்பட்ட வெல்வெட்டு மெத்தையும் திண்டுகளும் பரப்பப்பட்டிருந்தன. மூலைக்கு மூலை வைத்திருந்த தூபக்கோல்களிலிருந்து எழுந்த மெல்லிய புகை அறை முழுவதும் நறுமணத்தைப் பரப்பியது.

இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு இராணியிடம் விடைபெற்று இரு பணிப்பெண்கள் பின் தொடர, படுக்கை அறைக்கு வந்து சேர்ந்தான். அறையின் அழகைக்கண்டு அவனே பிரமித்துப்போய் விட்டான். பெண்களிருவரும் அவனுக்கு இருபக்கத்திலும் நின்று சாமரம் விசிறினர். அவர்களை நிறுத்தி, விளக்குகளை யெல்லாம் மங்கலாக்கிவிட்டு வெளியே போகும்படி கேட்டுக் கொண்டான். அவர்களும் அப்படியே செய்து கதவைச் சாத்திவிட்டுச் சென்றனர். அறையின் வெளிப் பக்கத்தில் உருவிய கத்தி தாங்கிய இருவீரர்கள் காவல் புரிந்தனர்.

வந்து தங்கியுள்ள இடம் புதிதாக இருந்தமைபால் அவனுக்கு வெகு நேரம் தூக்கமே பிடிக்கவில்லை. தன்னை

அரண்மனைக்குக் கொண்டுவந்து சேர்த்த பெண் அதற்கப் புறம் தன்னைவந்து சந்திக்காமல் போனதுபற்றி வருத்தப் பட்டான்.

'அவள் எதற்காக அந்தக் காட்டில் ஆண் உடையில் தன் தந்தையோடு வந்து தங்கினுள்? அதைப்பற்றி பின்பு சொல்லுகிறேன் என்று சொன்னுளே. புலியைக் குத்திக்கொன்ற அவள்—ஓர் பணிப்பெண்—அவளே இவ்வளவு வீரமுள்ள நெஞ்சம் படைத்தவளாயிருந்தால் மற்ற இந்நாட்டுப் போர் வீரர்களைப்பற்றிக் கேட்கவா வேண்டும்! அதனுல்தான் என் மன்னன் மும்முறை தோற்று ஓடினுன். அவளை இப்போது இங்கே எப்படிச் சந்திப்பது? அவள் பெயரைக்கூடக் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் போய்விட்டேனே! அவள் ஆண் உடையிலிருந்த போதிலும், அவளது செளந்தர்யம் மேகத்தால் மறைக்கப் பட்ட சந்திரன்போல் பிரகாசித்தது. புலியைக் கொன்ற அதே நெஞ்சுடைய அவள் என்னிடத்தில் எவ்வளவு அன்பொழுகப் பேசினுள்! பேச்சில்தான் எவ்வளவு விதானம்! பெண்களுக்குள்ள அந்தஸ்தெல்லாம் அவளின் நடையிலிருந்தே தெரிகிறதே. என் உள்ளத்தை ஒரு நொடியில் கொள்ளைகொண்டு விட்டாள் அச்சுந்தரி. மஹாராணியாரிடம் இதைத் தெரிவித்தால் அவளை இன்னுளென்று தெரிந்து ஒரு சமயம் என்னிடம் அனுப்பக்கூடும். ஆனுல் அவள் ஏன் ஆண் உடையில் அக்காட்டிற்கு வந்தாள் என்பது ராணிக்குத் தெரிந்தால், என்ன தண்டனை கிடைக்குமோ? ஒரு சமயம் தன் காதலன் எவனையும் சந்திக்கப் போனுளோ என்னமோ? அப்படியானுல் தன் தகப்பனையும் ஏன் தன்னுடன் அழைத்து வந்தாள்? எல்லாம் மர்மமாகவே இருக்கிறதே—' என்று பலவாறு எண்ணமிட்டவனுய் இரவு வெகு நேரத்திற்குப்பின், நீண்ட வழிப் பிரயாணத்தின் களைப்பால் கண் துயின்ருன்.

அவனைப் பிரிந்த பாலகல்யாணியும் அன்றிரவெல்லாம் அவனைப்பற்றியே ஞாபகமாயிருந்தாள். "மீவார் நாட்டுச்சேனாதிபதியென்கிறார். வயதோ இருபத்தைந்துக்கு மேலிருக்காது. இவ்வளவு இளம்பிராயத்தில் அவ்வளவு பெரிய பதவியிலிருப்பதைக் கவனித்தாலே அவருடைய பராக்கிரமமும், புத்திக் கூர்மையும் புலனாகிறது. ஆம், என் அன்னையின் பிரசங்கத்தைக் கேட்டமாத்திரத்திலே தன் அரசனின் கட்டளையைக்கூட லக்ஷியம் செய்யாமல் நியாயத்தையும், தர்மத்தையும் உணர்ந்து தன் நாட்டிற்குச் சென்று அங்கேயும் யுத்தத்தை நிறுத்தக் கிளர்ச்சி செய்வதாக வாக்களித்தாரே. அது ஒன்றே அவரது புத்தி விசாலத்தை விளக்குகிறது. அதனால் தன் அரசனின் கொடிய தண்டனையைக்கூடப் பொருட்படுத்தவில்லை யென்று சொன்னது அவருடைய திடமனதை வெளியாக்குகிறது. என் மனதைக் கொள்ளைகொண்ட அச்சந்திரனை இனி எப்படிச் சந்திப்பது? 'என் மனதை அவரிடம் பறிகொடுத்துவிட்டேன்' என்று சொன்னபோது என் அன்னை 'என்ன பிதற்றுகிறாய்' எனக் கடிந்தார்களே. நான் அவரிடம் கொண்டுள்ள காதலை அவர்கள் அறிந்தால்............ஓர் சாம்ராஜ்யத்தின் இளவரசி, அதன் சிற்றரசனின் சேனாதிபதியைக் காதலிப்பதென்றால், உலகம் என்ன நினைக்கும்? முதலில் என் அன்னைதான் சம்மதிப்பார்களா? அவர்தான் என்னைப்பற்றி என்ன நினைப்பார்?........சரி, விடியட்டும் எப்படியும் அவரைச் சந்திக்கிறேன்............" எனத் தனக்குள் தீர்மானித்தவளாய் தூங்க முயன்றாள். தூக்கம் கொள்ளவில்லை. காதல் தீயால் உடம்பெல்லாம் தகிக்கப்பட்ட அவளுக்கு எப்படி நிம்மதியாய் நித்திரை வரும்? சற்றுதூரத்தில் ஒரு மூலையிலிருந்த வீணை கண்ணில்பட்டது. அதை எடுத்து மீட்ட ஆரம்பித்தாள். அரண்மனையெங்கும் நிசப்தமாயிருந்த அந்நடு நிசியில், அவள் மன அலைகள், அவ்வீணையிலிருந்து எழுந்த

கானத்தின்மூலம் தென்றல் காற்றில் கலந்து மஹாராணி யிருந்த அறைக்குச் சென்றது.

தனது சொந்த மந்திரிகளில் சிலரே தனக்கு விரோத மாகக் கிளம்பித் தன் நாட்டுமக்களிடையே யுத்த மனப் பான்மையைப் பரப்பியதையும், அதன்பின் தான் சென்று அம்மக்களின் மனதை மாற்றியதையும் நினைத்து, அதற்குச் சகாயமாயிருந்த தன் குலதெய்வமாகிய கண்ணனின் கரு ணையை வியந்து வியந்து தன் அறையிலிருந்த அவன் உரு வத்தையே கண்டு மகிழ்ந்துகொண்டிருந்த மஹாராணி வீணையின் கானம் கேட்டுத் திடுக்கிட்டாள். அந்நள்ளிர வில் அது எங்கிருந்து வருகிறதென, சாளரத்தின் ஓரமாய் வந்து நின்று உற்றுக் கவனித்துக் கேட்டாள். வீணையின் கானம் வரவர அதிகமாகிக் கொண்டும், அது சோகத்தின் அறிகுறியைக் கொண்டிருக்கிறதென்றும் உணர்ந்த அவள் முன்னிலும் அதிகமாக ஆச்சரியமடைந்தாள். அரண்மனையில் அவ்வளவு அழகாக வீணையில் பயிற்சி பெற்றவர் யார்? தன் ஏகப்புதல்வி ஒருவள்தான். சந் தடி செய்யாமல் பால கல்யாணியின் அறைக்குச் சென்று கதவருகில் நின்று கவனித்தாள். அவளால் அதைக் கேட் டுக்கொண்டு சகித்திருக்க முடியவில்லை. கதவை மெது வாகத் தட்டினாள். வீணையின் ஒலி நின்றது. கதவும் திறக்கப்பட்டது. திடீரெனத் தன் தாயைக்கண்ட பாலா அச்சமும் பீதியும் கொண்டவளாய், அவளைப் பார்த்து ஸ்தம்பித்துவிட்டாள். அவளது நிலையைக் கண்ட ராணி. கதவை உட்பக்கம் தாளிட்டுவிட்டு பாலாவின் கையைப் பிடித்துக்கொண்டு மஞ்சத்தில் போயமர்ந்து "ஏன் இப் படித் தூக்கமில்லாமலிருக்கிறாய்? இந்நேரத்தில் வீணையை எதற்கு எடுத்தாய்?" எனச் சற்று கோபத்தோடு கேட் டாள். அவள் கேட்ட கேள்வியிலிருந்தே ஒரு சமயம் தன் மனோநிலையைத் தன் அன்னை அறிந்துகொண்டு

விட்டாளோ என்று பாலா நினைத்து நாணமடைந்து தலையைக்கவிழ்த்து ஒரு பதிலும் சொல்லாமலிருந்தாள்.

"பாலா—" என்று தாடையைப் பிடித்து தலையை நிமிர்த்தினான் ராணி, கோபக் குறியை மாற்றிக் கொண்டு.

"ஒன்று மில்லையம்மா. தூக்கம் வரவில்லை. அதனால் தான்—"

"உனக்கு என்ன கவலை வந்துவிட்டது, நானிருக்கும் போது? நம் மந்திரிகள் நமக்கு எதிராக நேற்று நடந்து கொண்டார்களே, அதைப் பற்றியா?"

"அதெல்லா மில்லை யம்மா..."

"பின் என்ன? ஏன் தயங்குகிறாய்? என்னிடம் சொல்வதற்கென்ன.?"

"சொல்வதற்கு பயமாயிருக்கிறதே?"

"பாலா, நான் யார்? என் ஆக்கினைக்கா அஞ்சுகிறாய்? பட்டத்தரசியாயிருந்தாலும் நான் உன் தாய் தானே. நான் பெற்றெடுத்த பெண்தானே நீ. என்னிடம் சொல்வதற்கா உனக்குப் பயம்? பைத்தியமே! தைரியமாய்ச் சொல்."

"சொன்னால் அதன்படி என் எண்ணம் நிறைவேறுமா? என் மனக் கஷ்டம் தீருமா, அல்லது இதற்கும் மேலாகுமா என்றுதான் பயப்படுகிறேன்!"

"பாலா, என்னிடத்தில் உன் குறைகளைச் சொல்லாமல் பின் யாரிடத்தில் சொல்லப்போகிறாய்? பயப்படாமல் சொல்லம்மா...பாலா"

"நேற்றே சொன்னேன்; அப்போதே தாங்கள் அதட்டினீர்கள்—"

"நேற்றுச் சொன்னாயா!."

"நேற்று நான் அழைத்துவந்தேனே? அந்த மீவார் தேச சேனாதிபதி........"

ராணி சற்று யோசித்தாள். விஷயம் விளங்கிவிட்டது. முந்தின நாள் அவளிடம் பாலா "அவரிடம் என்

மனதை பறிகொடுத்து விட்டேன்'' என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அவளுக்குக் கோபம் குமுறியது. அதை அடக்கிக்கொண்டு, வெளிக்குக் காட்டாமல், பாலாவையே பார்த்து மேலும் யோசித்துக்கொண்டிருந்தாள். அவளிடமிருந்து என்ன பதில் பிறக்குமோ என்று புத்திரி கதி கலங்கிப் போயிருந்தாள்.

ராணி மௌனம் கலைந்தாள்.

"கல்யாணி, நான் இவ்விஷயத்தில் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவனோ நமக்குக் கப்பம் கட்டி, நமக்குக் கீழிருந்துவரும் பல சிற்றரசர்களில் ஒருவனிடம் சேனாதிபதியாக இருக்கிறான். அவனிடம் சாம்ராஜ்யத்திற்கு அடுத்தபடி அரசியாக வரப்போகும் நீ, காதல் கொண்டுவிட்டாய் என்று நம் நாட்டு மக்கள் கேள்விப்பட்டால் எவ்வளவு கேவலமாய் நினைப்பார்கள்? பரம்பரையாய் ஆண்டுவந்த சந்திர குல வம்சத்திற்கே ஒரு இழுக்கல்லவா?.. கல்யாணி, நான் ஒன்றும் உனக்கு அதிகமாய்ச் சொல்லமுடியாது. அறிவிற்சிறந்த நீயே அவனிடம் உன் மனதைப் பறிகொடுத்துவிட்டாய் என்கிறாய். காதலின் வேகத்தையும், அதை மற்றொருவர் தடுப்பதால் நேரும் விபரீதத்தையும் உலகத்தில் கண்ணாரக் கண்ட நான், உன் விஷயத்திலும் குறுக்கே நிற்க இஷ்டப்படவில்லை. ஆனால் அவனும் உன்னை அப்படி மனப்பூர்வமாக நேசிப்பானாகில் எனக்கு ஒரு தடையுமில்லை'' என்று கூறிவிட்டு அவள் பதிலுக்குக்கூடக் காத்திராமல் சட்டென அறையைவிட்டு வெளியே போய்விட்டாள் ராணி.

அவள் பதிலைக் கேட்டு அப்படியே அசைவற்றுப் போன கல்யாணி அவள் சென்ற வெகு நாழிகைக்குப் பின்புதான் சுய உணர்வு வரப்பெற்றவளாய் அதைக் குறித்து பலவாறு எண்ணமிட்டுக்கொண்டே நித்திரையின்றி அன்றிரவைக் கழித்தாள்.

---

## அத்தியாயம் 22

### "பாரதத் திடையன்பு செலுத்துதல் பாபமோ?"

மஹாராணி தன் சாமர்த்தியமான பேச்சு வன்மையால் மருங்காபுரி மக்களின் மனதை யெல்லாம் தன் பக்கம் திருப்பியது பிரதம மந்திரி வீரநாத்துக்கும், சேனாதிபதி அமரநாத்துக்கும், அவன் சகாக்களுக்கும் பெரிய அவமானத்தை யுண்டுபண்ணி விட்டது. நீடை மக்களை தங்கள் பக்கம் திருப்பி மீவாரோடு போர் புரியும்படி செய்ய வேண்டுமென்று அவர்கள் நினைத்ததெல்லாம் பயனற்றுப் போய்விட்டபடியால் அதற்குமேல் என்ன செய்வதென் பதைப்பற்றி ஆலோசிக்க பிரசங்கம் முடிந்த அன்றிரவே வீரநாத்தின் மாளிகையில் அவர்கள் கூடினார்கள் வீரநாத் தன் சகாக்களை நோக்கி மிகுந்த ஆவேசத்தோடு கூறினான் :—

"சகோதரர்களே! நம் மஹாராணிக்கு நான் எவ்வளவோ எடுத்துக்கூறி விட்டேன் அவர்கள் மேல் தனிப்பட்ட வெறுப்பு ஒன்றுமே இல்லையென்பதை எல்லோருமே ஒப்புக் கொள்வீர்கள். நாம் பிறந்த நாட்டை பிற நாட்டான் சூறையாடவரும்போது அவனோடு எதிர்த்துச் சண்டை செய்யாமல் சமாதானம் செய்து கொள்வதென்பது பேடித்தனமாகும். ராணியார் சொல்லும் சமாதானத்தை யெல்லாம், கேவலம் படிப்பு வாசனை யறியாத, அறிவிலிகளாகிய நம் நாட்டார்கள் கேட்டு சம்மதித்து விட்டார்கள் அவர்களுக்கு என்ன தெரியும், பாவம் பாமரர்கள்! ஆனால் தேச பக்தி கொண்ட எந்த மனிதனும் இதற்குச் சம்மதிக்கவே மாட்டான். என் இரத்தம் துடிக்கிறது. பிரதம மந்திரி பதவியில் நான் இருக்கும் இந்தச் சமயத்தில், ரவிவர்மன் வந்து நம் நாட்டைப் போருக்கு அழைக்கையில், மஹாராணிக்காக நான் மௌனம் சாதித்தால் உலகம் என்ன சொல்லும்? நம்

சகோதரராகிய அமரநாத், வீர இளஞ்சிங்கம், சேனைத் தலைவராயிருக்கும் போது நமக்கென்ன பயம்! இந்த ராணிக்கு முன் எத்தனை பேரை நாம் சந்திர வம்சத்தில் பார்த்திருக்கிறோம்? ஆனால் இவர்களோ கோழையாக மாறி விட்டார்கள். இனி அவர்களை லக்ஷியம் செய்யாமல் நம் வழியைப் பின்பற்ற வேண்டியதுதான் தேச பக்தர்களாகிய நம் கடமை. ராணியார் அதிலும் குறுக்கிட்டால், அவர்களை வீழ்த்தியேனும், சிம்மாசனத்தினின்று விரட்டியேனும், நம் நாட்டின் கௌரவத்தை நிலை நாட்டுவதே நமது முக்கிய நோக்கம், இதற்கு உங்களுடைய ஒத்துழைப்புத் தான் மிக மிக அவசியம். என்ன சொல்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டான்.

"தங்கள் முடிவுதான் சரியானது. அதை நிறைவேற்ற நாங்கள் கிஞ்சிற்றும் தயங்கவில்லை. ஆனால் நாம் செய்த இந்த முடிவை மஹாராணிக்கு ஒரு மகஜர் மூலம் கடைசியாக எச்சரித்து விட்டு நாம் படை திரட்ட வேண்டியது தான். வேறு வழியில்லை" என அமரநாத்தும் பதிலளித்தான். அதன்படியே ஒரு நீண்ட மகஜர் தயாரிக்கப்பட்டது. அதை சேனாதிபதி அமரநாத்தே நேரில் ராணியிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதன் படியே மறுநாட் காலை அவன் ராணியைக்கண்டு மகஜரை அவளிடம் சமர்ப்பித்தான்.

அமரநாத்துக்கு ஆசனம் நல்கி ஓலைச் சுருளைப்பிரித்துப் படித்தாள் ராணி. ஒரு பெரு மூச்சுவிட்டு அமரநாத்தை நோக்கிச் சொன்னாள்.

"வீரனே! நேற்று நீயும்தானே பிரசங்க மேடையிலிருந்து நம் மக்களின் மனோபாவத்தைக் கண்டாய். அப்படியிருக்க மறுபடியும் இம் மாதிரி யுத்தத்திற்குத் தயாராவது ஏன் என்று எனக்கு விளங்கவில்லையே? அரசாங்கம் குடிகளுக்காக ஏற்பட்டதா, குடிகள் அரசாங்கத்திற்காக ஏற்பட்டதா? காலஞ் சென்ற நம்

சக்ரவர்த்தியின் கீழிருந்து எவ்வளவோ அநுபவம் பெற்ற நீகூட இவ்விதம் வீரநாத்தோடு சேர்ந்துகொண்டு இம் மகஜரில் கையெழுத்திட்டிருப்பது ஏன்?"

"தேவமாதா! எனக்கு தங்கள் மேல் தனிப்பட்ட வெறுப்பு ஒன்றுமே இல்லையென்பதை மிக்க தாழ்மையாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் நேற்றுச் செய்த உபந்யாசம் ஒரு விதத்தில் ஒப்புக் கொள்ளக் கூடியதாயிருந்தாலும் தேசமிருக்கும் இந் நிலையில் பிற நாட்டானுகிய அந்த ரவிவர்மனிடம் சமாதானமாய்ப் போவது எங்களுக்குப்பிடிக்கவே இல்லை. இந்தஒரு முறை, கடைசித் தடவையாக அவனைப் போர்க்களத்தில் துவம்சம் செய்து அவன் நாட்டையே கைப் பற்றிக் கொள்வதென்ற முடிவிற்கு நாங்கள் வந்து விட்டோம். போர்க்களத்தில் மடியும் வீரர்களுக்காகத் தாங்கள் பச்சாத்தாபப்பட்டு அவனிடம் இப்போது சமாதானம் செய்து கொண்டீர்களாகில் அடுத்தபடியாக ஏனைய சிற்றரசர்கள் ஒவ்வொருவரும் இப்படியே போருக்குத் தொடங்கி விடுவார்கள். வணங்கா முடி தரித்து பரம்பரையாக, தொன்று தொட்டு அரசாட்சிசெய்துவந்த சந்திரகுலவம்சத்திற்கே அது ஒரு பெரிய இழுக்காகிவிடும். அதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தயை செய்து இந்த ஒரு யுத்தத்திற்கு மாத்திரம் எங்களுக்கு உத்திரவு கொடுங்கள். நாங்கள் கொண்டுள்ள முடிவை இனி மாற்றவே முடியாது என்பதை அறிவிக்கத்தான் இங்கு வந்தேன்... ......" என்று சுருக்கமாகக் கூறினன் அமரநாத்.

ராணி யோசித்தாள். அவர்கள் மனத்தைத் திருப்புவது பெருங்கஷ்டமான காரியம் என்று அவள் மனதில் பட்டது. எனினும் அவள் தயங்கவில்லை. கடைசியாக மந்திரிகளை யெல்லாம் ஒருங்கே யழைத்து மீவாரின் சேனுதிபதி தேவிபாலனின் அபிப்பிராயத்தையும் அவர்கள்

முன்னிலையில் எடுத்துக் கூற அவள் ஆவல் கொண்டாள். அதன்படியே அமரநாத்திடமும் சொன்னாள்.

"அமரா! நாட்டு மக்களெல்லாம் யுத்தத்தை எதிர்க்கும் போது, அரசாங்கத்திற்குத் தூண்களாக விளங்கும் நீங்களோ யுத்தத்தை ஒரு முகமாக ஆதரித்து நிற்கிறீர்கள். இது எதற்கு அறிகுறியோ அறியேன். நேற்று மீவாரிலிருந்து சேனாதிபதி தேவிபாலன் இங்கு வந்து தங்கி யிருக்கிறான். அவன் அபிப்பிராயத்தையும் நாம் கேட்போம். தன் அரசன் யுத்தத்தையே விரும்புகிறான் என்று அவன் கூறினால் உங்கள் இஷ்டப்படியே படையைப் பெருக்கலாம். இதைப்பற்றி நாளை நாம் அனைவரும் கொலு மண்டபத்தில் கூடி ஆலோசிக்கலாம். வீரநாத்திற்கும் இதைத் தெரிவித்து நாளைக்கு ஆலோசனை மண்டபத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அது தான் கடைசி வழி" எனச் சமாதானம் கூறி அனுப்பி விட்டாள்.

அமரநாத்தும் தாங்கள் கொண்ட எண்ணம் அநேகமாய்க் கைகூடும் என்றே மனதில் மகிழ்ச்சி கொண்டவனாய் ராணியிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு வீரநாத் முதலிய தன் சகாக்களைச் சந்தித்து "மீவாரின் சேனாதிபதி தேவி பாலனே இப்போது இங்கு வந்திருக்கிறானாம். அவன் அபிப்பிராயத்தையும் கேட்டுக் கொண்டு ராணியார் யுத்தத்தைப் பற்றி முடிவு செய்யலாம் என்கிறார்கள்" என்றான்.

"தேவி பாலனா வந்திருக்கிறான்? திடீரென்று அவன் வரக்காரணமென்ன? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. சரி, சகோதரர்களே! அவன் முன்னிலையில் நம் சேனையின் பலத்தை எடுத்துக் காட்டி எப்படியும் அவனைப் போருக்கு அழைத்து நடத நாட்டின் வெற்றியை நிலை நாட்டுவோம். ராணியார் விருப்பப்படியே நாளைக்கு சபா மண்டபத்தில் அனைவரும் ஒருங்கு சேருவோம். அங்கேயும்

ராணியார் தன் உபதேசத்தை ஆரம்பித்தால் நாம் நேற்றிரவு செய்த முடிவுப்படி அவர்களை வீழ்த்த வேண்டியது தான் நம் கடமை. வேறு வழி ஒன்றுமில்லை. நாளைக்குக் கூடும் கொலு மண்டபத்தின் வெளியில் ரகசியமாக ஒரு பலத்த சேனையை நிறுத்திவை. ஒன்றும் யோசிக்க வேண்டாம். இந்தச் சமயத்தை நாம் நழுவவிட்டால் நம் எண்ணம் கைகூடப் போவதில்லை. தேவிபாலனை இங்கேயே சிறைப்படுத்தி மீவாரைப் போருக்கழைப்போம். வேலை துரிதமாய் நடக்கட்டும்" என எச்சரித்தான் வீரநாத். அதன்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு அமர்நாத்தும் விடை பெற்றேகினன். மற்றவர்களும் பிரிந்தார்கள்.

---

## அத்தியாயம் 23

### "பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே, இன்பமே!"

தேவிபாலன் மருங்காபுரியில் வந்து தங்கிய மறுதினம் மாலை அரண்மனையின் பூங்காவனத்தினுள் நுழைந்து பார்த்தான். உலகத்தின் பல்பாகங்களிலுள்ள விதவிதமான செடிகளையும், கொடிகளையும், விருக்ஷங்களையும், அவைகளில் கொத்துக் கொத்தாகவும், சரஞ்சரமாகவும், தொங்கும் பூக்களையும், குலைகுலையாய்க் காய்த்திருக்கும் கனிகளையும் கண்டு, பூவுலகில் ஒரு தெய்வலோகத்தை இந்த ராணியார் உண்டுபண்ணியிருக்கிறார் என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, ஒவ்வொன்றையும் உன்னி உன்னிப் பார்த்து உளம் பூரிப்புற்றவனாய் உலாவிக் கொண்டிருந்தான். தன்னையே அக்காக்ஷிகளில் பறிகொடுத்த அவன், அந்த விசால நந்தவனத்தில் அரண்மனையை விட்டு வெகு தூரம் வந்துவிட்டான். சற்று இளைப்பாறலாமென்று கருதி அமர்வதற்கான ஒரு இடத்தை சுற்றிலும் பார்த்தான். கண்ணுக்கெதிரே ஒரு

லதாக்கிரஹமிருந்தது. அங்கு சென்றான். அங்கே அவன் கண்டகாக்ஷியில் அவன் கண்களையே நம்ப முடியவில்லை. ஸ்படிகக் கற்களாலாகிய ஓர் சிறு தடாகம். அது நிறைய கரேலென்ற நீர். அதையெல்லாம் ஏகமாய்மறைத்துப் படர்ந்திருந்த தாமரை இலைகள். அவைகளிலிருந்து தலைநீட்டிய காம்புகளில் வெண்மை நிறமும், செம்மையுமான புஷ்பங்கள். இந்த அழகையெல்லாம் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள், அதன் மத்தியில் இடுப்பில் குடந்தாங்கி நின்ற ஒரு கன்னிப்பெண். "தான் எதற்காக குளத்திற்கு வந்தோம் என்பதைக்கூட மறந்து இவ்வழகில் ஈடுபட்டு நின்றுவிட்டாளா? அவளும் என்னைப் போல ஒரு பைத்தியம் போலும்!" என்று எண்ணிய தேவி பாலன் கண்ணைக் கசக்கிக்கொண்டு மறுபடியும் அவளை நோக்கினான். அவள் அசையாமல் நின்றுகொண்டேயிருந்தாள். "என்ன சிலைதானா இது? நான் நினைத்தது சரியாகவிருக்கிறது. தெய்வலோகத்தை சிருஷ்டி செய்த ராணி அதில் ஒரு தேவகன்னியை சிருஷ்டித்து விட்டார்!" எனக் கூறிக்கொண்டே அத்தடாகக் கரையிலுள்ள ஒரு சித்திர மண்டபத்தில் வந்தமர்ந்து அச்சிலையையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னால் யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பினான். இரண்டு பணிப்பெண்கள் அவனை நோக்கி வரக்கண்டு, தன்னை அரண்மனைக்கு நடத்தி வந்தவள்தான் வருகிறாளோவென ஆவல்கொண்டு கவனித்தான். அவர்கள் நெறுங்க நெறுங்க அவன் எண்ணியது தவறென உணர்ந்தான். வந்த இருவரும் அவனை வணங்கி "ஸ்வாமி, இளவரசியார் உங்களைப் பார்க்க வருகிறார்கள், உங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்கள்" என்றனர்.

"இளவரசியா என்னைப் பார்க்க வருகிறார்கள்?" என்று ஆச்சரியத்தோடு அவன் கேட்டான்.

"ஆம் ஸ்வாமி! அதோ அவர்களும் வந்துகொண்டிருக்கிறார்கள்" என்று சற்று தூரத்தில் சுட்டிக் காட்டினார்கள். அவனும் அத்திக்கை நோக்கினான். நான்கு தோழிகள் இருபக்கத்திலும் வர அவர்கள் மத்தியில் அவள் வந்து கொண்டிருந்தாள். அந்திப்பொழுதின் மஞ்சள் வெய்யில் அவளது பொன்னிறமேனியில் பட்டு ஒரு ஜோதியைப் பரப்பியது. அதற்கேற்ற மஞ்சள் வர்ணப் பட்டாடை யணிந்து அவள் நடந்து வந்தது 'பூங்கொம் பொன்று நடைபழகி' வந்தாற்போன்றிருந்தது. முகத்தில் புன்னகையும், நாணமும் கொண்டு அவள் தன்னை நோக்கி வருவதைக் கண்டு, அவளை எதிர் கொண்டழைக்க எழுந்து நின்றான். வந்த இளவரசி அவனை மரியாதையாக வணங்க, அவனும் பதிலுக்கு வணங்கி நின்றான் அவளைத் தொடர்ந்துவந்த பணிப்பெண்களும், முன்னால் வந்து அவனுக்குச் செய்தி தெரிவித்தவர்களும் தடாகத்தை விட்டு அவர்களிருவர் கண்ணுக்கும் மறைவான தூரத்தில் போயமர்ந்து விட்டார்கள்.

"ஏன் நிற்கிறீர்கள்? அப்படி உட்காரலாமே" என்றாள். அவனும் மறுவார்த்தை பேசாமல் தன் புன்னகையால் ஆமோதித்தவனாக உட்கார்ந்தான். அவள் அவன் எதிரில் அமர்ந்தாள். இருவரும் வெகுநேரம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்றே தெரியாமல் மௌனமாயிருந்தனர்.

"தாங்கள் எங்கள் அரண்மனைக்கு வந்து இரண்டு நாளாகியும் இன்றுதான் உங்களை சந்திக்க முடிந்தது" என்று அவளே முதலில் பேச்சை ஆரம்பித்தாள். அவள் பேச்சைக் கேட்டதும் அதற்கு முன்பு அம்மாதிரிக் குரலை எங்கோ கேட்டநினைப்பு பளிச்சென்று ஞாபகம் வந்தது! அதைக் காட்டிக்கொள்ளாமல் "மஹாராணியாரிடம், வரப்போகும்யுத்தம் விஷயமாகப் பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தபடியால் நானும் உங்களைப்

பார்க்க முடியாமல்போய் விட்டது. நாளைக்கு நான் ஊருக்குத் திரும்பிச் செல்லுகிறேன். போகுமுன் உங்களைப் பார்க்கலாம் என நினைத்தேன். தாங்களே வந்து விட்டதைக்கண்டு சந்தோஷமடைகிறேன்" என்றான்.

"முகத்தில் என்ன, காயம் பட்டிருக்கிறதே?' என்றாள் வியப்போடு.

"இது உங்கள் நாட்டிற்குள் நுழைந்தபோது ஏற்பட்டதுதான்" என்றான்.

"எங்கள் நாட்டிலா? யார் தாக்கியது உங்களை?"

பதில் சொல்லத் தயங்கினான் தேவிபாலன்.

"தயங்காமல் சொல்லுங்கள். எங்கள் நாட்டில் உங்களைத் தாக்கியவன் எவனாயிருந்தாலும் இதே கணத்தில் என் அன்னையாரின் வாளுக்கு இரையாகும்படி செய்கிறேன்" என்று கோபமாய்க் கூறினாள்.

"என்னைத் தாக்கியது மனிதனல்ல. ஒரு புலி!"

"புலியா? எங்கே?"

"அச்சமயத்தில் உங்கள் அரண்மனையில் வேலை பார்க்கும் ஒரு பெண் அங்கே இருந்திராவிட்டால் இன்று இப்படி உங்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்காது."

"தாங்கள் சொல்லுவது சரியாய்ப் புலனாகவில்லையே! எங்கள் நாட்டில் புலி வந்துதாக்க, அதை அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி வந்து தடுக்க,.........ஆச்சரியமாயிருக்கிறதே தாங்கள் சொல்வது!"

"இளவரசி, உங்களிடம் இதைப்பற்றி நான் விபரமாய்ச் சொல்லப் புகுந்தால், என் உயிரைக்காத்த அப்பெண்ணுக்குத் துரோகம் செய்தவனாவேன். ஆகையால் .........."

"ஏன் அபபடி நினைக்கிறீர்கள்? உங்களுக்கு உதவி செய்த அவளைக்கண்டு நான் மகிழ்ச்சியடைய வேண்டாமா? எங்கள் அரண்மனையிலும் அவ்வளவு வீரமுள்ள

ஒருத்தி அதுவும் பணியாளர்களில் ஒருத்தி இருக்கிறுளென்ருல் அது எங்களுக்குப் பெருமையல்லவா ?"

" ஆம். அவள் வீரத்தை மெச்சி அவளுக்குத் தகுந்த பரிசைக்கொடுக்க வேண்டுமென்றுதான் நானும் நினைத்தேன். ஆனல் அவளோ என்னை இந்த அரண்மனையில் கொண்டுவந்து சேர்த்ததும் என் கண்ணில் படாமல் போய் விட்டாள்.''

"அவள் பெயரையாவது உங்களிடம் சொன்ளை ?"

" இல்லையே, நானும் அவளிடம் கேட்க மறந்துவிட்டேன். அதைப்பற்றி நினைத்து இப்போது மிக்க வருத்த மடைகிறேன் "

"அரண்மனையிலுள்ள அத்தனை பணிப் பெண்களையும் உங்கள் முன் வரச்செய்கிறேன். அவர்களில் அவளை இப்போது அடையாளமாவது தெரிந்து சொல்ல முடியுமா ?"

"முடியும்; ஆனல் –"

"ஆனல், என்ன?"

"அவள் அன்று பெண் உடை தாங்கியிருக்கவில்லை; வாலிபனைப்போல உடை தரித்திருந்தாள்."

"அவளோடுகூட வேறு யாருமில்லையா?"

"அவளது தந்தை ஒருவரிருந்தார்."

"ஓஹோ! இப்போது தெரிந்துவிட்டது. அரண்மனையிலிருந்து ஒருத்தி அடிக்கடி அப்படி மாறுவேடத்தில் செல்வதை நானும் பல முறை அவளறியா வண்ணம் கண்டிருக்கிறேன். உம், அவளுக்குத் தாங்கள் என்ன பரிசளிக்கப்போகிறீர்கள் ?"

"என் உயிரைக் காப்பாற்றிய அவளுக்கு என் உயிரையேதான் பரிசாகக் கொடுக்கவேண்டும்."

"அதில் அவளுக்கென்ன பயன்?"

"அவள் எதைக் கேட்கிருளோ அதையே கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். உங்களன்னை யார் உத்திரவு கொடுத்தால் அவளை என்னுடன் என் நாட்டிற்கே அழைத்துச் செல்வேன்"

"இப்போது சொல்வதெல்லாம் உண்மைதான? அல்லது......"

"இளவரசி! தாங்கள் அப்படி நினைக்காதீர்கள். மீவாரின் சேனதிபதி இதுவரை வாக்குத் தவறியதே இல்லை. என் உயிரைக் காத்து ரக்ஷித்த அவளிடத்திலா வார்த்தை மீறுவேன்? அதிலும் நிடத சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் அடுத்தபடியாக அமர்ந்து அரசாட்சி செய்யப்போகும் உங்கள் முன் சொன்ன சொல்லை நிறைவேற்ருமல் போவேனு? இளவரசி, அப்பெண்ணைச் சீக்கிரம் அழைத்துவரச் செய்யுங்கள். அவளைக் காணுமல் இந்த இரண்டு நாட்களும் என் மனம் சாந்தியடையவில்லை."

அப்படிச் சொல்லி முடிக்கையில் அவன் முகத்தில் கவலைக்குறி தோன்றியது, ஒரு சமயம் தன்னுல் அப்பெண்ணுக்கு ஏதேனும் துன்பம் நேருமோவென்று.

"இதோ அவளை நானே சென்று அழைத்து வருகிறேன்.' என்று அங்கிருந்து விரைந்து பணிப்பெண்களிருந்தவிடம் சென்ருள்.

இளவரசி தன்னை எதிர்பாரா வண்ணம் வந்து சந்தித்ததே தேவிபாலனுக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது. இப்போது புலியைக் கொன்று தன்னைக் காப்பாற்றி, தன் உள்ளத்தையும் கொள்ளைக் கொண்டு சென்ற அவ்வீரப் பெண்ணைச் சந்திக்கப்போவதை நினைந்து நினைந்து மட்டில்லா மகிழ்ச்சி யடைந்து அவள் வரவையே அதிக ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தான்.

இளவரசி கண் மறைவாகச் சென்று பணிப்பெண்கள் ஏற்கனவே தயாராய்க் கொண்டுவந்திருந்த தனது உடைகளை யணிந்துகொண்டு தேவிபாலன் முன் வந்து நின்றாள். அவளைப் பார்த்தமாத்திரத்திலே அவன் தன்னோடு சற்று நேரத்திற்கு முன் பேசிய இளவரசியே யென்றும், ஆனால் அன்று கானகத்தில் புலியைக்குத்தி மாய்த்த அந்தப் பெண்ணுக்கும் இவளுக்கும் ஒருவித வேறுபாடுமின்றி யிருக்கக்கண்டு, பெருத்த குழப்பத்தை யடைந்தவனாய் அவளையே பார்த்து மௌனமாகிவிட்டான். அவன் நிலையைக் கண்ட அவள், "தாங்கள் என்னை இன்னாளென்று அறிந்துகொள்ள முடியவில்லையா? இரண்டு நாளைக்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்?" என்று ஏளனமாய்ச் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"இளவரசி, தாங்கள் என் மனதைக் குழப்பிவிட்டீர்கள். இன்னும் அதிகமாய் ஏதும் செய்து என் மூளையைச் சிதறச் செய்யாமல், தயவுசெய்து இரகசியத்தை வெளியிட்டு விடுங்கள்......... அன்று இதே உடையில் தோன்றி என்னை ரக்ஷித்தது தாங்கள்தானா?" எனக் கண்ணீர் பெருக நாக்குழறிக் கேட்டான்.

"ஆம், நான்தான்!"

"அப்படியானால் நான் ஏதும் தவறுதலாக அன்று நடந்துகொண்டிருந்தால், இப்போது என்னை மன்னித்து விடுங்கள்".

"மன்னிப்பா? லிடதநாட்டு இளவரசியிடம் தவறிழைத்தவர்கள் மன்னிப்பைப் பெற்றுத் தப்பியது இதுவரை இல்லவே இல்லை. உங்களுக்கும் மன்னிப்புக் கிடையாது!"

"இளவரசி, அன்று நான் என்ன தவறிழைத்தேன்?"

" என், ஞாபகமில்லையோ ? உங்கள் மனது இழைத்த தவறை நான் அறியவில்லையென்று நினைக்கிறீர்களா ? "

" மனதில் நினைப்பதுகூட ஒரு குற்றமா ? "

" சந்தேகமில்லாமல். அதைப் போல குற்றம் வேறொன்றுமே இல்லை இவ்வுலகில் ! "

" நான் என்ன நினைத்தேன்......ஆம்.........உங்கள் மேல்........."

" ஏன் மறைக்கிறீர்கள் ? மீவாரின் சேனையை நடத்தும் திறமைவாய்ந்த உங்களுக்கு இவ்வளவுகூட மனோதிடமில்லையா ? "

" ஆம்.........உங்கள் மேல்..........காதல் கொண்டேன் ! "

" அதுமாத்திரமா ? சற்றுநேரத்துக்கு முன் என்ன வாக்களித்தீர்கள் ? உங்கள் உயிரைக் காத்த அப்பெண்ணை, மஹாராணி உத்திரவு கொடுத்தால், மீவாருக்கே அழைத்துச் செல்வதாகச் சொல்லவில்லையா ? "

" ஆமாம், வாக்களித்தேன், ஆனால்—"

" 'ஆனால்' எல்லாம் வேண்டாம். மஹாராணியாரும் சம்மதித்து விட்டார்கள், இனியென்ன பயம் உங்களுக்கு ? "

" இளவரசி !.........."

" நான் இனி உங்களுக்கு இளவரசியல்ல. என்னை அப்படிக் கூப்பிடவே வேண்டாம். பெயர் சொன்னாலே போதும் ! "

" பெயரை உச்சரிக்க நா எழவில்லையே !.............. பா—ல்—க—ல்—யா—ணி "

"ஹா, இப்போது என்மனம் குளிர்ந்தது, இனி பாலகல்யாணி உங்களது அடிமை. என் உள்ளத்தைக்

கொள்ளைகொண்ட உங்களுக்கு இன்று என் உடலையே சமர்ப்பிக்கிறேன்............"

"பாலா, கொடிய யுத்தச் செய்தி தாங்கி வந்த நான், இந்த இடத்தில் விலை மதிக்க வொண்ணாத மாணிக்கத்தைப் பெறுவேன் என்று எண்ணவே இல்லை. நித்ய தரித்திரனுக்கு நிதிகிடைத்ததுபோலவும், பிறவிக் குருடன் கண் பார்வைபெற்றது போலவும் நான் இன்று இறும்பூதெய்துகிறேன். பாலா, ஒரு சந்தேகம் என் மனதிலெழுகிறது, கேட்கலாமா?"

"இன்னுமா என் உத்திரவிற்குக் காத்திருக்க வேண்டும்? தாராளமாய்க் கேளுங்கள்."

"அன்று கானகத்தில் உன்னோடு கூட இருந்த ஒரு பெரிய மனிதர், உன் தந்தையென்று சொன்னாயே, அவர் யார்?"

"அவர் தான் என் அன்னையார்."

"பாலா, விளையாடாதே; உண்மையைச் சொல்."

"விளையாட்டல்ல ஆண் வேடத்திலிருந்த அவர் என் அன்னையார்தான். நாங்களிருவரும் அவ்விதம் ஆண் வேடத்தில் சென்று வருவது சகஜம். ஏன் கேட்டீர்கள்?"

"என்ன ஆச்சரியம். கொடிய புலியைத் தன்னந் தனியாய் எதிர்த்து நின்று குறிதவறாமல் ஒரே குத்தில் மாய்த்த அதே ராணியார்தானா அன்று மாலையே, யுத்த நிறுத்தத்தைப்பற்றி அவ்வளவு உருக்கமாகப் பேசினார்கள்? பிறவியில் பெண்ணாக இருந்தும், புஜபல பராக்கிரமத்தில் ஆடவர்களையும் தலை குனியும்படி செய்யும் வல்லமை பெற்ற அவர்கள் யுத்த விஷயத்தில் எவ்வளவு இளகிய மனதைக் காண்பிக்கிறார்கள்! 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' என்பதுபோலத்தான் நீயுமிருக்கிறாய். இவ்வித வீரம் பொருந்திய நிடத நாட்டையா என்

மன்னன் எதிர்க்க நினைக்கிறான்? அவன்தான் அப்படி நினைக்கிறானென்றால் மஹாராணியாரின் மந்திரிகளில் சிலர்கூட அவர்களைக் கோழை என்று சொல்லுகிறார்களே!.........!"

"ஆம்; அவர்களுக்கென்ன தெரியும்? அவர்களையெல்லாம் நாளைக்கு ஒருங்குகூட்டி என் அன்னையார் கடைசி முறையாக உபதேசிக்கப் போகிறார்களாம். அதற்காகத்தான் உங்களையும் தங்கியிருக்கச் சொல்லியிருக்கிறார்கள்."

"பாலா, அவர்களது உபந்யாசம் கல்நெஞ்சையும் கரைப்பதாக இருக்கிறதே, உன் மந்திரிகளுக்கு ஏன் அது ஏறவில்லை........." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே இரண்டு பணிப்பெண்கள் ஓடிவந்து "அம்மா, மஹாராணியார் வருகிறார்கள்" என்று பதட்டமாய்ச் சொன்னார்கள். அதைக் கேட்டதும் தேவி பாலனின் முகம் பயத்தால் பீதியடைந்து காணப்பட்டது. பாலா அதைக் கண்டு, "தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவர்கள் உத்திரவு பெற்றுத்தான் வந்திருக்கிறேன்" என்றாள். அதற்குள் ராணியும் அங்கே வந்து விட்டாள். இருவரும் எழுந்து மரியாதையாக வணங்கினர்.

"தேவிபாலா, யுத்தச் செய்தி கொண்டுவந்த உனக்கு ஒரு யுவதி கிடைத்தாள். உங்களிருவர் மனமும் இன்றிருப்பதுபோன்றே என்றென்றும் அன்பு நிறையப் பெற்றிருக்கவேண்டுமென்பதே எனது ஆவல். கண்ணன் அதற்குக் கருணை புரிவானாக. வாருங்கள், போகலாம் அரண்மனைக்கு. இருட்டும் வேளையாகி விட்டதே, இன்னும் காணவில்லையே என்றுதான் தேடிவந்தேன்" எனக் கூறி அவள் முன்னடக்க, அவர்களிருவரும் அவள் பின் தொடர்ந்தனர். பணிப்பெண்கள் அவர்களைச் சூழ்ந்து சென்றனர்.

காதலரிருவரும் கைகோத்துச் செல்வதைக் கண்டு களிப்புற்ற வழியில் நின்ற ஒரு மரம் தென்றலால் அசைக்கப்பட்டு, தன் மலர்களை அவர்கள் மேல் கொட்டியது. எங்கிருந்தோ ஒரு குயில் காதலின் மகத்துவத்தைப்பாடிய கானம் காதலர்களின் காதில் தேனினும் இனிமையாகப் பாய்ந்தது.

---

## அத்தியாயம் 24

### "தவறுசெய்து விட்டாய்—மூடா, தருமங்கொன்று விட்டாய்."

**ம**ந்திரிகள் சபை கூடும் தினம். அதிகாலையிலேயே துயில் நீத்தெழுந்த மஹாராணி ஸ்னானபானாதிகளை முடித்துக்கொண்டு தன் குலதெய்வமாகிய கண்ணன் திருவாலயத்துக்குள் போய் நுழைந்தாள். வழக்கம்போல் சிலைக்கு மாலையிட்டு அதன்முன் முழங்கால் படியிட்டு வணங்கி முறையிட்டாள்.

"கண்ணா! இன்று உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். கருணையங்கடலே, இத்தனை நாளும் காத்து ரக்ஷித்த நீ இன்று என்னைக் கைவிட்டு விடாதே. பதியை இழந்து பல துன்பங்களுக்காளாகிப் பரிதவிக்கும் என்போன்ற விதவைகளின் நிலை உன் கண்முன் படவில்லையா? யுத்த பைசாசத்திற்கு இரையாகிவிடும் அந்த யுவதிகளின் கண்ணீர் உன் நெஞ்சை உருக்கவில்லையா? தீனதயாளா, வேண்டாம்! உலகில் பகைமையே வேண்டாம். ஒருவர் மேல் ஒருவர் துவேஷம் கொள்ளுவதை விட்டு சாந்திப் பிரகாசம் ஜ்வலிக்குமாறு அருள் புரியமாட்டாயா? தீனரக்ஷகா! என் மந்திரிகளின் மனதை மாற்றி அவர்களும் இந்த யுத்தத்தைத் தவிர்க்க முயற்சி செய்யக் கிருபைகூற மாட்டாயா?

"கண்ணா! நீயே எனக்கு வாய்த்த தந்தையும், தாயும் குருவுமாக இருக்கிறாய். உன்னிடம் முறையிடாமல் எனக்கு இவ்வுலகில் வேறு என்ன ஆறுதலிருக்கிறது? ஐயனே! உன்னிடம் ஒன்று கேட்கிறேன். அன்பென்னும் சமுத்திரத்தில் என்னைத் தள்ளி அதில் எந்த நேரமும் நீந்திக் கொண்டிருக்கச் செய்யப்பா. எனக்கு அப்பாக்கியம் கிட்டுமேயாகில், என் மனதிலிருக்கும் த்வேஷம், வேற்றுமை, அழுக்காறு முதலியவைகளெல்லாம் மறைந்து நான் என்றென்றைக்கும், எவ்வெவர்க்கும் உரிமை யுள்ளவளாவேன். அவர்களின் நன்மைக்கே என் ஜீவனை அர்ப்பணம் செய்வேன். பரமாத்மனே! இந்த ஒரு வரத்தையேனும் எனக்கு அருளமாட்டாயா?" எனக் கண்ணீர் மல்க பிரார்த்தித்து அவன் ரூபத்திலேயே தேனுண்ட வண்டைப் போல மயங்கியிருந்து கோவிலைவிட்டு நீங்கினாள்.

அரண்மனைக்கு வந்த அவள் கொலு மண்டபத்திற்குச் செல்ல ஆயத்தமானாள்.

அரண்மனையின் தர்பார் மண்டபம் வழக்கம்போல் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனால் வழக்கத்திற்கு மாறாக இன்று கொலு மண்டபத்தைச் சுற்றி, வெளிப்பக்கமும், உட்பக்கமும், அரண்மனையின் நான்கு கோட்டை வாயில்களிலும் ஆயுதம் தாங்கிய பெருத்த சேனை காவல் புரிந்து நின்றது. குறித்த நேரத்திற்கு முன்பே மந்திரிகளனைவரும் வீரநாத் நீங்கலாக, வந்து அமர்ந்திருந்தனர். வீரநாத், காவல் புரியும் போர்வீரர்களுக்கெல்லாம் ஏதோ இரகசிய எச்சரிக்கை கொடுத்து விட்டு மஹாராணி வர சற்று நேரத்திற்கு முன்பு தான் கொலு மண்டபத்தை யடைந்தான். ராணியார் வரவை முன் கூட்டி அறிவித்துக்கொண்டு வந்தான் உருவியவாள் ஏந்திய ஒருவன். ராணியாரும் அவனைத் தொடர்ந்தே வந்து மண்டபத்திற்குள் நுழைந்தாள். அவள் பின்

பாலகல்யாணியும், தேவிபாலனும் மற்ற பணிப்பெண்களும் வந்தனர்.

ராணிக்கு வலப்புறத்தில் பாலகல்யாணியும், இடப்புறத்தில் தேவிபாலனும் ஆசனங்களில் போயமர்ந்தார்கள். தேவிபாலன் மீவாரின் சேனாதிபதிஉடையிலேயே அங்கு தோன்றினான். முறுக்கிவிட்ட மீசையும், பிரகாசம் பொருந்திய கண்களும், அகன்ற நெற்றியும், படர்ந்ததோளும், விரிந்த மார்பும், தலைப்பாகை தரித்திருந்த கம்பீரமும், இடையில் தொங்கிய வைர மிழைத்த பிடியையுடைய நீண்டவாளும் அவனைப் பார்த்தவர்களிடையே ஒரு தனி மதிப்பை உண்டு பண்ணியது. மந்திரிகளும் மற்றவர்களும் அவனைப் பார்த்து, இவ்வளவு வாலிபப் பருவமுடையவன் சேனாதிபதியாக இருக்கிறானே என்ன பராக்கிரமசாலியோ என்று தங்களுக்குள்ளே எண்ணிக்கொண்டார்கள். அப்போது மஹாராணி எழுந்து "மந்திரிகளே! இவர்தான் மீவார் தேசத்திலிருந்து ரவிவர்மராஜனின் யுத்தச் செய்தியை நமக்குத் தெரிவித்துவிட்டுப்போக வந்திருக்கும் அந்நாட்டுச் சேனாதிபதி!" என்று அனைவருக்கும் அறிமுகப்படுத்தினாள். தேவிபாலனும் எழுந்து சபையில் குழுமியிருந்தவர்களை மிக்க மரியாதையாக வணங்கியமர்ந்தான்.

ராணி, தன் மந்திரிகளையும் மற்ற அரசாங்க நிர்வாகிகளையும் நோக்கிப் பேசலானாள் :—

"மந்திரிகளே! தற்சமயம் நம்நாட்டின் நிலைமை எவ்வாறிருக்கிறதென்பதை அறிவீர்கள். மீவார் தேசம் போருக்குத் தயாராகவிருக்கிறதென்பதை அறிவிப்பதற்காகவே, தன் அரசன் கட்டளையைத் தாங்கி இவர் இங்கு விஜயம் செய்திருக்கிறார். அதிர்ஷ்டவசமாக அன்று நான் நம் நாட்டு மக்களிடம் பேசிய பேச்சை இவரும் கேட்டிருக்கிறார். அதைப்பற்றி அவர் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார் என்பதை அவரே இப்போது உங்கள் முன்னிலை

யில் கூறுவார். அவர் அபிப்பிராயம் ஒரு புறமிருக்க, நம் நாட்டு மக்களனைவரும் யுத்தத்தை விரும்பவே இல்லை யென்பதை தெரிந்து கொண்டோம். ஆனால் மந்திரிகளாகிய உங்களுக்குள்ளேயே மிக்க பொறுப்புவாய்ந்த சிலர் எனக்கு நேர் விரோதமான மனப்பான்மை கொண்டுள்ளதை மிக்க வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியவளாயிருக்கிறேன். அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய ஓலை இதோ இருக்கிறது. அதில் அவர்கள், நாடு யுத்தத்தைத் தான் விரும்புகிறதென்றும், அதனால் படையைப் பெருக்க உடனே என் உத்தரவு வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். நிடத நாட்டில் இரத்த ஆறு ஓடக் காணவேண்டுமென்பதுதான் அவர்கள் வேட்கைபோலும்! அதற்கு என் ஆயுளுள்ளவரை இடங்கொடுக்க முடியாது........" என ஆவேசமாகப் பேசி வரும்போது கோபமடைந்த வீரநாத், "மகாராணி, பலனைக் கோராமல் கர்மங்களைச் செய்வதே கர்ம வீரனின் லக்ஷணமெனத் தாங்கள் போற்றிப் புகழும் பகவத்கீதையே உபதேசிக்கிறதே. அதை இச்சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்' என்றான்.

"வீரநாத், ஆம். நீ சொல்வது சரியே. ஆனால் செய்யத்தகுந்த கர்மம் இன்னின்னதென்பதைத் தெரியாமல் பேசுகிறாய். நகருக்குள் புகுந்து கொள்ளையடிப்பவர்கள், தாங்கள் செய்வதும் கர்மம் என்று கருதினால் அது நியாயமானதா? அதுபோன்றே யுத்தமும் பஞ்சமா பாதகங்கள் அத்தனையும் விளைவிக்கும் ஓர் சாதனம். அதைக் காப்பதா கர்மம்? பிறரின் உரிமையைப் பலாத்காரமாகப் பறிப்பதே திருட்டாகும். அதற்காக நியாயங்களைக் கற்பனை செய்து பேசுவதே பொய். வீரனே! சாத்மீகம், இராஜஸம், தாமஸமென்னும் முக்குணங்களில் மேன்மையான சாத்மீக வீரனாய் விளங்கு. மற்றவைகள் நமக்கு வேண்டாம்" என்று அழுத்தமாகப் பதிலளித்தாள்.

வீரநாத் அதற்குமேல் அவளிடம் என்ன பேசுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது சேனாதிபதி அமரநாத் எழுந்து, "தேவி, பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனவும் தாமஸப் பேய் எனவும் யுத்தத்தை வெறுக்கிறீர்கள். ஆனால் தாங்கள் கூறும் கீதா ரத்னம், கிருஷ்ண பரமாத்மாவால், தங்களைப்போல யுத்தத்தைக் கண்டு பயந்துபோன பார்த்தனுக்கு அந்தப் படுகளத்திலேயே போதிக்கப்பட்டது, அவனைத் தட்டி எழுப்பி யுத்தம் செய்வதற்காகத்தானே! அந்தக் கீதையைப் போற்றும் தாங்கள் அது மகா கர்மமாகிய யுத்த தர்மத்தை மாத்திரம் பஞ்சமா பாதகமென உதறித் தள்ளுகிறீர்களே, இதன் மர்மம் விளங்கவில்லையே?" என்றான்.

ராணி சற்று யோசனைசெய்தாள். வீரநாத்தும் அவன் சகாக்களும் அமரநாத்தின் கேள்வியால் அவள் தோற்கடிக்கப்பட்டாள் எனக்கருதி ஒருவருக்கொருவர் ஜாடைகள் செய்து சிரித்துக்கொண்டார்கள்.

ஆனால் ராணி கூறினாள் :—"அமரா! யுத்தகளத்திலே பரமாத்மா அதை வெகு சூக்ஷ்மமாகச் சொன்னது உண்மையே. ஏனெனில் எதிரில் கடல்போல் குமுறிக்கொண்டிருக்கும் பெரிய சேனையின் முன் அந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணனும், காண்டீபனும் தர்க்கிப்பது சாத்தியமா? அதுவரை எதிரிகள் தான் தாமதிப்பார்களா? சற்று யோசித்துப் பார். வேத உபநிஷத்சாரம், ஆத்ம சுதந்திரபோதம், ஆண்டவனைக் காட்டும் ஜோதி, இவைகளை அக்கொலைக் களத்தில் விரிவாய் எடுத்துரைத்துக் கூறமுடியுமா? அறிவிற் சிறந்த நம் மூதாதையர்கள், தங்கள் கரைகடந்த கவிதா சக்தியைக்கொண்டு பாரதப்போரை வர்ணிக்கும் ஒரு படலத்தில், பஞ்சமா பாதகங்களை எதிர்த்து மனிதன் போராட வேண்டுமென்பதை பரமாத்மா காண்டீபனுக்கு உபதேசித்திருப்பதாக எழுதிவைத்திருக்கிறார்களேயன்றி அவ்விஷயங்களனைத்தும் யுத்தகளத்திலே பேசப்பட்டதென நாம் நினைப்பது தவறு........"

கீதையைப் பற்றியே அவள் பேசிக்கொண்டு போவ தையும், யுத்தத்தைப்பற்றி அவள் கொண்டிருந்த அபிப்பி ராயத்தை மாற்ருமலிருப்பதையுமறிந்த வீரநாத், அமர நாத், மற்றும் அவன் சகாக்களனைவரின் முகமும் ஓர் வித மாறுதலடைந்தன. அவள் பேசுவதெல்லாம் வீரநாத் தின் செவியில் ஏற மறுத்தன. அமரநாத் ஏதோ சமிக்ஞை செய்தான். உடனே வீரநாத் மெதுவாகக் கொலுமண்ட பத்தைவிட்டு வெளியே எங்கேயோ சென்ருன். மஹா ராணியோ அதைக் கவனிக்காமல் பேசிக்கொண்டேயிருந் தாள்.

"........ஆகையால் கீதாசாரத்தின் தத்துவத்தை உலக மெங்கும் பரப்ப முயற்சி செய்வோம். மனிதனைச் சின்ன பின்னப்படுத்த ஏற்பட்ட நூல் அல்ல அது. ஆனல் அவ னைச் சூழ்ந்து நிற்கும் மாய்கை, அசுரத்தனம், அநியாயம், அறியாமை இவைகளை ஒழிக்க ஏற்பட்ட சஞ்சீவி. அதனை நம் வாழ்வில் கைக்கொண்டு என்றென்றைக்கும் சஞ்சலமற்ற அமர வாழ்வு வாழ ஜகத் அன்னை நமக்கு அருள்புரியும்படி பிரார்த்திப்போம். இப்போது நம்மிடம் தூதராக வந்திருக்கும் சேனதிபதி தேவிபாலனின் அபிப் பிராயத்தையும் கேட்போம்..........வீரநாத் எங்கே?" எனக்கேட்டு சுற்றிலும் பார்த்தாள். கூடியிருந்தவர்களில் ஒரு சிலரும் அவன் ஆசனம் காலியாகக் கிடப்பதைக் கண் டார்கள்.

கொலு மண்டபத்தினின்றும் சென்ற வீரநாத். ஏற் கனவே மறைத்து வைத்திருந்த வில்லையும், அம்பராத்தூணி யையும் தோளில் எடுத்து மாட்டிக்கொண்டு மாடிப்படிக ளைத் தாண்டிச் சென்று மண்டபத்திற்கு மேல் தளத்தில் சுற்றிலும் அமைத்திருக்கும் அகன்ற சாளரங்களின் வழி யாக ராணியாருக்கு எதிர்ப்புறத்தில், அவர் கண்ணில் படாதவாறு மறைந்து நின்று கவனித்துக்கொண்டிருந் தான். அவள் பேச்சை நிறுத்தி "வீரநாத் எங்கே?"

எனக் கேட்டு சுற்றிப் பார்த்தபோது அவன் வில்லில் நாணேற்றி அவளைக் குறிபார்த்து "இதோ வீரநாத்!. என்று சப்தமிட்டுக் கூறிக்கொண்டே அம்பை விடுத்தான். அவன் சப்தம் கேட்டு சுழன்று பார்த்த ராணியின் வலது புஜத்தில் 'விண்' எனப் பறந்து சென்ற அம்பு பாய்ந்து விட்டது. 'ஹா!' என எழுந்த குரலையும் அடக்கிக் கொண்டு, இடது கையால் வலப்புஜத்தை அழுத்திக் கொண்டு, அம்புவந்த திக்கில் நோக்கி, "வீரநாத் நீயா?..." என்று கேட்டு முடிக்குமுன் "ஆம், நான்தான்" எனக் கத்திய அவன் மறுபடியும் ஒரு அம்பை நாணேற்றினுன். ராணியருகிலிருந்த தேவிபாலனுக்கு பொறுத்திருக்க முடிய வில்லை. அந்நிய நாட்டின் கொலு மண்டபத்திலிருக்கிற தையும் மறந்து தன் உடைவாளை உருவிக்கொண்டு வீர நாத் நின்றிருந்த இடத்திற்கு புலி போல் தாவிச் சென்று அவன் கையிலிருந்த வில்லை இரு துண்டாகத் துண்டித்து எறிந்தான். வீரநாத்திற்கும், பிறநாட்டினன் ஒருவன் தன் தேசத்தில், தன் சகாக்களுக்கு முன்னிலையிலேயே தன் வில்லை ஒடித்துவிட்டானே என்று ஆவேசம் கிளம்பி விட்டது. அவனும் தன் வாளை உருவிவிட்டான். மறு கணம் வாளோடு வாள் 'பளார், பளார்' என உரசிக் கொண்டன. நிலைமை மோசமாகிவிட்டதை யறிந்த சேனுதி பதி அமரநாத் தன்னிடமிருந்த கொம்பை எடுத்து ஊதி விட்டான். குபுகுபுவென மறைந்திருந்த போர்வீரர்க ளெல்லாம் ஆயுதபாணிகளாய்க் கொலுமண்டபத்தை நோக்கி ஓடிவந்தார்கள். மண்டபத்திலிருந்த மந்திரிகளும் மற்ற நகர்ப் பிரமுகர்களும், நாலா பக்கமும் சிதறி ஓடினுர் கள். வீரநாத்தை தேவிபாலன் மும்முரமாய்த் தாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த சில வீரர்கள், அவனைச் சூழ்ந்துகொண்டு வாட்போர் புரிந்தனர். அவர்களையெல் லாம் ஒவ்வொருவராக வெட்டி வீழ்த்திக்கொண்டிருக்கும் போதே அவன் பார்வையிலிருந்து தப்பிய வீரநாத் ராணி

யைத் தேடி ஓடிவந்தான். ஆனால் அம்பு பாயப்பட்ட ராணி மயக்கமடைந்து கீழே சாயும் தருவாயிலிருந்த போது அருகிலிருந்த பாலகல்யாணி அவளைத் தாங்கி, பணிப்பெண்களின் உதவியைக்கொண்டு அவளை அப்படியே அரண்மனைக்குள் கொண்டுபோய்விட்டாள். அரண்மனையில் எல்லா இடங்களிலும் வீரநாத்தின் ஆட்கள் தயாரா யிருக்கிறார்களெனத் தெரிந்ததும் சாளரத்தின் வழியாக நூலேணியை இறக்கி அதன் வழியாக இறங்கினார்கள் தாயாரும் பெண்ணும்.

தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் துவம்சம் செய்து கொண்டு வரும் தேவிபாலன், ராணியும் பாலாவும் நூலேணி வழியாக இறங்கிவிட்டதைக் கண்டதும், சட்டென அவனும் அதன் வழியாக இறங்கிவிட்டான். பால கல்யாணியின் கட்டளைப்படி ஏற்கனவே அங்கு தயாராக கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த வெண்புரவிகள் பூட்டிய ரதத்தில் மூவரும் ஏறி காற்றினும் கடிய வேகத்தில் அரண்மனை வாசலைத் தாண்டி நகரின் எல்லையை நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள்.

ராணியைப் பல இடத்திலும் தேடிப் பார்த்தும் காணாத வீரநாத், அமரநாத்திடம் விஷயத்தைக் கூறி வீரர்களை அரண்மனை முழுதும் ஒரு இடம் பாக்கியில்லாமல் தேடிவிட்டார்கள் அவர்கள். கிடைக்கவில்லை ராணியார். அந்தப்புரத்திலிருந்த அழகிய பெண்பணிகளெல்லாம் பதைபதைத்து நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். அவர்களையெல்லாம் பிடித்து "ராணி எங்கே, எங்கே?". என்று கேட்ட வீரர்களுக்கு அவர்கள் சரியான பதில் கூறாததால் அவர்களும் வாளுக்குப் பலியானார்கள்'.

ராணியாரைக் காணாத வீரர்கள் அவள் இறந்துவிட்டாள் என்று பிரஸ்தாபம் செய்து விட்டார்கள். அரண்மனையில் இவ்விதம் அமளிப்படும் விஷயம் எப்படியோ நகர் முழுதும் ஒரு நொடியில் பரவிவிட்டது. அவ்

வளவுதான், திரள் திரளாய் திரண்டுவந்து விட்டார்கள் ஜனங்கள். அவர்கள் கையில் தடியும், வேலும், பட்டயமும், உடைவாளும் காணப்பட்டன. அரண்மனை வாசலை யடைந்த அக்கூட்டம் கதவு சாத்தப்பட்டிருக்கக் கண்டு உள்ளே செல்லமுடியாமல் தவித்து வெளியில் நின்று கொண்டே, "எங்கே எம் ராணியார்? லோகமாதா எங்கே? ஏ! ராஜத்துரோகி வீரநாத், எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாய்? வா, வெளியே. ராணியாரைக் கொன்ற உன் கைகளைத் துண்டு துண்டாக வெட்டி எறிகிறோம்" எனப் பலவாறு கதறினர். இதைக்கண்ட அமரநாத்தின் சேனையும் கை கலந்தன. இருதிறத்தாருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. ராணியாரின் சமாதானப் பிரசங்கம் நடந்த அதே மைதானத்தில் நூற்றுக் கணக்கான தலைகள் உருண்டன. ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தக்கூடாது என்று உபதேசம் செய்த அந்த இடத்தில் இரத்த ஆறு ஓடியது. நகரமாந்தர் கூட்டம் அளவிற்குமீறி, கட்டுக்கடங்காமல் வந்துவிடவே அமரநாத்தின் சைன்யம் முறியடிக்கப்பட்டது. சேனை வீரர்கள் சிதறி ஓடினார்கள். இதை யெல்லாம் மேன் மாடத்தில் ஒளிந்திருந்து கவனித்த வீரநாத்தும், அமரநாத்தும், தங்கள் தலைக்கும் ஆபத்து வந்துவிட்டதை யுணர்ந்து அரண்மனையை விட்டுத் தப்பியோட வழி பார்த்தனர். தற்செயலாக சாளரத்திலிருந்து தொங்கிய நூலேணியே அவர்கள் கண்ணிலும்பட்டது. அதன் வழியே அவர்களும் இறங்கித் தப்பி ஓடினார்கள்.

வீரர்களை யெல்லாம் துவம்சம் செய்த நகரமாந்தர், மஹாராணியார் கொல்லப்பட்டார் என்று பரவிய செய்தியை உண்மை யென்று நம்பி, ஆவேசம் கொண்டவர்களாய் வீரநாத்தை பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்று கத்திக்கொண்டு அரண்மனைக்குள் ஓடினார்கள். பலர் மஹாராணியாரின் இறந்த உடலையாவது காணலாமென்னும் ஆவலில் பல இடங்களிலும் தேடியலைந்தனர்.

---

## அத்தியாயம் 25

### "நீண்ட பழியிதனை நீர் பொறுப்பீர்."

அரண்மனைக்குள் புகுந்த ஜனங்கள் அங்கே ராணியையோ, வீரநாத்தையோ காணாமல் ஒரு சமயம் வீரநாத் அவர்களை அவன் மாளிகையில் கொலை செய்யக் கொண்டு போயிருக்கக் கூடுமென நினைத்து அவனிருப்பிடம் நோக்கி ஓடினார்கள். தெருக்களெங்கும் ஆரவாரம்செய்து சென்ற அவர்கள் "ராஜத் துரோகி வீரநாத்தை வெட்டி எறியுங்கள்! அவன் மாளிகையைத் தீக்கிரையாக்குங்கள்" எனக் கத்திக்கொண்டு அவன் மாளிகை முன்பு போக, ஒரு சைன்யம் நின்று அவர்களைத் தடுத்தது. அதோ தூரத்தில் ஒருவர் இவர்களின் அடக்கவொண்ணு ஆவேசத்தைக் கண்டு ஓடிவந்தார். கூட்டத்தை விலக்கிக்கொண்டுவந்த அவர் புலிபோல் ஒரே தாவில் மாளிகையின் சுவர்மேல் ஏறிநின்று ஜனங்களை யெல்லாம் பார்த்துக் கைகூப்பினார். அவரைப் பார்த்த பலர் சத்தத்தை யடக்கி அவரைக் கவனித்தனர்.

"சகோதரர்களே, சற்றுப் பொறுங்கள். பொறுமையை இழக்காதீர்கள். நம் தேவமாதாவாகிய மஹாராணியார் நமக்கு இதுவரை போதித்துவந்தது சாந்தி மார்க்கமல்லவா? நாட்டில் சமாதானம் நிலவ எத்தகைய தியாகம் வேண்டுமானாலும் செய்வதாக அவர்கள் முன் நீங்கள் வாக்குத்தத்தம் செய்யவில்லையா? உலக உஜ்ஜீவனத்திற்காக தெய்வ சக்தியுடன் அவதரித்த நம் மஹாராணியாரை ஒருவரும் கொன்றுவிட முடியாது. அவர்கள் தன் குமாரி இளவரசியைக் காப்பாற்றும் பொருட்டு, எங்கேனும் சென்றிருக்கக்கூடும். ஆகையால் அவர்களைத் தேடி நாம் நாலா திசைகளிலும் செல்வோம். முக்கியமாய்ப் பார்க்கவேண்டிய அந்தக் காரியத்தை மறந்து,

கேவலம் அறிவீனத்தால் இந்தப் பதர் வீரநாத் செய்த குற்றத்திற்காகவா அவனைக் கொலை செய்வது? அவன் மாளிகையைத் தீக்கிரையாக்குவதால் நமக்கென்னலாபம்? அவன் மனைவி மக்களல்லவா வெந்து சாம்பலா வார்கள்! அப்படிச் செய்வதனால் சாந்தக் கொள்கையைப் போதித்த நம் மஹாராணியாரின் உபதேசத்தை நாம் அவமதித்தவர்களாவோம். நம்முடைய இந்தக் கோரச் செய்கையை அவர் கேட்க நேர்ந்தால் அவர்கள் மனம் என்ன பாடுபடும்? சுயநலப்பற்றற்ற நம் மாதாவிற்குத் தியாகமே பேரின்பம்! அதை உலகத்திற்கு எடுத்துக்காட்ட ஒரு சந்தர்ப்பம் அளித்தவன் வீரநாத். அவனைப்பற்றி நாம் கவலைபடவேண்டாம். ராணியாரைத் தேடியடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வோம். புறப்படுங்கள் 'ஜே! மஹாராணிக்கு! மஹாராணிக்கு ஜே!!" எனக்கோஷமிட்டு முடித்தார்.

ஜனங்களும் அவரோடு சேர்ந்து "ஜே" கோஷமிட்டு ஆரவாரித்துக்கொண்டே வீரநாத் மாளிகையை விட்டுப் பிரிந்து, வந்த தெருக்களின் வழியே கூட்டமாய்ச் சென்றனர்.

---

## அத்தியாயம் 26

## "தர்மமே வெல்லும்"

ரதத்திற்குள் மஹாராணி, பாலாவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள். அம்பு பாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

ரதம் மீவாரிருக்கும் திசை நோக்கியே சென்றது. மலைப்பிரதேசத்திலிருந்து எழுந்த குளிர் காற்று பட்டதும் ராணியார் ஆயாசம் தீர்ந்து பாலாவின் மடியை விட்டெழுந்து ரதத்தில் சாய்ந்தமர்ந்து கொண்டாள்.

பாலகல்யாணி இதற்குமுன் அம்மாதிரி மலைப்பிரதேசங்களில் பிரயாணம் செய்யாதவளாகையால் அங்கு அவள் கண்ட இயற்கை வனப்பெல்லாம் புதிது புதிதாகத் தோன்றின அவளுக்கு. எனினும் அவளுக்கிருந்த அளவுகடந்த துக்கத்தில் அதையெல்லாம் சந்தோஷமாய் அனுபவிக்க முடியவில்லை. ரதம் சுமார் பத்து காதவழி வந்ததும் அஸ்தமிக்கும் சமயம் நெருங்கிவிட்டது. இன்னும் ஓரிரண்டு நாழிகையில் இருட்டுவந்து கவிந்துவிட்டால் அதற்குமேல் அந்தக் காட்டு மார்க்கத்தில் வழிகண்டு பிடித்து ரதத்தை நடத்துவது மகா சிரமம் என்பதை யுணர்ந்த தேவி பாலன் தங்குவதற்கு எங்கேனும் இடமுண்டாவென்று கவனித்துக் கொண்டே வந்தான். இருபக்கத்திலும் உயர்ந்து வானைத் தொட்டு விடும்படியாக வளர்ந்திருந்த மலையில் மத்தியிலுள்ள தாழ்ந்த பள்ளத்தாக்கின் பிரதேசத்தில் சில குடிசைகள் தென்பட்டன. அங்கேயேசென்று அன்றிரவைக் கழிக்கக் கருதிய அவன் அதற்குச் செல்லும் மார்க்கத்தில் ரதத்தைத் திருப்பி ஓட்டினான்.

தூரத்தில் ரதம் வருவதைக்கண்ட அக்குடிசைகளிலிருந்த ஆண்களும், பெண்களும் ஆச்சரிய முற்றவர்களாய் அதை எதிர்நோக்கி ஓடிவந்து சூழ்ந்து கொண்டார்கள். ரதத்தை நிறுத்தி தேவிபாலன் அவர்களை நோக்கினான். ராணியும் பாலகல்யாணியும் உள்ளிருந்தபடியே ஜன்னலின் வழியாகப் பார்த்தார்கள்.

ஆடவர்கள் ஒவ்வொருவர் கையிலும் நீண்ட கோல்களிருந்தன. சிறுவர்களும் அப்படியே காணப்பட்டார்கள். ஆடுமாடுகளை மேய்த்து ஜிவிப்பதே அவர்கள் தொழில்.

தேவிபாலன் ரதத்தை விட்டிறங்கினான். கூட்டத்திலிருந்த ஒரு வயோதிகர் அவன் முன்வந்து நின்றார். அவன் அவரை வணக்கமாக நமஸ்கரித்துவிட்டு "ஐயா, பெரியோர்களே! நாங்கள் மீவார் நாட்டுக்குச் செல்லு

இறேம். வழியில் ஒரு வேடனின் குறிதப்பிய அம்பு, அதோ உள்ளேயிருக்கும் என் தாயார் உடம்பில் பாய்ந்து மிக்க வேதனையடைகிறார்கள். மேலும் அஸ்தமன சமயமும் நெருங்கிவிட்டது. புது வழியாகையால் தெரிந்து செல்வது கஷ்டமாயிருக்கிறது, ஆகையால் தயவுசெய்து நாங்கள் இங்கே ஓரிரண்டு நாட்கள் தங்கிச் செல்ல அனுமதியளிப்பீர்களா?" என்றான்.

"சாமி, இதற்குத்தானு இவ்வளவு யோசனை! இங்கேயிருக்கிற குடிசைகளில் உங்களுக்கு எது வேண்டுமோ அதைக் காலிபண்ணிக் கொடுக்கிறோம். இரண்டு நாளல்ல, இரண்டு மாசம் வேணுமானுலும் இருந்திட்டுப்போங்க. வாங்க போகலாம்" என அழைத்தார் பெரியவர்.

ரதத்திலிருந்த ராணியும் பாலகல்யாணியும் கதவைத் திறந்துகொண்டு இறங்கினுர்கள். அழகின் சிகரெனத் ஜொன விளங்கிய அவர்களைக் கண்ட மாத்திரத்தில் சுற்றி நின்ற அப்பாமரர்கள், அவர்கள் தேவதைகளோ வென்று எண்ணி, "மகாதேவி! கும்பிடரோம்" என எல்லோரும் ஏகோபித்துக் கரம் குவித்தனர். பின்னர் அவர்கள் அம்மூவரையும் ஆனந்தத்தோடு அழைத்துக்கொண்டு சென்றனர். அங்கேயிருந்த குடிசைகளிலெல்லாம் பெரிதாக இருந்த ஒன்றைச் சுத்தம் செய்து அவர்களுக்கு விட்டார்கள். உண்பதற்குக் கனிவர்க்கங்களும், தேனும், தினையும் அபரிமிதமாய்க் கொண்டுவந்து கொடுத்தார்கள். மாஹாராணியின் வேதனைக்கு அங்கேயிருந்த ஒரு வைத்தியன் ஏதோ சில மூலிகைகளை மலையிலிருந்து பறித்துவந்து கட்டினுன். ரதத்தை இழுத்துவந்த குதிரைகளைத் தேய்த்து, அவைகளுக்குப் புல்லும் தண்ணீரும் அளித்து, நல்ல இடத்தில் கட்டி இரவில் வனவிலங்குகள் அவைகளை நெருங்கா வண்ணம் பாதுகாக்க இரண்டு பேரை நியமித்தார்கள். அன்றிரவை ராஜ குடும்பத்தார் சற்று சிரமத்தோடு கழித்தார்கள்.

மறுநாட் காலை எழுந்ததும், மஹாராணியார் விருப்பப்படி அம்மூவருக்கும் தனியாக ஒரு குடிசை கட்டப்பட்டது. பச்சை மரங்களின் கொம்புகளாலும், இலை தழைகளாலும் நிர்மாணித்த அக்குடிசை ராமன் தங்கிய பர்ண சாலைபோல் காக்ஷியளித்தது.

---

## அத்தியாயம் 27

### 'காட்டினிடையே களித்தாடி நிற்கையிலே!"

மூன்றும் நாள் காலை மஹாராணியார் பர்ணசாலையின்முன் நாரினால் பின்னப்பட்ட ஓர் கட்டிலில் அமர்ந்திருந்தாள். பாலகல்யாணி கட்டிலின் ஓரம் தரையில் மண்டியிட்டமர்ந்தாள். தேவிபாலன் சற்று விலகி பந்தல் காலில் சாய்ந்து கைகளைக் கட்டிக்கொண்டு தூரத்தில் எதையோ பார்த்து ஆழ்ந்த யோசனை செய்துகொண்டிருந்தான். ராணி அவன் பக்கம் திரும்பி "தேவிபாலா, என்ன யோசனை?" என்றாள்.

"மஹாராணி! அதோ பாருங்கள், அந்தக் கோபாலர்களை. பெண்களெல்லாம் பால் கறக்கிறார்கள். அதை வாங்கிக் கொண்டுபோய் பெரிய பாத்திரத்தில் அந்தச் சிறுவர்கள் ஊற்றுகிறார்கள். எளிய நிலைமையிலிருந்தாலும் அவர்கள் எவ்வளவு குதூகலமாய் வாழ்க்கை நடத்துகிறார்கள், பாருங்கள். அவர்களனுபவிக்கும் ஆனந்தத்தைப்போல் ஒரு நாள் ஒருபொழுதாகிலும் நாம் அனுபவித்தறியவில்லையே! உலகையே கட்டி ஆண்டாலும் என்ன பயன்? இவ்வனத்திலுள்ள புள்ளினங்களைப் போலவே அவர்களும் ஒரு கவலையுமில்லாமல் வாழ்கிறார்கள். அன்றன்றைக்கு வேண்டிய உணவை அவர்களுக்கு இயற்கையன்னை அளிக்கிறாள். நாளைக்கு வேண்டுமே

என்ற எண்ணம் அவர்களுக்குக் கிஞ்சிற்றேனும் இல்லை. அவர்கள் வாழ்வே வாழ்வு!" என்றான்.

"தேவிபாலா, உண்மைதான். இவர்கள் பாக்கியசாலிகள். இராஜ குலத்தில் பிறந்தவர்களாகிய நாம் குல தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவும், அதன் பெருமையைக் காப்பதற்காகவும் இவ்வளவு துன்பங்களுக்கு ஆளாக வேண்டியதிருக்கிறது. நான் இப்போது இங்கே அக்ஞாத வாசம் செய்வதுகூட சந்திர வம்சத்திலுதித்த எனக்கு அழகல்ல, கேவலம் அந்த வீரநாத்திற்குப் பயந்துகொண்டு வந்துவிட்டதாகவல்லவோ நினைப்பார்கள். அங்கே இப்போது நிலைமை எப்படி இருக்கிறதோ? என்ன குழப்பம் விளைகிறதோ? இச்சமயத்தில் நான் அங்கில்லாமல் பயங்கொள்ளிபோல் என் உயிரைக் காப்பாற்றவேண்டி இப்படிக் கண் மறைவான இடத்தில் ஒளிந்துகொண்டிருக்கலாமா? இன்றைக்கே நான் மருங்காபுரி திரும்பவேண்டும்... ............"

"தேவி! நீங்களாக இஷ்டப்பட்டு இங்கே வரவில்லையே. எங்களிருவரின் கட்டாயத்தால்தானே வந்தீர்கள். அக்ஞாதவாசம் செய்தால் பயங்கொள்ளி என்று யாரும் சொல்லமாட்டார்கள். பாண்டவர்களும்கூட சில காலம் இருக்கவில்லையா? காலம் மாறும்வரை விரோதிகளிடமிருந்து விலகியிருப்பதே மேல்".

"அப்படியானால் இன்னும் எத்தனை நாளைக்கு இங்கேயே இருக்கவேண்டுமென்கிறாய்?"

"நான் மீவாருக்குச் சென்று திரும்பும்வரையில்".

"சரி, உன்னிஷ்டம். வீணில் இங்கே காலம் தாழ்த்தாமல் மீவாருக்குச் சென்று திரும்புவதற்கு ஏற்பாடு செய். உன் அரசனிடம் சென்று யுத்தத்தைப்பற்றி நான் கொண்டுள்ள கொள்கையை விவரித்து, அதைப் பின்பற்றச் சொல்லு. அவன் சம்மதிக்காவிடில் ஜனங்களிடத்தில்

அதைப்பற்றி பிரசாரம் செய். மக்கள் மனதைத் திருப்பிவிட்டால் அரசன் என்ன செய்வான்? ஆகவே போய்வா'' என்றாள்.

அச்சமயம் பாலகல்யாணி குறுக்கிட்டு "அம்மா, நானும் அவரோடு மீவாருக்கு........" என்றாள்.

'பாலா, நீயுமா? வேண்டாம். பகையரசன் நாட்டிற்குள் முன்பு எப்போதும் சென்றறியாத நீ அடி எடுத்து வைப்பது அழகல்ல'' என்று தடுத்தாள் ராணி.

"மஹாராணி! சேனாதிபதியாகிய என்னோடு பாலா வருப்போது என் மன்னரால் அவளுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டால் அதைப் பார்த்துக்கொண்டு நான் இருப்பேனா? என் உயிரை அவனிடம் பணயம் வைத்தாவது அவளை உங்களிடம் மீட்டுக்கொண்டுவந்து சேர்ப்பேன். ஆகையால் எவ்வித சந்தேகமுமின்றி அனுப்பிவையுங்கள். மீவார் மக்களிடையே நான் சென்று சமாதானப் பிரசாரம் செய்யும்போது நிடத நாட்டு இளவரசியும் எனக்குப் பக்கத் துணையாகவிருந்தால் அது அவர்களிடையே உற்சாகத்தை அளிக்குமல்லவா?''

"தேவிபாலா, உங்கள் விருப்பத்திற்கு மாறாக, குறுக்கே நான் நிற்கவில்லை. உங்களுக்கு எது நன்மையாகத் தெரிகிறதோ அதைச் செய்யுங்கள்'' என்று விடை கொடுத்தாள் ராணி. காதலரிருவரும் களிப்படைந்து ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை புரிந்தனர்.

அச்சமயம் யாதவர்களுக்குள்ளே தலைமையானவரும் ராணியை முதலில் கண்டு உபசரித்து வரவேற்றவருமான பெரியவர் ஒருவர் ராணியிடம் வந்து வணங்கி "அம்மணி, உங்கள் கை வேதனை எப்படியிருக்கிறது?'' என்றார்.

"இப்போது அநேகமாய் சௌக்கியமாய்விட்டது நாளைக்கு ஒரு நாள் மருந்து கட்டினால் போதுமென்று நினைக்கிறேன். அதைக் கேட்கத்தான் வந்தீர்களோ?''

"இல்லையம்மணி; இன்னிக்கி நாங்க வழக்கமா மாஸா மாதம் கிருஷ்ணனை கும்பிட்ற நாள் வந்திருக்கு. உச்சிப் பொழுதுக்குள்ளே அங்கே போயிடணும். அதைச் சொல்லத்தான் வந்தேன்".

"சரி, அப்படியானால் நான் வரவில்லை; என் குழந்தைகளிருவரையும் அழைத்துக்கொண்டு போங்கள். என்னால் அவ்வளவு தூரம் நடக்க இயலாது" என்றாள். பெரியவரும் தலையசைத்து "அம்மணி! இன்னங் கொஞ்ச நேரத்திலே பெண்களெல்லாம் கூப்பிட வருவாங்க. அப்போ எல்லாரும் போகலாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

கோபாலர்கள், ஆண்களும், பெண்களும், சிறுவரும் சிறுமிகளும் சேர்ந்து கூட்டமாய் பாடிக்கொண்டு வந்தனர். ஸ்திரீகளின் கைகளிலிருந்த ஒவ்வொரு மரத் தட்டிலும் தேங்காயும், பழமும், மாவும், புஷ்பமும் இன்னும் ஆராதனைக்கு வேண்டிய பொருள்களுமிருந்தன. இன்னுஞ் சிலர் பால் கலயங்களைச் சுமந்து வந்தனர். அவர்களனைவரும் சுத்தமான உடையணிந்து மயிரைக் கோதி அழகாகக் கொண்டையிட்டு பூச்சூடியிருந்தனர். சிறுவர்களும் சிறுமியரும் சுத்தமாகக் காணப்பட்டனர். அவர்கள் கையில் கோலாட்டமாடும் சிறு கோல்களிருந்தன.

பர்ணசாலையை நெருங்கியதும் பெண்கள் பாடலை நிறுத்தினர். அவர்கள் எல்லோரிலும் அழகாக ஆடையணிந்திருந்த பெண்கள் இருவர் ராணியின் முன்வந்து பழத் தட்டுகளை வைத்து வணங்கி "அம்மணி, புறப்படுங்கள். எல்லோரும் போவோம்" என்றனர்.

"இதோ இவர்களிருவரும் உங்களோடு வருவார்கள். அழைத்துச் செல்லுங்கள். நான் வருவதற்குச் சௌகரியமில்லை. மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றாள் மஹாராணி.

அதன்படியே தேவிபாலனும், பாலகல்யாணியும் கூட்டத்தோடு சென்றனர். அவர்கள் கோவிலையடைந்ததும் ஆராதனைக்குமுன் செய்யவேண்டிய ஏற்பாடுகளில் பெரிதும் ஈடுபட்டனர்.

இளம் மாதர்கள் பலர் ஒன்றுய்க் கூடி பாலகல்யாணியையும் தங்களோடு அழைத்துக்கொண்டு கோவிலைவிட்டு பெரியோர்களின் கண் மறைவாகச் சென்றுவிட்டனர். அங்கே அவர்கள் ஒரு சிறு விளையாட்டை ஆரம்பித்தனர். பெண்களெல்லாம் சுற்றிலுமிருந்த மரக் கிளைகளில் அமர்ந்திருந்தனர். பாலகல்யாணியும் ஒரு மரக் கிளையிலிருந்தாள். ஒரே ஒரு பெண்மாத்திரம் தரையில் நின்றிருந்தாள். அவளுக்குச் சற்று தூரத்தில் ஒரு குச்சி இடந்தது. அதை அவள் காவல் புரிந்தாள். மரக் கிளையிலிருந்த பெண்கள் கீழே நிற்பவள் தங்களைக் கவனிக்காமலிருக்கும் போது திடீரெனக் குதித்து அந்தச் குச்சியை எடுத்துக் கொண்டு மறுபடியும் கிளையிலமர்ந்துவிட வேண்டும். அப்படி அவர்கள் யத்தனிக்கும்போது காவல் புரிபவள் கண்டு உடனே ஓடிப்போய் அவர்களில் யாரையேனும் பிடித்துவிட்டால், பிடிபட்ட அந்த பெண் காவல் புரிய வேண்டும். இதுதான் விளையாட்டு.

இப்படியாக இவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் போது மரத்தின்மீதிருந்த ஒரு பெண் தூரத்தில் மரத்தடியில் ஒரு மனிதன் தன்னந்தனியாய் வீற்றிருக்கக் கண்டு அந்தக் கானகத்தில் அவன் அவ்விதமிருக்கக் காரணமென்னவென்பதை யோசித்துக்கொண்டே இருந்தாள்.

மரத்தடியிலிருந்த அவன் முகம் சோர்வடைந்து, கண்கள் குழி பாய்ந்து, உடல் தளர்ந்து தூசியடைந்து வெகு தூரம் கால் நடையாகவே வந்தவன்போல் காணப்பட்டான். மன நிம்மதியற்றிருந்த அவனுக்கு அந்த ஏகாந்த

இடம் சாந்தியளித்ததுபோலும்! மரத்தின் மேலிருந்த இரண்டு பறவைகள்—ஆணும் பெண்ணும்—ஒன்றையொன்று துரத்திப் பிடித்துக்கொண்டு ஏதோ ஒருவித சப்தம் செய்துகொண்டிருந்ததைக் கண்டு பார்த்தான். அவன் வாயிலிருந்து சில சொற்கள் வெளிக்கிளம்பின.

"ஏ, பறவைகளே! நீங்கள் இக்கானகமெல்லாம் பறந்து வருகிறீர்களே! என் தேவமாதா எங்கிருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியாதா? இருக்குமிடத்தைத் தெரிந்து வந்து என்னிடம் சொன்னால் நான் அவர்களிடம் சென்று என் கண்ணீரால் அவர்கள் பாதத்தைக் கழுவி வணங்கி மன்னிப்புப்பெற்று மனச் சாந்தியடைவேன்............... " என்று பலவாறு புலம்பிய அவன் கண்களில் நீர் ததும்பியது. தூரத்திலிருந்து வன விலங்குகள் உறுமும் சப்தம் கேட்கவே, "மிருகங்களே! என்னைத் தின்னக்கூட உங்களுக்கு மனமில்லையோ? உப்பிட்டு வளர்த்த அந்த உத்தமியின் உயிருக்கே உலைவைக்க நாண் விடுத்தவன் என்று நீங்கள் என்னைக் காணவும் நாணுகிறீர்களோ? உண்மைதான், மிருகத்திலும் கேடுகெட்டவன் நான். என் உயிர் உடலில் ஊசலாடும் வரை நான் எவ்விதம் இந்த அவமானத்தைச் சகிப்பேன்? இதோ தற்கொலையாவது செய்துகொண்டு விடுகிறேன். அதன் பின்னாவது நீங்கள் என்னைப் பகிர்ந்து உண்டு பசியடங்குங்கள்" என்று சொல்லிக்கொண்டே தன் முன் நிற்கும் மரத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த கொடிகளை இழுத்து அறுத்து ஒன்றாகச் சேர்த்து அம்மரத்தின் கிளை ஒன்றிலேயே வீசிறி எறிந்து முடிச்சுப் போட்டான்.

விளையாட்டையும் மறந்து அவனையே கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அப்பெண் அவன் தற்கொலை செய்து கொள்ளப்போகிறான் என்பதை யறிந்து சடாரென மரத்திலிருந்து குதித்து "அடியே எல்லோரும் இறங்குங்கடி. அதோ பாருங்க. யாரோ ஒருத்தர்

தூக்குப்போட்டுச் சாகப்போகிறார். ஓடியாங்க, போய்க் காப்பாத்தலாம்'' என்று பலமாகக் கத்திக்கொண்டே மற்றவர்கள் தன்னோடு வருகிறார்களா என்பதையும் நின்று கவனிக்காமல் ஓடினான். மற்றவர்களும் அவளைப் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

இவர்கள் ஓடிவருவதைக் கவனியாத அந்த மனிதன் அக்கொடியால் மற்றொரு முடிச்சுப்போட்டு தன் கழுத்திலும் மாட்டிவிட்டான். இன்னும் க்ஷணநேரத்தில் அவன் உடல் உயிரற்றுத் தொங்கத் தயாராயிருந்தது. ஓடி வந்த பெண்கள் அந்த கோரத்தைக் கண்டு 'ஹா' வென அலறி அவனைச் சூழ்ந்துவிட்டார்கள். முதலில் ஓடிவந்தவள் சற்று தைரியசாலி; சமயோசித புத்தி படைத்தவள். சட்டென அவன் முன் பாய்ந்து, அவன் கழுத்திலிருந்த கொடியை அறுத்தெறிந்தாள். பாலகல்யாணி அவனைக் கூர்ந்து பார்த்து "ஹா! வீரநாத்" என்று அலறி விட்டாள். தன் பெயரைக்கேட்ட மாத்திரத்திலே உணர்ச்சி வரப்பெற்ற அவன் திரும்பிப்பார்த்து "இளவரசி" என்றான். அவ்வளவு தான். தடாலென மூர்ச்சையாகித் தரையில் சாய்ந்தான். கால்களும் கைகளும் படபடவென உதைத்தன. கண்கள் இரண்டும் இறுக மூடிவிட்டன. சில பெண்கள் ஓடிப்போய் பக்கத்திலிருந்த ஓடையில் தங்கள் சேலைத் தலைப்புகளை நனைத்து தண்ணீர் கொண்டு வந்து அவன் முகத்திலும் வாயிலும் ஊற்றினார்கள். சுற்றி நின்றவர்கள் அவனுக்கு விசிறினர். பாலகல்யாணி பிரமித்துப்போய் ஒன்றும் செய்யாமல் நின்றது நின்றபடியே அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் பெருகிய நீர் அவள் பார்வையை மறைத்தன.

சிறிது நேரத்தில் அவனும் மெதுவாய்க் கண் திறந்து "மஹாராணி! மஹாராணி! எங்கே!...........எங்கே

என் தேவமாதா?'' எனப் பிதற்றி கண்களை இருகைக ளாலும் மூடிக் கொண்டான்.

"வீரநாத், எழுந்திரு போகலாம். தாயாரைத் தரி சிக்கலாம் வா...............வீரநாத்!'' என்ருள். அவனும் ஒரு தனி உற்சாகத்தோடு எழுந்து பாலாவையும் கோபி யரையும் தொடர்ந்து கோயிலுக்கு வந்தான்.

பாலகல்யாணி கோவிலிலிருந்த தேவிபாலனைத் தனி யாக அழைத்துச் சென்று, வீரநாத்தின் விஷயத்தை யெல்லாம் எடுத்துக் கூறினுள்.

"ஒரு சமயம் மஹாராணியின் உயிருக்குத் தீங்கி ழைக்கத்தான் இந்த யுக்தி செய்து வந்திருக்கிருனே என் னமோ? நீ ஏன் அழைத்து வந்தாய்?'' என்று சந்தேகப் பட்டவனுய்க் கேட்டான் தேவிபாலன்.

"தாங்கள் அவ்விதம் சந்தேகப்படவேண்டாம். உண்மையாகவே வீரநாத் இப்போது மனம் மாறியிருப்ப தாகத் தெரிகிறது'' என்று சமாதானப் படுத்தினுள்.

பூஜை முடிந்ததும் எல்லோரும் வனபோஜனம் செய் தனர். பசுக்களுக்கெல்லாம் கூட அன்னம் அளிக்கப்பட் டது. பின்னர் எல்லோரும் கோவிலை விட்டுக் குதூகல மாய்ப் புறப்பட்டனர்.

---

## அத்தியாயம் 28

### "நீயே வித்தை, நீயே தருமம்!"

யாதவர்களின் கூட்டம் தங்கள் இருப்பிடத்தை யடைந்ததும் நேரே மஹாராணியாரிடம் சென்றது. பூஜையின் பிரசாதங்களை ஒருபெரியவர் அவளுக்கு அளித் தார். ராணி எழுந்து மரியாதையாக வாங்கிக்கொண்டு ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தாள். அச்சமயம் பால

கல்யாணியோடு நின்று கொண்டிருந்த வீரநாத், கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடி "தேவமாதா மஹாராணி ............" எனக் கதறி அவள் பாதங்களில் போய் விழுந்தான். திடீரென்று வீரநாத் தன் காலில் வந்து விழுந்ததும் ராணி திடுக்கிட்டு "வீரநாத்! நீ எப்படி இங்கு வந்தாய்? எழுந்திரு" என்று அவனைக் கரம் தொட்டு எழுப்ப, மண்டியிட்டமர்ந்து கைகூப்பிக் கண்களில் கண்ணீர் மல்க அவன் உருக்கமாகச் சொன்னான்.

"தேவமாதா! என் உள்ளத்தில் எழுந்த பைசாச குணம் அறிவை மறைத்து மயக்கி விட்டதம்மா. நிதானமற்ற நான் எந்த நிடத நாட்டின் உஜ்ஜீவனத்திற்காக ஆவேசம் கொண்டேனோ அதையே பாழ்படுத்தும் வேலையையன்றோ செய்து முடித்துவிட்டேன். நான் சண்டாளன், மகாபாவி—துரோகி—என்னை மன்னிப்பீர்களா?" என்று ராணியின் முகத்தை எதிரிட்டுப் பரிதாபமாய் பார்த்தான். அவன் வார்த்தைகள் ராணியின் கண்ணிலும் நீரை வரவழைத்து விட்டது.

மகாராணி அவனைத் தூக்கி "வீரநாத் எழுந்திரு. நீ விமோசனமடைந்தாய். வீரநாத் நீ கர்மவீரன். உன் மனம் அறிந்த தத்துவம் வரையில் நீ களங்கமற்று நடந்து கொண்டாய். ஆகையால் நீ குற்றமொன்றும் செய்யவில்லை. பாதகமும் இழைக்கவில்லை. நாட்டின் மேல் கொண்டிருந்த உன் அபாரசக்தி அப்படிச் செய்யத் தூண்டியது. ஆனால் உன் தத்துவம் எத்தனை பொல்லாதது என்பதை மட்டும் நீ இப்போதாகிலும் உணர்ந்து கொண்டால் அதுவே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும்" என்றாள்.

"தாயே, உண்மையை உணர்ந்தேன்" என்று மறுபடியும் அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

கூடியிருந்த யாதவர்கள் கூட்டம் இதையெல்லாம் கண்டு ஒன்றும் விளங்காதவர்களாய் பிரமித்து

னின்றார்கள். அந்தப் பெரியவர் ராணியிடம் நெருங்கி "தாயே! இதெல்லாம் என்ன ரகசியம்? எங்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லையே" என்றார். ராணி புன்னகை கொண்டு வீரநாத்தை நோக்கினார். வீரநாத் அக்கூட்டத்தை நோக்கி சுருக்கமாய்க் கூறினான்.

"பெரியவர்களே! நீங்கள் புண்ணியம் பெற்றவர்கள். இவர் என் தேவமாதா; நிடதநாட்டின் சக்ரவர்த்தினி. இதோ இவர்தான் இளவரசி. நானோ அவர்களின் மந்திரி. அதை நான் சொல்லிக் கொள்ளக்கூட நாணமடைகிறேன். சதியாலும், துரோகத்தாலும் இவர்கள் நாட்டைத் துறந்து இவ்விதம் வனவாசம் செய்கிறார்கள். அதோ அவர் மீவார் நாட்டின் சேனாதிபதி. இவர்களையெல்லாம் ஆதரித்துக் காப்பாற்றும் பெருமை கிடைத்த நீங்களே பாக்கியவான்கள்" என்று கூறி முடித்தான். கூடியிருந்தவர்கள் "ஹா மகாராணியா! என்ன தவறிழைத்தோம். சாதாரண மனிதர்களாய்க் கருதி நடத்தினோமே! மகாராணி, நாங்கள் ஏதும் தப்பிதமாய் நடந்திருந்தால் மன்னித்து விடுங்கள்" என்று கைகூப்பினார்கள்.

மகாராணி அவர்களை நோக்கி அன்பு ததும்ப "உத்தமர்களே! எளிய வாழ்க்கை நடத்திவரும் நீங்கள் எங்களுக்குச் செய்த ஒவ்வொரு உதவியையும் எங்கள் அரண்மனையில் நடக்கும் ராஜோபசாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு மேலானதாகக் கருதுகிறோம். இதோ இன்னும் சிலநாளில் மீவார் நாட்டரசன் யுத்தத்திற்கும் வரப்போகிறானாம். அவனைத் தடுத்து சமாதானம் செய்வதற்காகவே நாளைக்கு தேவிபாலனும், பாலகல்யாணியும் புறப்படுகிறார்கள். அவர்கள் செல்லும் காரியம் வெற்றியடைய வேண்டுமாய் பிரார்த்தியுங்கள்" என்றாள்.

அன்றிரவு முழுதும் மகாராணியார் தங்களின் குடிசையில் வந்து தங்கியிருப்பதைப்பற்றி வியந்து பேசி

மகிழ்ந்து, ஆனந்தம் கொண்டவர்களானுர்கள் யாதவர்கள். மறுநாள் தேவிபாலனும் பாலகல்யாணியும் அசுவங்களிலேறி யாத்திரையாகப் புறப்பட்டபோது அந்த ஏழை மக்கள் வழியனுப்பியது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

---

## அத்தியாயம் 29

### "இம்மென்ருல் சிறைவாசம்."

மீவாரின் கோட்டைக்கு வெளியே யுள்ள பெரிய மைதானத்தில் அந்நாட்டின் படைகளெல்லாம் அணிவகுத்து நின்று கொண்டிருந்தன. மும்முறை சிடத நாட்டிலிருந்து புறமுதுகு காட்டி ஓடிவந்ததால், ரவிவர்மன், நான்காம் முறை எப்படியேனும் வெற்றிபெற்றேயாக வேண்டுமென நிச்சயம் செய்து தன் படைபலத்தை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கியிருந்தான். நாட்டின் வருமானமெல்லாம் படையைப் போஷிப்பதற்கே அள்ளி இறைத்தான். அதன் காரணமாக இப்போது அந்தப் பெரிய மைதானத்தில், பிரம்மாண்டமான சமுத்திரம் போன்று படை காணப்பட்டது. ரதங்களும், யானைகளும் குதிரைகளும், காலாட்களும் இவ்விதம் நால்வகைப் படையும் நான்கு பக்கத்திலும் அணிவகுத்துநின்றன. சிடத நாட்டுக்குப்போன தேவிபாலனைப்பற்றி யாதொரு செய்தியும் வராததால் அவன் நடுவழியே ஏதோ விபத்துக்காளாகி யிருப்பானென்றே அநேகர் கருதினர். மீவார் சேனையில் ஒப்பற்ற மற்ெருரு வீரனுன ஜகதீஷ் என்பவனை தளபதியாக அரசர் இப்போது பொறுக்கியிருந்தார். இன்று அணிவகுப்பின் மத்தியில் அந்த ஜகதீஷ் வெண்புரவி மீது கம்பீரமாய் வீற்றிருந்தான்.

குதிரை மீது வேகமாய் வரும் தேவிபாலனும் பாலகல்யாணியும் மைதானத்தை யடுத்துள்ள மலைப்பிரதேசத்தில்

வரும்போதே 'ஹோ'வெனப் பெரிய இரைச்சல் கேட்டது. தேவிபாலன் குதிரையின் நடையைத் தளர்த்தி இரைச்சல் எங்கிருந்து வருகிறதெனக் கவனித்தான். மைதானம் நன்றாய்த் தெரிந்தது. தேவிபாலன் படைகள் எல்லாம் பயிற்சி செய்வதைக் கண்டு விட்டான். குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தி கல்யாணியை நோக்கி "பாலா, காரியம் மிஞ்சி விட்டது! அதோ பார், படைகள் திரளுகின்றன. மன்னன் தயாராகி விட்டான். நான் இவ்வளவு நாள் அங்கேயே தாமதித்து விட்டதன் பலன் இதுதான். இனி என்ன செய்வது?" என்று சொல்லி மிக்க கவலைகொண்டான்.

"முதலில் போய் உங்கள் அரசரைப் பார்க்காமலே இங்கே அணிவகுத்து நிற்கும் போர்வீரர்களுக்கு நீங்கள் அந்த உபந்யாசத்தைச் செய்தால், இவர்கள் ஆயுதம் தாங்க மறுத்து விடுவார்கள். பின் அரசர் என்னசெய்ய முடியும்? சேனாதிபதியாகிய உங்கள் பேச்சுக்குத் தலை வணங்க மாட்டார்களா இந்த வீரர்கள்?" என யுத்தி கூறினாள் பாலா.

"ஆம், உன்யோசனைதான் சரி. ஆனால் நீ என்னுடன் வருவது உசிதமல்ல. ஆதலின் உனக்கு ஒரு இடம்காண்பிக்கிறேன். அங்கே மறைந்திரு. நான் போர் வீரர்களின் மனதை திருப்ப முயல்கிறேன். ஏதோ, துரதிர்ஷ்ட வசமாக நான் கைது செய்யப்பட்டால் பின்னர் நீ நகருக்குள் சென்று பொது ஜனங்களிடையே பிரசாரம் ஆரம்பித்துவிடு. வா, போகலாம்" எனக்கூற அவளும் சம்மதித்து கடிவாளத்தைத் தளர்த்தி குதிரையை விரட்டினாள்; ஓர் நதிக்கரையை யடுத்ததும் தேவிபாலன் அவளுக்கு அதன் அருகாமையிலிருந்த அழகிய மண்டபத்தைக் காட்டி அங்கே தங்கியிருக்கும்படி எச்சரித்து விட்டு மைதானத்தை நோக்கிச் சென்று விட்டான்.

தூரத்தில் தூசி கிளம்ப வரும் குதிரையைக் கவனித்தான் ஜெகதீஷ். குதிரை பக்கத்தில் நெருங்கி வர வர, அதில் சவாரி செய்பவன் சேனாதிபதி தேவிபாலன் என்று தெரியவந்தது. தேவிபாலனும் அவனைச் சமீபித்து விட்டான். ஜெதீஷ் சடாரெனத் தன் குதிரையை விட்டிறங்கி அவனை வணங்கி நின்றான். தேவிபாலன் புன்னகை கொண்டு "ஜெகதீஷ் இதெல்லாம் என்ன?" என்றான்.

"பிரபு! தாங்கள் நிடத நாட்டிலிருந்து வெகுநாட்களாய்த் திரும்பி வராததுகண்டு ஒருசமயம் தங்களுக்கு அந்த ராணியால் ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோவென்று கருதிய அரசர், சேனையை என்னிடம் ஒப்புவித்து பயிற்சி கொடுக்கும்படியும், இன்னும் இரண்டு நாட்களுக்குள் தாங்கள் வராவிட்டால் யுத்தத்திற்குக் கிளம்பும்படியும் உத்திரவு பிறப்பித்து விட்டார். நல்ல வேளையாக நீங்களே வந்து விட்டீர்கள்" என்றான்.

"அப்படியானால் நம் அரசர் இப்போது இங்கு வரவில்லையா?"

"இல்லை பிரபு! அவர் தங்கள் வருகையைத் தான் ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்."

தேவிபாலன் அங்கே தன் அரசன் இல்லாதது கண்டு அகமகிழ்ந்து சேனைகளை யெல்லாம் சுற்றிப் பார்த்தான். நான்கு சேனைக்கும் தளகர்த்தர்களாக விருந்தவர்கள் தங்கள் தலைவனைக் கண்டதும் நின்றிருந்த இடத்திலிருந்தே வணங்கினார்கள். போர் வீரர்களும் மரியாதை செய்தனர். அவர்களுக்கெல்லாம் பதில் நமஸ்காரமளித்த தேவிபாலன் நான்கு முக்கிய தளபதிகளை தன்னிடம் வரும்படி சமிக்ஞை செய்தான். அவர்களும் வந்து அவன் முன்நின்றார்கள். "ரதம், கஜம், துரகம் முதலியவைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு போர் வீரர்களனைவரையும் இங்கே அமரும்படி செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். அவர்களும் அப்படியே செய்து முடித்தனர்.

தேவிபாலன் குதிரை மீதிருக்க, அவனைச் சுற்றி நான்கு தளகர்த்தர்களும், ஜெகதீஷும் நின்றுகொண்டிருந்தனர். போர் வீரர்களனைவரும் ஆயுதங்களை யெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு அவன் சொல்லப்போகும் விஷயத்தைக் கேட்க ஆவலுடன் வீற்றிருந்தனர்.

* * *

மண்டபத்தில் விடப்பட்ட பாலகல்யாணிக்கு தனியாக இருக்க மனம் இசையவில்லை, "என்னுயிர்க் காதலருக்கு அங்கே என்ன ஆபத்து நேரிடப்போகிறதோ? நான் இங்கேயே இருந்தால் எப்படித் தெரியும்? இதோ நானும் போகிறேன்." என்று குதிரையை அவிழ்க்கப் போனாள். குதிரையின் சமீபம் சென்றதும் அவளுக்கு யோசனை மாறி விட்டது. "அவர் உத்திரவை மீறிப்போவது பிசகல்லவா? அதனால் அவர் மனம் நோகாதா? ஆம், அப்படிச் செய்யக்கூடாது" என்று தனக்குள் தீர்மானித்தவளாய் குதிரையை அவிழ்க்காமலே அருகிலிருந்த மரத்தின் மீது ஏறி மைதானத்தின் பக்கம் நோக்கினாள். தேவிபாலன் குதிரை மீதிருப்பதும் அவனைச் சூழ்ந்து மெய் காப்பாளர்கள் போல் ஐந்து தள கர்த்தர்கள் நிற்பதும், ஆயிரக்கணக்கான வீரர்கள் அவன் முன் பய பக்தியோடு அவன் பேசப்போவதை கேட்க ஆவலாயிருப்பதையும் கண்டாள். மட்டிலா மகிழ்ச்சி யடைந்தாள். ஆனால் தேவிபாலன் பேசும் சப்தம் மாத்திரம் தனக்குக் கேட்காதே என்று வருந்தினாள். எனினும் அதைப் பார்த்துக்கொண்டே மரக்கிளையில் சாய்ந்தமர்ந்தாள்.

* * *

தேவிபாலன் போர் வீரர்களை நோக்கிப் பேசலானான்:—

'தோழர்களே!' என்று ஆரம்பித்தான். சேனாதிபதியாகிய அவன் சாதாரணப் போர் வீரர்களைப் பார்த்து

'தோழர்களே!' என்றதும் அவர்களனைவரும் அந்த ஒரு வார்த்தையிலேயே அவனிடம் மனதைப் பறிகொடுத்து விட்டார்கள்.

"தோழர்களே! மகா வீரர்களே! எல்லோரும் ஏகோபித்துக் கூடியிருக்கும் இச்சமயத்தில் நான் நிடத நாட்டில் கண்ட காட்சிகளை யெல்லாம் என் தோழர்களாகிய உங்கள் முன் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைதியாகக் கேளுங்கள்.

"நமது மன்னர், நிடத நாட்டு மகாராணி லக்ஷ்மி தேவியை, கேவலம் பெண், பேதையென நினைத்துப் படையெடுக்கத் தீர்மானித்திருக்கிறார். அடியேனும் அவ்வாறே நினைத்திருந்தேன். ஆனால் நான் அங்கே நேரில் கண்டதென்ன? கோரப் பற்களைக் காட்டி உறுமி ஓடிவரும் கொடிய புலிகளைக் கூட எதிர்த்து நின்று குத்திக் கொல்லும் புஜபல பராக்கிரமமுடைய அவர், தன் கன்னத்தில் படீரென ஓர் அறிவிலி, பலவீனன், அடித்தால் அவனிடம் இரக்கம் காட்டி மறு கன்னத்தை காட்டும் அஹிம்ஸா தர்ம உள்ளம் கொண்டவர். மஹா காளி; ஆனால் சாந்த மாதா! அவர் தன் சொந்த நிடத நாட்டை மாத்திரம் சிந்திக்கவில்லை. அகில லோக க்ஷேமாவிர்த்தியிலேயே சிந்தனையுடையவராயிருக்கிறார்.

"தோழர்களே, இதுவரை நடந்த யுத்தங்களிளெல்லாம் நாம் ஆயுதங்களாகக் கையாளப்பட்டோம். வீர தர்மம், தேசத் தியாகம், அரசாங்க ஆக்ஞையென்றெல்லாம் நினைத்து முன் வந்து யுத்தத்திற்கு இரையானோம். எத்தனையோ ஆயிரக்கணக்கான சகோதரர்களின் சிரங்களை வீசி எறிந்து, நம் சகோதரிகளையெல்லாம் விதவைகளாகவும், ஐயோ, விபசாரிகளாகவும் தெருக்களில் தவிக்க விட்டோம். அவர்களின் குழந்தைகள் இன்னும் நம் கண் முன் ஆதரவற்ற அநாதைகளாய் அலைகின்றனர்" என்று இவ்விதம் யுத்தக் கொடுமைகளையெல்லாம் பற்றி

வீரர்களின் மனதில் பதியும் வண்ணம் அழகாய்ச் சொல்லிக் கொண்டு வர, வீரர்களும் அவன் வார்த்தைகளில் லயித்து, சந்தடியின்றி மிக்க கவனமாய்க் கவனித்து வந்தார்கள்.

தேவிபாலனுக்குப் பதிலாக அரசன் கட்டளை பெற்று வீரர்களுக்குப் பயிற்சி தந்து வந்த ஜெகதீஷ், தேவி பாலனின் பிரசங்கத்தை மிக்க கவனமாகக் கேட்டு வெறுப்படைந்தான். உடனே அவ்விஷயத்தை தன் மன்னனிடம் தெரிவிக்க கூட்டத்தை விட்டு ஒருவரும் அறியாவண்ணம் நழுவினான். அவன் குதிரை அரண்மனை நோக்கி அதி வேகமாய் வந்துகொண்டிருந்தது.

அரண்மனையினுள் ரவிவர்மன் வழக்கம்போல் பிரத்யேக மண்டபத்தில் அமர்ந்து மிதமிஞ்சிய மதுவுண்டு, தன் பக்கத்திலிருந்த யௌவன மாது ஒருவளைக் கட்டியணைந்து, கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் வாயிற் காப்போன் ஓடி வந்து "மகா ராஜ்! ஜெகதீஷ் பிரபு தங்களை உடனே பார்க்கவேண்டுமென்கிறார்" என்றான்.

"வரச் சொல்" என்று பதிலளித்தான் மன்னன்.

ஜெகதீஷ் அரசன் முன் வந்து பணிந்து, "மகா ராஜ்! நம் சேனாதிபதி தேவி பாலன்......" என்று அதற்கு மேல் சொல்ல முடியாமல் திகைத்தான்.

"தேவி பாலனுக்கு என்ன நேர்ந்தது? அவனைப்பற்றி ஏதாவது செய்தி வந்ததா?" என்று ஆவலோடும் ஆத்திரத்தோடும் கேட்டான்.

"மகாராஜ்! அவர் வந்துவிட்டார்"

"அப்படியானால் ஏன் இன்னும் என்னை வந்து பார்க்கவில்லை. உடனே போய் வரச் சொல்"

"மகா ராஜ்! அவரது துரோகத்தைக் கவனித்தீர்களா?"

"என்ன ? துரோகமா ?"

"ஆம் மைதானத்தில் வீரர்களுக்கெல்லாம் நான் பயிற்சி யளித்துக் கொண்டிருக்கையில் அவர் வந்து யுத்தம் செய்வது பாவமெனவும், யுத்தத்திற்கு அவர்கள் செல்லக் கூடாதெனவும் எச்சரிக்கை செய்து விட்ட மகா ராணியையும் வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறார். வீரர் களும் அவரோடு சேர்ந்து ஆமோதித்துக் கோஷமிடு கின்றனர்."

"என்ன !........" மன்னன் விழிகளில் கோபாக்கினி வீசியது. பற்கள் நர நரவென்றது. மீசை துடித்தது. "சரி, வாரும் போகலாம்" என ஆவேசம் கொண்டவ னாய் எழுந்து குதிரைமீதேறி விரைந்தான். அவனைத் தொடர்ந்து ஜெகதீஷனும் சென்றான்.

அவர்களிருவரும் மைதானத்தை அடுத்து வந்துகொண் டிருந்தபோது தேவி பாலனும் தன் பிரசங்கத்தை முடித் துக்கொண்டிருந்தான். டோர் வீரர்களெல்லாம் "யுத்தம் ஒழிக ; சாந்தி ஓங்குக ; தேவி பாலனுக்கு ஜே ! ஜே !" என ஆரவாரித்துக்கொண்டிருந்தனர். மரத்தின்மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்த பால கல்யாணிக்கும் இந்தக் கோஷம் கேட்டது. அவளும் சந்தோஷத்தால் 'தேவி பாலனுக்கு ஜே !' என்று கத்தினாள். ஆனால் அவளது ஆனந்தம் அதிக நேரம் நீடித்திருக்க முடியவில்லை.

ராஜா ரவிவர்மன் கூட்டத்திற்குள் எதிர்பாராதவித மாய் வேகமாய் வருவதைக் கண்ட வீரர்கள் விலகி வழி விட்டார்கள். தேவி பாலனும் குதிரையினின்று இறங்கி வணங்கி நின்றான். ரவிவர்மனோ அவனைக் கண்டதும் அதிக கோபம் கொண்டவனாய் "தேவி பாலா, என்ன காரியம் செய்யத் துணிந்தாய் ? துரோகி..........." என்றான்.

தேவி.—"அரசே ! அவசரப்படவேண்டாம். ஆத் திரமடையாமல் சற்று கவனிக்க வேண்டுகிறேன். இதோ

பாருங்கள், உங்கள் முன்னிற்கும் இவர்களை, இத்தனை ஆயிரம்பேர்களின் உடலை, ஊனப்படுத்தியும், உயிர்களைப் பிரித்தும், அவர்கள் குடும்பங்களை யெல்லாம தெருவில் தவிக்க விடுவது சிலாக்கியமா? அதுவும் ஒரு நிலையற்ற காரணத்திற்காக! மும்முறை படையெடுத்துச் சென்றோம். தோல்வியடைந்தோம்; எத்தனையோ வீரர்களை இழந்தோம். ஆயினும் கிட்டிய பலன் என்ன? திரும்பவும் யுத்தத்திற்கே ஆரம்பிக்கிறோம். இதனால்..."

"அடே சண்டாளா! கோழைகளின் வேதாந்தம் உனக்கும் முற்றிவிட்டதோ? சரி. இனி உன்னை வெளியில் விட்டிருப்பதே ஆபத்தாக முடியும்போலிருக்கிறது. ஜகதீஷ்! இவனைச் சிறை கூட்டத்திற்கு இழுத்துச் செல்" எனக் கர்ஜித்தான் ரவிவர்மன்.

இதைக் கேட்ட சேனு வீரர்கள் அனைவரும் ஆத்திரமடைந்தவர்களாய் அரசனுக்கு எதிரிடையாக ஆரவாரம் செய்ய முயலுகையில் அவர்களைக் கையமர்த்தி தேவீபாலன் சொன்னான். "தோழர்களே! அன்பின் நிமித்தம் நாம் யுத்தத்தை நிறுத்த முயற்சிக்கிறோம். அன்பை நிலைநாட்ட சாந்தத்தைக் கொண்டு தியாகம் புரிந்தால் தான் வெற்றி கிட்டும். திடசித்தமாயிருந்து தியாக அக்னிப் பிரவேசத்திற்கு எப்போதும் தயாராக யிருங்கள். அரசன் ஆக்கினைப்படி நான் சிறை கூடம் செல்லுகிறேன். ஜே! ஜெகன்மாதாவுக்கு!" என முடித்து அரசன் பக்கம் திரும்பி நின்றான். அவன் கைகளில் விலங்குகள் மாட்டி அழைத்தேகப்பட்டான். சேனு வீரர்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்கி அவர்களை கோட்டைக்குள் நடத்திச் சென்றான் ஜகதீஷ்.

மரத்தின்மீதிருந்த பால கல்யாணி இதைக் கண்டு திடுக்கிட்டாள். அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. மரத்தினின்று கீழே இறங்கிவந்து மண்டபத்தை யடைந்து என்ன செய்வதென்று நீண்ட நேரம் யோசனையிலாழ்ந்தாள்.

---

## அத்தியாயம் 30

### "வீழ்க கொடுங் கோன்மை! வீழ்க! வீழ்கவே!"

பால கல்யாணி யோசித்துப் பார்த்தாள். தேவி பாலன் உதவியில்லாமல் தனியாக நகருக்குள் சென்று பிரசாரம் செய்வது அவளுக்கு உசிதமாகத் தோன்றவில்லை. அதுவும் நிடத நாட்டின் இளவரசி யென்று ரவிவர்மனுக்குத் தெரிந்து விட்டால் அதிகக் கொடுமைக்களாக வேண்டுமென்றும் தோன்றிற்று, இவ்விதம் யோசித்துக்கொண்டிருந்ததாலேயே பொழுது போனது கூட அவளுக்குத் தெரியவில்லை. குளக்கரையில் வரிசையாய் நின்ற மரங்களிலெல்லாம் சின்னஞ் சிறு குருவிகள் கூட்டம் கூட்டமாய் வந்து வீச், வீச் எனக் காது செவிடுபடும்படி கத்திக்கொண்டிருந்துவிட்டு இருள் சூழ்ந்ததும் கூட்டிற்குள் சென்றடைந்தன. அவள் அன்று பாதிப்பகல் வழிப் பிரயாணம் செய்ததாலும், பசியால் சோர்ந்து போயிருந்த படியாலும், இருள் சூழ்ந்ததும், வரும் வழியில் தேவி பாலன் பறித்துக் கொடுத்த பழங்களை உண்டு குளத்து நீரைப் பருகி பசியை ஒருவாறு தணித்துக் கொண்டு, குதிரையை அவிழ்த்து மரத்தடியில் மறைவான இடத்தில் கட்டி விட்டு தானும் மண்டபத்தில் ஓர் மூலையில் ஒருவர் கண்ணிலும் படாதவண்ணம் படுத்துக்கொண்டாள். களைப்பு மிகுதியால் படுத்ததும் தூங்கிவிட்டாள். அவள் எவ்வளவுநேரம் தூங்கினாளோ அவளுக்கே தெரியவில்லை. ஏதோ சப்தம் கேட்டு வாரிச் சுருட்டி எழுந்தாள். சப்தம் வந்த பக்கம் உற்றுக் கவனித்தாள். யாரோ இருவர் பேசுவது கேட்டது. அதுவும் ஆண்பிள்ளைகள் குரல் என்று கேட்டதும் பயந்து விட்டாள். எனினும் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு படுத்திருந்த இடத்தை விட்டு

எழுந்து தூணுக்குத் தூண் மறைந்து குளக்கரையை நோக்கி வந்தாள். மண்டபத்தின் வாசற்படியண்டை வந்து நின்று சுற்றிலும் கவனித்தாள். குளத்தின் படிக்கட்டில் இரண்டு ஆடவர்கள் இருப்பதைக் கண்டுவிட்டாள். சந்தடியின்றி, அவர்கள் அறியாவண்ணம், அவர்கள் பேச்சுக் கேட்கும் தூரத்தில் தூண்மறைவில் நின்றாள். அவர்களிருவரும் வெகு ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தபடியால் பேச்சு முழுமையும் கிரகிப்பது அவளுக்குக் கடினமாக இருந்தது.

"ராஜா செய்ததும் தப்பிதம்தான். சேனைகளுக்கே தலைமையாய் இருப்பவனை, அவன் கட்டளைக்குக் கீழ் படிந்து நடக்கும் வீரர்கள் முன்னிலையிலேயே, விலங்கிடச் செய்யலாமா?"

"தேவிபாலனும் த்ரோகம் செய்ய நினைத்திருக்கக் கூடாது. இத்தனை காலம் இதற்கென்றே ஏராளமான பொருள் செலவு செய்து பட்டாளத்தைத் தயார் செய்து வைத்துக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாய் இருக்கும் இச்சமயத்தில், அவர்களை வேண்டாமென்று அவன் வந்து தடுக்கலாமா? அரசனின் மனது என்ன பாடுபடும்?"

"தேவிபாலன் சொல்வதிலும் உண்மையிருக்கிறதே. எத்தனை ஆயிரம் உயிர்கள் சேதமடைகின்றன? எத்தனை குடும்பங்கள் நிர்மூலமாகின்றன? எல்லாம் இந்தப் பாழும் யுத்தத்தால்தானே?"

"அதுவும் சரிதான், ஆனால் எல்லா தேச மன்னர்களும் தேவிபாலன் சொல்கிறபடி நடப்பார்களா?"

"ஏன் அப்படிச் சந்தேகமாய்க் கேட்கிறாய்? நீடத தேச மஹாராணி தன்னால் இயன்றவரைக்கும் உலகத்திலேயே சமாதானத்தை நிலை நாட்டப் பாடுபடுவதாகத் தேவிபாலனே நேற்று சொல்லவில்லையா?"

"அடே இப்பத்தான் எனக்கு ஞாபகம் வருகிறது; தேவிபாலன் நிடத நாட்டிலிருந்து யாரோ ஒரு பெண்ணையும் தன்னோடு கூட்டிக்கொண்டுவந்ததாக வதந்தியுலாவுகிறதே! அது யார்? தேவிபாலனோடு அப்பெண்ணையும் அரசன் சிறைக்குள் தள்ளிவிட்டானா? தெரியவில்லையே எதற்கும் நாளைக்குத்தான் ராஜாவே ஒரு கூட்டத்தில் பேசப்போகிறாராம். அப்போது எல்லாம் வெளியாகிவிடும்".

"இப்போது ஊரில் மன்னவனுக்கு ஆதரவு காட்டுகிறவர்களும் தேவிபாலனுக்கு ஆதரவு காட்டுகிறவர்களுமாக இரண்டு கட்சியாகிவிடும்போல் இருக்கிறதே!"

"தேவிபாலனுக்குத்தான் எல்லோரும் சலுகை காட்டுவார்கள். நாளைக்குக் கூட்டத்தில் இதைத் தெரிந்துகொள்வதற்குத்தான் அரசர் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார் போலிருக்கிறது."

அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையிலேயே மரத்தில் கட்டப்பட்டிருந்த குதிரை பெரிய சத்தமிட்டுக் கனைத்தது. அந்த இரவில் அதைக் கேட்டுப் பயந்த அந்த இரு மனிதர்களும் அங்கிருந்து ஓட்டமெடுத்தார்கள்.

பாலகல்யாணி அவர்கள் பின் "ஐயா, ஐயா! நில்லுங்கள்.........நில்லுங்கள்" என்று கத்திக்கொண்டே ஓடினாள். அவர்கள் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது ஒரு வனமோகினிப் பிசாசுதான் தங்களை துரத்திவருகிறதென்று நினைத்து அலறிப் புடைத்துக்கொண்டு அவர்கள் ஓடி மறைந்துவிட்டார்கள்.

அவள் மண்டபத்தில் வந்து அமர்ந்து 'நாளைக்கு அரசனே கூட்டம் கூட்டிப் பேசுகிறானாம். சரி, இதுதான் தக்க சமயம். கூட்டம் கலைந்துவரும்போது தெருவில் நின்றுகொண்டு பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டால் போதும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு

அதற்குமேல் தூக்கம் பிடிக்காமல் விடியுமளவும் விழித்துக்கொண்டேயிருந்தாள்.

விடிந்து வெகுநேரத்திற்குப்பின் நகருக்குள்ளிருந்து கொம்புகளும், டமாரங்களும், ஒலிக்கும் சப்தம் கேட்டு அதுதான் கூட்டம் ஆரம்பிப்பதற்கு அறிவிப்பாகுமென்றறிந்து அவளும் நகரை நோக்கிப் புறப்பட்டாள். நகரமாந்தர் அனைவரும் அரசன் பிரசங்கத்தைக் கேட்க அரண்மனைக்குப்போவது கண்டு அவர்களைத் தொடர்ந்து அவளும் அரண்மனை வாயிலை அடைந்தாள். அரண்மனைக்குள் சென்று அங்கு பேச்சைக் கேட்க அவள் விரும்பவில்லை. ஆதலால் கூட்டம் திரும்பி வருமளவும் வாயிலிலேயே நின்று கொண்டிருந்தாள். சுமார் இரண்டு நாழிகைகள் நின்றிருப்பாள். பிரசங்கம் முடிந்துவிட்டதற்கு அடையாளமாக உள்ளேயிருந்து ஜனங்களின் ஆரவாரமும் அவர்கள் கலைந்துவரும் சப்தமும் கேட்டது. அரண்மனை வாயிலைவிட்டு ஓடோடியும் சென்று தெருவில் ஓரமாய் நின்றுகொண்டிருந்தாள். ஒரே கூட்டமாகச் சங்கிலித் தொடர்போல ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி கையமர்த்தினாள். அழகுள்ள வனிதை; இளம் வயது. அவள் உடையிலிருந்து ஊருக்குப் புதிது என்றறிந்த ஜனங்கள் அவளைச் சுற்றிக் கூடினார்கள். முக்கியமாகப் பெண்கள் கூட்டமே அதிகரித்தது. அவர்களையெல்லாம் புன்முறுவல் பூத்த முகத்தோடு வணங்கினாள். அனைவரும் அவள் என்ன சொல்லப்போகிறாள் என்று நினைத்து சந்தடியின்றி நின்று கவனித்தார்கள். அவள் பேச ஆரம்பித்தாள்:--

"மீவார் தேச மாது சிரோன்மணிகளே! தாய்மார்களே! நான் நிடத நாட்டிலிருந்து வருகிறேன். நேற்று இங்கே உங்கள் அன்பிற்குப் பாத்திரமான சேனாதிபதி சிறைபட்டிருப்பதைக் கேள்விப்பட்டு அதைப்பற்றி கூறவே உங்களை நிறுத்தினேன். நான் நிடததேச ராணியின்

உத்தரவை மேற்கொண்டு அவரது சாந்திமார்க்கத்தையே உங்களுக்குப் போதிக்க வந்திருக்கிறேன்" என்ருள்.

நிடத மகாராணி என்ற பெயர் கேட்டதும் ஆண்களும்கூட நெருங்கிவந்து, "சொல்லுங்கள்" என்று ஆவலாய்க் கேட்டார்கள்.

"பெரியோர்களே! நாம் அனைவரும் ஒரு கூண்டிலடையும் தேனீக்கள் போன்றவர்கள். நமது லக்ஷியம், போக்கு, தேவை இவைகள் எல்லாம் பிரிக்கமுடியாதவைகள் ஆகும். நமக்குத் தற்சமயம் தேவையாயிருப்பது சுதந்திரமும், சாந்தியும்தான். இவைகளிரண்டும் நம் இரு நேத்திரங்களுக்குச் சமானமுள்ளதாகும். மனித வாழ்விற்கு சுதந்திரமும், மனதிற்குச் சாந்தியுமில்லையேல் உலகில் வாழ்வதென்ன பயன்? அதையடைய இதோ தருணம் நெருங்கி விட்டது. முக்கியமாகப் பெண்களாகிய நாம் சுதந்திரவீரமும், அகிம்சாதர்மமும் கொண்ட வீரர்களை நாட்டிற்களிக்கும்படியாக நம் இதயத்தைப் பண்படுத்தும் நாள் தொடங்கி விட்டது. நம் இதய ஜ்வலிப்பை மிகைப்படுத்தவே தேவிபாலன் நேற்று சிறை புகுந்துவிட்டார்.

"இன்னும் ரவிவர்ம மன்னர் நம்மை நம் சகோதர இனத்திற்கே எதிரிடையாக அந்த மகா பயங்கர யுத்தத்தில் நின்று அழிந்துபடத்தூண்டுகிருர். நாம் சாந்தியையே நாடுகிருேம். நம் தலைகள் அப்பலி பீடத்தில் துண்டிக்கப் பட்டால் ஆனந்தத்துடன் சகிப்போம். ஆனல் மற்ற உயிர்களைச் சூறையாட நாம் ஆயுதத்தைக் கையாலும் தொட மாட்டோம் என்பதை அரசனுக்கு அறிவித்து விட வேண்டும்.

"இங்கு கூடியிருக்கும் மதாசாரியர்களே! வீணன தர்க்க வாதத்தில் உங்கள் மதியைச் செலுத்தாது, ஆச்சாரியர்களின் அன்பு, சாந்தி, சத்யம், இவைகளின் உன்னதக் கொள்கையில் ஜீவியப் போராட்டம் நடத்துங்கள்.

கேவலம், வயிற்றுப்பிழைப்புக்காக, உங்கள் வேதம் போதிக்கும் அன்பின் அறத்தை மறந்துவிடாதீர்கள். சாந்தியின் தத்துவத்தைக் கைவிடாதீர்கள். சத்தியத்தின் தர்மத்தைத் தவறவிடாதீர்கள்...... ..'' என அழகாகவும், ஆர்வத்துடனும் பேசியதை மதுவுண்டு மயங்கிய வண்டுகள் போலக் கேட்டு மயங்கி நின்ருர்கள் ஜனங்கள்.

அவள் அவ்விதம் தேவி பாலனின் கொள்கையை ஆதரித்துப் பேசிக்கொண்டிருந்ததை ஒற்றர்கள் மூலமறிந்த அரசன் உடனே ரதமேறி அங்கு வந்தான். ரதம் வரும் ஓசை கேட்டு ஜனங்கள் கலவரத்துடன் விலகி நின்ருர்கள். கோபக் கனல் வீச ரதத்தை விட்டிறங்கிய அவன் நேரே பால கல்யாணியிடம் விரைந்து சென்று அவள் கையைப்பற்றி இழுத்து, "இவ்வளவு தைரியமாய்ப் பேச வந்த நீயார்? என்ருன். "சகோதரா! யுத்த பைசாசத்தைக் கொன்று அடியோடு தொலைத்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஓர் சாதாரணப் பெண்!"

"சை, தூர்த்தை! யுத்தத்தை நிறுத்தப் போகிருளாம்!" எனக் கூறி பளீரெனக் கன்னத்தில் அறைந்தான் தன் பலம்கொண்ட மட்டும். "ஹா" எனக் கதறிச் சுருண்டு வீழ்ந்தாள் தரையில். குழுமியிருந்த ஜனங்களுக்கு ஆத்திரம் அணைகடந்தது. பற்களை நரநரவென்று கடித்து அரசனை நெருங்கினர். தரையில் விழுந்த அவள் குபீரென எழுந்துநின்று "பெரியோர்களே! சாந்தி! வரும் ஆக்கினை அத்தனையையும் அன்போடு ஏற்போம். ஆத்திரமடையாதீர்கள்" எனக் கையமர்த்திஞள்.

"இவளையும் பிடித்திழுத்துச் சென்று சிறைக்குள் தள்ளுங்கள்" என்று கர்ஜித்தான் அரசன்.

வீரர்கள் அவளை இழுத்துச் சென்றனர். கூட்டமும் கலைக்கப்பட்டது.

———

## அத்தியாயம் 31.

"சதையைத் துண்டு துண்டாக்கினு
முன்னெண்ணம் சாயுமோ?"

மீவார் நகரெங்கும் அரசனின் கொடூரச் செய்கையைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. பெண்ணென்று கூடப் பார்க்காமல் அவளையும் சிறைப்படுத்தி விட்டானே என்று அவர்கள் ஆத்திரப்பட்டார்கள். ஒற்றர்கள் என்று யாரை எல்லாம் சந்தேகப்பட்டார்களோ அவர்களின் தலைகள் இரவில் வீசப்பட்டன. நாடெங்கும் கிளர்ச்சி ஆரம்பித்துவிட்டது! நாளாக ஆக குத்தும் கொலையும் அதிகமாகிக் கொண்டுபோவதைக் கண்ட மேருவண்ணன் என்னும் பொதுஜன அன்பிற்குப் பாத்திரமான இளைஞன் ஒருவன் தைரியமாய் முன்வந்து ஜனங்களை யெல்லாம் ஆங்காங்கே ஒருங்கு சேர்த்து அரசனின் அக்கிரமத்திற்கு அவனின் சேவகர்களை வாட்டுவதில் பயனில்லை யென்று நீதியைப் புகட்டி, பொது ஜனங்களெல்லாம் ஏகோபித்து வீரர்களை ஆயுதம் தொடக்கூடாதென வேண்டிக்கோள்ள வேண்டுமென்று முடிவு கட்டினான்.

ராணுவ வீரர்களிடையே அரசனின் அக்ரம காரியங்களைப்பற்றி வம்புகள் பரவ ஆரம்பித்தன. யார் யார் ராஜத் துரோகியாக நடப்பார்களென்று தோன்றிற்றோ அவர்களைப்பற்றி யெல்லாம் ஒற்றர் மூலமாக அறிந்த ஜகதீஷ் அந்த வீரர்களைப் பிடித்து சிறையில் அடைத்துக் கொண்டேயிருந்தான். இவ்வாறு அடைக்க அடைக்க வீரர்களின் விரோதத்தை மேலும் மேலும் சம்பாதித்துக் கொண்டதுதான் கண்ட பலன்.

இந்த விஷயங்களை யெல்லாம் அரசனிடம் சொல்லி ஆலோசித்தான். "இனி துரோகிகளைச் சிறையிலிடாதே; பகிரங்கமாக கொலைத் தண்டனை கொடுத்துவிடு" என்று

அரசன் உத்தரவிட்டான். நான்குவகைப் படைகளின் தலைவர்களாக இருந்து தேவிபாலன் வசம் அன்பு பாராட்டினர்களே, அந்த நான்கு பெரு வீரர்களுக்குமே ஒருநாள் ஜகதீஷ் மரண தண்டனை விதித்தானென்றால் அவன் கொடுமையையும் திமிரையும் என்னென்பது!

* * *

சிறைக்குள் அடைபட்டிருக்கும் தேவிபாலன் வெளியே நடக்கும் விஷயங்களை யெல்லாம் சிறைக்காவலாள் மூலம் தெரிந்து அரசனின் மடமையை நினைந்து நினைந்து மனமுருகி தன் நாட்டின் மக்கள் அரசனுக்கு எப்படிப் புத்தி புகட்டப் போகிறார்களோ என்று ஏங்கியிருந்தான். தன் பொருட்டு பாலகல்யாணியும் சிறைவாசம் அனுபவிக்கிறதை அவன் கேள்விப்பட்டபோது அவனையும் அறியாமல் துக்கம் மீறியது. அவளைப் பிரிந்த மகாராணி லக்ஷ்மிதேவி என்ன பாடுபடுகிறார்களோ என்று எண்ணி அன்னமும் சரியாக உண்ணாமல் வாடினான். சிறைக்குள் அடைபட்டிருக்கும் தன் காதலிக்கு ஆறுதல் வார்த்தை கூறக்கூட முடியவில்லையே என்று சஞ்சலமடைந்தான். மனோ வியாதியால் பீடிக்கப்பட்ட அவன் உடல் புழுதியடைந்து, சோர்ந்து காணப்பட்டது. அளவிற்கு மீறிய களைப்பால் ஒரு தினம் இரவு கண் அயர்ந்து தூங்கிய சமயம் அவன் கனவில் மைதானத்தில் வெட்டுண்ட நான்கு வீரர்களின் தலைகள் ஆகாய மார்க்கமாய்ப் பறந்து அவன் அறைக்குள் நுழைந்தன. அவைகளைக் கண்டு திடுக்கிட்டான். அவைகள் அவனை வணங்கி "தேவி பாலரே! நாட்டிற்கு க்ஷேமவிதையை நாட்டி விட்டு வந்தீர்கள். இதோ நாங்கள் எங்கள் உதிரத்தை ஊற்றி அதை வளர்க்கிறோம். இன்னும் சில நாட்களில் அது வளர்ந்து மரமாகி இலை, பூ, காயோடு குலுங்கக் காண்பீர்கள். அப்போது உங்களுக்கும் மற்றெல்லோருக்கும் விடுதலை கிட்டும் என்று கூறி மறைந்தன. அவன்

ஆச்சரிமடைந்து எழுந்து அதைப்பற்றி யோசித்தான். நகர் முழுதும் ஒரே அல்லோலகல்லோலமா யிருப்பதைப் பற்றி சிறைக் காவலாளிகள் அவ்வப்போது அவனிடம் கூறிக் கொண்டிருந்தார்கள்.

"ஹே! ஜெகன்மாதா! உன் திருவடிகளையே தஞ்சமென்றடைந்திருக்கும் உன் குழந்தைகளை நீ இப்படிச் சோதனைக்குள்ளாக்கலாமா? அரசனுக்குப் புத்தியைப் புகட்டி உன் புத்திரர்களையும் உஜ்ஜீவிக்கச் செய்ய மாட்டாயா?' என்று தேவிபாலான் கண்ணீர் பெருக வணங்கி, அதற்கு மேல் நித்திரைகொள்ளாமல் அறையில் இங்குமங்கும் நடந்துகொண்டிருந்தான்.

---

## அத்தியாயம் 32

### "தேவி! நின்னெனி பெருத தேயமோர் தேயமாமோ?"

மீவாரில் கிளர்ச்சி மேல் கிளர்ச்சி கிளம்பிக்கொண்டிருந்தசமயம் நிடத நாட்டிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. மகாராணியை இழந்த மக்கள் தாயை இழந்த கன்றுகள்போல் தவித்தார்கள். வீரநாத்தைப் பழிக்குப் பழி வாங்கிவிட அவர்கள் அவனை எங்கெங்கு தேடியும் காணமல், அந்த முயற்சியைக் கைவிட்டு, லக்ஷ்மிதேவியைத் தேடிப் பிடித்து நாட்டிற்கு அழைத்துவந்து ராஜ்ய பாரம் முன்போல் நடக்கச்செய்ய அவர்கள் ஆசைப்பட்டார்கள். மீவார் மன்னன் ரவிவர்மன் திடீரென படையெடுத்து வந்துவிட்டால் நாட்டை எவ்விதம் காப்பாற்றிக் கொள்வதென்பதை நினைத்தபோது அவர்கள் தங்கள் தலைவி இல்லாமல் ஒன்றும் செய்யமுடியாதென்பதை உணர்ந்து உடனே மகாராணியைத் தேடிக்கண்டடைய தீவிர முயற்சியில் ஈடுபட்டார்கள்.

வீரநாத்துடன் சேர்ந்து ராணியைத் துரத்திய அமரநாத்தும் அவன் சகாக்களும், வீரநாத் நாட்டை விட்டே

ஓடியபின்பு ஜனங்களின் கடுங்கோபத்திற்கு அஞ்சி அவர்கள் இஷ்டம்போல் நடக்கச் சம்மதித்தார்கள். இப்போது அமரநாத் தான் ராஜ்யகாரியங்களை 'ராணிக்குப் பதிலாக' கவனித்து வந்தான்.

ராணியைத் தேடியடைய நாலா பக்கங்களிலும், குதிரை வீரர்களும், நகரின் பிரபல மக்களும் புறப்பட்டுச் சென்றனர். அவர்களில் ஒரு பகுதியினர் மீவார் காட்டை நோக்கிச் சென்றார்கள். மலைகளையும், வனங்களையும் கடந்து இரவு பகலாகத் தேடிக்கொண்டு வந்த அப்பகுதியினர் ஓர் தினம் காலை வேளையில் ராணியார் தங்கியிருந்த அதே வனத்தில் சில மைல்களுக்கப்பால் தங்கியிருந்தனர்.

ராணியார் தங்கியிருந்த இடத்திலிருந்து வழக்கம் போல் கோபாலச்சிறுவர்கள் தங்கள் மாடுகளையெல்லாம் மேய்த்துக்கொண்டு வரும்போது மேற்சொன்ன குதிரை வீரர்களையெல்லாம் கண்டு அவர்களிடம் ஓடிப்போய் அவர்களை வேடிக்கை பார்த்தார்கள். வீரர்கள் அணிந்திருந்த உடைகளும் அவர்கள் ஆயுதம் தரித்திருந்த அழகும், இதற்குமுன் அவர்களைப் பாராதிருந்த அச்சிறுவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணின. அவ்வீரர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதைப் பார்த்து சிரித்தார்கள் சிறுவர்கள். தாங்கள் கொண்டுவந்த உணவுப் பொருள்கள் எல்லாம் வழியிலேயே தீர்ந்துவிட்ட படியால் உணவிற்கு மிக்கக் கஷ்டப்பட்ட வீரர்கள், இச்சிறுவர்களைக் கண்டதும் அருகாமையில் ஏதேனும் குக்கிராமம் இருக்குமென்று எண்ணி அவர்களிடம் "தம்பி நீங்களெல்லாம் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று அவ்வீரர்களின் தலைவன் கேட்டான்.

"எங்க ஊர் இங்கேயிருந்து நாலு கல்விருக்கும்" என்றார்கள் பையன்கள்.

"அங்கே சாப்பாட்டிற்கு ஏதாவது கிடைக்குமா?"

"ஓ! எவ்வளவு வேணுமானாலும் கிடைக்கும். தயிர், பால், காய்கறி எல்லாம் ஏராளமாகக் கொடுக்கிறோம். நீங்கள் எல்லாம் எங்கிருந்து வாரீங்க?"

"நாங்கள் எல்லாம் மருங்காபுரியிலிருந்து வருகிறோம்."

"மருங்காபுரியிலிருந்தா?" என்று சிறுவர்கள் ஆச்சரியப்பட்டுக் கேட்டார்கள்.

"ஆம், மருங்காபுரியிலிருந்துதான்!"

"மருங்காபுரியிலிருந்து வரவுங்களுக்கு எங்க ஊரிலே இடம் கொடுக்கமாட்டாங்கள். நீங்கள் வந்து பிரயோஜனமில்லே."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"மருங்காபுரி மகாராணியம்மாளை விரட்டி விட்டவுங்க தானே நீங்க?"

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்?"

"ஏன் தெரியாது? ராணியம்மாளேதான் சொன்னாங்களே?"

இதைக் கேட்டதும் வீரர்கள் எல்லாம் ஆச்சரியத்தோடு சிறுவர்களைச் சூழ்ந்துகொண்டு, "எங்களை ராணியாரிடம் கூட்டிச் செல்லுங்களப்பா" என்று கெஞ்சினர்.

"மகாராணியம்மாளைத் தேடிப் பிடிச்சு கொலை செய்யனுமின்னு மருங்காபுரியிலேயிருந்து ஆள்கள் கிளம்பி வருவாங்கன்னு சொல்லி யிருக்காங்க. இப்போது அது மாதிரியே நீங்களும் வில்லெல்லாம் எடுத்துகிட்டு வந்ததைப் பார்த்தா...! அதெல்லாம் உங்களைக் கூட்டியே போகமாட்டம்" என்றனர்.

"தம்பி, பயப்படாதீர்கள்; நாங்கள் எல்லாம் மகாராணியை கொலை செய்ய வரவில்லை. அவர்களை மறுபடியும் ஊருக்குக் கூட்டிப்போகத்தான் வந்திருக்கிறோம்" என்று

மன்றாடினார்கள். சிறுவர்களுக்குக்கூட அவர்கள் பேரில் பரிதாபம் ஏற்பட்டது. ஆகவே "வாருங்கள்" என்று தங்கள் கிராமத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அச்சமயம் மகாராணி பர்ணசாலையின் முன் வீற்றிருந்து வீரநாத்துடன் மீவார் சென்ற தேவிபாலனையும் பாலகல்யாணியையும் பற்றி ஒரு விபரமும் தெரியாமலிருப்பதைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தாள்.

ஒரு மலையுச்சியிலிருந்து வரும் அவ்வீரர்களை வீரநாத் முதலில் பார்த்துவிட்டான். குதிரைகள் தூசியைக் கிளப்பிக்கொண்டு வேகமாய் ஓடிவருவதை அவன் கவனித்துப் பார்த்துவிட்டு, "தேவி, நம் நாட்டு வீரர்கள் போலிருக்கிறது. ஒரு சமயம் அமரநாத் உங்களைத் தேடிவருகிறானோ? தேவி, சீக்கிரம் உள்ளே போய் மறைந்துகொள்ளுங்கள்" என்றான்.

மகாராணி சிரித்துக் கொண்டே, "வீரநாத், ஏன் இப்படிக் கோழைத் தனமாகப் பேசுகிறாய்? அமரநாத் ஒருக்காலும் எனக்குத் துரோகம் செய்யமாட்டான். அப்படியே அவன் வந்தாலும் வரட்டுமே! அவன் நோக்கமென்னவென்றுதான் பார்ப்போம்" என்று அவனுக்குச் சமாதானம் கூறினாள்.

அதற்குள் குதிரை வீரர்கள் பர்ணசாலை முன் வந்து குதிரையினின்று மடமடவெனக் குதித்து லெக்ஷ்மி தேவியிடம் ஓடி........"தாயே! எம் தேவமாதா........" என்று பணிந்து வீழ்ந்தார்கள்.

"வீரத் திலகங்களே, எழுந்திருங்கள்" என்று ஆசீர்வதித்தாள். எழுந்து நின்ற அவர்களின் கண்களில் ஆனந்த பாஷ்பம் உதிர்ந்தது. அவர்களில் ஒருவன் ராணியருகில் வீரநாத் நிற்பதைக் கண்டு விட்டான்.

"அட துரோகி! இன்னுமா உயிருடன் இருக்கிறாய்?" என்று கர்ஜித்துத் தன் உடைவாளை உருவிக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்தான்.

ராணி சட்டென அவ்வீரனின் கையைப்பிடித்து நிறுத்தி, "வீரனே, உன் பட்டயத்தை உரையில்போடு. பழைய வீரநாத் என்று நினைக்காதே! புனர்ஜன்மம் எடுத்த வீரநாத்தைத்தான் இங்கே காண்கிறாய். கட்டுக் கடங்காமல் வரும் ஆத்திரம், ஆவேசம், இவைகள் வாழ்க் கையையே நாசம் செய்யும் என்பதை நீ அறியவில்லையா? சாந்தமாய் இரு" எனத் தேற்ற அவனும் ராணியின் ஸ்பரிசம்பட்டமாத்திரத்தில் பேழையினுள் பாம்புபோல உடைவாளை உரையில் போட்டுத் தலைகுனிந்து வணக்க மாய் நின்றான். வீரநாத்தின் மனச் சாட்சியும் அவனை உறுத்திற்று. உடனே அவ்வீரர்களின் முன் தன் குற் றத்தை ஒப்புக்கொள்ளும் முகத்தான், அவன் அவர்களைப் பார்த்து "வீரர்களே! சத்தியத்தின் உருவாக அவதரித்த நம் தேவ மாதாவின் உயிருக்கு தீங்கு நினைத்தது நான் தான். ஆனாலும் நம் மாதாவின் கிருபாகடாட்சத்தால் இன்று புத்துயிர் பெற்றுவிட்டேன்" என்று கண்ணீர் ததும்ப மொழிந்தான். ராணியாரும் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து வீரர்கள் பக்கம் திரும்பி:-

"வீரர்களே! நம் நாடு இப்போது எப்படியிருக்கிறது? மக்கள் அமைதியாக இருக்கிறார்களா?" என்றாள்.

"தாயே! தங்களைப் பிரிந்த பின்னர் நாட்டில் ஒரு வருக்கும் ஆனந்த வாழ்வே கிடையாது. தாங்கள் இன் னும் சில காலம் இங்கே தங்கியிருந்துவிட்டால் நம் நாட்டில் காட்டு மிருகங்களை வாழும்படி விட்டுவிட்டு மக் கள் எங்கேனும் சென்று விடுவார்கள் போலிருக்கிறது. ஆதலின், அன்னையே இப்பொழுதே புறப்படுங்கள்" என்று இரைஞ்சினார்கள். மஹாராணி தன் பிரஜைகள்

தன்பால் கொண்டுள்ள அபார வாஞ்சையைக் கண்டு புளகாங்கிதமடைந்தாள்.

குதிரை வீரர்கள் தங்கள் குக்கிராமத்திற்குள் கூட்டமாய் வந்ததைக் கண்ட இடையர்கள், ஆண், பெண், அனைவரும் கதிகலங்கி ராணியாருக்குத்தான் ஆபத்து வந்துவிட்டதோ என்று நினைத்து அவர்களைச் சூழ்ந்து பர்ணசாலையின் முன் கூடி நின்றுகொண்டிருந்தார்கள். வீரர்கள் வேண்டிக் கொண்டதையும் ராணியார் அவர்களுக்கு சம்மதம் அளிக்கத் தயாராய் இருப்பதையும் கண்டு இடையர்கள் மனம் கலங்கி விட்டார்கள்.

அவர்களின் முகக் குறிப்பால் அதை உணர்ந்த மஹா ராணி அவர்களை நோக்கிச் சொன்னுள் :

"பெரியோர்களே, சகோதரிகளே, நான் தங்களை விட்டுப் பிரிந்துபோக வேண்டிய திருப்பதைக் குறித்து மிகவும் வருத்தமடைகிறேன். இங்கு தங்கிய இச்சொற்ப காலத்தில் உங்களின் அன்பினுல் என் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட உங்களிடமிருந்து பிரிந்து போவது மிகக் கஷ்டமாகத் தோன்றினுலும், என் பிரஜைகளின் வேண்டுகோளையும் நான் நிராகரிக்க முடியாதவளாயிருக்கிறேன். நான் ஏற்றுக்கொண்ட பொறுப்பைக் காப்பாற்ற வேண்டுமல்லவா ?" என்ருள்.

கோபாலர்களின் தலைவராக இருந்த முதியவர் ஒருவர் "அம்மா; எங்களை இப்படித் தவிக்கவிட்டு போகலாமா? நீங்க வந்தநாளா எங்களுக்கு ஒரு பெரும் ஆதரவாக இருந்ததே! இனிமேல் எப்படி நாங்கள் உங்களைப் பிரிந்து வாழப் போகிருேம்? திடீரென்று எங்கள் மனதை ஒடிச்ச மாதிரி செய்துவிட்டுப் போரீங்களே! மீவாருக்குப்போயிருந்த சினன ராணி அம்மாள் திரும்பி வார வரைக்குமாவது இங்கே தங்கிட்டுப்போனு நல்லா இருக்குமே....." என்று இரக்கமாய் கேட்டார்.

"பெரியோர்களே, நீங்கள் அறியாததல்ல. என் வீரர்கள் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தீர்கள். நான் இப்போதே மருங்காபுரி போகாவிட்டால் அங்கே என்ன காரியம் நடக்குமோ யார் கண்டது? என் குமாரி பாலகல்யாணியும்; தேவிபாலனும் திரும்பிவந்தால் அவர்களுக்கு விஷயத்தைக் கூறி உடனே மருங்காபுரிக்கு அனுப்பி விடுங்கள். சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் உங்களை வந்து கண்டு போகிறேன்.........சென்று வருகிறேன்" எனக்கூறி அவர்களை யெல்லாம் கைகூப்பி வணங்கி விட்டு குதிரை மீது ஏறி மெதுவாய் புறப்பட்டாள். வீரர்களும் அவளைச் சூழ்ந்து நின்றார்கள். இடையர்களும் அவளுடன் சிறிது தூரம் சென்று தங்கள் கண்களுக்கு மறையுமட்டும் பார்த்து திரும்பினார்கள். அன்றெல்லாம் ராணியைப்பற்றியே பேசிக் கொண்டு வருந்தினார்கள்.

மருங்காபுரியை நோக்கிச் செல்லும் வீரர்களில் சிலர் ராணியாரின் வருகையை நிடத நாட்டு மக்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கவும், அவளை வரவேற்க தக்க ஏற்பாடுகளை செய்யச் சொல்லவும் எல்லோருக்கும் முன் சென்றனர்.

வீரர்களின் மூலம் மஹாராணியின் வருகையை அறிந்த மக்கள் ஆனந்தமடைந்து தெருக்களெங்கும் தோரணங்கள் கட்டி பழ மணலை நீக்கிப் புது மணலை பரப்பி அலங்கரித்தார்கள்.

அமரநாத் நான்கு, குதிரைகள் பூட்டிய இரதத்தை அலங்கரிக்கச் செய்து முன் அனுப்பிவிட்டு, தன் படைகளை அணிவகுத்து நடத்திக் கொண்டு ராணியை எதிர் கொண்டு அழைக்கச் சென்றான். நகர மாந்தரனைவரும் கோட்டையின் வாயிற் புறங்களில் வந்து குழுமி நின்றனர்.

ஆலய மணிகள் ஒலித்தன. நகராக்கள் அதிர்ந்தன. அரண்மனையிலிருந்து கொம்புகள் வீரிட்டன. சற்று

தூரத்தில் ரதத்தைக் கண்ட மஹாஜனங்கள் "மஹாராணிக்கு ஜே—ஜே!" எனக் கோஷமிட்டது வானையும் பிளந்து சென்றுவிடுவதுபோல் கேட்டது. லெக்ஷ்மிதேவி ரதத்திலேறியமர்ந்து தன் புன்னகையால் அன்பைத் தெரிவித்தவளாய் பல பெரிய வீதிகளையும் கடந்து சென்றாள். ராணியோடு பாலகல்யாணி வராதிருக்கக்கண்டு ஜனங்கள் ஏதோ தங்களுக்குள் தெரிந்ததைச் சொல்லிக் கொண்டார்கள்.

அன்று மருங்காபுரியே ஆனந்தக் கடலில் மூழ்கியது.

---

## அத்தியாயம் 33

### "நின்றன் மோடிகிறுக்குதடி தலையை!"

ஜனங்களின் தலைவனாகத் தெருக்களில் பேசித் திரிந்த மேருவண்ணனையும் சிறைப்படுத்தியாயிற்று பிறகு எத்தனையோ பேர்களை, அதாவது ஜனங்களுக்குத் தலைவர்கள் என்று வந்தவர்களையெல்லாம், ரவிவர்மன் சிறைக்குள் தள்ளினான். ஜனங்களின் கிளர்ச்சியை இதனால் அடக்கிவிடலாமென்று அவன் எண்ணிச் செய்த இக் காரியங்கள் அவர்கள் அவன்மேல் கொண்டுள்ள வெறுப்பை நாளுக்கு நாள் அதிகமாக்கிக்கொண்டே போயின. ஜகதீஸின ஏவலாளிகள் ஆங்காங்கு ஜனக் கூட்டங்களைக் கலைப்பதிலும் மும்முரமாயிருந்ததால் அன்றாடம் பத்துப் பதினைந்து பேர் வீதம் அடிபட்டு இறந்து கொண்டிருந்தனர். கடைசியில் நகரமக்கள் மன்னனை நயந்து கேட்பதில் பயனில்லை என்றறிந்து எல்லோரும் ஒருங்கு சேர்ந்து அவனைக் கட்டாயப்படுத்தி, அவனை எதிர்த்தேனும் வீரர்களை சிறையினின்று விடுவிக்க தீர்மானம் செய்தார்கள். அதற்கான ஏற்பாடுகளே நகரெங்கும் காணப்பட்டன. தன உளவாளிகள் மூலம் இதை முன்

கூட்டியே ரவிவர்மன் அறிந்து அரண்மனையெங்கும் பலத்த காவலை ஏற்படுத்தி சிறையில் உள்ளவர்களுக்கும் துன்பத்தை அதிகப்படுத்தினான்.

அரண்மனை முன் மண்டபத்திலே ஒரு சமயம் அரசனை ஜனங்கள் கண்டனர். கண்டவுடனே, "சாந்தபுருஷர்களை சடுதியில் சிறையிலிருந்து அனுப்பிவிடு. சமாதானப் புருஷர்களை அடைத்து வைத்திருந்தால் நாட்டில் சமாதானம் எப்படி நிலவ முடியும்? போர் வேண்டாம். போர் வீரர்களை உடனே வெளியிலனுப்பு......என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்கள்.

அதைக் கேட்டு ரவிவர்மன் ஏளனமாக நகைத்து, சட்டென தன் பக்கத்தில் நின்ற உதவி சேனாதிபதி ஜகதீஸ் பக்கம் திரும்பி, "ஜகதீஸ் உடனே அவர்களைக் கலைந்து போகச் சொல். மறுத்தார்களானால் ஒருவர் பாக்கியில்லாமல் அம்பிற்கு இரையாகும்படி செய். சீக்கிரம்!" என்று கட்டளையிட்டுச் சென்று விட்டான்.

ஜகதீஸின் சமாதான வார்த்தைகளா ஜனங்கள் காதில் ஏறும்? அவனை முதலில் பலியிட அவர்கள் அவன் மேல் பாய்ந்தார்கள். சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொண்டு அரண்மனைக்குள் வந்து அரசன் கட்டளைப்படியே போர் வீரர்களை யெல்லாம் ஜனங்களுக்கு எதிராக நடத்திச் சென்றான். நிரபராதிகளாகிய அவர்கள் மீது அம்பைச் சரமாரியாய்ப் பொழிந்து பெருத்த உயிர்ச் சேதத்தை உண்டுபண்ணினான். ஆனால் ஆவேச உணர்ச்சி கொண்டு கடல் போல் பொங்கி வந்திருக்கும் பொதுஜனங்களா இதைக்கண்டு தளர்ந்துவிடுவார்கள்? நெஞ்சைக் காட்டி நிமிர்ந்து நின்று வீரர்களின் அம்புகளைத் தாங்கி உயிர் நீத்தார்கள். எங்கும் பிணக்குவியல். அங்கங்களிழந்து துடித்தார்கள் அநேகர்.

இக்கோரத்தையெல்லாம் கண்ட வீரர்களின் மனமே சட்டென மாறி விட்டது. "உன்னெதிரில் நிற்பவனும்

உன் சகோதரனல்லவா ?" என்ற கேள்வி அவர்கள் மனதைத் தாக்கியதும், வில்லம்பு தாக்கப்பட்ட வேதனையடைந்தார்கள். அவர்களால் அக்கோரத்தைக் கண்கொண்டு பார்க்கக்கூடச் சகிக்கமுடியவில்லை. குபீரென கையிலிருந்த அம்புகளையும் விற்களையும் விசிறி எறிந்து விட்டு அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

இவர்களின் செய்கையைக் கண்ட ஜகதீஸ் "வீரர்களே நில்லுங்கள்! என்ன காரியம் செய்தீர்கள்? தலைவனின் ஆக்ஞையின்றி இப்படி உங்களிஷ்டப்போல் ஆயுதங்களை கீழே எறிவதுதானா வீரர்களின் லக்ஷணம்? ஏன் இப்படிச் சோர்ந்து விட்டீர்கள் ?" என்று படபடப்பாய்க் கேட்டான்.

வீரர்களில் ஒருவன் தைரியமாய் அவனை நோக்கி "தலைவ, மன்னியுங்கள். உலக சாந்தியையும், தர்மத்தையும் ஒழிக்கும் வண்ணம் ஒரு மனிதன் இச்சைப்படுகிறான். அதை விரும்பாத குடிகள் அவனை வெறுக்கின்றனர். அதற்காக அவர்களனைவரையும் கிஞ்சிற்றும் இரக்கமின்றி, நியாயமின்றி, தலை வேறு, உடல் வேறாகச் செய்யுங்கள் என்று ஆக்ஞையிட்டால் அதை நிறைவேற்ற வேண்டுமா? இதுவரை நாங்கள் மதியிழந்தவர்களாகி உன் கட்டளையை நிறைவேற்றச் சம்மதித்தோம். இப்போதோ இங்கே குவிந்துகொண்டிருக்கும் உடல்களைக் கண்டு எங்கள் கண்கள் திறந்து விட்டவர்களானோம். இனி ஒரு க்ஷணமும் இக்கொடிய வேலையில் ஈடுபடமாட்டோம். குடிகளுக்காக ஏற்பட்டவன் அரசனா? அரசனுக்காக ஏற்பட்டது குடிகளா? உன் ஆக்ஞை இனி எங்களிடம் செல்லாது" என்று அரண்மனைக்குள் விரைந்தார்கள்.

* * *

பாலகல்யாணியை சிறைப்படுத்தியது முதல் அடிக்கடி சிறைக்கூடம் சென்று வெளியே நின்றபடியே அவள்

அழகைப் பார்த்து பரவசமடைந்து அவளை எப்படியும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தான் ரவிவர்மன். ஆனால் நாட்டில் எழுந்த கிளர்ச்சியின் காரணமாக அவன் தன் எண்ணத்தை விரைவில் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் தக்க சமயத்தை எதிர் நோக்கியிருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடி குழப்பம் அடங்காமல் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு போவதைக் கண்ட அவனுக்கு அவள்மேல் கொண்ட மோகமும் அதிகமாகிக் கொண்டே போனது. மோகத்தால் மதிமயங்கிய அவன் பலாத்காரத்திலேனும் அவளையடைய இச்சை கொண்டவனாய் அன்று பணிப்பெண்கள் சிலரை அனுப்பி பாலகல்யாணியை அழைத்துவரும்படி கட்டளையிட்டான்.

பணிப்பெண்கள் அவ்வாறே சென்று அவளைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டு அவன் ஜாடையைக் கண்டு விலகிப் போயினர். மதுவை உண்ட மயக்கத்திலும், மோகம் தலைக்கேறியிருந்த நிலையிலுமிருந்த அவன், தன் முன் முக்காடிட்டு முகத்தை மறைத்துத் தலை குனிந்து நிற்கும் பாலகல்யாணியைப் பார்த்து "பெண்ணே, இன்னும் உன் மமதை யடங்கவில்லையா? அரண்மனைச் சிறைகளிலெல்லாம் என் கட்டளையை மீறிய போர் வீரர்களை யடைத்து அன்னப் கூடக் கொடுக்காமல் வாட்டிவருகிறேன். என்னை எதிர்த்துவந்த பொதுமக்களும் இதோ வெளியில் கொன்று குவிக்கப்படுகிறார்கள். இவ்வளவுக்கும் காரணம் நீயும், அந்தத் துரோகி தேவிபாலனும்தானே! உங்களிருவரையும் அப்போதே இவ் வாளுக்கிரையாக்கி இருந்தால் இவ்வளவு குழப்பம் என் நாட்டில் ஏற்பட்டிருக்காது. ஆனால்......உனக்காக......உன் அழகிற்காக உன்னைச் சிறையிலிட்டேன். உனக்காகவே தேவி பாலனையும் இத்தனை நாள் உயிருடன் விட்டிருந்தேன். இப்போது என்ன சொல்கிறாய்?......" என்று கர்ஜித்தான்.

அவள் அவனை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் குனிந்த படியே நின்றுகொண்டிருந்தாள். அவன் கோபம் அதிகமாகியது.

"சரி; உன் சம்மதத்தைக் கேட்டு உன்னை யடைய வேண்டுமா? ரவிவர்மன் வாய்விட்டுக் கேட்பது, கேவலம் ஒரு சிறு பெண், அவனை அவமதிப்பதா! இதோ இன்னும் ஒரு வினாடி அவகாசம்! என்ன சொல்கிறாய்? என் கரத்தால் வெட்டுண்டு மடிகிறாயா? அல்லது என் கரத்தை முத்தமிடுகிறாயா? எது சம்மதம்!........உம்"

முகத்தை மறைத்திருந்த மெல்லிய துணியை அகற்றி விட்டு பாலகல்யாணி "அரசனே! உன் கரத்தால் வெட்டுண்டு மடிவதையே பெரிதும் விரும்புகிறேன்" என்றாள்.

அவள் முகத்தைக் கண்டதும் மயங்கிய அவன் கோபத்தைத் தணித்துக் கொண்டவனாக "வேண்டாம். வீணாக உன் அழகைப் பாழ்படுத்தாதே. ரவிவர்மனுக்கு மனைவியாகி மீவாருக்கு ராணியாக விளங்கப்போகும் நீ, ஏன் இப்படி உளருகிறாய்? கேவலம் ஒரு நாடோடிப் பெண் தானே— அரண்மனைச் சுக போகங்களை யறிந்திருந்தால் நீ இப்படி பேசுவாயா? உன் சௌந்தரியத்தைக் கண்டதுமுதல் என் உள்ளம் ஒரு நிலைகொள்ளாமல் உன்னைத் தினமும் சிறைச்சாலை முன்வந்து நின்று நான் பார்த்ததை நீ அறியாயா? நான் ஏதோ கோபத்தால் கூறிவிட்டேன். பெண்ணே! வா! உன்னைக் கட்டியணைக்க இருக்கும் இக்கரங்கள் உன்னை வெட்ட வாளைத்தான் தொடுமா?" என்றான்.

"சை! மூர்க்கப்பதரே! என்ன சொன்னாய்? நாடோடியா நான்? அரண்மனைச் சுகத்தை அறியாதவளா? உனக்கு மனைவியாகி, நான் அதை அனுபவிக்க வேண்டுமா? பேடியைப்போல் பேசாதே. வீரமிருந்தால் உன் வாளை எடுத்து என்னை இரண்டு துண்டாக்கு. இல்லையேல் அந்த வாளை விசிறி எறி இங்கே! என்னைக் கட்டித்தழுவ ஊரல்

எடுக்கும் உன் கரங்களைத் துணித்துவிடுகிறேன். மன்னனும்; மக்களுக்குத் தந்தை போன்றவனும்! தனித்துத் தன் முன் இருக்கும் பெண்ணைத் தங்கையென்று பாவிக்காத தடியன்! காமுகன்......ஏன் விழிக்கிறாய்? வாளையெடுத்து வீசு என் மேல்!" என்று கூறி காளியைப்போல காக்ஷியளித்தாள் பாலகல்யாணி.

காமுகன் ஓடிவந்து இரு கரங்களையும் விரித்து அவளை அப்படியே தூக்கி அணைக்க முயன்றான். அவன் வஞ்சக நெஞ்சை அறிந்த அவள் சடாரென அவன் பிடியிலிருந்து விலகி அவன் அமர்ந்திருந்த இடத்திற்கு ஓடி அங்கிருந்த வாளை எடுத்துக் கொண்டு அவனை எதிர்க்கத் தயாராய் நின்றாள். வாளைக் கைப்பற்றியதும் அவன் அவளை நெருங்கச் சற்று தயங்கினான். எனினும் காமப்பித்துக்கொண்ட அவன் மறுபடியும் அவளை நெருங்கி ஓடினான்.

அதே சமயத்தில் அரண்மனைக்கு வெளியே பெரியதொரு ரகளை. வெகு நாள் பார்த்துப் பார்த்துக் கோபம் மேலிட்டுவிட்ட ஜனத்திரள் ஒரு நாள் ஜகதீஷ் கடைத் தெருவினின்று தன் ஏவலாளிகள் புடைசூழ அரண்மனைக்கு ஏகுவதைக் கண்டுவிட்டது. அந்த அணிவகுப்பை ஜனங்கள் துரத்த ஆரம்பித்தனர். ஏவலாளிகள் அம்புகளை எய்தி ஜனங்களைக் காயப்படுத்திக்கொண்டே அரண்மனை நோக்கி ஓடினர். இவர்களோட, அவர்கள் துரத்த அந்த கோபமடைந்த ஜனத்திரள் அரண்மனைக்குள்ளேயே புகுந்து விட்டது. உள்ளே காமாதுர அரசனின் காட்சி நடந்து கொண்டிருந்தது.

பாலகல்யாணி உயர்ந்ததொரு இடத்தில் நின்றாள். அரசனோ சில படிகளைத் தாண்டி அவளை யடையவேண்டும். படிகளை ஏறி வரும்போதே திடீரென பின்பக்கமிருந்து ஏதோ இரைச்சல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். விற்களையும் அம்புகளையும் வீசி யெறிந்த வீரர்கள் மடமட வென்று உள்ளே பிரவேசித்து விட்டார்கள்.

"ஓடிவாருங்கள். இவனைப் பிடித்துக்கட்டி உருட்டுங் கள்" என்றாள் பாலகல்யாணி.

கூட்டத்திலிருந்து புலிபோல் பாய்ந்தான் ஒருவன், ரவிவர்மன் மீது. படிகளில் இருவரும் உருண்டார்கள். இயற்கையிலேயே வீரம் படைத்த மன்னன் மது வினால் மயங்கியிருந்தானெனினும் வீரன் தாக்கியதில் மயக்கம் தெளிந்து, தன் சுய உணர்வையும் பலத்தையும் மீளப்பெற்று, வீரனைக் கீழே தள்ளி, அவன் நெஞ்சில் ஒரு காலை ஊன்றி அவன் உடைவாளையே உருவி அவனைக் குத்தப்போகும் சமயம் மற்ற வீரர்களும் மன்னன் மேல் பாய்ந்து விட்டார்கள். எவ்வளவோ சாமர்த்தியமாக அவர்களை வீழ்த்தப் பார்த்தும் முடியாமல் பலமாகத் தாக் கப்பட்டு, தலையிலிருந்து இரத்தம் வழிந்து கண்களை மறைக்க, தடாலென்று தரையில் சாய்ந்துவிட்டான் வீரர்கள் பின் வந்துகொண்டிருந்த ஜகதீஷ் தனக்கும் அதேகதிதான் நேர்ந்துவிடுமோ எனப் பயந்து நடு நடுங்கி ஒரு மூலையில், தூண் மறைவில் ஒதுங்கி நின்றுவிட்டான்.

---

## அத்தியாயம் 34

### "சாலமிகப் பெரிய சாதனை காணிஃதெல்லாம்!"

ரவிவர்மன் பிரக்ஞையிழந்து கைகளை விரித்த வண் ணம் சாய்ந்து தரையில் கிடந்தான். அரண்மனையெங்கும் இச்செய்தி எப்படியோ தெரிந்து விட்டது. வேலையாட் களும், காவற்காரர்களும், பணிப் பெண்களும் அரசன் "அன்பிற்கு"ப் பாத்திரமான பெண்களும் அல்லோகல்ல மாய் அங்கு மிங்கும் ஓடினார்கள். சிறைக் கூடத்திலிருந்த வர்களும் ஒருவாறு தெரிந்து கொண்டார்கள். சிறைக் காவலாளிகள் தங்களுக்கும் ஆபத்து வருமென்று ஆயுதங் களையும், சாவிகளையும் எறிந்துவிட்டு ஓடிவிட்டார்கள்.

வெளியே நின்றிருந்த ஜனங்களும் இதைக் கேட்டு அரசனின் உடல் துண்டு துண்டாக்கப்படுவதை தங்கள் கண் குளிர கண்டு ஆனந்திக்க இச்சை கொண்டவர்களாய் குபு குபுவென அரண்மனைக்குள் ஓடிவந்தார்கள். தேவி பாலனிடம் ஒருவன் வந்து "தலைவ! எல்லாம் தாங்கள் அழைத்துவந்த பெண்ணால்தான் நடந்தேறியது. இதோ இன்னும் சிறிது நேரத்தில் சிறைச்சாலைக் கதவுகள் திறந்து விடப்படும்" என்று சொல்லிவிட்டு ஓடினான். தேவி பாலனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தான் இரண்டு நாளைக்குமுன் கண்ட கனவு பலித்துவிட்டதோ என்று நினைத்தான்.

தரையில் கிடந்த ரவிவர்மன் பிரக்ஞை நீங்கி கண்களை விழித்துப் பார்த்தான். தன் முன் இன்னும் பால கல்யாணி உருவிய வாளுடன் நிற்பதைக் கண்டு, பல்லை நற நற வென்று கடித்து கையை மடக்கிக்கொண்டு அவளைக் குத்துவதற்காக எழுந்தான்.

அவளோ அசையாமல் நின்றாள். குபீரென அவள் கையிலிருந்த வாளை ஒரு வீரன் பறித்துக்கொண்டு ரவிவர்மன் மீது பாய்ந்தான். அரசனின் நெஞ்சிலும் வாளை ஊன்றிவிட்டான். "ஹா" எனக் கத்திக்கொண்டு அவன் கையைப் பிடித்து நிறுத்திய கல்யாணியை நோக்கி அவன் கோபத்தோடு, "அம்மா, எண்ணற்ற மக்களின் சிதைவிற்குக் காரணமாகிய இச்சண்டாளன் நாட்டிலிருப்பதே தகாது. இவனை இப்போதே இவ்வாளுக்கு இரையாக்குவதே என்போன்ற வீரனின் கடமையாகும். எங்களுக்குக் கண் கண்ட தெய்வம் போல வந்து, சாந்தி தர்மத்தையே போதித்த சத்திய லக்ஷ்மியாகிய தங்களை எங்கள் கண் முன்னே இவன் செய்யவிருந்த இந்த அடாத செய்கையைக் கண்டும் நாங்கள் இவனை விட்டுவைப்பது தர்மத்திற்கே பங்கமாகும். தாயே! தயவு செய்து என் கையை விடுங்கள்.

இவன் நெஞ்சில் என் வாள் பதியட்டும். விலகுங்கள்! தடுக்காதீர்கள்........." என்றான்.

பாலகல்யாணி அவன் கையை இறுகப்பிடித்தவளாய் இரக்கப் பார்வை பார்த்து, "சகோதரா, இந்தக் காரியத்தை நானே சற்று முன் உங்கள் உதவியின்றிச் செய்திருப்பேன். எனக்குத் தைரியமில்லையென்று நினைத்தாயோ! அவருக்குப் புத்தி புகட்டித் திருப்பவேண்டியே காலம் கடத்தினேன். அதற்குள் எதிர்பாராத விதமாய் நீங்களும் புகுந்துவிட்டீர்கள். பொறுங்கள். நம் கொள்கையைக் காப்பாற்றுங்கள். அவர்மேல் குற்றமில்லை. அரச குடும்பத்தில் பிறந்த அவர் தன் சுய மனோபீஷ்டை, சுய ஆனந்தம், சுய இச்சை இவைகளிலேயே செல்வமாக வளர்ந்து விட்டாராகையால் பிறர் நலம், தேச நலம், 'குடி மக்கள்—தன் மக்கள்; பிறமாதர்கள், தன் சகோதரிகள்' என்ற உன்னதக் கொள்கைகள் அவர் மனதில் இடம் பெறாமல் போய்விட்டன. இதோ இந்தக் கடைசி நேரத்திலாவது அவர் தன் மனம் மாறிவிட்டால், அதுவே நமக்குப் பேரானந்தம். அவர் நெஞ்சில் ஊன்றியிருக்கும் இவ் வாளுக்கும் அவர் நெஞ்சிற்குமிடையே உள்ள உயிர் எப்படி ஊசலாடுகிறது? உள்ளம் எப்படித் துடியாய்த் துடிக்கிறது என்பதை இப்போது உணர்ந்து பார்க்கட்டும். ஒரு உயிருக்காக இவர் இப்படித் துடிக்கிறாரே! போரில் ஆயிரக்கணக்கான உயிர்கள் ஒரே சமயத்தில் மடியும் போது என்ன பாடுபடும் என்பதை யோசிக்கட்டும். சட்டென்று நீங்கும் உயிருக்கே இப்படிக் கண்ணீர் வடிக்கும் இவர், தங்கள் அங்கங்கள் அறுபட்டு அவஸ்தையுறும் ஆத்மாக்கள் வடிக்கும் கண்ணீரைக் கருதிப் பார்க்கட்டும். இரக்கமின்றி வெட்டி வெட்டித் தள்ளி இரத்த வெள்ளத்தில் மிதக்கவைக்க காரணஸ்தராக இருக்கும் இவர் இந்த நேரத்தில் என்ன பாடுபடுகிறாரோ அதே அவஸ்தையை மற்றவர்களும் அனுபவிப்பார்கள் என்பதை இப்போ

தாகிலும் அறிந்து அந்த யுத்தத்தை அடியோடு நீக்கட்டும். குவியல் குவியலாய்ப் பல போர்களில் பிணங்களைக் குவித்துக் கண்ட இவர் உடல் குன்றிப்போயிருக்கும் இந்த நிலையிலாவது யுத்தத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் குறுகிய நோக்கத்தை விட்டொழிக்கட்டும்......" என்று பலவாருக அவள் கூறிய மொழிகள் ஒவ்வொன்றும் மல்லாந்து கிடக்கும் மன்னன் மனதில் பாய்ந்து படிப்படியாக அவன் மனதை மாற்றியது.

அவன் நெஞ்சின்மீது ஏறி நின்ற வீரனும் அது கேட்டு ஊன்றியிருந்த வாளை யெடுத்து பணிவுடன் விலகி நின்ருன். சூழ்ந்து நின்ற நூற்றுக்கணக்கான வீரர்கள் அவர்கள் பேச்சில் மயங்கி மெய் சிலிர்த்தார்கள். பால கல்யாணியின் வீர செளந்தர்யத்தில் சொக்கி மதியிழந்த மன்னன் இப்போது அவள் உரைத்த உள்ளமுருக்கும் பேச்சுக்களால் உணர்வு மேலிட்டவனுய், குபீரென எழுந்து அவள் பாதங்களில் வீழ்ந்து "சகோதரி! என்னை மன்னிப்பாயா! நான் மகா பாபி...' எனக்கூறி அழுதான். அவன் நாக் குழறியது; அவன் தொண்டை கம்மியது. அதற்குமேல் அவனல் பேச முடியவில்லை.

தன் பாதங்களில் வீழ்ந்து கிடந்த அவனைத்தொட்டு "அண்ணு! எழுந்திருங்கள். ஐயோ! என்னை ஏன் வணங்குகிறீர்கள்? இத்தகைய பெறும் மாறுதலை உங்களுக்கு தந்தருளிய கிருபாநிதியாகிய சர்வேஸ்வரனை வணங்குவோம்" என்று கூறினுள். அவன் எழுந்து வெட்கத்தால் தலை குனிந்து நின்ருன். தூண் மறைவில் இதுகாறும் பதுங்கிக் கொண்டிருந்த ஜெகதீஷும் அவள் காலில் வந்து வீழ்ந்தான். அவனையும் தூக்கி நிறுத்திப் புன்னகை புரிந்து நின்ருள்.

அரசன் அவனை நோக்கி "ஜெகதீஷ், ஏன் இன்னும் தாமதம்? சிறைச்சாலையைத் திறந்து முதலில் தேவி பாலனை விடுவி. பின்னர் வீரர்களை யெல்லாம் வெளியே

அனுப்பு. இதோ நாங்களும் வருகிறோம்" என்று கட்டளை யிட்டான். சுற்றியிருந்த வீரர்களின் முகம் மலர்ந்தது. அரசனும் பாலகல்யாணியும் முன் நடக்க அவர்களைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் சிறைக்கூடம் சென்றார்கள்.

முதலில் தேவிபாலனின் சிறையைத் திறந்ததும், அவன் வெளியே வந்து அரசனை வணங்கிப் பாலகல்யாணி யைப் பார்த்து புன்னகை புரிந்து நின்றான். அரசன் அவன் இரு கரங்களையும் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு தன்னை மன்னிக்குமாறு கோரி தேம்பித்தேம்பி அழுதான். அழுதவனைத் தேவிபாலன் நோக்கி, "சென்றதைக் கருதி வருந்தவேண்டாம். அதையெல்லாம் மறந்துவிடுவோம் தாங்கள் இப்படி உண்மையை உணர்ந்துகொண்டது எங்க ளுக்கெல்லாம் ஆறுதல் அளிக்கிறது. வாருங்கள். மற்ற வீரர்களையும் விடுவிப்போம்" என்று அழைத்துக்கொண்டு சென்று சிறைக்கூடம் ஒன்று பாக்கியில்லாமல் திறந்து விட்டார்கள்.

அதற்குள் வெளியிலிருந்து ஓடி வந்த நகர மாந்தர்கள் இதையெல்லாம் கண்டு ஆனந்த மிகுதியால், "தேவிபால னுக்கு ஜே! ஜே" எனக் கோஷமிட்டு அரண்மனையை அதிரச் செய்தார்கள். நகரமெங்கும் இச்செய்தி பரவ, ஆனந்தப் பயித்தியம் கொண்டவர்கள் போல ஜனங்கள் ஓடிவந்து அரண்மனை முன் மைதானத்தில் குழுமி நின்றார் கள். அடக்கமுடியாக் கூட்டத்தைக் கண்ட தேவிபாலன், அரசன், பாலகல்யாணி மூவரும், அரண்மனையின் மேன் மாடத்திற்குச் சென்று நின்றார்கள்.

தேவிபாலன் சொன்னான்:—"மகாஜனங்களே! வீரர் களே! பெரும் புயலுக்குப்பின் அமைதி நிலவுவது போல், தலைவிரித்தாடிய பெரும் கிளர்ச்சிக்குப் பின் நம் நாட்டில் இன்று சாந்தி தாண்டவமாடுகிறது. இச்சாந்தியை நிலை நாட்டக்காரணமாக இருந்தவர் நிடதநாட்டை ஆளும் மஹாராணி லக்ஷ்மிதேவி அவர்களே! அவர்கள் இதில்

கொண்டுள்ள ஆர்வத்தை உங்களுக்குச் சொல்ல அவகாசமில்லை. ஒரு உதாரணம் பாருங்கள் நேற்றுவரை நிடத நாட்டின் மேல் படையெடுத்துச் செல்ல நம் அரசர் முனைந்திருந்தார். அப்படி நிடத நாட்டுக்கே விரோதியாக இருந்தவரை மனம் மாறச் செய்வதற்காக, அந்த மஹாராணி தன் ஒரே புதல்வி, பட்டத்திற்கு வரப்போகிறவராகிய பெண்ணை, என்னுடன் அனுப்பியிருக்கிறார்கள்! இதோ நம் அரசர் பக்கத்தில் நிற்பவர்தான் இளவரசி 'பாலகல்யாணி'........."

"பாலகல்யாணிக்கு ஜே! மஹாராணி லக்ஷ்மிதேவிக்கு ஜே!" என்ற கோஷம் வானைப் பிளந்தது. அரசனும் திகைத்துப் போய்விட்டான். தன்னருகில் நிற்பவள் நிடத நாட்டரசி என அறிந்து அவன் கண்கள் மங்கின; தலை சுற்றியது. மறுபடியும் அவள் முன் முழங்கால்படியிட்டான். அவன் கரங்கள் அவனையுமறியாமல் குவிந்தன. கண்களில் நீர் அரும்பிற்று. ஆனால் வாயிலிருந்து ஒரு சொல்லும் பிறக்கவில்லை. அவள் புன்னகை புரிந்து அவனைத் தொட்டுத் தூக்கினாள். ஜனங்கள் இதைக்கண்டு முன்னிலும் அதிகமாகப் பரவசமடைந்து ஆர்ப்பரித்தார்கள்.

தேவிபாலன் மேலும் தொடர்ந்து, "இனித்தான் நம் நாட்டிற்கு விமோசனம். நாம் அனைவரும் எதிரியாகக் கருதிவந்த நிடத மஹாராணியின் கொள்கைகளை நம் மன்னர் ஆதரிப்பார் என நினைக்கிறேன். நீங்கள் அனைவரும் இந்த தர்ம யுத்தத்தில் பங்கெடுத்து நம் அரசரைத் திருத்தியதற்கு நிடதநாட்டு மஹாராணி சார்பாகவும் இளவரசி சார்பாகவும் என் வந்தனத்தை உங்களுக்குத்தெரிவித்துக்கொள்கிறேன். இப்புனித நாளை நம் நாட்டார் அனைவரும் விழாக்கொண்டாடி களிப்புறுங்கள்" எனக் கூறிமுடித்தான். கூட்டமும் பெரிய சந்தோஷ ஆரவாரத்தினிடையே கலைந்தது.

## அத்தியாயம் 35.

### "வெற்றி கூறுமின் வெண் சங்கு ஊதுமின்"

மருங்காபுரி அரண்மனையில் லக்ஷ்மிதேவி, வீரநாத்துடன் அமர்ந்து மீவாரிலிருந்து ஒரு சங்கதியும் தெரியாமலிருப்பதைக் குறித்து பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது கோட்டையின் மணிக்கூண்டில் காவல்புரிந்து கொண்டிருந்த ஒருவன் ஒரு பெரிய ரதம் மருங்காபுரியை நோக்கி வரக்கண்டு தன் கொம்பை எடுத்து ஊதி மற்ற காவலாட்களுக்கும் அதைத் தெரிவித்தான்.

கொம்பொலி கேட்ட மஹாராணி சட்டெனத் தன் பேச்சை நிறுத்தி அதன் அர்த்தத்தைக் கிரகித்து, "வீரநாத்! இப்போது யார் வரக்கூடும்? நம் ரதத்தைத் தயார் செய்யச் சொல். கோட்டை வாசல் வரை சென்று பார்ப்போம்" என்று பதறினாள் ஒரு நொடியில் இரதமும் வந்து நின்றது. ராணியும் வீரநாத்தும் ஏறிக்கொண்டு கிளம்பினர்.

அவர்கள் இரதம் வாயிலை அடைந்த அதே சமயம் மீவார் திசையினின்று ஓர் இரதமும் எதிரில் வந்து கொண்டிருந்தது. அதன் மேலே பறந்துகொண்டிருந்த கொடியைக் கண்டே மீவார் ரதமென நினைத்தாள் மஹாராணி. தேவிபாலனும், பாலகல்யாணியும்தான் வருகிறார்கள் என்று மகிழ்ச்சியுற்று தன் இரதத்தையும் பக்கத்தில் ஓட்டச்செய்தாள். இரண்டும் சந்தித்தன. ராணியும், பாலகல்யாணியும் ஒரே சமயத்தில் கீழே குதித்து ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக்கொண்டார்கள். அன்னை மகளுக்கு மாறி மாறி முத்தமீந்து மகிழ்ந்தாள். வெகு நாட்கள் பிரிந்திருந்த அவர்கள் திடீரெனச் சந்தித்ததும் ஆனந்த உணர்ச்சியின் மிகுதியால் பேசமுடியாமல் ஊமையானார்கள். முகத்தோடு முகம் சேர்த்துத் தழுவியிருந்த

ராணியின் ஆனந்த பாஷ்பம் பாலாவின் கன்னத்தை நனைத்தது. "அம்மா" என்றாள் குமாரி "பாலா" என்றாள் தாய்.

அதே ரதத்திலிருந்து காட்டில் கோபாலர்களின் தலைவராயிருந்த வயோதிகர் மெதுவாக இறங்கிவந்து மஹாராணியின் பாதத்தில் வணங்கினார். "கொளந்தைங்க மீவாரிலிருந்து திரும்பி நம்ம ஊருக்கு வந்து தங்களைத் தேடினாங்க நீங்க இங்கே அரண்மனைக்கு வந்தூட்டதைச்சொல்லி நானே அழைச்சிட்டு வந்தேனுங்க" என்றார். "எல்லாம் உங்க ஆசீர்வாதம் பெரியவரே!" என்று ராணி மாதா கூறினாள்.

அந்தக் கூட்டத்தில் அன்பு தாண்டவமாடுவதைக் கண்டு ரவிவர்மன் புளகாங்கிதமடைந்து ஓடிவந்து ராணியின் பாதங்களில் வீழ்ந்தான். ராணியும் குனிந்து பார்த்தாள்.

"தாயே! மன்னியுங்கள். நான் சண்டாளன்" என்றான் அவன்.

பாலகல்யாணியை ஒரு கரத்தில் பிடித்துக்கொண்டு மற்றொரு கரத்தால் அவனைத் தொட்டுத்தூக்கி நிறுத்தி மகாராணி "ஹா! ரவி வர்மனே! சகோதரா, ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கிறாய்? படையெடுத்து வருவாயென்றல்லவோ நினைத்திருந்தேன். ஏன் மன்னிப்பை நாடுகிறாய்?" என்று கேட்டாள்.

அருகிலிருந்த தேவிபாலன் மீவாரில் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சுருக்கமாகக் கூறினான். இராணி அதைக்கேட்டு "ரவிவர்மா, சண்டாளன் நீயல்ல. நீ இன்று சன்மார்க்கனாகிவிட்டாய். ஜெகன் மாதா இன்று உன் மனமாற்றத்தால் பூரிப்படைகிறாள். வாருங்கள் யாவரும் அரண்மனைக்குப் போகலாம்." என்று ரதத்தில் ஏறினாள்.

இரண்டு ரதங்களும் கோட்டைவாசலைத்தாண்டி அரண்மனையில் புகுந்தன. அச்சமயம் அரண்மனையி லிருந்து சமாதான பேரிகை முழங்கிற்று. நகர மாந்தர்கள் அதன் காரணத்தைப் பலர் சொல்லக்கேட்டு "ரவி வர்மன் இங்கு வந்துவிட்டானே! இனி என்றைக்கும் யுத்தமின்றி சமாதானமாக வாழலாம். பெரிய பீதி நீங் கிற்று. மகாராணியார், தான் எடுத்த காரியத்தில் கடை சிவரை நின்று வெற்றியடைந்துவிட்டார்கள். அவர்கள் ராஜரீகமே இனி வழி" என்று பேசிக்கொண்டார்கள்.

தன் நாடு தேடிச் சமாதானச் செய்தியை அறிந்து செல்லவந்த ரவிவர்மனோடு மஹாராணி தன் மந்திரிகளை யெல்லாம் அறிமுகப்படுத்தி சில நாட்கள் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தாள். ரவி வர்மனும் ராணியின் அரசாட்சித் திறத்தைக் கண்டு தன்னுள் பெருமை யடைந்தான்.

---

## அத்தியாயம் 36

### "இனி யொருவிதி செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்"

நிடத சக்ரவர்த்தி ரகுவீர சந்திரராஜ் மரணத்திற் குப் பின் லக்ஷ்மி தேவி, தன் கொழுநன் பிரிவாற்றுமை யால் பட்ட கஷ்டத்தை நிவர்த்திசெய்ய சந்யாசமே சரி யான மார்க்கமென, அதையே நாடிச் செல்ல விருந்த சம யம், முதன் மந்திரி வீரநாத்தின் கட்டாயத்தாலும் அவன் தூண்டுதலினுல் ஏவப்பட்ட நாட்டு மக்களின் வற்புறுத்த லாலும் லக்ஷ்மி தேவி அரசாட்சியை ஏற்றுக்கொண்டா ளென்பது பழைய சரித்திரம். அவள் மற்ற நாடுகளும் தன் நாடுபோல் சுயேச்சையாய் இருக்கவேண்டுமென்றும் அதற்கு யுத்தத்தை நிறுத்துவதே சரியான வழியென்றும்

கண்டு அதைப் போதிக்க ஆரம்பிக்கும்போது அந்த உத்தேசத்துக்கு மீவார் மன்னன் ஓர் முட்டுக்கட்டையாய் நின்றான்.

இப்போது அம்மன்னனையே மாறும்படி செய்து யுத்தமென்ற பேச்சே நிடத நாட்டில் எழா வண்ணம் செய்து விட்டாள் ராணி. ஆனால் இன்னும் அவள் எண்ணம் பூர்த்தியாகவில்லை. தன் கீழுள்ள நாடுகள் எல்லாம் ஒரே கொள்கையுடன் ஒரே கொடியின் கீழ், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழ வேண்டு மென்பதே அவள் முக்கிய நோக்கம். சக்கரவர்த்தி யென்றும், சிற்றரசன் என்றும், பாகுபாடே கூடாது என்று எண்ணினாள். அதற்காக ஒரு சபையைக் கூட்ட ஏற்பாடு செய்தாள் நிடத நாட்டில் உள்ள சிற்றரசர்களுக்கும், மந்திரிகளுக்கும், ஆங்காங்கேயுள்ள ஜன சமூகத் தலைவர்களுக்கும் நகரப் பிரமுகர்களுக்கும் ஓலை யனுப்பினாள்.

குறிப்பிட்ட தினத்தில் எல்லோரும் மருங்காபுரியில் கூடினார்கள். அவர்கள் எல்லாம் மருங்காபுரி மக்களால் உற்சாகமாக வரவேற்கப் பட்டார்கள். தன் அழைப்பு ஓலையைக் கண்டு அவர்கள் எல்லாம் வந்து கூடியதைக் கண்ட லக்ஷ்மி தேவி, அவர்களுக்கெல்லாம் சமாதான வாழ்வில் எவ்வளவு ஆர்வமிருக்கிற தென்பதைத் தெரிந்து கொண்டாள்.

இதற்கெனப் பிரத்யேகமாக அரண்மனைக்குள்ளேயே அமைக்கப்பட்ட பெரிய மண்டபத்தில் அனைவரும் குழுமியிருந்தனர். ஸ்திரீ ரத்தினங்களும் அதில் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கெல்லாம் முன்னணியில் பாலகல்யாணி வீற்றிருந்தாள். அரசர்களில் கப்பம் அதிகமாகக் கட்டுபவர்கள், குறைவாகக் கட்டுபவர்கள் என்ற வேற்றுமையின்றி எல்லோருக்கும் ஒரே மாதிரி ஆஸனங்களிடப் பட்டிருந்தன. மஹாராணிக்கு மாத்திரம் சிம்மாசனம்

வழக்கம்போல் போடப்பட்டிருந்தது. நவரத்னங் களிழைத்த அவ்வாசனத்திற்கு இருமருங்கிலும் தெய்வக் கன்னிகைகள் போன்ற கன்னிகளிருவர் வெண்சாமரம் ஏந்தி ராணியின் வருகைக்காக நின்றுகொண்டிருந்ததைக் கண்ட சபையோர்கள் அவைகள் பளிங்கினுல் செய்த பதுமைகளோ என்று அதிசயத்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் மஹாராணி மண்டபத்திற்குள் நுழைந்ததும் அனைவரும் எழுந்து வணக்கம் செலுத்திவிட்டு அமர்ந் தனர்.

மஹாராணியும் பதில் வணக்கம் செய்துவிட்டு சிம்மா ஸனத்தில் அமர்ந்தாள்.

தூயவெண் உடை பூண்டு முகத்தில் சாந்தக்களை தாண்டவமாட வீற்றிருந்த மஹாராணி லக்ஷ்மியைப் போல் காக்ஷியளித்தாள். தன் கண்களை நாலா பக்கமும் சுழற்றி சபையில் உள்ளவர்களை யெல்லாம் பார்த்து புன் னகை புரிந்து கம்பீரமாகச் சிம்மாசனத்தை விட் டெழுந்தாள். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. தூரத்தில் எங்கிருந்தோ சமாதான பேரிகை ஒலித்து நின் றதும் அவள் பேச ஆரம்பித்தாள்:

"என் அன்பார்ந்த பெரியோர்களே! சகோதர, சகோ தரிகளே! என் அழைப்பிற்கிணங்கி உங்கள் சிரமத்தையும் பொருட்படுத்தாது பல நாடுகளிலிருந்தும் இங்கு வந்து கூடி என்னைக் கௌரவப்படுத்தியதற்கு வந்தனம். இன்று நான் இங்கே சொல்லப்போகும் விஷயம் ஜனசமூகத்திற் குப் பொதுவாயிருப்பதால் எவருக்கும் எவ்வித அபிப்ராய பேதத்தையும் உண்டாக்காதென்றே நினைக்கிறேன்.

"இச்செகத்தில் ஆதியில் மனிதர் கூட்டம் பெருகிய வுடன் அவர்கள் வாழ்க்கை சிதறிப்போகா வண்ணம் ஓர் கட்டுப்பாடாக நடக்க வேண்டித் தங்களுக்கு வழி காட்டி யாக நுட்பமதியும், விசால அறிவும், பரந்த நோக்கமும்,

கொண்ட ஒரு அதிகாரியைத் தாங்களே தேர்ந்தெடுத்து அவன் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்துவந்தனர். ஆனால் எல்லை காணமுடியாத இப்பரந்த உலகில் ஜனக் கூட்டம் பெருகப் பெருக ஆங்காங்கே தலைவர்கள் ஏற்பட்டார்கள். காட்டிலும், மலையிலும், கூட்டம், கூட்டமாக வசித்த மக்கள் நாளாக, ஆக தங்கள் அனுபவத்தாலும், ஆராய்ச்சியாலும் கிராமங்களை ஏற்படுத்தினார்கள். பின்னர் பலகிராமங்கள்சேர்ந்து ஒருநகரமாகி, நாகரிகம் முதிர்ந்தது. எனினும் தலைவனுக்கு அடங்கி நடக்கும் கொள்கையை மாத்திரம் ஒருவரும் புறக்கணிக்கவில்லை. ஆனால் ஒரு தலைவனுக்குப் பின் மற்றொரு முதியவனை தேர்ந்தெடுக்காமல் முதியவனின் சந்ததியாரே தொடர்வாக அப்பதவியை ஏற்றுவந்தார்கள், இந்தப் பழக்கத்தால் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன் சிறந்த அறிவாளியாகவும் சமர்த்தனாகவுமிருந்தாலும் அவனுக்குப்பின் அப்பதவியில் இடம் பெற்ற அவன் சந்ததியானும் அவனைப்போலவே உன்னத குணம் படைத்தவனாக இருப்பான் என்று எண்ண இடமில்லாமல் போய்விட்டது. ஆதலின் சில சந்தர்ப்பங்களில் அற்ப குணமும் குறுகிய நோக்கமும், சுயநலக் கொள்கையும், கல்நெஞ்சமும் படைத்தவர்கள் தலைவர்களாய் விட்டார்கள், குடிஜனங்களும் அவன் செய்யும் இம்சைகளுக்கெல்லாம் தலைவன் என்று பயந்து பொறுத்துக்கொண்டார்கள்.

"தலைவனால் அவர்கள் அக்கொடுமையை அடைந்தது அவனுக்கடங்கிவாழும் முறையினால அல்ல. முன்னாலிருந்து வந்த தலைவனுக்குப்பின்வருபவன் அவன் சந்ததியானாகவே தான் இருக்க வேண்டுமென்று மாறிய முறையினால் தான். இதனால் நகரமே பாழடையநேர்ந்தது. ஆகவே அந்தப் பழைய முறையை நாம் இப்போது பின்பற்றக் கூடாது. நாட்டின் ஆட்சிக்குப் பொருத்தமற்ற ஒருவனை முன்னவனின் புதல்வன், அவன் சந்ததி, அவன் தொடர்பு என்ற காரணத்தினால் ஒப்புக்கொள்ளலாகாது. ஆனால்

முன்னவனின் புதல்வன் தகுதியானவனா என்பதை எப்படிச் சோதிப்பது? ஜன சமூகம் அவ்வப்போது நாட்டிலிருக்கும் நிலைமையை அறிந்து அதற்கேற்ப தங்களிஷ்டப்படி தங்கள் அபிமானத்திற்குப் பாத்திரமானவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அதுபோலவே அமைச்சர்களுக்குள்ளும் அவர்களின் சந்ததியார்கள் அந்த ஸ்தானங்களை ஆக்ரமிக்காமல் ஜனங்களுக்குள்ளேயே தங்களுக்காகப் பாடுபடும் அறிவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் தங்களுக்கு யோசனைகூற மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்திக்கொண்டு அவர்களின் யுக்திப்படி நாட்டையாள முயலவேண்டும். இச்சபையின் அங்கத்தினர்கள் தங்கள் ஆயுள் காலம் முடியும்வரை அப்பதவியிலிருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கக்கூடாது.

"ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் இருக்கலாம். ஏனெனில் மக்களின் அபிப்ராயமும் போக்கும் காலதிற்கேற்ப மாறி வரக் கூடும்.

"ஒரு சமயத்தில் தேர்ந்தெக்கப்பட்ட சபைக்கும் மக்களின் பிற்கால மாறுதல்களுக்கும் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் அச் சபையாரால் ஜன சமூகத்திற்கு நன்மை ஏதும் செய்ய முடியாதல்லவா? ஆகையால் அப்போதைக்கப்போது தேர்தல் நடத்திச் சபையைப் புதுப்பிக்கவேண்டும். மக்களும் அநாவசியமாகச் சபைக்கு தொந்தரவு கொடுக்காமல் அவர்களோடு ஒத்துழைப்பதே முறையாகும். இப்படிச் செய்துவந்தால் நாட்டின் க்ஷேமமும் கெடாது. மக்களும் சுதந்தரமாக, ஆனந்தமாக வாழ ஏதுவாகும்.

"உலகில் பல ராஜ்யங்களும், அதற்குப் பல தலைவர்களும் ஏற்பட்டிருப்பது மக்களின் கட்டுப்பாடான ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதற்குத்தானே! ஆனால் இத் தலைவர்

களுக்குள் தங்கள் நாடு என்னும் சுய இச்சையாலும் பிற நாட்டைத் தன்னுடன் சேர்த்து, தன் நாட்டின் எல்லையை விஸ்தரித்துக்கொள்ள வேண்டுமென்ற பேராசையாலும் சண்டைகள் ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறு கொடிகளை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு ஒரு தனி மதிப்பைக் கொடுத்து, கௌரவித்து நிலை நாட்ட தங்களுக்குள் வெறுப்புகளை அதிகமாக்கிக் கொள்கிறார்கள்.

"ஆதலின் உலகமெங்கும் உள்ள தனித்தனி இராஜ்யங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அதன் தலைவர்களையெல்லாம் நீக்கி, உலகில் ஜனித்த ஒவ்வொருவனும் சகோதரன்தான் என்னும் உயரிய ஞானத்தை உண்டாக்கி நான் கூறியபடி உலக மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சபையையும், அதற்கு ஏகத்தலைவனாக ஒருவனையும் நியமித்து, பின்னர் அத் தேசங்களிலுள்ள பலவிதக் கொடிகளுக்குப் பதிலாக ஒரே பொதுக் கொடியை ஏற்படுத்தி அதன்கீழ் அச் சபையும், தலைவனுமிருந்து மக்களுக்குக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினால் பாரபக்ஷமின்றி சகல உரிமைகளையும் பெற்று எல்லோரும் ஏகோபித்து ஆனந்தமாய் வாழலாமல்லவா?

"சபைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் விதம் சொன்னேன். என்ன கொடியை ஏற்படுத்தி விடுவதென்றும் கூறி விடுகிறேன்.

"பெரியோர்களே! இலைகளைப் பரப்பி, பரந்து வளர்ந்திருக்கும் பெரிய விருக்ஷத்தை மனதில் நினைத்துக்கொள்ளுங்கள். அதன் கீழ் போய் இளைப்பாறும் எவரையும் நிறவேற்றுமை, பால்வேற்றுமை, குலவேற்றுமை ஏதுவுமின்றி அது நிழல்கொடுத்து உதவுகிறதல்லவா? அத்தகைய தூய்மைக் குணம் கொண்ட விருக்ஷத்தையே அடையாளமாகக் கொண்டு ஒரு கொடி உண்டாக்கி அதனடியில் சகல நாடுகளும் ஒற்றுமையாக வாழலாம்.

ஜெகமெங்கும் தாயாக விளங்கும் ஜெகன்மாதாவின் பிரதிபிம்பத்தையே அவ்விருக்ஷம் நமக்கு உணர்த்துகிறது.

ஆதலின் விருக்ஷ அடையாளம் கொண்ட அதுவே நம் ஜெண்டா. அதுவே ஜெகத் ஜெண்டா........." எனக் கூறி வந்த அவள் "ஜெகத் ஜெண்டாவிற்கு ஜே" எனக்கோஷ மிட்டாள். அங்கு கூடியிருந்த அனைவரும் ஒரே முகமாக "ஜெகத் ஜெண்டாவிற்கு ஜே! ஜே!" எனக்கோஷமிட்டு ராஜியின் பிரசங்கத்தை ஆமோதித்தார்கள்.

அவர்கள் ஆமோதித்ததோடு மாத்திரம் நின்றுவிட வில்லை. ஒவ்வொரு மன்னனும் எழுந்து மஹாராணியாரின் உன்னதப் பிரசங்கத்தைப் புகழ்ந்து பேசி அதன்படி நாடெங்கும் ஒரு தேர்தலை உடனே நடத்தி நடைமுறையில் காட்டவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

அதன்படியே நாடெங்கும் ஏழு நாட்களுக்குள் தலைவர்கள் தேர்தல் நடந்தேறியது அதில் மஹாராணி லக்ஷ்மிதேவியே தலைவியாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருந்ததை அறிந்த மன்னர்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தார்கள். தேர்தலுக்குப் பின்னும் அரசர்கள் மண்டபத்தில் கூடினார்கள்.

அவர்கள்முன் லக்ஷ்மிதேவி நின்று "நாம் புதிதாக அமைத்த சபையில் திரும்பவும் என்னையே தலைமை வகிக்க ஜனங்கள் விரும்புகிறபடியால் அதை மீற முடியாதவளாயிருக்கிறேன். நான் இப்போது உங்களமுன் மஹாராணி லக்ஷ்மீ தேவியல்ல. பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவி லக்ஷ்மி தேவிதான். இப்பொழுது நான் தலைவியாக இருப்பதால் என்பின் சந்ததியாரும் இப்பதவிக்கு வர வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. என் பதவியும் ஆயுட் காலம் வரை நீடித்திருக்க வேண்டுமென்பதில்லை. இன்னும் சில நாட்களில் நான் இச்சபைக்கோ, நாட்டிற்கோ

பிடிக்காதவளாகிவிட்டால் அன்றே என்னை நீக்கிவிட லாம்.

"இச்சந்தர்ப்பத்தில் உங்கள் முன் ஒரு சந்தோஷச் செய்தியையும் அறிவிக்க விரும்புகிறேன். இச்சமாதன எண்ணத்தை நிலைநாட்ட என் மனதைத் தூண்டியவர் மீவார் மன்னரேயாவர். அவர் போருக்கு ஆயத்தம் செய்ததினால் இவ்வளவு மாறுதல்களும், சந்தோஷமும் நமக்கிடையே ஏற்பட்டது. ஆதலின் அந்நாட்டின் ஞாபகார்த்தமாக என்றென்றும் இந்நட்த நாட்டிற்கு ஞாபகமிருக்கும் வண்ணம், மீவாரின் சேனாபதி தேவி பாலனுக்கும் என் குமாரி பால கல்யாணிக்கும் நாளை மண வினை ஏற்பாடாகி யிருக்கிறது. அதற்கும் நீங்களனை வருமிருந்து என்னைக் கௌரவிக்க வேண்டிக் கொள் கிறேன்" என்றாள்.

இச் சந்தோஷச் செய்தியைக் கேட்டதும் அவர்கள் கரகோஷம் செய்தனர். பாலகல்யாணி வெட்கித் தலை குனிந்தாள். கூட்டமும் கலைந்தது.

---

## அத்தியாயம் 37

### "தாயின் மணிக்கொடி பாரீர்"

தேவி பாலனுக்கும், பால கல்யாணிக்கும் திருமணம் என்று கேள்விப்பட்ட மருங்காபுரி மக்கள் மட்டிலா மகிழ்ச்சியடைந்து ஊரைப் பெரிதும் அலங்கரித்தனர். திருமணநாள் வந்தது.

மன்மதனையும், ரதியையும் கதைகளில் படித்து இன்புற்ற மாந்தர்கள் இப்போது நேரிலேயே தங்கள் கண் முன் காண்பதுபோல் தேவிபாலனையும், பாலகல்யாணியையும் மணக்கோலத்தில் கண்டு களித்தனர். குலதர்மப்படி செய்யவேண்டிய நியதிகளைச் செய்து, புரோகிதர்கள்

மணவினையை இனிது முடித்ததும், மணமக்கள் எழுந்து சபையோரை வணங்கினார்கள். மலர் மாரி பொழிவது போல் சபையோர்கள் அவர்கள்மீது மலர்களை வாரி வாரி இறைத்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்பு மணமக்கள் தங்கள் நாட்டுக் கொடியாகிய 'ஜெகத் ஜெண்டா'வை வணங்க அரண்மனை மைதானத்திற்கு அழைத்தேகப்பட்டனர். அங்கே அரண்மனை மணிக் கூண்டில் உச்சியில் உயர்ந்த கம்பத்தில் சுருட்டிக் கட்டியிருந்த விருக்ஷக்கொடியை லக்ஷ்மிதேவி ஆங்கே கூடிநின்ற ஆயிரக்கணக்கான வீரர்கள் முன்னிலையில் அவிழ்த்துக் காற்றில் பறக்கவிட்டாள். அவர்களனைவரும் கொடிக்கு வணக்கம் செய்து நிற்கையில், அரண்மனையிலேயே பாடுவதில் திறமை பெற்ற பெண்கள் கொடிப்பாட்டு பாடினர்.

அதன் பின்னர் வந்திருந்தவர்களெல்லாம் வெகுமதி பெற்றுக்கொண்டு திரும்பினர். அரண்மனைக்குள்ளிருந்த அபரிமிதக் கூட்டத்தால் உள்ளே புகமுடியாது வெளியே நின்ற மாந்தர்களுக்கு, மேன்மாடத்தில் வந்து பலகணி வழியாகக் காட்சியளித்தனர் மணமக்கள். அத்துடன் மணவினை முடிந்தது.

விவாஹத்தின் முக்கியச் சடங்குகள் நடந்துவிட்ட போதிலும் அரண்மனையில் கூட்டம் வந்து போய்க் கொண்டேயிருந்தது. அவர்களுக்கெல்லாம் தக்க சன்மானங்களை இல்லையென்னாது கொடுத்தனுப்ப லக்ஷ்மிதேவி ஏற்பாடு செய்து வந்தாள். இச் சந்தடியிலிருந்து விலகி, சற்று நேரமாவது இன்பமாயிருக்க தீர்மானித்த மணமக்களிருவரும் ஒருவரும் அறியாவண்ணம் அரண்மனை நந்தவனத்திற்குள் சென்றனர்.

அவர்கள் தனித்துச் சென்று உரையாடி மகிழ்வதைக் காண வருவான் போல் பூர்ணசந்திரன் ஆகாயத்தில்

கிளம்பினன். அவன் கிரணங்கள் பட்ட மரத்தின் இளந் தளிர்கள் எல்லாம் வெள்ளித் தகட்டைப் போல் மின்னின. அந்நேரத்தில் மலர்ந்திருந்த புஷ்பத்திலிருந்து நறு மணத்தை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தது அங்கு வீசிய மெல்லிய காற்று. மரத்திலிருந்த வண்டுகள் "ஙொய்.......ஙொய்" என்று ரீங்காரமிட்டுக் கொண் டிருந்தன. அவர்களிருவரும் நந்தவனத்தின் மத்தியி லிருந்த பெரிய தடாகத்தை அடைந்து, தண்ணீரில் உல்லாசமாய் சுற்றிவர அங்கே மிதந்து கொண்டிருந்த ஓர் படகில் ஏறி அமர்ந்தார்கள். இருட்டிவிட்டது. கரை யில் எதையோ கண்ட தேவிபாலன் "பாலா! அதோ பார்! உன் நந்தவனத்து மரங்களில் வைரக் கற்கள் கூடக் காய்த்துத் தொங்குகிறது!" என்ருன். அவன் பரிகாசமாகச் சொன்னதை அவள் அறிந்துகொள்ளாமல் நகைத்து "இவ் வளவுதானு! அவைகள் மின்மினிப் பூச்சிகள்; மரங்களில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன" என்ருள்.

"அப்படியா, எனக்குத் தெரியாதே! என் நாட்டில் மாணிக்கக் கற்கள் மரங்களில் காய்க்கும். அதுபோல் இங்கேயும் வைரக் கற்கள் காய்த்திருக்கிறதோ என்று நினைத்தேன்" என்று மேலும் பரிகசித்தான்.

"நாதா, இனிமேல் என் நாடு, உன் நாடு என்றெல் லாம் பேசக்கூடாது, தெரியுமா? தலைவி லக்ஷ்மிதேவி யின் நீண்ட பிரசங்கத்தைக் கேட்ட பின்பு இன்னுமா அந்த வேற்றுமை போகவில்லை?"

"நெடுநாள் பழக்கமல்லவா? மறக்க நாளாகும்!"

"அது கிடக்கட்டும், படகில் ஏறி உட்கார்ந்து விட் டீர்களே! படகு போய்க்கொண்டிருப்பதாக எண் ணமோ?"

"அடடா! உன் அழகைப் பருகிக்கொண்டே மயங்கி விட்டேன்" என்று சொல்லி துடுப்பை எடுத்துத் தண் ணீரைத் தள்ள, படகும் மெதுவாக நகர்ந்தது.

"நாதா! நாம் இப்படிக் கூடி மகிழ்ந்திருப்போம் என்று கனவிலாவது கருதியிருப்போமா?"

"ஏன் அப்படிக் கேட்கிருய்?"

"சிறைச்சாலையிலிருந்து மீளுவேனென்ற எண்ணமே இல்லை. ஒரு சமயம் நான் தப்பித்திருந்தாலும் மீவார் மன்னன் உங்களையாவது தன் வாளுக்கு பலியாக்கி யிருப்பார்"

"அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்காமல் போய் விட்டதே யென்றுதான் இப்போது வருந்துகிறேன்."

"அப்படியானல் என்னை மணந்ததினுல் உங்களுக்கு ஏதேனும் கஷ்டமா?"

"பாலா! என்ன இப்படித் திடீரென்று சொல்லிவிட்டாயே! இளவரசியாகிய உன்னை என்னோடு அழைத்துச் சென்று அங்கு நீ சிறைவாசப்பட்டதும் என்மனம் அடைந்த வேதனையை நீ அறிவாயா? அதற்குத்தான் அப்படிச் சொன்னேன்."

"ஓஹோ, உங்கள் உயிரைத்தானே மதித்தீர்கள் போரை நிறுத்தி அதனுல் லக்ஷக்கணக்கான மக்களைக் காத்த பெருமை உங்களைச் சார்ந்ததல்லவா?"

"ஹா, என்ன சொன்னுய்? என்னையா சார்ந்தது? தலைவி லக்ஷ்மிதேவிக்கல்லவோ அப்பெருமை! அது மாத்திரமா! எல்லோரும் ஒரு தாய் வயிற்று மக்கள் என்று வார்த்தையால் மட்டுமின்றி செய்கையிலும் காட்டிவிட்டார்களே உன் அன்னையார். நீயோ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியின் குமாரியாய் பிறந்தாய். நானே எளிய சேனைத் தலைவன். அப்படி யிருந்தும் காதலின் மகத்துவத்தை அறிந்த அவர்கள் நம்மிஷ்டப்படியே நம்மை விட்டார்களே! இது அவர்களது பரந்த நோக்கத்தைக் காட்டவில்லையா?"

"நாதா வெகு நேரமாகிவிட்டது. அன்னையார் தேடுவார்கள்; போகலாம்" என்ருள்.

"உன் எண்ணத்தை அறிந்தேன், அதோ மரத்தினூடே ஒருவன் மறைந்து பார்க்கிருனே."

"யார் அது?" எனச் சட்டெனத் திரும்பிப் பார்த்து "ஒருவரையும் காணேமே!" என்ருள்.

"அதோ பார்" என்று பூர்ண சந்திரனைச் சுட்டிக் காட்டினன்.

"இன்னும் இத் தடாகத்தை ஒரு சுற்றுக்கூட சுற்றி வரவில்லையே, அதற்குள்.. ........"

படகு கரையோரம் வந்து நின்றது. அச்சமயம் அடித்த காற்றில் அசைந்து குலுங்கிய அருகிலிருந்த மரக்கிளையிலிருந்து மகிழ மலர்கள் அவர்கள் மேல் பொல பொல வென்று கொட்டியது.

"தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள் என்பார்களே! அது இப்படித்தானிக்குமோ?" என்று பரிகாசம் செய்தான் தேவிபாலன்.

"உங்களுக்கு எப்போது பார்த்தாலும் பரிகாசம் தானு?" எனக் கூறி நிமிர்ந்தாள். அவள் கண்ணில் கோபுர உச்சியில் பறந்து கொண்டிருந்த "விருக்ஷக்கொடி" பட்டது.

"அதோ பாருங்கள். நம்மிருவரையும் ஒன்று சேர்த்த கொடி எவ்வளவு கம்பீரமாய் பறந்து கொண்டிருக்கிறது!" என்று காட்டினுள்.

அதைப் பார்த்து அவன் தலை குனிந்து வணங்கினுன். அவளும் நமஸ்கரித்தாள்.

அகண்ட சமுத்திரத்தில் செல்லும் பாய்மரக் கப்பலின் உயர்ந்த ஸ்தம்பத்தில் பட பட வெனப் பறக்கும் ஜண்டாவைப் போல் அந்த ஜெகத் ஜெண்டாவும் பளபளப்போடு அரண்மனை ஸ்தம்பத்தின் மேல் பறந்துகொண்டிருந்தது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.